



# அழகே வா! அருகில் வா!!



1 பசுவின் மடி பீய்ச்சியடிக்கும் பாலைப் போல, இளங்காலைக் கதிரவன் ஒளியைப் பூமியில் பொழிய ஆரம்பித்திருந்தது. வெம்மை மிகாத பால் ஒளி.

நெடிய ரப்பர் மரங்களின் ஊடாய் வெளிச்சம் வழிந்த அழகை ரசித்திருந்தாள் ப்ரீத்தி. எட்டடி உயரக் கிழக்கு ஜன்னலில் திரைச் சீலைகளைப் பிரித்ததும் தினம் தினம் அவள் அனுபவிக்கும் அழகுதான் இது.

ஆனாலும் சலிக்கவில்லை.

விடியற் காலைப் பொழுது எல்லா நாடுகளிலும் மனதிற்கு இதமாய் இன்பமாய் இருக்கும் போலும். முக்கியமாய் மரங்கள் அடர்ந்த பண்ணைப் பகுதிகளில் வசிப்பவர்களுக்கு இந்த ரம்யத்தைக் கண்டு களிக்கப் பொழுதும் வாய்க்கிறது.

இந்தியாவில் இப்படிப் பொழுது புலர மேலும் இரண்டு மணி நேரமாகும்... இவளிருப்பது மலேஷியாவில்.

இங்கு செழித்து ஓங்கியுள்ள ரப்பர் எஸ்டேட்டில் சில மாதங்கள் பணி புரியக் கிடைத்த சந்தர்ப்பத்தை இவளது

அண்ணன் ஆர்வமாய் ஒத்துக் கொண்டதில் முதலில் ப்ரீத்திக்கும் அண்ணி விமலிக்கும் அத்தனை ஆனந்தமில்லை.

ஆனால் இந்த அரை வருட அனுபவம் தனக்கு மிக உபயோகமாய் இருக்கும் என்பது அண்ணன் விவேக்கின் கருத்து -

'அயல் நாட்டின் விவசாய முறைகளும் தெரியும் என்றால் என் சம்பளம் இரட்டிப்பாகும், விமி!' என்று அண்ணன் கொஞ்சலாய்க் கெஞ்ச, அண்ணியின் விழிகளும் இரு மடங்காய் விரிந்தன.

அயல் மண்ணிற்கு வந்து ஐந்து மாதங்கள் ஓடி விட்டன. வீட்டிலேயே அடைந்து கிடப்பவர்களுக்கு மண்ணும் விண்ணும் ஒன்றுதான் என்று பெருமூச்சுடன் நினைத்துக் கொண்டாள் ப்ரீத்தி.

'ஸலாமத் டடாங்' என்ற அறிவிப்புப் பலகைகளை விமான நிலையத்திலிருந்து வழியெல்லாம் கண்டவளுக்கு அதன் அர்த்தத்தை அறிய ஆவலுண்டாயிற்று.

காரோட்டியிடம் பேச்சுக் கொடுத்தாள்.

''நல்வரவு என்று பொருளம்மா. உல்லாசப் பயணிகள் கொண்டு வந்து இறைக்கும் காசில் செழிக்கும் சிறு நாடல்லவா? அதுதான் இப்படி விழுந்து விழுந்து கவனிக்கறாங்க.''

மலேயாவில் முப்பது வருடங்களாய்த் தங்கிவிட்ட அந்த இந்தியர் புன்னகையுடன் விளக்கினார்.

''அப்படீன்னா ரசிக்கும்படியாய்ப் பல இடங்கள் இருக்குமில்லையா?''

''பின்னே? தொன்மையான கடற்கரை நகரம் - பினாங் - அங்கே மன்னரின் அரண்மனை, அருங்காட்சியகம் எல்லாமுண்டு.''



பயணக் களைப்பில் இரண்டு வயது ரவி அத்தையின் மடியில் சுருண்டு உறங்க, அவனுக்குச் சற்றே மூத்த ரேணு புது தேசத்தை ஆராய்ந்தபடி வந்தாள்.

''இங்கு கடை கண்ணி ஏராளமாமே!'' இது அண்ணியின் விசாரணை.

''மலேஷியா வாங்குபவர்களின் சொர்க்கம்! இதன் தலைநகரான கே.எல்., அதாவது கோலாலம்பூரில், தங்க முக்கோணம்னு ஒரு பகுதி உண்டு. அதில் பிரமாண்ட மான ஏழு மால்கள் உண்டு - அதன் கடைகளில் கிடைக்காத பொருள் இல்லை.''

''விலை எல்லாம் எப்படி?'' - இது அண்ணனின் சற்று அஞ்சிய கேள்வி. 'செலவிற்கு அஞ்சுபவர்கள் இங்கு வர்றதில்லையே சார். இங்குள்ள நாணயங்களை ரிங்கெட்ஸ்னு அழைப்போம் - ஒரு ரிங்கெட் நம்மூரின் பத்து ரூபாய்க்குச் சமம்.''

''ஓஹோ? ஒரு சாப்பாடு என்ன விலையிருக்கும்?''

''லிட்டில் இன்டியா பகுதியில் சாதம், கடலைக் குழம்பு, வறுத்த கோழித் துண்டு பச்சடியோடு ஒரு தட்டு ...ம்ம்... ஐந்து ரிங்கெட்ஸ்.''

''ஐம்பது ரூபாய்ன்னா... தேவலை... அப்படி யொன்றும் அதிகமில்லை.''

அண்ணன் ஆசுவாசப்பட்டான்.

''கே.எல். கோபுரங்களைப் பார்க்கக் கொடுத்து வச்சிருக்கணும். நகரம் முழுவதுமே விளக்குகளின் சிமிட்டலில் ஜ்வலிக்கும்னாலும் 440 மீட்டர் உயரமுள்ள அந்த இரட்டைக் கோபுரங்கள் வானை முட்டியபடி ஜொலிக்கும் பாருங்க - கண் கொள்ளாக் காட்சி. அதும் நிமிடத்திற்கு மூன்று நிறங்களில் அவை மாறி மாறி ஒளிர்வதைக் காணச் சலிக்காது.''

''மோனோ - ரயில் பற்றியும் கேள்விப்பட்டிருக்கேன்.''

''ஜனத் தொகை அதிகமாக வெறும் சாலைப் போக்குவரத்து கட்டி வராதுன்னு அரசாங்கம் உருவாக் யெது இந்தப் பறக்கும் ரயில்.''

''ரயிலுக்கு றெக்கை இருக்குமா?''

சின்ன ரேணு ஆவலாய் வினவினாள்.

''இல்லை பாப்பா - உயரத்துல பாதை போட்டு, ண்டவாளமும் இட்டிருப்பாங்க. அந்த ஒற்றைப் டிப்பில் ரயில்கள் வேகமாய்ப் போவும் - அதிலிருந்து ார்க்க மொத்த நகரமும் படமாட்டம் தெரியும்!''

ப்ரீத்திக்கு இதயம் படபடத்தது. இத்தனையையும் ண்டு களிக்கப் போகிறோம் என்ற இன்பப் பதட்டம்.

ஆனால் கடந்த மாதங்களில் அவளுக்குக் காணக் காடுத்து வைத்ததென்னவோ விஸ்தாரமான ரப்பர் ாட்டத்தையும் வீட்டு வேலைகளையும்தான்!

''சின்னவனுக்குச் சளி பிடிக்கும் போலிருக்கு, ீத்திம்மா. ரெண்டு தரம் தும்மினான். ஆக, அவன் ன்னோடவே இருக்கட்டுமே. நாங்க கே.எல். போயிட்டு நட்டறதுக்குள் திரும்பிடறோம்!''

என்று முதலில் கேட்டுக் கொண்ட அண்ணி, பிறகு ாண்டிச் சமாதானங்கள் கூட இல்லாமல், ஊர் சுற்றக் ாம்பி விட்டாள். அண்ணன் முகம் சுண்டினாலும், னவியின் பேச்சை மீறிப் பேசினால் விளைவுகள் மிக ாசமாய் முடியும் என்பது அவன் அனுபவம்.

அவரவருக்கு உள்ளது கிடைத்தே தீரும்.

இந்த இன்பங்கள் தனக்கானதல்ல போலும் என்று ார்த்தத்துடன் தன்னைத் தேற்றிக் கொள்வாள், ளையவள்.



பெற்றோரை இழந்து தமையன் தயவில் வாழும் தான் இருப்பதை விட்டுப் பறப்பதற்கு ஏங்கக் கூடாது என்று புரிந்த பக்குவம்!

நினைவுகளை விட்டு நிகழ்காலத்திற்கு இறங்கியவள், காலைக் கடன்களை முடித்து, சிறு பிரார்த்தனைக்குப் பின், ஆவி பறக்கும் தேநீரோடு வீட்டின் முன்பிருந்த தோட்டத்தில் இறங்கினாள். எட்டு மணிக்கு வீட்டு வேலைகளில் உதவும் சீன்சூ வருவாள். வயது என்னவென்றே கணிக்க முடியாத அம் மெல்லிய உடம்புக்காரி பம்பரமாய் அன்றைய வேலைகளை முடித்து விட்டு மதியம் திரும்பி விடுவாள் - அது வரையிலும், அதன் பின்பும் கூட ப்ரீத்தியின் வேலைகள் நீளும் - இது மட்டுமே இவளுக்கான நேரம். பிறகு நேரம் வழக்கம் போல - புகை போல - மாயமாகிப் போனது.

★ ★ ★

மதியம் கஞ்சியிட்டு உலர்த்திய தன் உடைகளை உதறி அழுந்த மடிக்க ஆரம்பித்தாள் ப்ரீத்தி. இஸ்திரி பெட்டி நல்ல சூட்டில் துணியின் சுருக்கங்களை விழுங்கக் காத்திருந்தது.

புடவையைப் பரத்திப் பெட்டியைக் கையிலெடுத்ததும் அழைப்பு வந்தது -

''ப்ரீத்தி - இங்க வா.''

உடனே இஸ்திரிப் பெட்டியின் மின் தொடர்பைத் துண்டித்தவளிடமிருந்து ஒரு பெருமூச்சும் இழுபட்டது.

இனி இத்தனையையும் தேய்த்தாற் போலத்தான் என்ற சலிப்பு.

''ப்ரீத்தி - ஓடி வா... சீக்கிரம்.''

ஓடியேதான் போனாள் -

''என்ன, அண்ணி?''

''வந்து பார், உன் செல்லத்தை. வழக்கம்போலச் சாப்பிட அழிம்பு பண்றா.''

இடது கையில் தட்டும் மற்றதில் சிறு வெள்ளிக் கரண்டியுமாய் நின்ற விமலி குறைப்பட்டாள்.

ரேணு உதடுகளை அடமாய் மூடியிருக்க, அவள் தாயின் முகத்தில் கோபச் சிவப்பு ஏறியபடி இருந்தது.

இது அடிக்கடி நடக்கும் நாடகந்தான். அத்தை ப்ரீத்தி பரிமாறி வைத்தாலே சச்சரவின்றிச் சாப்பிட்டுப் போகும் ரேணு, தன் தாயிடம் மட்டும் இல்லாத அழிம்புகளை நடத்துவாள்.

''என்ன... என்னண்ணி?''

''வா - நீ முதல்ல இந்தப் பீர்க்கங்காயைச் சாப்பிடு.''

வெள்ளிக் கரண்டியில் இருந்தாலும், அந்த வழுவழு காயைக் கண்டதும் இவளுள் சிறு சுழிப்பு.

ஆனாலும் எதையும் வெளிக்காட்டவில்லை.

''வேண்டாண்ணி.. எனக்கு இது... இது அதிகம் பிடிக்காது.''

''ஆங்... அப்படிச் சொல்லு. இதே பிகுவைத்தான் ரேணுவும் பண்றா.''

''அவளுக்கும் அந்தக் காய் பிடிக்கலைன்னா... விரட்டிரலாமேண்ணி.''

''ஏன் விடணும்? எல்லா வகைக் காய்கறியும் உடம்புக்கு நல்லதுன்னு நாமதான் சொல்லிப் புரிய வைக்கணும் - சகல ருசிக்கும் பழக்கியாகணும். எனக்கும் இவ அப்பாவுக்கும் பிடிச்ச காயை இவ மட்டும் ஏன் ஒதுக்கணும்?''



''ஒவ்வொருவரின் ரசனையும் வெவ்வேறில்லையா அண்ணி? கீரை அத்தனை பிடிக்கலைன்னாலும் ரேணு சேர்த்துக்கறாளே - உடம்புக்கு நல்லதுன்னு... பழகி கிட்டாள்... போதாதா?''

''இதப் பார், ப்ரீத்தி. பெரியவங்க பேச்சுக்குப் பணி முதலில் கத்துக்கோ - உன்னைப் பார்த்துச் சின்ன இதிலும் கெட்டிட வேணாம் - இந்தா, வாயைத் திற.''

அந்த அதட்டலில் குறுகி விட்டாள் இளையவள் அலங்கரிப்பிலும் ஆர்ப்பாட்டத்திலும் தன்னை மிகச் சி வயதினளாய்க் காட்டிக் கொள்ளத் துடிக்கும் விமலி, இ போன்ற சமயங்களில் மட்டும் நூற்றுக் கிழவியா முதிர்வது கசப்பூட்டியது.

இன்று விட்டுத் தரக் கூடாது என்ற வைராக்கிய உள்ளே முளைவிட - ''வேண்டாமண்ணி - இஸ்தி போட துணிகள் நிறைய இருக்குது. நானே ரேணுக்கு சாப்பாடு தந்துடவா?''

- பணிவாகவே நழுவினாள்.

''வீண், வெட்டிப் பேச்சுக்குத்தான் வாயைத் திறப்பிய நீ?'' அதட்டலுடன் அக் கரண்டியின் காயை இவளி திணிக்க விமலி முயல, ப்ரீத்தியின் வீம்பு வளர்ந்தது.

இரு பெண்களின் முகங்களிலுமே சிவப்பு - ஒன் அவமானத்தால். மற்றது ஆத்திரத்தால்.

''ஓஹோ... அம்மா ருசிக்குத்தான் சாப்பிடுவீங்களோ?

''பசிக்குத்தான் உணவு. ஆனா மனுஷன் அ ருசித்தும் சாப்பிடணும்னுதான் கடவுள் இத்தனை ர காய்கனிகளைப் படைச்சிருக்கணும், அண்ணி. அவர ரசனை, ருசி... அவையும் அவர் உருவாக்கியதுதானே... அ கேற்ப அனுபவிக்கட்டும்னு... பிறகேன் வீண் சிரமம்?

''ஆஹா... வாங்கி, நறுக்கிச் சமைச்சுப் பரிமாறினதை யிலிடக் கூட முடியாது?''

வெறுமே நீட்டியதை விழுங்கிவிட்டு நகர்ந்திருக் ாம். பிரச்சனை படிந்திருக்கும் - இப்போது எழும்பிக் மியைப் பிடித்து உலுக்குகிறதே...

தவிர இது வழக்கமாய் ப்ரீத்தியின் குணமுமல்ல.

சொன்னதைச் சொன்னபடி செய்து போகிறவள்தான். ஆனால் அக்குணம் தனக்குக் குழி பறிப்பதாய் ளுக்குத் தோன்ற ஆரம்பித்திருந்தது.

'தீதும் நன்றும் பிறர் தர வாரா.'

அவை நம் எண்ணம், செயலின் விளைவே என்ற தனையின் விளைவு. சதா பிறரின் சித்தப்படி ழ்வது சலித்து விட்டது. உடை, வீடு, நேரம், உணவும் ரின் ரசனைப்படிதான் எனில்... வாழ்க்கை?

ரசனையின்றிக் கைநழுவிப் போகாதா?

இளவயதிலேயே பெற்றவர்களை இழந்தவள் ப்ரீத்தி. வக்கிற்குப் பின் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின் ந்த பெண்ணைப் பொக்கிஷமாய்க் கருதி வளர்த்த கள் வியாதிக்கு ஈடுதர முடியாமல் மறைந்து போக, க்கிஷம் புழுதியில் விழுந்தது.

இவளும் எதையும் பொருட்படுத்தாமல் பிரகாச வே வளைய வந்தாலும்... சமீப காலமாய் ணியின் நடவடிக்கை ஒன்று இவளைக் குழப்பி ந்தது - ''மாப்பிள்ளை தேடும் படலம்.''

ணவு, உடை, ஆளண்டாத் தனிமையில் நாட்கள் - லாம் சமாளிக்கக் கூடியவை. ஆனால் கடைசிவரை ணாய்... ஏன், உயிராய் இருக்க வேண்டிய கணவனும்



கூடப் பிறரின் வசதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்றாற் போலத்தான் அமையுமென்பது அச்சுறுத்தியது.

இந் நாள்வரை வாயில்லாப் புழுவாய் நெளிந்ததால் தானே இந்நிலை என்று, தன் மேலேயே அவளுக்குக் கோபமும்கூட.

'இதுதான்...', 'இப்படித்தான்' என்று காலை அழுத்தி நின்றிருந்தால் ஆளாளுக்கு இப்படிப் பந்தாட மாட்டார்களே.

பல எளிய குடும்பத்துப் பெண்களுக்கும் கிடைக்கும் கல்லூரிப் படிப்பும் கூடத் தனக்குக் கிட்டாமல் போனது பெரிய குறை. அதில் மிகுந்த வருத்தம் என்றாலும், அதற்கான பழியையும் இவள் தானேதான் சுமக்க வேணும். தியாகம் புரிவதாய் நினைத்துச் செய்த அசட்டுத்தனம் அது.

அண்ணன் தேயிலைத் தோட்ட மேற்பார்வையாளர் - கை நிறைந்த சம்பளம், விஸ்தாரமான வீடு, அதிலும் கால் நோகத் தேவையில்லாதபடி வேலையாட்கள் என்றிருந்த தால், முண்டியடித்த வரன்களில் அண்ணன் தேர்ந் தெடுத்தது விமலியை. ஆனால் வந்தவளோ -

'இதென்ன வனவாசம்? காலார நடந்தால் காட்டுப் பன்னியைத்தான் சந்திக்க நேருது. இதென்ன வாழ்க்கை?' என்று முதலில் முரண்டி, பின் மற்ற வசதிகளில் சற்றுச் சமாதானமானாள்.

கிடைத்த வசதிகளில் மிக முக்கியமானது அண்ணிக்கு ஓடி ஓடி உழைக்கக் காத்திருந்த அன்பு நாத்தனார் ப்ரீத்தி!

ஏற்கெனவே பண்ணைப்புர வாழ்விற்குப் பழகிய ப்ரீத்தி, தாயற்ற இக்குடும்பத்தை அன்பால் அரவணைக்க, பாசத்தால் சீராக்க வந்த சின்னத் தாயாகவே விமலியை வரவேற்றாள். அவள் பள்ளிப் படிப்பை முடித்திருந்த சமயம் அது. திருமணமான இரண்டாம் மாதமே

அண்ணிக்கு மசக்கை ஆரம்பமானது. கிறுகிறுப்பும், வாந்தியுமாய்ச் சுருண்டவளைப் பாசமாய்ப் பேணினாள், இளையவள்.

அண்ணன் கேட்கத்தான் செய்தான் -

''மூணு கல்லூரிகளின் விண்ணப்பப் படிவங்களை வாங்கி வச்சோமே, ப்ரீத்தி. எல்லாவற்றையும் அனுப்பியாச்சா?'' என்று. 'வேண்டாண்ணா. அண்ணியை இந்த நிலையில் விட்டுட்டு நான் எப்படிப் போறது?''

''அதான் வீட்டுல வேலையாட்கள் உண்டே...''

''பொறுப்பாய் யாரேனும் இருக்கணும். அண்ணியுடைய குடும்பம் மும்பையில் - தங்கை, அண்ணான்னு, பெரிய குடும்பத்தை விட்டுட்டு அவங்கம்மாவால் வர முடியாதாம்...''

''நானும் பொறுப்பான அண்ணனாய் உன்னைப் படிக்க வைக்க வேண்டாமாடா?''

''படிக்காமலா? தபால் வழிக் கல்வி பற்றிக் கேள்விப்படாதது போலப் பேசறீங்களே, அண்ணா? எனக்குப் பிடிச்சது இலக்கியம். அதற்கு நிறைய வாசிக்கணும் - இங்கேயே நிம்மதியாய் வாசிச்சுட்டு, பரீட்சை எழுத மட்டும் வேற்றூருக்குப் போனால் போதுமே!''

''கல்லூரி வாழ்க்கைங்கறது ஸ்பெஷல்...''

''அண்ணிதான் இப்ப நமக்கு ஸ்பெஷல் அண்ணி. தவிர நான் பள்ளிப் படிப்பை விடுதிகளில் தங்கித்தானே படிச்சேன். இப்பவேனும் வீட்டில் இருக்கேனே!''

''பள்ளி - அனுபவம் வேறம்மா - அறைக்குள்ளேயே அடைந்து உருப்போட்டிருப்பே - உன் அமர்க்களமான தோழிப்பெண்களே சொல்லுதே...''



''வீட்டிலே தங்கினால் சமையல், கைவேலை எல்லாம் கத்துக்கலாம்...''

தங்கையின் சாமர்த்தியப் பேச்சில் உருகிய விவேக் சம்மதித்து விட்டாலும், தொடர்ந்த மாதங்களில் மாறிப் போனான். கட்டியவளின் பேச்சு தவிர, வேறேதும் காதில் ஏறாதளவிற்கு...

தன் திருமண விஷயத்திலும் அண்ணன் இப்படி விட்டேற்றியாகவே இருந்து விட்டான்... காலையில் சூரியோதயத்தைக் கண்டு மலர்ந்த மனம் இப்போது அஞ்சி இருண்டது...

2



பல வண்ணப் பந்தைத் தட்டித் தட்டி அதை எம்ப விட்ட ரேணு, தோட்டத்தில் நின்ற தன் அத்தையைக் கண்டதும் பந்தை மறந்தாள்.

''ஹை... அத்த, அய்க்காயிருக்கீங்க.''

''போ ரேணு... சும்மா சொல்லாதே.''

''நிஜம்மா... அங்க.. அந்தக் கடையில இருந்த பொம்மை மாதிரியே இருக்கீங்க...'' விழிகளில் நிஜ பாராட்டுத் தெரிந்தது.

''பயங்கரமாய்க் கதை விடற, குட்டி நீ.''

ப்ரீத்தி பெருமிதமாய் அன்றி உண்மையாகவே சிறுமியைக் குற்றம் சாட்டினாள் - அவளுக்குத் த அழகில் அத்தனை நம்பிக்கை! சராசரி இந்திய அளவை மீறிய தன் உயரம் - அதை மேலும் அதிகமாக்கிக் காட்டும் மெல்லிய உடல்வாகு, கைக்கு அடங்காத தலைமுடி பளீர் என்று ஒளிராத சரும நிறம் - எதுவுமே அவளுக்கு பெருமையாய்ப் படவில்லை.

அவளது தாயார் உயிரோடிருந்த வரையில் இவளைத் தங்கக் குட்டி என்றே அழைப்பார்.

'உன் தங்கம் கொஞ்சம் மங்கலாயிருக்குதோ?' என்று அப்பா சீண்டினாலும் கூட, அம்மாவிற்குத் தாளாது.

'எம் ப்ரீத்தி வயசுக்கு வந்ததும் பாருங்க - தேஜஸ் கூடி, அவ முக லட்சணத்திற்கும் ஒயிலுக்கும் தேவதை யாட்டம் இருப்பா!' அடக்குவார்.

ஆனால் அப்பாவுமே கூட மகள் எண்ணெய்க் குளியலன்று லேசான மஞ்சள் பூச்சுடன் வர,

''இன்னைக்கு நம்ப தங்கத்திற்கு பாலிஷ் ஏறியிருக்கே!' என்று பூரிப்பார்.

பராமரிக்கத் தாயின்றி, பாசத்தில் ஊறி வளராத கொடியாய்த் தான் சற்று வரண்டு, துவண்டு கிடப்பதாய் ப்ரீத்திக்குக் குறைதான்.

அதிலும் வந்த அண்ணி சிவிய பப்பாளி நிற மேனியிலிருந்ததை ஆவலாய்ப் பார்த்தவளுக்கு முள்ளாய் வார்த்தைகளும் கிடைத்தன.

'உன் நாத்தி மாநிறம்னு நினைச்சேன் - உம் பக்கத்துல பார்க்க, கறுப்பால்லடி தெரியறா!'

என்று சில வம்பிகள் எடுத்துத் தர, அண்ணி பிடித்துக் கொண்டாள் -

'உன் கறுப்பு நிறத்துக்கு...'

'பாவம், உங்கண்ணா கூட இத்தனை கறுப் பில்லையே...'

'குடை எடுத்துட்டுப் போறியா? ஏன், இதுக்கும் மேலே கறுக்க முடியுமா என்ன?'

இப்படி வந்த குட்டுகளில் ப்ரீத்தி தனக்கே மட்டமாய்த் தெரிந்தாள்.



வந்த விருந்தாளிகள் உள்ளிருந்து பலக்கச் சிரிக்கும் சத்தம் காதைக் குடைந்தது. தேநீர் தேவைப்படும் போது இவளுக்கு அழைப்பு வரும். அதுவரை தான் இப்படி சுய பச்சாதாபச் சிந்தனைகளில் மூழ்காமல் ஏதாவது வேலையை முடித்தால் தேவலை என்று பட, வாசற்படிகளின் இரு மருங்கும் இருந்த செடிகளுக்கு நீரூற்ற முனைந்தாள்.

பூவாளியை எடுத்துக் குழாயின் அடியில் வைத்ததும், ரேணு ஓடி வந்து பளிங்கு மேடையிலிருந்த குழாயைத் திறந்தாள்.

முதலில் சன்னமாயும், முழுக்கத் திறந்ததும் பீச்சியு மடித்த நீரைப் பார்த்து யோசனையாய்க் கேட்டாள், ரேணு.

''தண்ணி கீழதான் கொத்துமாத்த? ம் மேல போவாது?''

''அது... அது அப்படித்தான் - அருவிகூட அப்படித்தானே குதிச்சுப் பாயுது... பூமி எல்லாத்தையும் இழுத்துக்குமே - அதனாலதானே நாமும் கூடத் தரையில் நிற்கறோம், நடக்கறோம்...''

பதிலைச் சமாளித்து விட்ட திருப்தியுடன் நின்றாள், ப்ரீத்தி.

''நான் தண்ணிய மேல போக வக்கத்தா?''

ஒரு கணம் திகைத்தவள், ''அதெல்லாம் போகாதுடா!'' மறுத்தாள்.

''செய்யத்தா?'' குழந்தை சவாலாகவே கேட்டாள்.

''சரி - குட்டி - செய்.''

சற்று அலட்சியமாகவே அனுமதி தந்த மறுகணம் அவள் முகம் வியந்து மலர்ந்தது.

குழாயின் வாயைத் தன் பிஞ்சு விரல்களால் மூடிய ரேணு, ஒரு கோணத்தில் கையை லேசாய்த் திறக்க, நீர் மேல் நோக்கிப் பீய்ச்சி அடிப்பதைக் கண்டதும்!

''கெட்டிடீ நீ...'' ரேணுவை அள்ளித் தூக்கி முத்தமிட்டவளுக்கு உள்ளே அச்சிறு சம்பவம் ஏதோ ஒரு மாற்றத்தை விதைத்த உணர்வு.

'முடியாது' என்பது ஒரு குழந்தையின் அகராதியிலும் கூட இல்லையே! வாழ்வை ஆர்வமுடன் நம்பிக்கையுடன் அணுகினால் அது அற்புதம்தான் போல...

'நீ யோசித்தது போதுமடி!' என்பது போல, வீட்டுக்குள்ளிருந்து அழைப்பு வந்தது.

''ப்ரீத்தும்மா - டீ எடுத்து வர்றியா?''

மிக இனிமையாக வந்தாலும், அண்ணியின் குரல் இவளை இறுக்கியது. ஏனெனில், இது இயல்பான இனிப்பில்லை.

அபூர்வமாய் எஸ்டேட் தேடி வரும் விருந்தினர்களை நாத்தியின் பக்கமே விடாமல் வேலைகளை மட்டுமே பிழிந்தெடுத்துக் கொள்ளும் அண்ணி இப்படித் தேனொழுக அழைக்கக் காரணம்?

தேநீர்க் கோப்பைகளைச் சிராய் மரத் தட்டில் அடுக்கி எடுத்துப் போனாள்.

''அருமையாய்ச் சமைச்சிருந்தே - வீட்டு வேலைகளையும் நறுவிசாய்ச் செய்றே... ம்ம்?''

கோப்பையைக் கையிலெடுத்த பெண்ணை இவளுக்குப் பிடிக்கவில்லை. ஏதோ தன் வீட்டு வேலைக்கு ஆள் எடுக்கும் தோரணையில் கேள்வி இருந்ததே காரணம்.

ஆரஞ்சு நிற நைலக்ஸ் புடவை வேறு வழுவழுவென நழுவி இம்சித்தது. பொதுவாக இதமான நிறப் பருத்திப் புடவைகளே இவளது தேர்வு.

''இதென்ன ப்ரீத்தி - சதா அழுது வடியறாப்பல உடுத்தறே? இருக்கும் சொற்ப அழகையும் அற்ப



மாக்கலாமா? இதைப் 'பளிச்'செனக் கட்டிக்கோ!'' என்ற அண்ணியின் திடீர்க் கரிசனம் இவளுள் சந்தேகத்தைத் தூண்டியது.

இதுவரை விமலிக்கு நாத்தியின் தேவை இருந்தது. மசக்கை நேரத்தில் அவளால் தலைதூக்கவே முடியாது. குமட்டலும் அசதியுமாய்... சதா படுக்கையில்தான் - அவ்வேளையில் பொறுப்பும் பாசமுமாய்த் தன்னை, பெரிய வீட்டை, கணவனைப் பேண ப்ரீத்தி தேவைப்பட்டாள்.

அதிலும் இரண்டாவது கர்ப்பத்தின் போது சதா அழுது படுத்திய ரேணுவை அத்தையின் மடி இன்றிச் சமாளித்திருக்கவே முடியாது.

இப்போது பிள்ளைகள் ஓரளவு வளர்ந்த பின் அத்தையின் தேவை அத்தியாவசியமாயில்லை.

ஊரார் அவதூறு பேசத் தொடங்கி விடுவார்களோ என்ற அச்சத்தோடு, கணவனின் சம்பாத்தியம் இரட்டிப்பான பிறகு, அதைச் செலவழிக்கும் சிரமத்தை நாத்தனார்க்கு வைக்க வேண்டாமே என்ற சுயநலமும் கூட....

ஆக, மும்முரமாய் மாப்பிள்ளை தேடும் படலம். ப்ரீத்திக்கும் இதையெல்லாம் யூகிக்க முடிந்தது - அவள் ஒன்றும் அடி மக்கும் அல்லவே.

''இப்படி உக்காரேன் - ஏன் சங்கோஜப்படறே? நாங்க உனக்குத் தூரத்து உறவும்மா. நாங்க மும்பைக்குப் போய்க் கொள்ளை வருஷமாச்சு. நீங்களும் எஸ்டேட்டில் இருந்ததால் அடிக்கடி பார்த்துப் பழகிக்க முடியலை - ஆனாலும் சொந்தம் நீர்த்திடுமா என்ன?''

ப்ரீத்தி மையமாய்ப் புன்னகைத்தாள்.

''சிறு வயசில் பார்த்ததற்கு இப்ப கறுத்திருக்கியே!''

''ஆமாங்க - சிவத்த தோல் குளிர் காற்றுக்கு வெளுக்கும் - கறுத்தது மேலும் இருண்டிரும்!'' - உற்சாகமாய் விளக்கினாள் விமலி.

ப்ரீத்தியின் இதயம் வலித்ததால் பொருமியது. அண்ணியைப் போல் பாதாமும் பாலுமாய்த் தினம் அரைத்துப் பூசி, வேளைக்குப் பழரசமும் நெய்யுமாய் உள்ளிறக்கினால் சருமம் பொலிவாகாதா என்ன? ஆனால் தனக்கு அழகு படுத்தலில் ஆர்வமில்லை என்பதோடு, அப்படிச் செய்ய முனைந்தால், அண்ணி அதில் ஆனந்தப்பட மாட்டாள் என்பதும் நிச்சயம்.

''மும்பையில் எல்லாரும் என்னா நிறம், ஒயிலுன்றீங்க? அதிலும் அதுக அலங்காரம்.. இப்ப சாதா வீட்டில்கூட ஒரு விழா, வைபவம்னால் ஒரு ஆல்பம் நிரம்பறளவு படம் எடுத்துத் தள்ராங்க. ஆக ராஜேஸ்க்கு நிக்க நேரமில்லை. ராஜேஸ் எந் தம்பிம்மா. அதிகம் படிக்கலைங்கிறதால் புகைப்படத் தொழிலில் இறங் கினவன் இப்ப நல்ல போடு போடறான். அம்மா, அப்பா, அவன், எந்தங்கை எல்லாரும் மும்பையிலதான் - எனக்கு ரெண்டு பிறந்த பிறகு பக்கத்து வீட்டுக்குக் குடி போனோம்.''

இடை இடையே தேநீரைக் குடித்தபடி கதை தொடர்ந்தது. ''எந் தங்கையைப் பார்க்கணும் - மகா அழகி. பெயரும் பொருத்தமாய் ரதி. அவளுக்கும் ஏறக்குறைய கல்யாணம் நிச்சயமானது போலதான். அவ போன பிறகு வீட்டைப் பாத்துக்கறது யாரு? அதான்... அதுக்கு முன்னமே... உ... அதாவது ஒரு பொறுப்பான பொண்ணாய் ராஜேஸ் தம்பிக்கு முடிச்சிடணும்னு...''

ப்ரீத்திக்கு இப்போது சர்வ நிச்சயமாகி விட்டது. தனக்குத் தன் தாய் விட்டுப் போயிருந்தது என்பது பவுனுக்குக் குறையாத நகைகள். அது போகக் கல்யாணச் செலவிற்குப் போதுமான சில லட்சங்களும் உண்டு



என்பதை அண்ணன் வாயால் முன்பு சொல்லக் கேட்டதுண்டு. ஆக இப்படிப் படிக்காத ஒருவனுக்கு முடி போட்டு அவசரமாய்த் தன்னை மும்பை துரத்த வேண்டிய அவசியமென்ன?

அங்கு அவர்களுக்கு உடனடியான வீட்டு வேலைக்கு ஒரு ஆள் தேவை. இங்கோ இவளது தேவை இனி இல்லை...

உண்மை சுட... அந்த வெப்பம் தாளாமல் கண்கள் கசிந்தன.

ப்ரீத்திக்குக் கல்யாணக் கனவுகள் அதிகமில்லை.

ராஜகுமாரன் ஒருவன் வந்து மாலையிட்டு வெள்ளைக் குதிரையில் தூக்கிப் போவதாய் உருகிச் சிலிர்த்ததே இல்லை. ஆனால் சமீப நாட்களாய்த் திருமணம் பற்றி யோசித்ததுண்டு. காரணம் இயந்திரத் தனமாய் இந்த வாழ்விலிருந்து தப்பிப்பதற்காய். அண்ணன் குழந்தை களை வளர்த்துப் பராமரிப்பது இன்பம்தான் என்றாலும், வெளியே எங்கு கிளம்பினாலும் இவளை விட்டு விட்டே அண்ணி போவாள். அயல்நாடு வந்தும் கூட இவள் பரபரப்பான, பளபளப்பான நகரங்களை இன்னும் பார்க்கவில்லையே...

சுற்று வட்டாரத்தில் சில மைல்களைப் பயணித்ததோடு சரி. இருபுறமும் சற்றே சாய்வாய் இழைத்து விடப்பட்ட சாலைகளும், அடிக்கடி பொழியும் மழைநீர் அச்சரிவில் வழிந்து இரு மருங்கிலும் ஓடையாய் ஓடும் சமர்த்தைக் கண்டு அதிசயித்ததோடு சரி. மழையினால் சாலை சுத்தமானதாய்த் தோன்றுமே ஒழிய, சிறு சேறு, சகதி கிடையாது.

மலேஷியப் பயணத்திற்குத் தான் பார்த்ததாய் அவள் சொல்லிக் கொள்ளக் கூடியது இவ்வளவே.

இங்கு வேண்டாத ஒரு களையாகத் தன்னை உணர் பவள், தன்னை வேண்டும் ஒரு துணை பற்றி சில கனவுகளைக் காணப் பழகியிருந்தாள். அதிக வர்ணங் களோ ஜிகினாத் தூவல்களோ அற்ற அவை யதார்த்த நினைப்புகள் என்றே சொல்ல வேணும்.

கண்ணுக்குச் சுமாராய், குணத்தில் சீராய், வருமானம் போதுமானதாய், மனைவியின் கருத்துக்களுக்கும் காது கொடுப்பவனாய்... போதும்!

திருமண வைபவத்தைக் கூட வெகு எளிமையாய் வைத்தால் போதும் - மீதப்படும் பணத்தை வங்கியில் இட்டு வைத்தால் எதிர்காலச் செலவுகளுக்குக் கைகொடுக்கும்.

நம் சமூகத்தில் குடும்பப் பெரியவர்களே திருமணங் களை நிச்சயிப்பதால் இவளுடையதை அண்ணன், அண்ணியே தேர்ந்து முடிவு செய்வது... முறைதான் - அது அவர்களது கடமைதான்...

ஆக, தனக்கு ஏன் இப்படி எரிச்சலாய் வருகிறது?

வந்திருப்பவர்களின் தரம் அப்படி... தம்பட்டமான பேச்சு, தன்னை எடை போடும் அன்பற்ற பார்வை - எதுவுமே பாந்தமாயில்லை.

ஆனால் முகத்தை முறித்துக் கொள்ள முடியாது.

அது அண்ணனுக்கும் தன்னைப் பெற்றவர்களுக்குமே கூடப் பழி தேடித் தந்ததாகி விடும்.

'என்ன இப்படித் தான்தோன்றியாய் வளர்த்து விட்டுப் போயிருக்காங்க!' என்று உதடு பிதுக்குவார்கள்.

ஆக, பவ்யமாய் அமர்ந்திருந்தாள்.

''எங்க வீட்டுக் கடைக்குட்டி ரதி, பேரழகி - படிக்கும்போதே மாடலிங்கில் பெயர் எடுத்துட்டா. இப்ப



வை நிறையச் சம்பாத்தியம். ஏறக்குறைய கல்யாணம் நிச்சயமாச்சுன்னு சொன்னேனே - மாப்பிள்ளை யார் தெரியுமில்ல...? உங்க அண்ணியோட தம்பிதான்... காதல்தான் - ஆனா நமக்குள்ளே சொந்தம்னு ஆனதால எல்லோருக்கும் சம்மதம்தான்.''

அண்ணியின் முகம் சற்றுக் கடுப்படித்தது.

இந்த விவரமெல்லாம் நாத்தனாருக்குத் தேவை இல்லை என்பது அவளது அபிப்ராயம்.

ஆனால் விருந்தாளியை அடக்கவும் முடியவில்லை. ஆகக் கதை தொடர்ந்தது.

''ரதி வீட்டு வேலை ஏதும் செய்ய மாட்டா. விரல் நகம் உடைஞ்சிடும்னுவா - ஆக, ரெண்டாயிரம் சம்பளம் தந்து வேலைக்காரி வச்சிருந்தாள். ரதிக்குக் கல்யாணமானால் வேலைக்காரியும் அவ வீட்டுக்குப் போயிடுவாளே... அதான்...''

இவளுக்குக் கதையின் போக்கு பிடிபட்டது. ''உங்கண்ணி உன் வேலை, சுறுசுறுப்பு எல்லாம் எடுத்துச் சொன்னா. இங்க சிங்கப்பூரில் எவ்வீட்டுக்காரரின் அக்கா புருஷன் இறந்துட்டாரு... வர வேண்டியதாப் போச்சு - சரி, வந்ததுக்கு ஒரு நல்ல காரியத்தையும் முடிச்சிட லாம்னு மலேஷியா வந்தோம்... ஒரு மணி நேரக் கார் பயணந்தானே!''

சிரமப்பட்டுப் புன்னகைத்தாள் - உதடுகள் ரப்பர் போலச் சுரத்தின்றி இழுபட்டன.

''இனி பூ வைப்பது, நிச்சயதார்த்தத்திற்கெல்லாம் நேரமில்லை. மும்பை இங்கேருந்து பக்கமா என்ன? உன் படத்தை எந்தம்பிட்ட, அதான் ராஜேஷிடம் காட்டி னாலே போதும் - அம்மா, அப்பாக்கும் தடையிருக்காது - அதான் சிங்கப்பூரு முஸ்தபாவில இதை வாங்கிட்டு வந்துட்டேன்...''

''அடடே... விஸ்தாரமான நகைக் கடலில்லையா?'' அண்ணி புகழ,

தன் கைப்பையிலிருந்து அப் பெண் எடுத்த பொருளை இவள் பார்த்துப் புரிந்து கொள்ளும் முன்னமே, மற்றவள் இவளது கையை அழுந்தப் பற்றி விரலுள் அதைச் செருகியும் விட்டாள்.

பளபளா என்று பல் காட்டிய அச்சிவப்புக் குண்டுக் கல் மோதிரத்தை விழியகலப் பார்த்த ப்ரீத்திக்கு உள்ளே உதற ஆரம்பித்தது...!

3



புதிதாய் வெளி உலகைக் காணும் ஒரு குழந்தையின் குதூகலத்துடன் சாலையின் இரு மருங்கும் பார்த்து வந்தாள், ப்ரீத்தி. ரப்பர் கலந்து இடப்பட்ட சாலையில் வழுக்கலாய்ப் பறந்தது வாகனம். சீராய்க் கிள்ளியெடுக்கப்பட்ட தேயிலைக் குத்துச் செடிகளையே கண்டு பழகியவளுக்கு ரப்பரும் தேக்கும் பேர் தெரியாத பிரமாண்ட மரங்களும் செழித்து நின்ற இந்தப் பக்க உலகம் பிரமிப்பாயிருந்தது. குளிர் நீல வானமும் மற்ற இடமெங்கும் பரவிய பச்சையும் மனதையுமே குளிர்வித்தன.

ஆனாலும் நம்பத்தான் முடியவில்லை. மூன்று முறை கிள்ளிக் கொண்ட பின்னும்!

தான் அண்ணனுடன் தனியே மூன்று நாட்களைக் கழிக்கப் பட்டணத்தில் அல்ல, தனிமையான மற்றும் ஒரு எஸ்டேட்டில், என்றாலும் இதற்கு அண்ணி எப்படிச் சம்மதித்தாள்?

பாவம் - இன்னும் சில மாதங்களில் புகுந்த வீட்டிற்குப் போகும் பெண்தானே என்பதாலா?



அல்லது ஒரு கரண்டி விழுவிழுப்பான காயை விழுங்க முரண்டியவள், மறு பேச்சின்றி வருங்கால நாத்தனார் போட்ட மோதிரத்தை ஏற்றுக் கொண்டாளே என்ற நிம்மதியாலா?

யோசனையுடன் தன் விரல்களை ஆராய்ந்தாள். இப்போது விரலில் அந்தச் சிவப்புக் கல் மோதிரம் இல்லை. அது விரலில் ஏறிய அர்த்தம் புரிய, அதற்கும் மேல் தாளாமல் அன்று அவள் தனது அறைக்கு ஓட, அண்ணி விமலி அதையுமே சாமர்த்தியமாய்ச் சமாளித்தாள் -

''அடடே! ப்ரீத்தி குட்டிக்கு என்னா வெட்கம்!'' என்று. இவள் தனது சிறு அறைக்குள் நுழைந்து கட்டிலில் சரிய, விரலில் கிடந்த மோதிரம் நழுவி விழுந்தது. ப்ரீத்திக்கு ஒடிசலான உடல்வாகு. அவளது வெண்டைப் பிஞ்சு விரலில் ஒரு சதைப் பற்றான விரலுக்கான அந்தத் தங்க வளையம் பொருந்தவில்லை. நழுவித் தரையில் உருண்டதை உடனே மீட்கா விட்டாலும், சற்று நேரம் கழித்து, விமலியின் காலடிச் சத்தம் கேட்டதுமே, அதை எடுத்துக் கைக்குள் வைத்துக் கொண்டாள்.

அதற்குள் நெஞ்சுள் ஒரு தெளிவு, திட்டம் வளர்ந்திருந்தது. இப்போது முரண்டினால் அண்ணியின் வீம்பு வளரும். 'இவனைக் கட்டினால்தான் ஆச்சு' என்று ஒரு ரசாபாசமான நாடகம் வீட்டை நாசப்படுத்தும்.

ஆக, வெட்கப் போர்வையில் சற்று ஒளிந்தபடி, தப்ப சமய சந்தர்ப்பம் தேடினாள்.

''எங்கே அவங்க போட்ட மோதிரத்தைக் காட்டு.'' கேட்ட விமலியிடம் காட்டினாள்.

''ஐயையோ! விரலில் போட்டதை ஏன் கழட்டினே?''

''இல்லை... இல்லண்ணி. பெருசாய் இருந்ததால் நழுவிடுச்சு... எனக்கு, என் விரலுக்கு இது பொருந்தவே இல்லை...' இரண்டு அர்த்தமாய்ப் பதிலளித்தாள்.

அண்ணியும் லேசுப்பட்டவள் இல்லையே!

'பார்த்த முதல் இடமே அமைஞ்சது பெரிசு - அளவைச் சரி பண்ணிடலாம். முதல்ல இந்தப் படத்தைப் பார் - இதுதான் ராஜேஷ்.''

விருப்பமில்லாவிட்டாலும் அரைக்கண்ணால் முதலில் பார்த்தவள்,

'நான் சகலமும் அறிந்தவன்!' என்பதான மதிப்பான ஒரு சிரிப்புடனும் சற்று வஞ்சகமான விழிகளுடனும் இருந்த அந்த வாலிபனின் படத்தை அச்சத்துடன் ஊன்றியே கவனித்தாள்.

அதிலும் விமலிக்குத் திருப்திதான். கல்யாண ஆவலில் தான் இப்படி விழியால் விழுங்குகிறாள் என்று சமாதான மானாள்.

'நேரில் பேசிப் பழகலையேன்னு குறைப் படாதே, ப்ரீத்தி. உன் புகைப் படத்தையும் அவர்களிடம் தந்து விட்டிருக்கேன். உடனே ராஜேஷ் உன்னைப் போனில் அழைப்பான். சரிதானா?''

''ம்ம்...''

''எளிமையாய்க் கல்யாணத்தை நடத்தினால் போதுமாம். மிஞ்சும் காசைக் கொண்டு அவனுக்குத் தேவையான உபகரணங்களை வாங்கிக்குவானாம் - உள்ளங்கை அளவில் வீடியோ, கேமரா, டிஜிட்டல், பின்னே எடிட்டிங், மிக்ஸிங்னு தொழிலுக்குப் பல தேவைகள். உடனே கல்யாணத்தை முடிக்கணும்னாங்க. நாம இந்தியா போக ஒரு மாசம் ஆகும். பிறகு கல்யாணப் பத்திரிகை அடிப்பது, சிறு மண்டபமாய்த் தேடறது, சீர் வரிசை சேர்ப்பதுன்னு நாளாகுமே. நான்தான் மூணு மாசம் போகட்டும்னேன்...''

இவளுக்குத் தன் நிலை மேலும் தெளிவானது.



இது இரண்டு குடும்பங்களும் அவர்களது மனம், குணம், ரசனை எல்லாம் ஒப்பின இணைப்பு அல்ல - வெறும் வியாபாரம்! தனக்கு என்னென்ன ஆதாயம் என்று இவர்கள் எல்லோரும் கணக்கிட்டுத் தேடிக் கொண்ட லாபம்!

இதில் தனக்கு மட்டும் நஷ்டம் வருவானேன்?

சற்று எச்சரிக்கையாய் இருக்க வேணும்.

சற்றுப் பொறுமையாய் இருக்க, விரைவில் தோதாய்ச் சந்தர்ப்பம் வாய்த்தது.

தன் மகனுக்கு ரதி போன்ற பெண், அதிலும் பை நிறையச் சம்பாதிக்கும் மருமகள் கிடைத்த சந்தோஷத்தில், மும்பையிலிருந்த விமலியின் தாயார் தமிழ் நாட்டுக் கடைகளைச் சூறையாடத் தவித்தார். தன் நாத்திக்கும் விரைவில் திருமணம் என்ற சாக்கில் விமலியும் பட்டியலோடு சென்னைக்குக் கிளம்பத் தவித்தாள்.

'இன்னும் ஒரே மாதத்தில் சென்னைக்குப் போறோம். பிறகு பார்த்துக்கலாமே!' என்று விவேக் சொன்னதைக் கேட்பாரில்லை.

''இந்த மாசம் வாங்கினால் எல்லாம் கொள்ளை மலிவாம். ராஜேஷின் அக்காவுக்கு வேண்டிய பயண ஏஜென்டாய் இருப்பதால் பயணச் சீட்டில் முப்பது சத விகிதத் தள்ளுபடியாம். அவங்களோடவே போயிட் டால் காசும் மிஞ்சும். நல்ல துணையும் ஆச்சு. பிள்ளை களைப் பார்த்துப்பாங்க. அம்மாவும் இருக்கிறதால குத்து விளக்கிலிருந்து ஊசி வரை எல்லாம் பார்த்து வாங்கி வச்சுடறேன். சொச்ச சாமானைக் கட்டி எடுத்திட்டு நீங் களும் கல்யாணப் பெண்ணும் மறு மாசம் வந்திடுங்க.''

''இதுவரை பயிரிடப்படாத கன்னி , மண்ணில் விவசாயம்னு மூணு நாள்...?''

''இதுவரை ப்ரீத்தியும்தான் எதைப் பார்த்தா? அவளைக் கூட்டிட்டுப் போங்க அத்தான்.''

ஆனால் அப்போது ப்ரீத்தி தயங்கினாள்.

''உங்க வேலை விஷயம்... அங்கே எனக்கு யாரையும் தெரியாதே, அண்ணா...''

''சொல்ல மறந்துட்டேம்மா. சந்தானம்மா வர்றாங்க...''

''யாரு - அம்மாவோட நெருங்கிய சிநேகிதியா?''

''அவங்கதான். ரெண்டு பேரின் கணவர்களுக்கும் தேயிலைத் தோட்ட மேற்பார்வை வேலைங்கறதால் இவங்களுக்குள் சிநேகம். அவங்களும் வியாபார விஷயமாய் பினாங் பக்கம் வர்றாங்க. ரெண்டு நாள் எங்களுக்குப் பாடம்...''

தேயிலைகளின் தரப்படி, அவற்றின் மொத்த விலையை நிர்ணயித்து, அதை அயல் நாடுகளுக்கு அனுப்பும் குழுவுடன் சந்தானம் குடும்பத்தாரும் வந்திருக்கிறார்கள் -

முதல் தரத் தேயிலை அயல் நாடுகளுக்குப் போய்விட, அதற்கு அடுத்த தரத்தையேனும் இந்தியாவின் நட்சத்திர ஹோட்டல்களுக்கு விநியோகம் செய்வது அவர்களது எண்ணம். ஆகப் பயண நேரத்திலேனும் அண்ணனுடன் இருக்கலாம். அந்த வாய்ப்பில் தன் விருப்பத்தைத் தெரிவிக்கலாம்.

''வேறெங்கு போய் மாப்பிள்ளை தேடுவேன், தங்கையே?'' என்றவன் அங்கலாய்க்கக் கூடும்.

''இந்த அரைகுறை, அவசரக் கல்யாணத்தில் எனக்கு விருப்பமே யில்லை. முதலில் இந்த இக்கட்டிலிருந்து என்னை விடுவி!'' என்று அண்ணாவின் காலைப் பற்றிக் கெஞ்சினால் மனமிளகுவான்.



''அண்ணா! பழச்சாறு பிழிஞ்சு எடுத்து வந்தேன் - தரட்டா?''

''ம்ம்...''

இவள் நீட்டிய குவளையை வாங்கியவன் முகம் சுருங்கியது.

''என்ன... கை மூளியாயிருக்குது?''

மூங்கிலாய் வழுக்கிய தன் கைகளைப் பார்த்தாள்.

''விரலைச் சொல்றேன். அவங்க போட்ட மோதிரம் எங்கே?''

''அது அண்ணிட்டதான் இருக்குது... அளவைச் சிறுசாக்கணும்னு...''

''இப்பதான் நிம்மதியாய் இருக்குதும்மா. உன்னை எங்கேயும் கூட்டிப் போகாமல் அத்துவான காட்டில் அடைச்சு வச்சிருக்கமே, எப்படி உனக்கான ஜோடியைத் தேடிப் பிடிக்கறதுன்னு கவலை இருந்தது - உங்கண்ணி சாமர்த்தியசாலி - தன் அம்மா மூலமே... அதுவும் நம்மை அலைய விடாமல் பையன் வீட்டாரே தேடி வந்து, உடனே சம்மதத்தின் அடையாளமாய் மோதிரமும் போடறதுன்னா...''

இப்போது வேண்டாம். தொடரும் நாட்களில் சாதகமாய்ச் சந்தர்ப்பம் அமையும் போது பார்க்கலாம்.

பொதுவாய்ப் பேச முயற்சித்தாள். ஆனால் அண்ணனின் பேச்செல்லாம் அண்ணியின் சாதுர்யம், சிக்கனம், இப்போதே நாத்தனாரின் கல்யாணத்திற்காகச் சுழல ஆரம்பித்திருக்கும் அவளது பொறுப்பு பற்றியே போக, இவளுக்குள் சுழலில் சிக்கிய தவிப்பு.

இதிலிருந்து எப்படி மீளுவோம் என்ற மிரட்சி. படத்தில் பார்த்த அந்த அலட்டலான ராஜேஷின் மனைவியாக வாழ்நாளைக் கழிக்க வேண்டியதுதானா?

அவனது தொழில் முதலீட்டிற்கு இவளது காசையும், குடும்பச் சூழலுக்கு உழைப்பையும் அர்ப்பணித்து விட்டுத் தியாகச் செம்மல் என்று தனக்கே சான்றிதழ் கொடுத்துக் கொள்ள வேண்டியதுதானா?

வெறுப்பும் வேதனையுமாய் வெளியே பார்த்திருந் தாள். இப்போது பசுமை மாறி மனித சஞ்சாரம் மிகுந்திருந்தது.

''நம்ப அம்மா, அப்பா இருந்திருந்தால் ரொம்ப மகிழ்ந்திருப்பாங்க...''

''முதலில் என் சம்மதம் பற்றிக் கேட்டிருப்பாங்க!'' என்று சொல்லத் துடித்த நாக்கைச் சுருட்டி வைத்தாள்.

நாவின் சுவை அரும்புகளுக்கு மயங்கிக் கட்டுப் பாடின்றி உணவை உள்ளே தள்ளினால் உடம்புக்குக் கேடு - அதே போல வார்த்தைகளுக்கும் நாவை அடக்கா விட்டால் வாழ்விற்கே கேடு என்பதைப் புரிந்த பக்குவம்!

இவர்கள் அன்றிரவைக் கழிக்க வேண்டிய விடுதி வந்துவிட, விவேக் பெட்டிகளை இறக்கலானான்.

வீசிய உப்புக் காற்றை அனுபவித்தபடி இவளும் அண்ணனுக்கு உதவினாள்.

தன்னையே யாரோ நோட்டமிடுவது போலத் தோன்ற, சுற்றும் முற்றும் நோக்கியவளின் முகம் மலர்ந்தது.

அங்கு நின்றிருந்த தென்னிந்தியத் தம்பதியைக் கண்டு.

ஆனால் அந்த அம்மாளின் முகத்தில் கடுப்படித்தது.

''அண்ணா... அவங்க சந்தானம்மா இல்லையா?''

''எது... யார்?''

நிமிர்ந்தவனின் முகம் கனிந்தது.



''அவங்களேதான். வா.''

ப்ரீத்தியின் மனம் மேலும் சோர்ந்தது. தன் தாயின் நெருங்கிய நேகிதியின் அண்மையில் சற்று ஆறுதல் கிடைக்கு மென்று வந்த நம்பிக்கையிலுமா மண்?

தன்னையே கடுமையாய்ப் பார்த்திருந்த பெண்ணைக் கண்டு புன்னகைக்க முயன்றவள், கை குவித்து வணங்கி னாள். இருபுறமும் கைகளை இழுத்த பொருட்களின் கனத்தால் சற்று விசித்திரமான கோணத்தில்தான் வணங்க முடிந்தது.

''இதுதான் ப்ரீத்தியா?'' சந்தேகத்தை நிவர்த்தி செய்து கொண்ட அம்மாள் பெருமூச்சு விட்டாள். ''ரொம்ப வித்தியாசமாய் வளர்ந்திட்டே பொண்ணே - அடையாளங் காண முடியலை!'' என்று சொன்னதும், ப்ரீத்தியின் மனம் வாடியது. அதாவது தன் தாயைப் போலத் தான் அழகாய் உருவாகவில்லை என்று வருந்துகிறாள் என்பது புரிந்த வாட்டம்.

''நல்லா வளர்ந்துட்டே!'' என்று சம்பிரதாயமாய்ப் பேச்சை ஆரம்பித்த சந்தானம் ஐயா, ''உன்னைப் பார்த்ததில் ரொம்ப மகிழ்ச்சிம்மா. ஏழரைக்கு விருந்து - அதற்குள் தயாராகு!'' என்றபடி விவேக்குடன் நடந்தார்.

''ஆண்கள் அந்த அறையில் தங்கட்டும். நீ என்னோடு வா,'' என்ற சந்தானம்மா இவளை இழுத்துக் கொண்டு போய், வாய் ஓயாமல் பேச, சூழல் சற்று சகஜமானது.

''உன்னைக் கடைசியாய் நான் பார்த்தப்ப உனக்குப் பதினாலு வயசிருக்கும். சிறு பிள்ளையாய் இருந்தப்ப சதா எங்க வீட்டிலே இருப்பே. பச்சைப் பட்டில் உனக்கு ஒரு கிமோனோ உடை வாங்கித் தந்தேன்... அடிக்கடி அதைப் போட்டுக்குவே.''

ப்ரீத்திக்கும் நிழலாய் ஞாபகங்கள் வந்து போயின.

''ஆமாம்மா... அதை அடிக்கடி போட்ட ஞாபகம்.''

''இப்ப கூட பச்சையில்தான் உனக்கொரு சேலை எடுத்து வந்தேன்.''

''எதுக்கும்மா...''

''கட்டிக்கத்தான். நான் அழகு பார்க்க வேண்டாமா? சிறு வயதில் பொம்மைக் குட்டியாட்டம் இருப்பே...!''

ப்ரீத்தி கூச்சத்துடன் நெளிந்தாள்.

இருபத்திரண்டு வயதுப் பெண் பொம்மையாட்டம் இருக்க முடியாதுதான். ஆனால் தான் அழகுச் சிலையாகவும் உருப் பெறவில்லை என்பது ப்ரீத்திக்கு நிச்சயம். அந்த ஏமாற்றத்தில்தான் சந்தானம்மாவின் முகம் இறுகியதோ?

சாதாரண நிறம். உயரமும் ஒடிசலுமான உடல்வாகு. சற்று எண்ணெய் கசியும் சருமம். சீரான முகம்தான் என்றாலும் பராமரிப்போ அளவான ஒப்பனையோ காணாததால் யாரையும் பிரமிக்க வைக்காது.

இவளையே உற்றுப் பார்த்த சந்தானம்மாவின் கண்கள் கலங்கின.

''இன்னும் அந்த அழகு இருக்குதான் - என்னதான் இருந்தாலும் நீலாவின் அழகு உனக்கும் இல்லாமல் போகுமா?''

தன் தாயைப் பற்றி மேலும் கேட்கும் ஆவலுடன் நிமிர்ந்தாள், ப்ரீத்தி.

''ஏன் பின்னலை இத்தனை இறுக்கிப் போட்டிருக்கே. கால் லிட்டர் எண்ணெய் வேற வடியுது? அலசித் தளரப் பின்னினால் கற்பகத்துல கே.ஆர்.விஜயா இருந்தாப் போல் அம்சமாய் இருப்பே...!''



அது ஏதோ ஒரு திரைப்பட நடிகையின் பெயர் என்பதைத் தவிர வேறேதும் அறியாதவள் சின்னதாய்ப் புன்னகைத்தாள்.

''எத்தனை அம்சமாயிருக்க! ஆனா... கடலை மாவைத் தடவி அஞ்சு நிமிஷம் காய விட்டுக் கழுவு.''

சுற்றிலும் பார்த்தவள், ''எதை?'' என்றாள் அப்பாவியாய்! ''உம் முகத்தைத்தான்டி பெண்ணே. முதலில் இப்படி உட்காரு. எப்படி இப்படிக் கருத்தே? அழகைப் போற்றிப் பராமரிக்க வேண்டாமா? உன்னைப் பார்த்ததும் எனக்கு வயிறு எரிஞ்சிருச்சு போ...''

ஆக, இவர்களின் முகம் கடுத்ததின் காரணம் தனது அழகின்மை... ப்ரீத்தியின் முகம் மேலும் கூம்பியது.

பேசியபடி இவளது முகத்தில் எதை எதையோ தடவியவர், சற்றுப் பொறுத்து -

''இந்த ஷாம்புவைத் தேய்த்து முடியையும் அலசு போ!'' என்ற உத்தரவிற்குக் கீழ்ப்படிந்தாள்.

தன் தாய் இருந்திருந்தால் இப்படித்தான் உரிமையும் பாசமுமாய் அதட்டிப் பேணியிருப்பாள் என்ற இதத்துடன்.

குளித்து உலர்த்திய கூந்தலைத் தன் கைப்படத் தளரப் பின்னிய சந்தானம்மா, தன் பரிசான பச்சைப் புடவையையும் பாந்தமாய்க் கட்டி விட்டாள்.

''இப்படி நெகிழக் கட்டினால் வேலை செய்யச் சரிப்படாது. அதான்...''

''யார்... உங்க அண்ணி சொன்னாளா? குடும்ப நண்பர்கள்னு இல்லாமல், தொழில் நிமித்தமாய்க் கூட உங்கண்ணனுக்கு நாங்க உங்க வீட்டிற்கு வருவதில் இஷ்டமில்லை - விமலிக்கு மசக்கை, பிள்ளை பிறந்ததி

விருந்து பலகீனப்பட்டுட்டா... என்று உன்னையும் கூட அப்பப்ப வந்து பார்க்கக் கூடாதபடி வழியை மூடிட்டான். இருந்தாலும் வந்து பார்த்திருக்கணும், நான்... இருபது வயசுக் கிளிப் பெண்ணைக் கிழவி போல வேடம் போட்டில்ல வச்சிருக்கா?''

பொருமலைக் கேட்டதும், ப்ரீத்திக்கு அண்ணியை விட்டுத் தர மனமாகவில்லை.

''எனக்குமே வேலை செய்ய இதுதான் வசதின்னுதான் புடவையை, தலையை இறுகக் கட்டிக்கிறதும்மா...!'' என்றாள் சமாதானமாக.

''எஸ்டேட் மேனேஜர் வீட்டில் குறைஞ்சது நாலு வேலையாட்கள் இருப்பாங்க - இழுத்துப் பிடுங்கி வேலைகளைச் செய்ய - பிறகென்ன உனக்கு வரிஞ்சு கட்டிக்கற வேலை?''

''பிள்ளைங்க இருக்காங்களே - மூத்தவளுக்கு ஆரம்பப் பாடங்கள், முக்கியமாய் வேலையாட்கள் மேற்பார்வை செய்யணும்.''

''அது நிஜம். நாலு பேருக்குமான வேலையை, உணவை முறையாய்ப் பிரித்துப் பங்கிடறதே பெரும் வேலைதான், போ..''

''உங்க பிள்ளைகள் எல்லாம்?''

''கல்யாணமாகி அவங்கவங்க இடங்களில் இருக்காங்க - அதான் நான் இவரோடு சுத்தறேன். இப்ப இந்த இலுப்பப் பூதான் என் சர்க்கரை!'' - கணவரைக் குறிப்பிட்டுக் கேலி பேசினார் - ''சரி, நாங்கதான் உன் வீட்டிற்கு வர முடியலை. நீ எங்களோடு வாயேன், ப்ரீத்தி - ஒரு மாசமேனும் என்னோட இரேன்...''

இவளுக்குள் ஆசைச் சுடர் ஏறியது. கூண்டின் சிறு கதவு திறக்கக் கண்ட கிளி றெக்கைகளைச் சிலிர்ப்பது போல உள்ளே இன்பப் படபடப்பு.



அத்தனை இக்கட்டிலிருந்தும் விடுதலை கிடைக்கப் போவது போன்ற ஒரு ஆனந்த எதிர்பார்ப்பு...

4



'உலகில் மாற்றத்தை விட நிரந்தரமானது வேறேதும் இல்லை!' என்பது அவளைக் கவர்ந்த முதுமொழி.

தன் வாழ்வில் மட்டும் மாற்றமேன் இல்லை? அதிலும் வேண்டாத திருமணத்திலிருந்து தப்ப ஏதாவதொரு திருப்பம் நேராதா என்று தவித்திருந்தவளுக்குச் சந்தானம்மாவின் பேச்சு தாகம் தணித்தது.

'இதெல்லாம் கானல் நீரடி - தாகம் தணிக்காது!' என்று புத்தி இடித்தது.

திருமணப் போர்வையில் தன்னைத் துரத்திவிடத் தயாராக இருக்கும் அண்ணியின் மனம் எளிதில் மாறாது - பிடித்த பிடி இளகாது. ப்ரீத்தி தன் வழிக்கு வந்து விட்டாள் என்ற தெம்பில்தான் இந்தப் பயணச் சலுகையும்கூட... இவள் திமிறுவது கண்டால் மறுவாரமே அந்த மும்பைக்காரனுடன் அனுப்பி விடத் தயங்க மாட்டாள் அண்ணி.

புஸ்வாணம் போலத் தோன்றிய அரை நிமிடத்திற்குள் நெஞ்சத்துள் நூறு பூப்பொறிகளை அள்ளிச் சிதற விட்டுவிட்டு அடங்கியது ஆசை.

ஆனாலும் சொச்சமிருந்த ஆசையோடு தன்னையே ஒரு முறை நிதானமாய்க் கண்ணாடியில் பார்த்து நின்றாள்.

தோற்றத்தில் ஏற்பட்டிருந்த மாற்றம் மிக ரம்மியம் தான்.

'உன் முகத்திற்கு இன்னும் சற்றுப் பெரியதாய்க் கல் வைத்த கம்மல் போடலாமே!' என்ற அபிப்ராயத்தை

உடனே சந்தானம்மா செயல்படுத்தியிருக்க, தன்னையே ஒரு புதியவளைப் பார்க்கும் வியப்புடன் பார்த்துக் கொண்டாள்.

பாந்தமான, புதுப் புடவைக் கட்டில் இவளது உயரம் 'ஒட்டடைக் குச்சி' போலில்லாமல் ஒயிலாகி இருந்தது.

தளரப் பின்னிய கூந்தல் முக வெட்டைக் கவர்ச்சி யாக்கியிருந்தது. ஒப்பனையில் முகத்தில் சேர்ந்திருந்த சிறு கருமையும் மெல்லிய செம்மையும் அவளது அழகை எடுத்து நிறுத்தின.

வெண்மையும் துளி மஞ்சளும் கலந்த ஒரு பெயர் அறியாத பூவினைப் பின்னலில் செருகிக் கொள்ள, கூடவே அதுவரை இல்லாத புதுக் கர்வமும் அவளுள் ஏறியது.

விளம்பரங்களில், ஓவியங்களில் தோன்றும் பெண் அழகிகளுக்குச் சளைக்காத எழில் தன்னுடையது என்ற சிறு பெருமை.

சந்தானம் மாமாவின் குரல் கேட்டது.

''போச்சு... அலங்காரம்னால் அரை நாளாயிடுமே! பெண்டுகளா! கிளம்பலாமா? கிளப்பில் இரவு உணவுக்கான நேரம் ஏழுன்னு போட்டிருக்கான். இங்கே நாம ஆடி அசைஞ்சு போனால் பாத்திரங்களைக் கழுவ வச்சிருவான் - தவிர கருத்தரங்கம், ஏல விற்பனைக்காக வந்திருக்கும் சிலர் நம்ப தமிழ் ஆட்கள் - வயிறாரச் சாப்பிடறோமோ இல்லையோ, வாயாரத் தாய்மொழியில் பேசலாம் - வாங்க...''

இளையவளை அலங்கரித்த பின், குளித்து உடுத்த சந்தானம்மா தானும் கொண்டையை முடிந்தபடி வர,

கிளப்பின் உணவகத்தை நோக்கி நடந்தனர். பழங்கால மாளிகையின் அமைப்பில் அமைந்திருந்த அவ்விருந்தினர் விடுதியை அரிக்கேன் விளக்குகளே ஒளியேற்றியிருந்தன.



''பழைமை மீது என்னா மோகம் பாருங்க. அந்தக் காலப் பித்தளை விளக்குகளை இன்னும் பளபளன்னு விளக்கி ஏற்றி...''

''இல்லம்மா - உள்ளே எரியுறது மின்சார பல்புதான்!'' - ப்ரீத்தி விளக்க,

மேலும் ஆச்சரியமாய்ப் பார்த்தபடி விடுதியுள் நுழைந்தனர். மலேஷியக் கின்னர ஓசை மிருதுவாய் மிதந்தது. அதற்கு இணையான மங்கிய மஞ்சள் ஒளி. விசாலமான அறை என்பதால் அரையிருளில் இருப்பதான பிரமை... ஆனால் நான்கு சுவர்களையும் நிரப்பியிருந்த மிருகத் தலைகளை ப்ரீத்தி சற்று மிரட்சியுடனே பார்த்தாள்.

இந்தியத் தேயிலைத் தோட்ட மாளிகைகளும் கூடப் பல இதே ரீதியில்தான் இருக்கும். வெள்ளைக்காரத் துரைகள் வேட்டையாடப் பயன்படுத்திய துப்பாக்கிகள், அவர்களது ரக ரகமான தொப்பிகள், தவிர சுட்டுத் தள்ளிய மிருகங்களின் தலைகள்... பஞ்சடைத்துக் கோலிக் கண்களுடன் மிச்சமிருக்கும் ஆக்ரோஷத்துடன்...

தந்தையைப் பற்றிய நினைவுகளும் கிளர்ந்தன.

சிறு வயதில் இந்தத் தலைகள் ராட்சசத்தனமாய்த் தோன்ற, தான் தந்தையைக் குரங்குக் குட்டியாய்ப் பற்றித் தோளில் சவாரி செய்தது கனவுபோல...

ஞாபகங்கள் கிளறப்பட்டதில் கண்கள் கசிந்தன.

நீர் திரையிட்ட விழிகளின் வழியே சுவரின் காட்டெருமை, வரையாடு, கலைமான், கரடி, புலித் தலைகளை நோக்கினாள்.

இதென்ன ரசனை?

தான் அழித்த உயிர்களின் கூடுகளை இப்படி அலங் காரமாய் வைத்து அறிவிப்பது எதை?

தனக்குள் மறைந்துள்ள மிருகக் குரூரத்தையா?

தணிந்த குரலில் பேசியபடி மனிதர்கள் பலர் அங்கு இருந்தாலும், மங்கிய ஒளியும் சுற்றிலுமிருந்த மிருகத் தலைகளும் காட்டுக்குள் சிக்கியதான பீதியை இவளுக்குள் கிளப்பியது. மூச்சு முட்டுவது போன்ற ஒரு விநோதக் கிலி.

சந்தானம் தம்பதி அறிமுகமான சிலருடன் மும் முரமாய்ப் பேச ஆரம்பித்திருந்தார்கள்.

அவரவர்க்கு வேண்டியதை எடுத்துப் போட்டுச் சாப்பிடும் வகையில் உணவு வகைகள் அணிவகுத்துக் காத்திருந்தன.

தட்டில் வேண்டியதைப் போட்டுக் கொண்டு வெளிப்புறத் தோட்டத்திற்குப் போய் விடுவது உசிதம் என்று ப்ரீத்தி நினைத்த நொடியே மின் தொடர்பு அறுந்தது.

இவளுக்குள் கிடந்த அச்சம் உசுப்பியபடி நிமிர்ந்தது.

தன்னிச்சையாய்க் கால்கள் பின்னடைந்து சுவரோடு ஒட்டிக் கொள்ள நகர்ந்தன. ஆனால் பின்னந்தலை எதிலோ முட்ட, தளரப் பின்னப்பட்டிருந்த கூந்தல் கற்றையை யாரோ பிடித்திழுக்க, அச்சூழலில் அலறுவது கூடாது என்பது தெரிந்தும், எழுந்த சிறு கூவலை அவளால் தடுக்க முடியவில்லை...

கைகள் எதிரே ஏதேனும் ஒரு பிடிக்காகப் பதறித் துழாவின. தட்டுப்பட்ட ஒரு அகண்ட தோளை இவளது கைகள் மாலையாய்ச் சுற்றிக் கொண்டன. சொரசொரத்த துணி. அது அப்பா உடுத்தும் அதே டுவீட் ரகத் துணி... அதே போன்ற ஆண்மைத்தனமான ஒரு வாசனை.

பிடியை இறுக்கியவள் அந்தப் பரந்த தோளில் தஞ்சமானாள். பெரிய ஆறுதலை அந்த நெருக்கம் தர, மேலும் ஒண்டியவளின் உதடுகள் முணுமுணுத்தன.



''என்... தலை முடியை... யாரோ...'' உடம்பு உதற, வார்த்தைகள் திணறின.

அதற்குள் ஓரிரு மெழுகு வத்திகளின் ஒளி பரவி னாலும், ப்ரீத்தி இறுக மூடிய விழிகளை விரிக்கவில்லை.

''இதோ எடுத்திடலாம்...'' வெகு இதமாய்ப் பேசியது ஒரு ஆண் குரல். ''மான்கொம்பில் மாட்டியிருக்கு. அவ்வளவுதான்... இதோ.''

மிருதுவாய் இவள் கூந்தல் விடுவிக்கப்பட்டது மட்டுமல்லாமல், அவனது கை இவளது தலையை நீவியது.

இவளுக்குச் சிலிர்த்தது - அச்சம் தணிந்த, இனமறியாத ஒரு புது உணர்வில் தேகம் நடுங்கியது.

நீள மூச்செடுத்துச் சுதாரித்துக் கொண்டாள்.

''எத்தனை அமரிக்கையான பெண்ணுனு நினைச்சேன். நீங்க என்னன்னா இப்படி இருட்டுக்கும், மான் கொம்பிற்கும் அலறுறீங்களே!''

சிறு டார்ச் ஒளியில் தெரிந்தது ஒரு இளைஞனின் முகம். வார்த்தைகள் மட்டுமல்ல, அவனது விழிகளும் கூட இவளைக் கண்டு ஏளனம் செய்தன.

கூசிப் போனது.

''ஐயோ! மன்னிக்கணும்... பதட்டத்தில் உங்களை மோதிட்டேன்...''

''இல்லையே...?'' புரியாமல் கேட்டான்.

''என்ன... அதாவது இருட்டாய் இருந்ததா...''

''மோதலை... நல்லா கட்டிப் பிடிச்சீங்க... இன்னும் விடவும் இல்லை..'' அவனது குரலில் நிறையச் சிரிப்பு.

அவசரமாய் விலகியவள், மீண்டும் மான் கொம்பில் சிக்க, போதும் இந்த நாடகம் என்பது போல, மீண்டும் விளக்குகள் ஒளிர்ந்தன.

தோளை இதமாய்ப் பற்றி இவளைக் கொம்பின் முட்டலிலிருந்து நகர்த்தியவன் -

''ஒரு எழுபது வயதுப் பெரியவரின் பிறந்த நாள் - அவருக்கு ஆச்சரியம் தர அவரது உறவினர் செய்த ஏற்பாடு உங்களுக்கு அதிர்ச்சியாயிடுச்சு...'' விளக்கினான்.

சிறு மேடையில் கேக் சில மெழுகுவத்திகளுடன் இருக்க, முதியவர் இன்னும் ஆரோக்கியமாயிருந்த பற்களைக் காட்டியபடி சிலருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டிருந்தார்.

''ஓஹோ?'' மேலும் ஆசுவாசப்பட்டாள். ஆனால் ஒரு அந்நியனை, புதியவனைத் தழுவிய வெட்கம் இன்னும் விறுவிறு என்று உடம்பில் இருந்தது.

அது புரிந்தவன், அவளை சகஜமாக்க, பேச்சை வேறுபுறம் நகர்த்தினான்.

''நீங்க விவேக்குடன் வந்ததைப் பார்த்தேன்...''

''ம்ம்... நான் விவேக்கின் தங்கை!'' விளக்கினாள்.

விளக்குகளை விட வெளிச்சமானது அவனது முகம்.

''நினைச்சேன்... ஏன்னா யாரோ சொன்னாங்க. விவேக்கின் மனைவி... வந்து... ரொம்ப வெளுப்புன்னு... நீங்க அத்தனை வெளுப்பு இல்லாததால்...''

அவன் பேசப் பேச, இவளது முகம் இருண்டது.

அதிகாலமே விழிப்புத் தட்டியது.

எழுந்து முடிக்க வேண்டிய வேலைப் பட்டியல் ஏதுமில்லாததால், மற்றவர்கள் இன்னும் நிம்மதியான உறக்கத்தில் ரஜாயினுள் சுருண்டிருந்தார்கள்.

எழுந்தவள் பூனை போலச் சோம்பல் முறிக்க, முழு நீளக் கண்ணாடிப் பிம்பமும் ஒயிலாய் வளைந்தது.



சன்ன வெளிச்சத்தில் தெரிந்த தன்னை ஆர்வமாய் ஆராய்ந்தாள் -

ரோஜா நிற சாட்டினில் கைவேலையால் இளநிறப் பூங்கொத்துக்களை நெய்த இரவு உடை இவளது தாயினுடையது... அவர் கைப்பட்டு உருவானது. மிகப் பாதுகாப்பாய் வைத்திருந்ததை இங்கு போட எடுத்து வந்திருந்தாள்... தாயின் உடையில் இருந்ததாலோ, அல்லது நேற்றிரவு மீண்டும் சந்தானம்மா தேய்த்துப் பொலிவாக்கியதாலோ... முகச் சருமம் 'பளிச்'செனப் பளபளத்தது. கலைந்த கூந்தலும் கூடக் கவர்ச்சியைக் கூட்டியே தந்தது.

காலைக் கடன்களை முடித்து, வரவழைத்த காப்பியுடன் அறையின் முன் பரந்திருந்த புல்வெளியை நோக்கி நடந்தாள். அந்தப் பச்சைப் பரப்பின் நடுவே நின்ற பன்னீர் மரம் மிக நளினமாய்க் கிளை பரப்பியதோடு, மதியம் தன் நிழல் விழும் இடமெங்கும் இப்போது வெண்ணிற மலர்களால் ஒத்தடம் தந்திருந்தது.

பொன் ஒளி படர்ந்த இளங்காலை வேளையில் அம்மலர்த் தூவல் மாயலோகக் காட்சி போலப் பிரமிப்பு ஊட்டியது. ரப்பர் செருப்புக்களை அவிழ்த்து விட்டு, பனி மகுடங்களைத் தாங்கி ஜ்வலித்த புல்லின் மீது பாதங்களை வைக்க, குளிர் ஜிலீரெனப் பாதத்திலிருந்து உச்சந் தலைக்குப் பாய்ந்தது... வாய் விட்டுச் சிரிக்க வேண்டும் போலொரு கூச்சக் குறுகுறுப்பு.

சற்றுக் கலைந்திருந்த பின்னலைப் பிரித்துக் கூந்தலைக் கோதியபடி மரத்தின் அடியில் போய் நின்றாள்... ஒரே இரவில் தான் தேவதையாகி விட்டது போல ஒரு கர்வம்... களிப்பு!

மென்னகையுடன் தனது புது உணர்வை ரசித்தாள்.

இட மாற்றம்தான் இந்த ரசவாதத்திற்குக் காரணமா?

ஆனால் புத்தி அவளைச் சீண்டியது.

'யேய் கள்ளி... நேற்று இரவெல்லாம் கண்ட கனவு களை மறந்திட்டியா? அதுதானே இந்தக் குஷிக்குக் காரணம்!' - என்று.

'ச்சே ச்சே - மிருகத் தலைகளாய்ப் பார்த்த பயத்தில்... ஏதோ குழம்பி... கண்ட கண்ட கனவாய்...'

புத்திக்குச் சமாதானம் சொன்னாள்.

'கண்ட கனவைத்தான் சொல்றேன்! கனவில் மிருகத் தலையா கண்டாய்? அவரைக் கட்டிக் கொண்டல்லவா இழைந்தாய்? அவர் உன் கூந்தலைக் கோதி ஏதேதோ பேச... எப்படி மயங்கினாய்!'

அறிவு பிட்டுப் பிட்டு வைக்க, கனவின் ஞாபகத்தில் ப்ரீத்தியின் கன்னங்கள் குழைந்து சிவந்தன.

ச்சே... ஏனிப்படி வெட்கங்கெட்ட கனவுகள்! ஒரு மாலைப் பொழுது மட்டுமே பேசிப் பழகியவனிடம் ஏனிந்த ஈர்ப்பு? ஆராய முற்பட்டவளுக்கு அறிவு இப்போது அதிர்ச்சியைத் தந்தது -

'ப்ரீத்தி - உனக்கு ஏற்கெனவே திருமணம் நிச்சயிக்கப் பட்டு விட்டது - மாப்பிள்ளையின் பெயர் ராஜேஷ். இன்னும் இரண்டே மாதங்களில் நீ திருமதி ராஜேஷ்...'

அதற்கு அச்சாரமாய்ப் போட்ட சிவப்புக் கல் மோதிரம் விரலில் இல்லாவிட்டாலும், மனதுக்குள் பிரம்மாண்டமாய் வளர்ந்து இவளை மிரட்டியது.

## 5



தேனில் விழுந்த ஈ என்னதான் துடித்துப் பரபரத்தாலும் அந்த இனிப்புத் திரவத்தி லிருந்து மீள முடியாதில்லையா?



ப்ரீத்தியின் நிலைமையும் அதுவேதான்.

நிச்சயிக்கப்பட்ட கல்யாணத்தை, கணவனை விரும்பாத மனம், ஏன் ஒரு பொழுது சந்தித்தவனிடம் இப்படிச் சிக்கிக் கிறங்குவது என்று புரியாத குழப்பம்.

மனம் முந்தின இரவின் சந்திப்பையே மறுபடி அசை போட்டது.

அந்த அறையோ அல்லது அங்கு சற்று முன்பு தான் ஒரு இளைஞனை அணைத்து இருந்ததோ... எதுவோ அவளைச் சங்கடப்படுத்த, தட்டில் சிறிது உணவைப் பரிமாறிக் கொண்டவள், வெளியே காற்றாடிய தாழ்வாரத்திற்கு நகர்ந்தாள்.

இசை இங்கும் இதமாய்ப் பரவியிருந்தது.

வீசிய தென்றல் இவளில் துளிர்த்திருந்த வியர்வையை ஒற்றி எடுக்க, சற்று அமைதியானவள் மூங்கில் நாற்காலி ஒன்றில் அமர்ந்து உணவைக் கொறிக்கலானாள்.

''சரியான இடத்தைத்தான் தேர்ந்தெடுத்திருக்கீங்க!'' என்ற பாராட்டுடனும், உணவுத் தட்டுடனும் அருகே வந்து அமர்ந்தவனைக் கண்டதும், மீண்டும் வியர்த்தது.

'என்னதான் இருட்டு என்றாலும் இப்படியா எதிரே நின்றவனை இறுகத் தழுவுவது... தழுவியது ஒரு ஆண் என்பது புரிந்த பின்னரும் அவனை விடாமல் அணைத்திருந்த தன்னைப் பற்றி என்னதான் நினைப்பார் இவர்...' என்ற வெலவெலப்பு!

ஆனால் அவனோ சில நிமிடங்களுக்கு முன்பு நடந்த அந்தச் சம்பவத்தை முழுக்க மறந்தவன் போல இயல் பாய்ப் பேச ஆரம்பித்தான்.

''உங்களை இதற்கு முன் இது போன்ற நிகழ்ச்சிகளில் பார்த்ததே இல்லையே, ப்ரீத்தி!''

ஆச்சரியமான இவளது விழிகளுக்கு விடையும் அளித்தான். ''உங்க பெயர் எனக்கு எப்படித் தெரிஞ்சதுன்னா? சந்தானம்மா சொன்னாங்க - நாங்க இது போன்ற கருத்தரங்கு, ஏல விற்பனைகளில் முன்பே சந்தித்ததுண்டு.''

''ஓஹோ? நான் அண்ணனின் குடும்பத்தோடு தங்கியிருக்கேன். எஸ்டேட்டில் வேலை சரியாய் இருக்கும். இம்முறை அண்ணி வர முடியலை... எனக்கும் ஒரு மாற்றமாய் இருக்கட்டுமேன்னு..''

''அனலுக்கு அஞ்சி அடுப்புக்குள்ளேயே விழுந்த கதைதான்!'' கட்லெட்டை முள் கரண்டியால் பிரித்து உண்டவன் சிரித்தான்.

''ஏன்?''

''எஸ்டேட்டின் வனவாழ்கைக்கு மாற்றாய்ப் பட்டணத்துப் பகட்டை அல்லவா பார்க்கனும் நீங்க!''

''ஏழைக்கேற்ற எள்ளுருண்டை. இங்கே சந்தானம் மாவைப் பல வருஷங்களுக்குப் பிறகு பார்க்கக் கிடைத்ததே... அதுவே பெரிசு.''

''ம்ம்... நல்ல நோக்குதான். நீங்க வளர்ந்ததும் எஸ்டேட்டில்தான், இல்லையா?''

''ம்ம்.''

''படிப்பெல்லாம்...''

''ஆரம்பக் கல்வியை அம்மாதான் தந்தாங்க. பிறகு விடுதிகளில் தங்கிப் பள்ளிப் படிப்பு... அண்ணி தனியே இருக்க முடியாதென்பதால் பட்டப் படிப்பைத் தபால் வழியே முடிச்சிட்டேன்.''

''தனிமையான பண்ணை வாழ்வில் பொழுதை நகர்த்துவது கொஞ்சம் சிரமமாச்சே?''



''கைவேலை, சமையல், வாசிக்கும் பழக்கம், தோட்டத்தில் ஆர்வம் - இதெல்லாம் இருக்க, அதில் பிரச்சனையே இல்லை.''

''அது சரி. ஆனால் பெண்களுக்குப் பணத்தையும் கொஞ்சம் செலவழித்தால்தானே திருப்தி? கடை கண்ணிக்குப் போக, அழகு நிலையம், தோழிகளுடன் அரட்டை...?''

''எனக்கு அதிலெல்லாம் பழக்கமில்லை... நாட்டமு மில்லை. எஸ்டேட் கூலிகளின் பிள்ளைகளுக்கு எழுதப் படிக்கக் கற்றுத் தந்தேன். அவர்களின் சின்ன உடல் உபாதைகளுக்குத் தெரிஞ்ச வரையில் மருந்து தருவதுண்டு... அண்ணன் குழந்தைகளும் இருந்தால் பொழுது மிஞ்சுவது...''

கண்கள் கனிய இவளையே கவனித்திருந்தான். உண்டு முடித்த இவளது தட்டையும் அவனே கொண்டு போய், இனிப்பு எடுத்துத் தந்தான்.

''ஸார் வரச் சொன்னாங்க.''

''யார்?''

''சந்தானம் ஸார்தான். அடுத்துப் படம் போடப் போறாங்களாம். அந்த நாளைய ஹாலிவுட் வெற்றிப் படம். கறுப்பு வெள்ளைக் காலத்தியது!''

''ஓ... ஹாலிவுட்டில் கூட...'' என்று ஆரம்பித்தவள் தன்னையே திருத்திக் கொண்டாள். ''ஊமைப் படங் களும் கூடத்தான் உண்டு!'' என்று.

''படத்தின் பெயர் என்ன?''

'''ரோமன் ஹாலிடே.' ரோமாபுரிக்கு விடுமுறைக்கு வரும் வேற்று நாட்டு இளவரசி காதலில் விழுந்து விடுவதான கதை.''

''ஓ... அண்ணனைப் பார்த்துட்டு வரேன்...'' இனம் புரியாத கூச்சத்துடன் அங்கிருந்து நகர்ந்தாள்.

உலகத் தரமான மது பானங்கள் பரிமாறப்பட்டதால், விவேக் ஒன்று மாற்றி மற்றதை ருசி பார்ப்பதில் தீவிரமாயிருந்தான். சந்தானம் தம்பதியுடன் சேர்ந்து திரைப்படத்தைப் பார்க்க அமர்ந்தாள் ப்ரீத்தி. ஆங்கிலப் படங்களில், ஏன், நம் படங்களிலும்... எந்த நேரம் எப்படிப்பட்ட காட்சி வருமோ என்ற சிறு கலக்கத்துடனே தானே காண வேண்டியுள்ளது... ஆக, அப்புதியவனைத் தவிர்த்தாள்.

ஆனால் இன்னும் பெயர் அறியாத அவன் சிநேகமான புன்னகையுடன் இவளுக்கு இரு இருக்கைகள் தள்ளி வந்து உட்கார, இவளுக்குள் மீண்டும் இனம் புரியாத இன்ப உணர்வுகள்.

படம் ஆரம்பிக்க, இவள் படத்தின் போக்கைக் கிரகிக்க முயன்று, பின் அக் கற்பனைக் காட்சிகளில் லயித்துப் போனாள் - ஒரு இளவரசியின் எளிய ஆசைகளும் அதை நிறைவேற்றும் ஒரு பத்திரிகைத் துறை இளைஞனுமாய்ப் போனது கதை - இருவரும் தழுவி முத்தமிடும் ஒரு கட்டத்தில் லஜ்ஜையுடன் கண்களை விலக்கியவள் அறிந்தோ அறியாமலோ அவற்றைப் பதித்தது அருகேயிருந்த இளைஞனில்! ஆனால் பார்த்த கணமே உள்ளம் பதறியது - காரணம் அந்த இருளினும் அசாத்தியப் பளபளப்புடன் அவனது கண்களும் இவளில் பதிந் திருந்ததுதான்.

சட்டெனத் திரும்பி விட்டாலும், மறுபடி மனம் திரைக் கதையில் ஒட்டவில்லை...

அந்த நிகழ்ச்சி தன்னுள் ஏற்படுத்திய சலனம்தான் கனவுக் குமிழாய் வெடித்து இரவில் இம்சித்ததோ?



வெட்கப் புன்னகையை உதடுகளைக் கடித்து அடக்க முற்பட்டாள்.

''வெண்மலர் விரிப்பில்

ஒற்றை ரோஜா!'' - கவிதையாய் வந்த பாராட்டில் நிகழ் உலகத்துக்கு இறங்கியவளின் எதிரே புன்னகையுடன் நின்றது அவனேதான்...

இன்னும் அவன் குளித்துத் தயாராகவில்லை என்பதைச் சொரசொரத்த அவனது கன்னங்கள் தெரிவித்தன.

''நீங்க எங்கே...?'' தடுமாறினாள்.

''இங்கேதானே தங்கியிருக்கேன் - அருகே உள்ள தீவிற்கும் நாம் சேர்ந்தேதான் போகப் போறோம்...''

''ம்ம்... அண்ணன் சொன்னாங்க... கன்னி நிலத்தில் என்ன பயிரிடலாம்றது பற்றிய கருத்து... ஆராய்ச்சின்னு...''

''உங்களுக்கு ஆராயும் மூளை இல்லைங்கறது என் அபிப்ராயம்.''

சட்டெனப் பேச்சைத் திருப்பியவனைக் குழப்பமாய் ஏறிட்டாள்.

''என் பெயர் என்னன்னு கூட இன்னும் கண்டு பிடிக்கலையே...''

அவனது விழிகள் சீண்டின.

''அது... அப்படித் தோணலை...'' பொய் சொன்னாள்.

''அப்ப சரி.''

''ஆனால் அது முறையில்லையே... சொல்லுங்க!'' என்றாள், அதிக ஆவலைக் காட்டிவிடாதபடி.

''பிரவாகன்!'' சற்றே தலை சாய்த்து அறிமுகப்படுத்தினான்.

''ஓ...!''

''என்ன ஓ? கேள்விப்படாத பெயராய் இருக்கிறதா?''

''ம்... நூதனம்தான்.''

''அன்பு, பாசம், கருணை, ஈகை இதற்கெல்லாம் உலகில் பஞ்சம் ஏற்பட்டு விட்டதாய் எங்கம்மா வருந்துவாங்களாம். உலகின் இந்த வறட்சியை எல்லாம் போக்கத் தன் மகள் பிரவாகமாய்ப் பொங்கட்டும்னு ஆசையாய் வைத்த பெயர்.''

''அருமையான தேர்வு..!'' மனமுவந்து பாராட்டினாள். இத்தனை நேரம் தன்னுள் பிரவகித்தது இவனது நினைவுகளே என்பதை இவன் அறிந்தால்... நல்ல வேளை, அப்படியான அபாயங்கள் எல்லாம் உலகில் இல்லை என்றும் தேறியது நெஞ்சம்!

''சரி, பறக்கத் தயாரா?''

அடுத்த கேள்வியில் விழித்தாள்.

''பாரா செய்லிங். அதாவது கடலுக்கு மேல் வானில் பட்டம் போலப் பறக்கப் போறோம்...''

''ஐயோ... நான் வரலை... அம்மா ஏதும் சொல்லலையே...''

''ஏன்னா பெரியவங்க வரலை - ரத்த அழுத்தம், இதய நோய் இருப்பவங்க பறக்கறதை விட்டுத் தரையிலே நிக்கறது நல்லது. ஸல்வார் இருக்கில்லையா?''

மறுபடி அவள் 'ஐயையோ' என்பதற்குள், இவளது உதட்டில் படாமல் விரல் வைத்தான்.

''இந்த அனுபவங்களை எல்லாம் இந்த வயசில் பார்த்தால்தான் உண்டு... தவிர நாம் ஆளண்டாத் தீவிற்குப் போகும் முன் நம்மைக் குஷிப் படுத்தவே இந்தப் பறக்கும் அனுபவத்திற்கு ஏற்பாடு செய்திருக்காங்க. பழச்சாறும், டோஸ்ட்டும், சாப்பிட்டுட்டுக் கிளம்பினால் ஏழரைக்குள் கடற்கரையில் இருக்கலாம்...''



''எனக்கு இதெல்லாம் பழக்கமே கிடையாதே...''

''முதல் அனுபவங்களின் சுவை தனி ப்ரீத்தி. நாற்பது வயதுக்கு உள்பட்டவர்களாய்ப் பத்தே பேர்தான் நம் குழுவில். முதலில் நாம் கிளம்புவோம். பெரியவர்கள் எட்டரைக்கு வர, சேர்ந்து தீவிற்குக் கிளம்புவோம். அது அடுத்த சுவையான முதல் அனுபவமாய் இருக்கட்டும்.''

அவனது குறும்பான குறுநகை இவளுக்குத் துணி ஊட்டியது.

ஆனாலும் அண்ணனிடம் அனுமதி எப்படிக் கேட்க என்ற தயக்கமும் கூடவே இருந்தது.

ஆனால் அஞ்சியது போல விவேக் தங்கையைக் கோபிக்கவில்லை. திருமணம் நிச்சயிக்கப்பட்ட பெண் என்பதால் விளைந்த அலட்சியம் போலும்.

'உன் பெட்டியையும் தயாராய் வச்சிடு, ப்ரீத்தி - நான் பிறகு எல்லாவற்றையும் எடுத்துட்டு வரேன்,' என்றதோடு சரி. சந்தானம் தம்பதி இரண்டு படி மேலே போய் -

''பறக்கறது பாயறது எல்லாம் இந்தப் பருவத்தில்தான் - எங்க வயசுல ஊணும் உறக்கமுமே பாரமாயிடுதே!'' என்றார்கள்.

கிளம்பும் அவசரத்தில் அவர்களின் அறையில் நுழைய, 'பேசி'யில் ஏதோ மும்முரமாய்ப் பேசிய சந்தானம் தொடர்பைத் துண்டித்துவிட, ப்ரீத்திக்குச் சங்கடமாய்ப் போனது.

''மன்னிக்கணும்... முக்கியமாய் பேசிட்டிருந்தீங்க. கெடுத்துட்டேன்!'' - மன்னிப்புக் கோரினாள்.

அம்மாளின் முகம் சுரத்தின்றி இருந்ததைக் கண்டவளின் மனம் இளகியது...

''ஏதேனும் கெட்ட சேதியா? நான் வேணும்னா இங்கயே இருந்திடட்டுமா?''

''எல்லாம் நல்ல சமயத்துல கிடைச்ச நல்ல சேதிதான் - நீ கிளம்புடா!'' என்றவர்கள் விரட்ட, கிளம்பினான்.

பறக்கும் ரயிலில் போவதென்ன, தானே பறக்கப் போகும் குதூகலம் அவளுள் புக ஆரம்பித்திருந்தது.

பத்து நிமிடக் கார் பயணத்தில் கடற்கரைக்கு வந்தவர்கள், வானை நிமிர்ந்து பார்த்ததும் கூச்சல் வானை முட்டியது.

'ஹே... ஹோ...'

பெரிய நீள் சதுரப் பறவைகளாய் நீலவானில் அலைந்து கொண்டிருந்தது. அதெல்லாம் மனிதர்கள்தானா?

படபடத்த இதயத்தைப் பற்றிக் கொண்டவளிடம் ஒரு மலேயத் தமிழர் வந்தார்.

''மாட்டிடவா?''

இவள் மறுக்கும் முன் இவளது உடலில் சில நாடாக்கள் சுற்றப்பட்டன. அக்கயிறின் மறுமுனை படகில் நின்ற ஆளிடம். ''நாங்க விசில் பண்ணினதும் ஓடணும்ம்மா... ரெண்டே நொடியில் பறக்க ஆரம்பிச்சுடுவீங்க... ரெடி?''

இவள் அலறினாள்.

''இல்லை... வேணாம்.''

''துணைக்கு ஆளுண்டா? இது அற்புதமான அனுபவம்மா... மிஸ் பண்ணிட வேணாம்.''

இவள் அலமலந்து பார்த்து,

''பிரவாகன் ப்ளீஸ்... ரொம்ப பயம்மாயிருக்கே...!'' கெஞ்சினாள்.



''உயரே போனதும் பயம் மட்டும் கீழே விழுந்திடும், ப்ரீத்தி...''

''நீங்களும் வந்தால்...''

அவன் சம்மதமாய்த் தோளை உயர்த்த, அதே நாடாக்கள் அவனையும் பிணைக்க, இவளுக்கு மேலும் மூச்சுத் திணறியது.

உடல் உராயுமளவில் இத்தனை நெருக்கமாகவா கட்டுவார்கள்? இதென்ன வம்பாய்ப் போனதே என்ற [illegible]! தொடர்ந்து யோசிப்பதற்குள் விசில் சத்தம் காற்றைக் கிழிக்க, இவளையும் இணைத்தபடி பிரவாகன் [illegible] 'ஜிவ்'வென்று ஜோடியாய் மேலேறினார்கள்... கண்களை இறுக மூடினாள்.

''ப்ரீத்தி...''

''ம்ம்...''

''கண்ணை மூடியாச்சா?''

''ம்ம்.'' தன் பின்னால் இருப்பவனுக்கு அது எப்படித் தெரிந்தது என்பது புரியாமலேயே 'உம்' கொட்டினாள்.

''கண்ணைத் திறந்து பாருங்க...''

மந்திரம் போலவன் உச்சரிப்பிற்குக் கட்டுப்பட்டுக் கண்ணைத் துளியாய்த் திறந்தாள்.

எங்கும் நீலம்... மேலும் கீழுமாய் நீலம் மட்டுமே! கடலைக் கிறிப் பாய்ந்த மோட்டார் படகின் வேகத்திற்கு இசைந்து இவர்களும் பறந்தார்கள் - முகத்தில் மோதிய உப்புக் காற்றும் ஒரு பறவை போலப் பார்க்கக் கிடைத்த உலகமும் பரவசமூட்டின.

''ஹைய்யோ..''

''ரொம்ப அற்புதமில்லை?''

''ம்ம்...''

''அஞ்சே நிமிஷந்தான் இந்த அனுபவம் - ஆச அனுபவிங்க.''

உடலோடு மனமும் பாரமற்றுப் போக, பறந்தாள். முன்னால் குளிர் காற்றும் பின்னால் அவனது உடல் தந்த வெப்பமும் கலந்து விநோத இன்பந் தந்தன. இப்படியே இருந்து விடலாமே என்ற சுக ஏக்கம்! தூசியும் இரைச்சலும் இல்லாத இந்த நீல வெளியில் திரியும் பறவைகள் மீது பொறாமையும் கூட வந்தது.

பெரிய வட்டமொன்று அடித்த பின் கரை நோக்கிப் படகு நகர, இவர்களும் தொடர்ந்தனர்... படிப்படியாய்த் தாழ்ந்தனர்.

''தரையைத் தொட்டதும் ஓடணும்!'' என்றவன் சொன்னாலும், பதட்டத்தில் இவள் குறுகிக் கொண்டாள். இவளையும் சுமந்தபடி பிரவாகன் மட்டுமே ஓடியதில் தடுமாறி இருவரும் உருண்டனர்.

மிருதுவான கடல் மண் என்பதால் சேதமில்லை.

பலர் பார்க்கிறார்களே என்ற கூச்சத்துடன் இவள் எழ முயல, மலேயத் தமிழர் வந்து நாடாக்களை அவிழ்த்தார் - மேனியெங்கும் ஒட்டியிருந்த மணலைத் தட்டியவளில் இன்னும் தடுமாற்றம் இருந்தது. தோளை மிருதுவாய்ப் பற்றி நிறுத்தியவன் -

''என்ன, நல்லாயிருந்ததா?'' என்று கேட்க,

பதிலும் சொல்ல முடியாமல் ப்ரீத்தி குப்பென முகம் சிவந்தாள்.

சீவிய இளநீர் ஒன்று நீட்டப்பட, அதைப் பருகும் சாக்கில் தலை குனிந்தவளுக்கு யாருடைய பார்வையோ தன்னைத் துளைக்கும் உணர்வு.



[illegible] என்று தேடக் கண்களை ஏவினாள்.

[illegible]களைக் குரோதத்துடன் முறைத்தபடி நின்ற [illegible] யார்? பார்த்த முகம்தான்... எங்கே?

[illegible]ரவு க்ளப்பில் பார்த்த ஞாபகம்... ஆனால் அவர் [illegible] வெறுப்பாய்த் தன்னை முறைப்பதுதான் [illegible]...?

''[illegible] திருமதி டாலி வெங்கட்... பார்வையால் [illegible] பொசுக்கியும் நீ பூப் போலவே இருக்கியேன்ற [illegible]ரிச்சலோடு நிக்கறாங்க...''

''[illegible]... எதுக்கு...? உங்களுக்கு அவங்களைத் தெரியும் [illegible].''

''[illegible]ளவு. இந்தப் பயிற்சி முகாம், பண்ணை எதிலும் [illegible] கிடையாது என்றாலும், சம்பந்தம் [illegible]வதற்காய் இங்கே வந்திருக்காங்க...''

[illegible]ரவாகன் பிரம்மசாரி என்பதை ஊகித்திருந்தாள்... [illegible]யானால் பெண் தருவதற்காய்த் துரத்தும் [illegible]தையம்மாளா?

அதுவரை பெருகிய பரவசம் சட்டென அறுந்தது... சந்தோஷ முத்துக்கள் சிதறிக் கலைந்தன...

## 6



கடலின் அலைகள் சற்று வலுவாகவே உருண்டன. கப்பலின் மேல் தளத்தில் அதன் ஆட்டத்திற்கு ஈடு தந்து நின்றவளின் புருவங்கள் முடிச்சிட்டிருந்தன.

கடந்த சில மணி நேர அனுபவங்களில் மறந்திருந்த தன் நிச்சயிக்கப்பட்ட திருமணம் பூதமாய் மறுபடி நினைவிலேறிப் பய முறுத்தியது.

நீலவானில் வெண் பட்டம் போல அலுங்காமல் மிதந்த கடற்பறவைகளை ஏக்கமுடன் பார்த்தாள். சற்று முன் பிரவாகனுடன் இணைந்து வானில் மிதந்த அனுபவம் எத்தனை அற்புதமாயிருந்தது! இப் பறவைகள் அந்த சுகத்தில் காற்றோடும் காற்றை எதிர்த்தும் எத்தனை இலகுவாய் அலைகின்றன! இடையிடையே கடற் பரப்பில் மின்னும் மீன்களைக் கௌவிப் பசியாறியபடி... மனிதனின் பாடுதான் திண்டாட்டம்...

''ப்ரீத்தி - உன் ஆராய்ச்சி எல்லாம் பிறகு வச்சுக்கலாம் - இப்ப வாயேன்.''

இவளது கைப்பற்றி பிரவாகன் இழுக்க, மறுப்பின்றி ஓடினாள்.

''என்ன?''

''உன் பாதங்களுக்குப் பூக்களை விரிப்பதுதான் சரி - ஆனால் இந்தக் கஞ்சப் பிரபுக்கள் காகிதத்தைத்தான் தந்திருக்காங்க - ஆனால் சமாளிப்போம்.''

''என்ன சொல்றீங்க?''

''போட்டிக்கு நம் பெயரைக் கொடுக்கணும் - வா.''

அவன் காட்டிய இடத்தில் கையெழுத்திட்டு நிமிர்ந்தவளுக்குச் சுரீர் என்றது - காரணம் டாலி அம்மணியின் காரப் பார்வைதான்!

''போட்டின்னா என்ன ஏது என்று எனக்குக் கொஞ்சமேனும் விவரம் சொன்னால் தேவலை!'' - என்றாள் சிறு சலிப்புடன்.

'நான் ஒரு இளிச்சவாய்! என் தலையில் அவரவர்க்குத் தேவையான மிளகாயை அரைத்துக் கொள்ளலாம்!' என்று தன் நெற்றியில் எழுதியிருக்கிறதோ என்னவோ என்ற சந்தேகம்! தவிர பிறரின் இழுப்பிற்கு இவளும் வளைய வேண்டியதென்ன?



''எனக்கு எம்.சி.ஏ. படித்து ஒரு கணினி நிறுவனத்தை [illegible] நிர்வகிக்கும் பெண் தேவையில்லை, ப்ரீத்தி - [illegible] அந்தப் பெண்ணிற்கும்தான் நான் தேவையா [illegible]? ஆனா அவளது தாயான டாலிம்மாதான் என்னை [illegible]ள்ளையாக்கத் துடிக்கறாங்க. இப்போது ஆணும் [illegible]ணுமாய்ப் பங்கேற்கும் ஜோடிப் போட்டிகள் [illegible]பெறும். தம்பதியாய் இருக்கணும்ற அவசிய [illegible]. எழுபது வயதுப் பாட்டியும் பத்து வயதுப் [illegible]னாகவும் இருக்கலாம். வெற்றி பெறுபவர்களுக்குப் [illegible]கள் குவியும்...''

''இதெல்லாம் எங்கே?''

''இதே கப்பலில்தான் - ஐபார்ங் தீவிற்கு நாம் போய்ச் சேர நாற்பத்து ஐந்து நிமிஷங்களாகும் - அந்த நேரத்தைச் சுறுசுறுப்பாக்க ஒரு விளையாட்டு...''

''அதற்கா நான் கையெழுத்திட்டேன்?''

''அதற்காகத்தான் நான் நன்றியும் சொல்லிட்டிருக்கேன்...'' தலை சாய்த்துச் சிரித்தான் - அந்த உல்லாசப் பாவனையில் அவனது கவர்ச்சி இரட்டிப்பானதை ரசித்தாள்.

''முக்கியமான உதவியிது, ப்ரீத்தி - இல்லைன்னா என்னோடு ஜோடி சேர டாலியம்மா தயாராய் இருந்தாங்க. அதான் உன்னை இத்தனை அவசரமாய் இழுத்துப் போனேன்...''

அவனைச் சங்கடத்திலிருந்து காப்பாற்றிய இவள் சங்கடத்துடன் தன் அண்ணனைத் தேடினாள். அண்ணன் விவேக் ஒரு சக பயணியுடன் சூடான விவாதத்தில் இறங்கியிருந்ததால் நடந்த கேளிக்கைகளைக் கவனிக்காததில் தங்கைக்கு நிம்மதி. ஆனாலும் பிரவாகனுடன் ஜோடி சேர்ந்து போட்டிகளில் பங்கேற்பது சங்கோஜத்தைத்

தர, அதற்குள் போட்டியின் விதி முறைகள் அறிவிக்கப்பட்டன.

கைக்கு ஒரு காகிதச் சதுரத்துடன் துடியாய் நின்றான், பிரவாகன் -

''இது... எதற்கு?''

''இப்பதானே சொன்னேன் - மலர்ப் படுக்கைக்குப் பதிலாய்க் காகிதத்தைத் தந்திட்டாங்கன்னு... இதை மாற்றி மாற்றி நான் நீ நடக்கத் தோதாய்க் கீழே வைக்க, உன் பாதத்தை அதில் வைத்தே நடந்து, நீ வெற்றிக் கோட்டை எட்டணும் - சரிதானே?''

விளையாட்டு உற்சாகத்தில் அவன் பேச்சு ஒருமைக்குத் தாவியிருந்ததைக் கவனித்தாலும், அது உறுத்தலாய் இல்லை. ஆனாலும் அந்த நூதன விளையாட்டு சங்கோஜப் படுத்த அவசரமாய் மறுத்தாள்.

''ஐயோ - வேணாம் - எனக்கிதில் பழக்கமே இல்லை.''

''எனக்குத் தினம் இதேதான் வேலை!'' - என்றான் உற்சாகமாய் -

''என்ன?!''

''பின்னே... எனக்குமே இதுதான் முதல் அனுபவம். இம்முறை ஒருங்கிணைப்பாளர் இளைஞர் என்பதால் இது போன்ற முயற்சிகள். பங்கெடுத்தால் நமக்கும் உற்சாகம்.''

பிரவாகனின் உற்சாகத்தைக் கெடுக்க மனமில்லாததால், மிக உன்னிப்பாய் ஈடுபட்டு வெற்றிக் கோட்டை முதலில் எட்டி விட்டாள்.

அடுத்த ஆட்டத்திற்கான குறிப்புகளையும் ஆர்வமாய்க் கேட்டாள். ''ஜோடியில் பெண் வீட்டிற்குத் தேவையான மளிகை, மற்ற பொருட்களைச் சொல்ல, அவளது ஜோடி தன் கையிலுள்ள ஏட்டில் அவற்றைப் பட்டியலிட



[illegible] அதி நீளப் பட்டியலைத் தயாரிப்பவரே வெற்றியாளர்.''

இதில் பிகு செய்யாமல் பங்கெடுத்தாள்.

வீட்டை நிர்வகிக்கும் அனுபவத்தால் அசராமல் இவள் சொல்ல, அவனும் சளைக்காமல் அதே வேகத்தில் அதைப் பதிவு செய்தான்.

இருபதாம் நிமிடம் அத்தனை பேரின் பட்டியல்களும் சரி பார்க்கப்பட்டு முடிவு அறிவிக்கப்பட்டது.

''இது ஜெயிக்கும் ஜோடி போலும்! இரண்டாவது ஆட்டத்தில் அதே ஜோடி வெல்கிறது! இரண்டு நிமிடங்களில் ஏறக்குறைய நாற்பது பொருட்களைப் பட்டியலிட்ட கில்லாடிகள்!'' - என்ற உரத்த அறிவிப்பில் இவளையும் மீறிக் குதித்தாள்.

போலிக் கற்களாலான சிறு கிரீடமும் கை நிறையப் பரிசுகளுமாய் அப்புதிய பசும் தீவில் இறங்கியவளுக்குள் ஆனந்தம் மறுபடி குமிழிட்டுப் பொங்கியது.

அந்த இடத்தைக் கண்ணீரும் கசப்புமாய் விடப் போவதை அறியாத துள்ளல்!

தொடர்ந்த இரு நாட்களும் தீவைச் சுற்றிப் பார்க்க நான்கு பேர்களுக்கெனத் தனித்தனி வாகனங்கள் தரப்பட, பிரவாகனின் ஜீப்பில் இவளும் ஒட்டிக் கொண்டாள்.

இருபது கல் குறுக்களவே உள்ள அக்கன்னித் தீவை அலசி ஆராய்ந்த குழு, அதன் மண்ணைப் பற்றியும், காற்றின் ஈரப் பதத்தின் அளவு பற்றியும் சொன்ன விவரங்கள் இவளுக்கே கூட மனப்பாடமாகி விட்டன.

ஜீப்பின் இரு இருக்கையில் பயணித்த சந்தானம் தம்பதிக்கு அரை நாளிற்கு மேல் உடம்பு தாளவில்லை - காரணம் சமமாக்கப்படாத சாலைகள்.

''யப்பா - இந்தக் குண்டு குழிக்கு எங்க கிழட்டு முதுகு சரிப்படாதப்பா!'' என்று அவர்கள் ஒதுங்கிக் கொள்ள, அந்த முரட்டு வாகனத்தில் இவர்கள் இருவர் மட்டுமே.

''ஜீப் சக்கரம் வெடித்தால்... இங்கு செல் 'பேசி' மூலம் தொடர்பு கூடக் கொள்ள முடியாதே'' - ப்ரீத்தி கவலைப்பட,

''கவலையே இல்லை. தொடர்ந்து ஹாரன் அடிச்சாலே யாரேனும் உதவிக்கு வருவாங்க. தவிர இந்த ரக வாகனம் மிக வலுவானது!'' என்று தைரியம் சொன்னான்.

தன் தொழில், படிப்பு, எதிர்காலத் திட்டம் பற்றியும் கூடப் பிரவாகன் இவளிடம் பகிர, இவளுக்குள் சொல் லொணா உறுத்தல்... இத்தனை சொல்பவனிடம், தன்னைப் பற்றிய ஒரு முக்கிய விஷயத்தை, தான் இன்னும் இரண்டு மாதங்களில் ஒருவனது மனைவியாகப் போவதைச் சொல்லாமல் இருப்பது உள்ளங்காலில் புதைந்த கண்ணாடிச் சில்லாய் ஒவ்வொரு அடிக்கும் உறுத்தி வலித்தது...

''ச்சே.. உலகத்து ஆம்பிள்ளைகளுக்குக் கல் மனசு!'' - மொத்த ஆண் குலத்தையே பழித்தாள் சந்தானம்மா.

''எனக்கு மட்டும் கல்..கண்டு மனசு!''

''ஆஹா.. பேச்செல்லாம் கல்கண்டுதான் - என்னா பொய், பசப்பு!''

''அதனால்தான் உன்னோடு காலம் தள்ள முடியுது!'' - கைவிரித்துத் தத்துவம் பேசினார் அவளது புருஷன்.

''இந்தக் கிண்டல் எல்லாம் வேணாம்.''

''காதலுக்குக் கடற்கரையின் சுண்டல்னா, கல்யாணத் திற்குப் பிறகு இந்தக் கிண்டலை வைத்துதானே சுவை!''



''கல்யாணமான நம்மைப் பற்றி இப்ப பேச்சில்லை [illegible] பெண்ணைப் பற்றி பேசறோம்.''

''ப்ரீத்திக்கு எந்தக் குறையும் வராது, சுதா. நல்லவ[illegible] [illegible] மகளாய்ப் பிறந்தவ... அருமையான குழந்[illegible] [illegible].''

''மகனின் லட்சணத்தைப் பார்த்தீங்கல்ல?''

''அவனுக்கு என்ன குறை? மனைவி சொல்ற ஜதிக்கு[illegible] [illegible]தமாய் ஆடறானே!'' - நமுட்டாய்ச் சிரித்தார்.

''தன் மட்டில் ஆடட்டும். தங்கைக்கு மாப்பிள்ளை[illegible] பார்ப்பதிலுமா ஆட்டம்?''

மனைவியின் தோளைப் பற்றி அமர்த்தினா[illegible] சந்தானம்.

''மனைவியின் மேல் விவேக் வைத்த நம்பிக்கை[illegible] அப்படி, சுதா - அதை நாம் தப்புன்னு சொல்ல முடியாதே.''

''தப்பான இடத்தில் வைத்த நம்பிக்கை.''

''கணவனின் உயர்வுக்கு மனைவிதான் காரணம்பிடி[illegible] தீ...''

''அது முதனிலை தாம்பத்தியம்... அதாவது...''

''நம்மைப் போல?'' கர்வமாய்த் தலை ஆட்டினார்.

''பின்னே - கணவன் பால் என்றால், வர்[illegible] சர்க்கரையாய் அவனில் கலந்து மேம்படுத்தணும்.''

''சிலதுங்க டிகாக்ஷனாய் கலந்து பாலின்...''

''அதாவது கட்டிய பதியின் நிறம், சுவையை மா[illegible] றிடுதுங்க.''

''ஆமாம். மோசமான ரகம். தயிராய் விழுந்[illegible] கட்டியவனை முழுசாய்த் திரிச்சுடுங்க - அவன் இயல்[illegible] மாறிடும்.''

''ஆக, ஆண் எப்போதும் தூய பால்தான்ங்கறே... பெண்களால்தான் பிரச்சனை... ம்ம்?''

''இப்ப என்னை மடக்கறதா முக்கியம்? இதையெல்லாம் சொல்லி அந்த விவேக் பயலுக்குப் புத்தி வரவழைங்க...''

சந்தானத்திற்கு இதே ரீதியில் யோசனை இருந்ததால், தனித்த ஆலோசனைக்குப் பிறகு, விவேக்கிடம் போனவர், தான் தெரிந்து கொண்டதை எல்லாம் அவனிடம் சொன்னார்.

சுனாமி அலை எழுந்து வருவதைக் கண்டவன் போல விவேக்கின் முகம் பீதியால் மாறியது.

ஆனாலும் மனைவியின் பேரில் துளிச் சந்தேகமில்லை!

''ஐயயே... விமலி தெரிஞ்சால் துடிச்சுப் போயிருவாளே, மாமா!'' என்று புலம்பினான்.

''இப்ப உன் பெண்டாட்டி துடிப்பது முக்கியமில்லைப்பா - உன் தங்கை மும்பை வரனைக் கட்டிக் காலமெல்லாம் தவிக்கக் கூடாது. அதுதான் விஷயம்.''

''புரியுது... ஆனா நல்ல எண்ணத்தோடுதான், விமலி எந்தங்கைக்கு மாப்பிள்ளை தேடி...''

''தேடியதில் தப்பில்லை, விவேக் - நீ அந்த வரன் யார், எப்படின்னு ஆராயாமல் தலையாட்டினது தப்பு. உன்னைக் கல்லூரியில் சேர்க்கும் சமயம் உங்கப்பா எப்படி அலைஞ்சார் தெரியுமா - நுணுக்கமாய் நூறு விஷயங்களை விசாரிச்சான் - கூட இருந்து பார்த்தேனே நான்.''

''ம்ம்... ஆனா விமலி...''

சந்தானத்தின் பொறுமை சற்று நழுவியது.



''அவ ஒரு பக்கமாய் இருக்கட்டுமப்பா. ப்ரீத்திக்கு நாங்க கார்டியன் என்ற அளவில் எங்களிடம், 'இப்படி ஒரு வரன் வந்திருக்கு - முடிக்கலாமா?'ன்னு ஒரு வார்த்தை...''

''விமலி சொல்லத்தான் சொன்னா, மாமா. ஏன்னா கல்யாணச் செலவிற்குக் காசு வேணுமே.''

''அந்தச் செலவு உன் பொறுப்பு. ப்ரீத்தியைக் கல்லூரிக்கும் கூட அனுப்பலை, நீ. இதையேனும் செய்.'' பெரியவர் சற்று நக்கலாகவே சொல்ல, விவேக் சற்று மிரண்டு முழித்தான்.

''ஐயையோ... உங்களிடம் அப்பா விட்டுப் போன காசு இருக்குன்ற நம்பிக்கையிலதான் விமலி ஷாப்பிங் கிளம்பிட்டா.''

''அண்ணன் உன் சம்பாத்தியத்தில் அதைப் பண்ணட்டும். ப்ரீத்தியின் அரைக் கோடியை விள்ளாமல் விரியாமல், சீராய் அவ கையில் தந்திடணும்.''

விவேக்கின் விழிகள் அகண்டன.

''என்னது... அரைக் கோடியா? அப்பா...''

''பிரபல நிறுவனங்களின் சில பங்குகளையும் ரொக்கமாய் மூணு லட்சத்தையும் எம் பொறுப்பில் விட்டிருந்தார். பங்குச் சந்தை, அது இதுன்னு விளையாடி பெருக்கினேன் - அது ஏறக்குறைய நாற்பது லட்சத்தை எட்டினது. பத்து லட்சம் பெறுமான நகையும் உண்டு. மொத்தமாய்ச் சேர்த்தால் என் கணக்கு சரிதானே?''

விவேக் வார்த்தைகள் வராமல் தலை மட்டும் ஆட்டினான். ''இப்படியான நம்ப பெண்ணிற்கு பள்ளிப் படிப்பையும் கூட முடிக்கக் கூறில்லாத மா...ப்பிள்ளையைத் தேடியிருக்கா, உன் விமலி.''

''என்னது?''

''பிறகென்ன? படிப்பு பற்றி ஏதும் சொன்னாளா?''

''புகைப்படத் துறையில் ஆர்வம் - ஆக, அதிலே ஈடுபட்டு நல்லா சம்பாதிக்கறதாய்ச் சொன்னாள்.''

''நல்லா சம்பாதிக்கிறவனுக்கு காமெராவும் பிற உபகரணங்களும் வாங்கப் பெண்டாட்டியின் காசு ஏதுக்கப்பா?''

மனிதர் விவரம் தெரிந்துதான் பேசுகிறார் என்பது உறைக்க, விவேக் பரிதாபமாய் விழித்தான்.

''போனது போகட்டும். இனி எங்க பேச்சைக் கேளு. நாங்க ப்ரீத்தியின் நோக்கமறிஞ்சு, நாலையும் ஆராய்ந்து சொல்லுவோம். நீ மறுக்காமல் இங்கேயும் தலை ஆட்டணும் - என்ன?''

இங்கேயும் தலை ஆட்டினால் மனைவியிடம் தன் நிலை என்ன என்ற அச்சத்தில் முகம் வெளிறினான், விவேக்...!

7



புல்வெளியின் நடுவே பளபளவென்று கண்ணாடி போலக் கிடந்தது அச்சிறு குளம். நீரைச் சுற்றிச் செழித்து வளர்ந்திருந்த வெள்ளை லில்லி மலர்கள் குளத்து நீரில் தங்கள் அழகைக் காணக் குனிந்திருந்தன. பழங்காலக் கிராமபோனின் ஒலி பெருக்கி வடிவிலிருந்த பூக்கள் கவிழ்ந்திருக்க, சலனமற்ற நீரில் தெரிந்த அவற்றின் நாணத் தலை சாய்ப்பு இவளை ஈர்க்க, முழந்தாளிட்டுக் கைகளையும் ஊன்றி நீருக்குத் தன் முகத்தையும் நீட்டினாள்.

குளத்திற்குக் குதூகலமாகி விட்டது போலும்... ப்ரீத்தியின் முகத்தைக் கொள்ளை அழகாய்ப் பிரதிபலித்தது.



சூழ்ந்திருந்த லில்லிகளின் நடுவே தன் முகம் தாமரையின் பொலிவோடு தெரிவதை ரசித்தாள்.

அளவெடுத்துத் தீட்டிய சித்திரம் போலத் தெரிந்த தன் முகத்தை வெட்கமின்றிப் பார்த்தவளை, புல்லில் பதிந்த மெல்லிய காலடி ஓசை கலைத்து, நிமிரச் செய்தது.

''ம்... அப்படியே இரு, ப்ரீத்தி... நானும் பார்க்கட்டும்!'' என்ற அவனது குரலுக்கு மந்திரத்தால் கட்டுண்டவளைப்போல அசையாதிருந்தாள். குளத்தின் விளிம்பில் நின்று பிரவாகன் குனிய, அவனது நெடிய நிழலும் நீரில் பதிந்தது.

நீரின் கண்ணாடித் தெளிவில் இருவரின் கண்களும் ஒன்றை மற்றொன்று பற்றிப் பிணைந்தன. அந்தக் குளத்து நீரில் ஏதோ மந்திரம் கரைந்திருந்தது போலும்... எவ்வளவு நேரம், ஏன் என்பதை ஆராயாமல் இருவரும் கட்டுண்டு கிடந்தனர்.

கடந்து போன ஒரு பறவை விட்டுச் சென்ற கல் குளத்தில் விழ, நீரில் வளையங்கள் தோன்றின. சிலுசிலுவென்ற அசைவுகள் சத்தமில்லாமல் தோன்றி இவர்களின் பிம்பங்களைச் சற்றே கலைத்த நேரம்,

''அடடே... இங்கேதான் இருக்கீங்களா?'' என்று உரக்கக் கேட்ட குரல் இவர்களின் மோனத்தை வெட்டிச் சிதைத்தது.

வந்து குரல் கொடுத்தது திருமதி டாலி வெங்கட். இளையவர்களுள் சற்று ஏமாற்றமும், குற்றக் குறுகுறுப்பும் சேர, பிரவாகன் குளத்தின் விளிம்பை விட்டுச் சற்றுப் பின் வாங்கினான். நெருங்கிய டாலி, இன்னும் அமர்ந்திருந்த ப்ரீத்தியைப் பார்த்து அகலமாய்ப் புன்னகைத்தாள். இருப்பினும் துவேஷம் கண்களில் இன்னும் மறையாமல் மின்னியது.

''அடடே.. உன்னை இங்கே பார்க்க... அதென்ன... ஆங்... புராண காலச் சகுந்தலை போலவே இருக்கு... சித்திரம் போல.''

சங்கோஜத்துடன் எழுந்த ப்ரீத்தியை மற்றவளின் பார்வை மேலும் கீழுமாய் அலசியது.

''உன் கையைக் காட்டு. உன் மோதிரத்தைப் பார்க்கலாம்...'' என்று கூறியதும் இவளுக்குச் 'சுருக்' கென்றது. உரிமையாய் இவளது கையைப் பிடித்து விரல்களை ஆராய்ந்த டாலியின் முகத்தில் கேள்வி -

''எங்கேம்மா உன் மோதிரம்? துஷ்யந்தன் தந்த காதல் பரிசைச் சகுந்தலை தண்ணீருக்குள் நழுவ விட்டது போல நீயும் இந்த குளத்திலே தொலைச்சுட்டியா? அப்புறம் அந்த மோதிரத்துக்கான ராஜேஷ் உன்னை மறந்துடப் போறார். கவனம்மா... நிச்சயதார்த்த மோதிரத்தை இப்படிக் கழட்டி வைக்கக் கூடாதும்மா. சதா விரலில் இருக்கணும்.''

இவளுக்குத் தொண்டை உலர்ந்தது.

இந்த அம்மணிக்கு ராஜேஷ், மோதிரம் பற்றி யெல்லாம் எப்படித் தெரிந்தது. அதுவும் இப்படி, இங்கே வந்து அதைப் பற்றி பிரஸ்தாபிக்க வேணுமா?

அடைத்த தொண்டையைச் செருமிக் கொண்டவள்...

''இல்லை... வந்து... அளவு பெரிதாய் இருந்ததால் அது... அண்ணியிடம் இருக்குது...''

''குளத்தில் தொலைக்கலைன்னா சரிதான். எப்ப கல்யாணம்? தேதி குறிச்சாச்சா?''

இவளுக்கு அந்தக் குளிர்ச்சியிலும் வியர்க்க ஆரம் பித்தது. நிமிர்ந்து பிரவாகனைப் பார்க்கும் துணிவில்லை.

முழுக்க இருட்டாததால் குளத்தில் தெரிந்த மங்கலான நிலவைப் பார்த்திருந்தாள்.



அவன் பேச்சே இன்றி நின்றது உறுத்த, மெள்ள அவன் புறமாய் இவள் திரும்பத் துணிந்தபோது... பிரவாகன் அங்கில்லை!

'அமைதியாய் இருக்கறது நல்லதுதான் பாப்பா - ஆனா அழுத பிள்ளைதான பால் குடிக்கும்' என்று முன்பு பண்ணையில் வேலை பார்த்த ஒரு ஆயா அடிக்கடி இவளை உசுப்புவாள்.

ஆனால் இப்போது பிரவாகனிடம் இவள் அமைதியாய் இருந்தது, கிடைத்துக் கொண்டிருந்த பால் கைநழுவிப் போய் விடுமோ என்ற அச்சத்தால். தான் கல்யாணம் நிச்சயிக்கப்பட்ட பெண் என்பது தெரிந்தால் அவன் இப்படி இசைவாய், இலகுவாய்ப் பழக மாட்டான் என்ற சந்தேகத்தால் விளைந்த அமைதி. ஆனாலும் தப்புதான்.

சொல்லியிருக்க வேண்டும் -

'பார்த்தறியாத ஒருவனுக்கு என்னை அதி விரைவில் நிச்சயித்து விட்டார்கள் - மறுக்கவும் வழியில்லை!' - என்பதை...

ஆனால் அத்திப் பழத்தின் உள்ளே இத்தனை சொத்தை என்று தன் துன்பங்களை இரண்டு நாட்களே பழகிய ஒருவரிடம் பிட்டுக் காட்ட வேணுமா என்ன?

இந்த வருத்தத்திலும் ஒரு விஷயம் ஆறுதல்தான். பிரவாகன் அப்படிச் சொல்லாமல் நழுவியது முதலில் திகைப்பைத் தந்தாலும், அவனது அதிர்ச்சி எதனால் விளைந்திருக்கக் கூடும் என்ற யூகம் இதமாயிருந்தது.

தான் வேறு ஒருவனுக்காய் நிச்சயிக்கப்பட்டவள் என்பது அவனைக் கலவரப்படுத்தியிருக்கிறது.

அப்படி ஒரு ஈர்ப்பு தன் மீது உருவாகி இருந்ததோ? உள்ளே பலாச்சுளை என்றாலும் வெளியே கடும்

முள்ளாலான தோல் மூடியது போல, பிரவாகனுக்குத் தன் மீது ஏதோ பிரியம் என்பது இனித்தாலும், தான் அதற்குத் தகுதியற்றவள் என்பது முள்தான் - தனது நிச்சயிக்கப்பட்ட திருமணம் பற்றி மூச்சே விடாமல் அவனோடு இப்படி இழைந்தது குற்றம்தான்!

இனி அவனது முகத்தில் விழிக்கவே கூசும். நாளைக் காலை அனைவரும் இங்கிருந்து கிளம்பி விடுவார்கள். தன்னைப் பற்றி கசந்த கருத்துடன் பிரவாகன் பிரிந்து போனால் இவளுக்குத் தாங்காது. ஆக, நேரே போய் நடந்ததை எல்லாம் பிட்டுக் காட்டி விட வேணும்.

ராஜேஷைப் பற்றி சந்தானம்மாவிடம் பகர்ந்து கொண்டது ஆறுதலாக இருந்ததே -

''அதெல்லாம் கவலைப் படாதேம்மா. விசாரிச்சு உனக்கு நல்லது எதுன்னு ஆராய்ந்து கல்யாணத்தை நடத்த நாங்க இருக்கோம்!'' என்றவர் சொன்னதும், எத்தனை நிம்மதி!

அதே போல மனம் விட்டு என்றில்லா விட்டாலும், சற்றே கோடி காட்டியிருந்தால் கூட, பாவம்! பிரவாகன் சுதாரித்திருப்பான்.

தான் பேரழகி, தன்னைக் காணும் அத்தனை காளையரும் கதிகலங்கி, மதிமயங்கிப் போவார்கள் என்ற கர்வமெல்லாம் தனக்குத் துளியும் இல்லாததுதான் காரணமோ?

தன்னை அழகி என்றவன் புகழவில்லை என்றாலும், அவனது பார்வையும் பேச்சும் தன்னைப் பாராட்டும் விதமாகவே இருந்ததில் கிறங்கி மௌனமாய் இருந்து விட்டாளோ?

எப்படியோ தப்பு தன்னிடம்தான்.

இப்படிப் பலதும் யோசித்து அவள் அமர்ந்திருந்தது அதே குளக்கரையில்தான். சற்று முன் குளத்து நீரில்



வெள்ளியாய்த் தெரிந்த நிலா இப்போது தங்கமாய்த் ஜொலித்தது - அதைச் சுற்றிலும் நட்சத்திரங்கள் கொலுசு மணி போலச் சத்தமின்றிக் குலுங்கின...

இவளையும் அறியாமல் அழுதிருந்தாள்.

கன்னங்கள் காய்ந்த உப்பு நீரால் பிசுபிசுத்தன. முதலில் தன் அறைக்குப் போய் முகத்தைக் கழுவித் தோற்றத்தைச் சீராக்கிக் கொள்ளலாமா என்ற யோசனையை நிராகரித்தாள்.

அறையில் சந்தானம்மாவோ, அண்ணனோ இருந்தால்,

'எங்கே உன்னை இத்தனை நேரமாய்க் காணவில்லை?' என்றோ, 'அழுதியா என்ன... என்னாச்சு?' என்றோ கேட்டுக் குடையக் கூடும்.

தவிர, குளக் கரையில் அமர்ந்து அலசி யோசித்துத் திரட்டியிருந்த தைரியம் கூட முகம் கழுவும் நேரத்தில் கரைந்து போய் விட்டால்?

முந்தானையால் முகத்தை அழுந்தத் துடைத்தவள், பிரவாகன் தங்கியிருந்த மரக்குடிலைத் தேடி நடந்தாள் - காட்டுத்தனமாய் ஓங்கியிருந்த மரம், செடிகளுக்கிடையே அடர்ந்த மண் பாதையில் நடப்பது சற்றுப் பயமூட்டினாலும், பிரவாகனிடம் தன் நிலைமையை விளக்கி, அதை முன்பே சொல்லாததற்காய் மன்னிப்பும் கோருவது என்ற முடிவுடன் விரைந்தே நடந்தாள்.

ராட்சஸ ஜெனரேட்டரின் உதவியால் இவர்களது குடில்கள் பளீர் என்றில்லா விட்டாலும் போதுமான வெளிச்சத்துடன் இருந்தன.

அவனது அறை வாசல் திறந்து கிடக்க, உள்ளிருந்து சன்னமான இசையும் சில குரல்களும் கலந்தே கேட்டன.

அவன் தனியாக இல்லை போலவே... இவளது கால்கள் தயங்கின. உள்ளே ஏமாற்றமும், இனிப் பேச

எப்போது நேரம் வாய்க்குமோ என்ற பரிதவிப்பும் சேர வெளியே நின்றாள்.

மரப் பாளங்களால் கட்டப்பட்ட குடில் என்பதால், பாதங்களைப் பூனை போல மிருதுவாய் வைத்துப் படியேறியவள், வந்தபடியே திரும்பி விட வேண்டியதுதான் என்று முடிவெடுத்த நிமிஷம், அவளைச் சுண்டி இழுத்தது அந்த வார்த்தை - உலகில் ஒவ்வொருவருக்கும் மிக இனியதான வார்த்தை.

அதாவது அவரவரின் பெயர்.

இவளது பெயர் அவளைக் கட்டி நிறுத்தியது.

தன்னைப் பற்றியா உள்ளே பேசுகிறார்கள்?

என்னவென்று...?

பெண் குரலின் இனிமை இல்லை - சத்தத்தை வைத்துக் கணிக்க. உள்ளே மூன்று நான்கு ஆண்களேனும் இருக்கக் கூடும். அவர்கள் தன் பெயரைக் குறிப்பிட்டு என்ன பேசுகிறார்கள்?

திறந்து கிடந்தது கதவு - அறையும் பெரிதில்லை.

ஆர்வம் உந்த மேலும் கதவை ஒட்டி நின்றாள்.

மனம் எச்சரிக்காமல் இல்லை.

'ஏய்! ஒட்டுக் கேட்டவர் யாரும் தன்னைப் பற்றி நல்லதைக் கேட்டதில்லை - தெரியுமா?' என்று.

ஆனால் ஆர்வம் காதுகளைத் தீட்டியது. வெளிப் புறத்தில் விளக்கு இல்லாதது வசதியாகவே போனது. யாரும் கண்டு விட்டால் கேவலமே என்ற தவிப்பின்றிச் சுவரை ஒட்டி நின்றாள்.

அறையில் கிளம்பிய பலத்த சிரிப்பொலி இவளை முட்டியது - ஆனால் அதில் வார்த்தைகள் தெளிவின்றி மழுங்கின.



மேலும் இரண்டு எட்டுகள் முன் நகர, பிரவாகனது குரல் தெளிவாகக் கேட்டது.

“பார்க்கச் சாதாரணம்தான். ஒத்துக்கறேன். ஆனால் [illegible]ட் வாழ்க்கைக்கு ஒத்து வருவா - அதுதானே முக்கியம்.''

“ஆக, உனக்குப் பிடிச்சிருக்குது - ம்ம்?''

“ரெண்டு நாளைக்கு இவ கிடைச்சது பாக்கியம்தான் என்று நினைக்கிறேன். ஆனால் நீண்ட நாட்களுக்குன்னா [illegible]வக்கும் பளபளப்பான ஒரு குட்டியைத்தான் தேடணும்.''

மறுபடி பேச்சும் சிரிப்பும் பரவ, தொடர்ந்த வார்த்தைகள் தெளிவாயில்லை...

ஆனால் கேட்கும் சக்தியை இவளும் தொலைத்திருந்தாள். அந்த இரண்டு நாட்களாய்க் குளிர்ந்து மலர்ந்திருந்த மனம் சூடு பட்டுச் சுருண்டது.

நம்ப முடியாத திகைப்பு...

பேசியது பிரவாகன்தான்... பேசியதும் தன்னைப் பற்றிதான். என்ன சொல்லுகிறான்?

வந்த இடத்தில் பொழுதை நகர்த்த மட்டுமே இவள் என்றா? பார்க்கச் சாதாரணமானவள்... இரண்டு நாட்களுக்கு மேல் பார்க்கச் சகியாது என்றா?

எத்தனை பிரியமும் பாந்தமுமாய்ப் பேசிப் பழகினான்... அந்த வேஷத்திற்குப் பின்னால் இத்தனை சின்னத் தனமா?

ஏமாந்தது இவள்தான்.

முதன் முதலில் இவளிடம் சொன்னதே, இவள் வெளுப்பாய் இல்லை என்றுதான்.

பிரவாகனிடம் தர வேண்டுமென்று முன்பே எழுதி வைத்திருந்த இவளது விலாசம் குறித்த காகிதத் துண்டு அவமானத்தால், ஆத்திரத்தால் கசக்கப்பட்டது... கூடவே அவனது விலாசம், தொடர்பு 'பேசி' எண் எல்லாம் வாங்க நினைத்தது சர்வ முட்டாள்தனம்.

அபூர்வமாய்க் கிடைத்த மாற்றம், குளக்கரையும் மலர்களும், புண்பட்ட இவளது இதயமும், பண்பட்ட அவனது நடிப்புமாய்ச் சேர்ந்து ஏமாற்றி விட்டன.

மனசின் ஓரமாய் இந்தக் கயவன் மேல் தனக்குக் காதல் வந்து விட்டதாய்க் கூட நினைத்துக் கலங்கினாளே... நல்ல வேளை, மனதை முழுக்கத் திறந்து காட்டுமுன், கடவுள் தன்னைக் காப்பாற்றி விட்டார்.

அண்ணி சொல்வது உண்மைதான் போலும்.

'வெள்ளைத் தோலின் மகிமையே தனி, ப்ரீத்தி. உங்கண்ணா என்னைப் பார்த்த கணமே மணக்கச் சம்மதித்ததற்கான காரணம் என் நிறம்தான். அவரே சொன்னார் கவிதையாட்டம்.

'பாலில் கழுவின தங்கச் சிலையாட்டம் இருந்தே, விமலி - முதலில் என் கண்ணே கூசிடுச்சு... பிறகு கண்ணை விலக்க முடியலை, செல்லம்!'ன்னு.'

அண்ணியின் பீற்றல் இப்போது நினைவிற்கு வந்து சீண்டியது.

'பரவாயில்லை, பிரவாகன் கிடைச்சதைக் கொண்டு திருப்தி அடையும் ஆளுதான்!'' - என்று யாரோ அபிப்பிராயம் சொல்ல, மறுபடி ஒரு அசட்டுச் சிரிப்பலை.

இவளுக்கு உடம்பெல்லாம் உதறியது. ஜல்லிக்கட்டுக் காளையின் கண்களில் எலுமிச்சைச் சாறும் வெங்காயமும் பிழிந்து, மூங்கில் குழாய் வைத்துச் சாராயமும் புகட்டி விட, அது களத்தில் மூர்க்கமாய்ப் பாயுமாம்.



பருவகாலமெல்லாம் 'நீ அழகில்லை' என்று கிடைத்த சந்தர்ப்பத்தில் எல்லாம் குட்டிய அண்ணியின் வளர்ப்பு, இந்த அவமானப் பேச்சு, ஏளனச் சிரிப்பு எல்லாமுமாய் இவளுள் கசப்பை, எரிச்சலைப் பிழிந்துவிட, வயிறும் நெஞ்சும் கொதித்தன.

பொங்கிய ஆவேசம் அழுகையாய்ப் பீறிட்டது.

இவர்கள் எல்லோரையும் விட்டு ஓடினால் போதும் என்ற ஆங்காரத்துடன் இருளில் தடுமாறி ஓடினாள் அவள். உள்ளே வெறுப்பு தீயாய்த் தகித்தது...

8



'கவலை என்பது முத்துச் சிப்பிக்குள் நுழையும் மண் போல... சிறு மணல் என்றால், முத்தாக உருவாகும். நிறைய மணல் என்றாலோ முத்தை உண்டாக்கும் புழுவைக் கொன்று விடும்.'

இரவு முழுக்க அவளைக் கவலைகள் அரித்திருந்தன. காலையில் எழுந்தபோது, தான் செத்தே போனது போலொரு அயர்வு - கைகால் கனத்துக் கிடக்க மனம் அலை பாய்ந்த அயர்வில் இரும்பாய் இறுகி இருந்தது.

ப்ரீத்தியின் முகத்தைக் கண்ட சந்தானம் மாமி பதறிப் போனார். ''என்னம்மா இப்படி வதங்கித் தெரியுறே... வந்தன்னைக்குத் தெரிஞ்சதை விட மோசமாயில்ல தோணுது?'' என்றபடி இளையவளின் நெற்றியை தொட்டுத் தடவினார்.

''ஒண்ணுமில்லைம்மா... இன்னைக்குக் கிளம்பணுமே...

சந்தானம்மா தன்னவரிடம் ஏதோ ஜாடை காட்டினார் 'சொல்லிடுங்க' - என்பதைப் போல... ஆனா அவரோ நிதானமாய்,

''முதலில் ப்ரீத்தி அவ அண்ணன் வீட்டுக்குப் போய், மறுமாசம் இந்தியாவிற்கும் வந்த பிறகு, மற்றதெல்லாம் பேசுவோமே - ஏன் அவசரப்படறே சுதா?'' என, அவரின் மனைவியின் முகத்தில் கடுப்பு.

''ஆம்பிள்ளைங்க மனசு மட்டும் கல் இல்லை. கண்ணும் குருடுதான். உங்களுக்குத் தெரியலையா? ரெண்டரை நாளாய்ச் சித்திரம் போலச் செப்பாட்டம் இருந்த பொண்ணு இப்ப கதி கலங்கி நிற்பதைப் பார்த்தாலே புரியலை?'' கணவனை உரிமையாய் அதட்டினாள்.

சந்தானம் மௌனமாய் ப்ரீத்தியின் முகத்தை ஆராய்ந்தார்.

அதன் சோகமும், உள்ளிருந்து சுட்ட நெருப்பும் அவரைக் கவலைப்படுத்தின.

''அம்மா... ப்ரீத்தி...'' என்றவர், பேச ஆரம்பித்ததுமே, அவள் முந்திக் கொண்டாள்.

''மாமா..! நான் கொஞ்சம் நடந்துட்டு வர்றேனே...''

''ஆகட்டும்மா. ஆனால் இன்னும் முக்கால் மணி நேரத்தில் நா்ம இங்கேருந்து கிளம்பணும்.''

''பெட்டி எல்லாம் தயாராய் இருக்குது, மாமா... காலார நடந்துட்டு...''

''நல்லதும்மா - பெட்டியை நாங்க படகுக்குக் கொண்டு போயிடறோம்....''

''எதுவும் சாப்பிடலையே ப்ரீத்தி?''

''பழம் போதும்மா - போற வழியில் சாப்பாட்டு அறையிலே ஏதேனும் இருக்கும்...'' என்று நடந்தவள், அதன்படியே அங்கிருந்து ஒரு வால்பேரியைக் கையில் எடுத்தும் கொண்டாள்.

அலுவலகம் போலச் செயல்பட்ட சிறு அறையின் கதவு விரிந்து கிடந்தாலும், பயண மும்முரத்தில் இருந்தவர்கள்



யாரும் அங்கில்லை. கதவில் ஒட்டப்பட்டிருந்த வெள்ளைத் தாளின் சிகப்பு எழுத்துக்களை இவள் தன்னிச்சையாய் வாசித்தாள்.

அவசரம் - வேலைக்கு ஆள் தேவை.

மூன்று மாதங்களுக்கேனும் தென்னிந்திய எஸ்டேட் ஒன்றில் சகல வேலைகளிலும் கை கொடுக்க ஒரு பெண் தேவை.

வயது பற்றிக் குறிப்பிடவில்லை என்றாலும், ஆரோக்கிய மானவராய் இருக்க வேண்டும் என்று வலியுறுத்தி யிருந்தனர்.

எஸ்டேட் வீட்டிலுள்ள ஒரு மூதாட்டியையும் இரு குழந்தைகளையும் பொறுப்பாய்ப் பேண வேண்டுமென்ப தால் பொறுமையும், அடிப்படை வைத்திய அறிவும் தேவையாம். தகுந்த சம்பளம் தரப்படும் என்றும் ஆசை காட்டியிருந்தார்கள்.

புத்தியில் ஏதோ பொறி ஏற்ற, மீண்டும் வரிகளை நிதானமாய் வாசித்தாள் -

அச் சிவப்பு எழுத்துக்கள் தன்னை வலிய அழைப்பது போலிருந்தன.

தனிமையான இடத்தில் முன் அறியாத ஒரு குடும்பத்தைப் பராமரித்து இருப்பதில்... இரண்டு பெரிய நன்மைகள்.

மூன்று மாதங்களேனும் ஒதுங்கி இருந்து, புண்ணான தன் நெஞ்சை ஆசுவாசப் படுத்திக் கொள்ளலாம்.. நிச்சயிக்கப்பட்ட திருமணத்திலிருந்து தப்ப இது அரிய சந்தர்ப்பம் அல்லவா?

அலுவலக மேசையில் சிந்திக் கிடந்த ஒரு காகிதத் துண்டின் விளம்பரத்தில் தரப்பட்டிருந்த விலாசத்தையும் 'பேசி' எண்ணையும் குறித்து வைத்தாள்.

அவர்களுக்கு மட்டுமல்ல, இவளுக்கும் ஒரு மாற்றம் உடனடித் தேவைதான். தனிமையில் நிம்மதியேனும் காண ஒரு புது இடம் தேவை.

ஆக, இந்த வேலைக்கு மனுப் போடுவது... கெஞ்சி, நயந்து எப்படியேனும் அங்கு போய் விடுவது.

முடிவெடுத்த கணம் அண்ணன் நினைவிற்கே வரவில்லை. துணிந்து விட்டதால் பிரச்சினைகள் முழங்கால் அளவே நின்று விட்டன. இனி யாரிடமும் உத்தரவு கேட்டு அதன்படியே நடக்க வேண்டியதில்லை என்ற துணிவு.

குழுவின் நிர்வாகியை அணுகித் தொலைபேசி வசதி கோரினால், ''இந்தியாவிற்கா...? ஒரு மணி நேரம் பொறுத்துக் கொள்ளுங்கள் - மலேஷியாவின் கரையில் நாம இறங்கியதும் ஏற்பாடு செய்து தருகிறேன்,'' என்றவன், ''ஆனாலும் உங்களை இப்படிப் பார்ப்பது நல்லாவேயில்லை!'' - என்றான் சோகமாய்.

''இப்படின்னா... எப்படி?''

''ஜெயிக்கும் ஜோடி இப்படி ஒற்றையாய் நிற்பது!''

''தனியாகவே இருப்பதுன்னு முடிவு செய்துட்டேன். செய்கிறேனோ இல்லையோ... நிம்மதியாய் இருக்கலாமே.''

''திரும்பும்போது கப்பலில் விளையாட்டுகள் இல்லை...'' என்றான்.

''நான் விளையாடும் மன நிலையிலும் இல்லை..!'' என்றபடி நகர்ந்தாள்.

சிறு கப்பலில் ஏறியவள், அங்கிருந்த ஓய்வு அறையில் புகுந்து படுத்ததுதான்... கண்களையும் திறக்கவில்லை. ஆனால் வரும்போது அவள் அனுபவித்த இன்பமும் வெற்றியும் நினைவிலாடி இம்சித்தன...



'நம்ப வைத்துக் கழுத்தை அறுத்து விட்டானே.. கழுத்தறுந்த வேதனையைப் பிறருக்கு வேடிக்கையு காட்டி விட்டானே!' என்று நினைக்க நினைக்க நாளவில்லை.

கரை இறங்கிய ஐந்தாம் நிமிடமே இவளிடம் ஒ 'பேசி' நீட்டப்பட,

'நன்றி' என்று நிஜமான நன்றியுடன் அதைப் பெற்ற வேண்டிய எண்களை அழுத்தினாள்.

மறு முனையில் மணி ஒலிக்க, இவளுக்கு குறுகுறுத்தது. குடும்பப் பெரியவர்களிடம் கருத்து கேட்காமல் இப்படி ஒரு முடிவை எடுப்பது தான்தானா.. இது சரிதானா என்ற திகைப்பு. பிறருக்கு இதமா வகையிலேயே தன் நாட்களை அமைத்த தானா இப்ப ஒரு முரட்டு முடிவை எடுப்பது என்ற கலக்கம்.

ஆனால் அதிகம் குழம்பும் முன்னரே மறு முனையி குரல் கேட்டது -

''வசந்தம் எஸ்டேட்ஸ்,.''

முதிய ஆனால் தெளிவான பெண் குரல்.

''வணக்கம்... நான் ப்ரீத்தி பேசறேன்.. உங் பண்ணை வீட்டிற்கு ஒரு உதவியாளர் தேவைன் அறிவிப்பை இன்று பார்த்தேன்.''

''நல்லதும்மா... இங்கு என்னைத் தவிர ரெண் வாண்டுகளும் உண்டு. சமைக்க, பண்ணை வேலையி உதவ, சின்னதுகளுக்குப் படிப்புச் சொல்லித் த வீட்டைக் கருத்தாய்ப் பராமரிக்க...''

பெரியவரின் பட்டியல் லேசில் முடியாது என்று புரி ''எல்லாமே நான் செய்வேம்மா!'' என்றாள்.

''சம்பளம் எவ்வளவு...''

''நீங்க தருவதை வாங்கிக்கறேன்ம்மா... நான் எப்ப வேலைக்கு வரலாம்?''

''ம்ம்... உன் வயசு என்னம்மா? சிறு பிள்ளையாட்டம் இருக்கே குரல்.''

''இருபத்திரண்டு..''

''அடடே...'' வருந்தியது குரல்.

''என்னம்மா?''

''ரொம்ப சின்னவளாய் இருக்கியே... உனக்கு இந்த வாழ்வு பழக்கம் ஏதும் தெரியாதுன்னு நினைக்கிறேம்மா. இங்கே சினிமா, கேளிக்கை, ஏன் - கடைகள் கூடக் கிடையாது. தொலைக்காட்சிப் பெட்டியில் ரெண்டு சேனல் வரும். தவிர அதையும் கூட நிம்மதியாய்ப் பார்க்க முடியாதபடி ஏதாவது வேலையும் இருக்கும்... உன்னால் முடியாதும்மா.''

ப்ரீத்தி பதட்டமானாள். வயதை மேலும் கூட்டிச் சொல்லி யிருக்க வேணுமோ? கிடைத்ததை நழுவ விடுவதில்லை அவள்.

''எனக்கு நிம்மதியான... வந்து பசுமையான இடத்தில்தான் வேலை வேணும்னு ஆவலாய் இருந்தேம்மா. நான் ஸீரியல் எல்லாம் பார்ப்பதேயில்லை. மூன்று மாசந்தானே... சமாளிப்பேம்மா.''

''நீ எங்கேருந்து பேசறே?''

இவள் சுதாரித்துக் கொண்டாள். 'மலேஷியாவிலிருந்து' என்றால் பெரியம்மா மீண்டும் சுணங்குவாள். வெளிநாடு பார்த்தவளுக்கு இந்தியாவின் தெற்கத்திப் பண்ணை சரியே வராது என்று முட்டுக் கட்டை போடக் கூடும்.

''பக்கத்திலேதாம்மா... நீங்க 'வா'ன்னா முடிஞ்சளவு சீக்கிரமாய்க் கிளம்பிடுவேன். நீங்களே 'போ'ன்னும்வரை அங்கேருந்து அசைய மாட்டேன்.''



பெரியம்மா யோசிப்பது புரிந்தது. பின்னணியில் இரு குழந்தைகளின் சண்டைச் சத்தம் கேட்டது.

''வினு, அவ சடையை விடு. இப்படியா பெண் குட்டியோட சண்டையிடறது? அம்மாக்குத் தெரிஞ்சா...''

''இவ பெண் குட்டியில்ல, பூதக்குட்டி.''

உரக்க ஒரு பிஞ்சுக் குரல் கத்த, இவள் புன்னகைத்தாள்.

''அம்மா..'' குரல் தந்து, மறுமுனையில் தானும் இருப்பதை நினைவூட்டினாள்.

''சரிம்மா... எனக்கும் இங்கே சமாளிக்க முடியலை. நீ கம்பம் வந்திடு... அங்கே என் பண்ணை ஜீப்பை அனுப்பறேன். நேரத்தைப் பிறகு சொல்லு.''

''ரொம்ப நன்றிம்மா - ஆனால் மதுரை பஸ் நிலையத்திற்கு ஜீப் அனுப்பினால் வசதி... சீக்கிரமாய் வந்து சேர்வேன்.''

''ஆகட்டும்... நான் இருக்கும் இக்கட்டில் உன்னை வராமல் இருன்னு சொல்லவும் வழியில்லை...''

பெருமூச்சுடன் பேச்சை முடித்தார், அந்த அம்மையார். ப்ரீத்திக்குள் தெம்பூறியது... ஆக, வேலை கிடைத்தே விட்டது!

இறைவன் இவளுக்காகவே இதைத் தயார் செய்து வைத்திருந்தாரோ?

இந்தத் திருப்தியில் அண்ணன், ஆட்டுக் குட்டியை எல்லாம் சமாளித்து விடலாம் என்று நிமிர்ந்தாள்.

இவள் சொன்னதைக் கேட்ட சந்தானம்மா -

''இதென்ன அக்கிரமம்... கல்யாணம் வேணாம் அண்ணியும் வேண்டாம்னால் எங்களோடு வந்து தங்கு.. மூணு மாசமென்ன, ஒரு வருஷமோ, காலம் பூராவே இரேன்... யாரிடமோ கை நீட்டி வாங்குகிற

சம்பளத்திற்கு உழைக்கணும்னு தலையெழுத்து உனக்கு இல்லையே.. உன் மதிப்பு உனக்கே தெரியலையே...'' என்று அலற ஆரம்பிக்க, சந்தானமய்யா மனைவியை அமைதிப்படுத்தினார்.

''சுதா, ப்ரீத்தி இதுவரை நதி ஓட்டத்திற்கேற்ப போயிட்டிருந்த பொண்ணு. இப்ப அவ தானே துடுப்புப் போட்டு வேண்டிய இலக்கை நோக்கி நகரணும்னு நினைக்கிறப்ப... நாம தடை பண்ண வேண்டாம்.''

''எங்கேயோ போறேங்கறா... நீங்களும் போகட்டும் நீங்களே.''

''சரியான இடத்திற்குப் போறான்னே எடுத்துக்கு வோமே.''

சந்தானம்மா கணவரை உற்றுப் பார்த்தார். ''உங்களிடம்தானே அந்த விலாசத்தைக் காட்டினாள்? எங்கேயாம்?''

''மதுரை... கம்பம் பகுதி... அது சரியான இடம்னு நான்... அவ... அதான் ப்ரீத்தி நினைச்சா போகட்டு மேம்மா.''

''உங்க புத்தி அப்பப்ப போயிடுது.''

''என்னுடையது போனால் என்ன... உன்னிடம்தான் போதுமானது உண்டே'' என்றவர், இளையவளிடம் திரும்பினார்.

''உங்கண்ணனிடம் சொல்லிட்டியா, ப்ரீத்தி?''

''இல்லை மாமா - நீங்கதான் எடுத்துச் சொல்லணும். முதலில் எஸ்டேட்டுக்குப் போய் என் பொருட்களை எல்லாம் தயாராய் வச்சிட்டால் அண்ணனுக்குப் பிரச்னை இருக்காது... தவிர எனக்கான பயணச் சீட்டு ஏற்பாடு எல்லாம் நீங்கதான் செய்து தரணும் மாமா...''



''அதெல்லாம் பெரிசில்லை... ஆனால் உன் அண்ணன்...''

அவர் இழுத்ததை இவள் நறுக்கினாள்.

''அண்ணன் சம்மதிக்கலை என்றாலும் நான் போகத்தான் போறேன், மாமா. நீங்க அழகாய்ச் சொன்னது போல... நானாய்த் துடுப்புப் போடக் கிடைத்த சந்தர்ப்பத்தை விடறதாயில்லை. தவிர நான் அந்த ராஜேஷைக் கல்யாணம் பண்ணிக்கிறதாய் இல்லை.''

''ஏம்மா... பையனை இன்னும் பார்க்கலையே நீ?''

சந்தானம் மாமி இடைபுகுந்தார்.

''இதென்ன கேள்வி... எல்லாம் தெரிஞ்சும்...''

''ஷ்.. சுதாம்மா.. பதறாதயேன்.''

''அந்தக் குடும்பப் பெண்களைப் பார்த்தேனே... கல்யாணத்தை அவங்க வியாபாரமாய் நினைச்சே பேசினாங்க.''

''ம்ம்... இந்த மூணு மாசங்களுக்குப் பிறகு நீ நாங்க சொல்வதற்குக் கட்டுப்படுவேன்னால்... நானும் இந்தச் சந்தர்ப்பத்தில் உனக்கு உதவலாம்...''

''ராஜேஷைக் கல்யாணம் பண்ணிக்கறதைத் தவிர வேறு எந்த நிபந்தனைக்கும் நான் கட்டுப்படறேன் மாமா.''

''அப்புறமென்ன! கிளிக் கூண்டின் கதவைத் திறந்து விட வேண்டியதுதான் - கிளி பறக்கட்டும்!'' என்றார் சந்தானம் மாமா உற்சாகமாய்.

9



''ஐய... எனக்கு இந்தத் தோசை வேணாம்...''

முகத்தைச் சுழித்தான் மூன்று வயது வினு.

''யப்பா, தள்ளாத வயசுல மாவை அரைச்சு, வழிச்சு, வார்த்திருக்கேன் ராசா - ரெண்டு வாய் சாப்பிடுப்பூ.''

''ம்ஹூம்... ஆயா கை அய்க்கா இருக்கு.''

முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

''அழுக்கா? ரோஸா செடிக்குத் தண்ணி காட்டின கையோட நாலு களையும் பிடுங்கினேன்... அதான் கையைக் கழுவிட்டேனேய்யா...''

''நகத்துல அய்க்கு!''

''மறுபடி கையைக் கழுவிடட்டா?''

இதுவரை சும்மாயிருந்த மூத்தவளான வித்யா என்ற விது தன் பங்கிற்கும் வேட்டு வைத்தாள் -

''தோசையும் நல்லாவே இல்லை, ஆயா.''

ஆயாசம் மிகுந்த கிழவி இடுப்பைப் பிடித்தபடி உட்கார்ந்தாள். ''இதை வார்த்து எடுக்கவே நாம் பட்ட பாடு கொஞ்சமில்லை... வேற என்னதான் வேணும்?''

''பீட்ஸா.''

''பீஸு பீஸாத்தான... பிச்சுத் தரேன்?''

குழந்தைகளுக்குச் சிரிப்புப் பீறிட்டது.

''பீஸு இல்லை, ஆயா - பீட்ஸா.''

''மிலிட்டரி கடையில பாயா தருவாக..'' முதியவள் தனக்குத் தெரிந்ததைச் சொன்னாள்.

''ம்ஹூம்... இது வேற. ரொட்டியாட்டம் வட்டமா மெத்துன்னு இருக்கும். அது மேல மசாலா, கறி, பாலாடை எல்லாம் போட்டுக் கமகமன்னு மணக்கும்!'' சொன்ன விதுவின் நாக்கு எச்சிலில் புரண்டது.

''அதெல்லாம் உங்கம்மா வந்ததும் செஞ்சு தருவாக... இப்ப இதைச் சாப்பிடுங்க சமத்தா... என்னால நிக்கவும் முடியலை.'' எழுபது வயதை நெருங்கிக் கொண்டிருந்த



தேனம்மா ஆயாவின் முதுகு வெகுவாய் முரண்டியது உண்மைதான்.

இதற்கென்றே காத்திருந்தது போலச் சிறுவன் வினு கண்களைக் கசக்க ஆரம்பித்தான்.

ஆயா தன் தலையில் அடித்துக் கொண்டு, ''பாவி - சும்மா கிடந்த சங்கை ஊதித் தொலைச்சுட்டேனே... பிள்ளை அம்மாவை நினைவு படுத்தலாமா?'' என்று தன்னையே திட்டியும் கொண்டாள்.

''ராசாக்கு ஜாமூன் தொட்டுத் தோசையை ஊட்டட்டுமா?''

''அது ஜாமூன் இல்லை... ஜாம்.''

''சரி - அதைத் தொட்டு ஜம்முனு சாப்பிடுவீங்களாம்.''

''பீட்ஸா?''

''அது.. அதை நாளைக்குச் செய்து தாரேன், தங்கம்.''

''அப்ப நானும் நாளைக்கே சாப்பிடறேன்.''

கிழவி அயர்ந்து போனாள்.

இந்தப் பண்ணை வேலையாட்களில் கொஞ்சமேனும் சமைக்க அறிந்தது இவள் மட்டும்தான். இவளது நளபாகத்தை நம்பித்தான் இப்போது இங்கே மூன்று வயிறுகளும். தனக்கு வெண்டைக்காய்ப் புளிக்குழம்போடு காரத் துவையலும் மட்டுமே தயாரித்துக் கொள்ளும் தேனம்மாவிற்கு மேல் வர்க்கச் சமையலில் பரிச்சய மில்லை. தெரிந்த ஒரு சிலவும் மறந்து விட்டது.

புனிதாதான் வீட்டின் சமையலுக்குப் பொறுப்பு.

விதவிதமாய் வக்கணையாய்ச் செய்து போடும் அவளை எஜமானி வசந்தியம்மாள் தன் துணைக்கென்று அழைத்துப் போய்விட, இங்கு சாப்பாட்டிற்கே தாளம்தான்.

ஆனால் நேர்ந்த சம்பவம் அப்படி... அசம்பாவிதம் அல்லவா! இந்த வசந்தம் எஸ்டேட்டின் கண்ணே வசந்திப்

பாப்பாதான். கல்யாணமாகி, இதோ விது, வினு என்ற இரு குழந்தைகளுக்குத் தாயான பிறகும் கூட, இங்குள்ள அனைவருக்கும் வசந்தி குழந்தைதான்.

தேனம்மா வசந்தியைத் தூக்கி வளர்த்தவள் -

'அப்பா - நான் நம்ம பண்ணையை விட்டுப் போக மாட்டேன். இங்கேயேதான் இருப்பேன் - கீழ்நாட்டு வெக்கை, கூட்டம், புழுதி, கொசுக்கடி எதுவுமே எனக்கு ஒத்து வராது!' - என்று அந்த செல்லப் பெண் தீர்மானமாகத் தன் தகப்பனிடம் அறிவித்து விட,

'மாப்பிள்ளையைப் பார்த்துப் பிடிச்சதும் மற்ற எல்லாம் மறந்து போகும், பாப்பாக்கு!' என்று பெற்றவர் சொல்லியும் மகள் ஒற்றைக் காலிலேயே நின்று விட்டாள்.

'நான் நம்மூரை விட்டுப் போக முடியாதுப்பா!' என்றவளுக்கு வீட்டோடு மாப்பிள்ளையையும் தேடிப் பிடித்து விட்டார்.

வசந்திக்கு ஏற்ற ஜோடியாகச் சேகர் அமைந்ததில் பெரியவர் உற்சாகமாகி மருமகனுக்குப் பண்ணையை நடத்தும் முறைமையையும் சொல்லிக் கொடுத்தார். அதற்கான விருப்பம் சேகருக்கும் இருக்கவே, திறமையாகவே நிர்வாகம் செய்தான். வசந்தியின் தம்பியே அத்தனைக்கும் வாரிசு என்ற போதும், அப்பாவும் அத்தானும் பொறுப்பாய் இருந்ததால் விவசாயத்தில் உயர் கல்வி, நூதனப் பயிரிடுதல், வெளிநாட்டுப் பண்ணை அனுபவங்கள் என்று தன் போக்கிலே போய்க் கொண்டிருந்தான்.

பயணத்தின்போது பெற்றவர்கள் விபத்தில் சிக்கி, மேல் உலகிற்கே பயணமாகி விட, குடும்பத்திற்குத் தைரியம் சொல்லித் தாங்கி நின்ற நடுத்தூண் மரகதம்மாள்தான் - அதாவது வசந்தியின் பாட்டி. வயது எண்பதைத் தாண்டி விட்டாலும் நம்பிக்கையும், புன்னகை மாறாத முகமுமாய் இருந்த இனிய முதியவள்.



அருமையான சிறு குடும்பம்தான் - ஆனாலு தேனம்மா ஆயாவிற்கு இவர்களுக்குமே சமைத்து [illegible]க்க முடியவில்லை. ஆக, அங்கலாய்த்தாள்.

"உங்கப்பா மட்டும் விழுந்து எலும்பை உடைச்சு [illegible] இந்தப் பிரச்சனை எல்லாம் இல்லையே..." - என்று

"போ ஆயா - நீ கெட்ட பேச்சு பேசறே!" - குற்ற[illegible]னாள் - விது என்ற வித்யா.

"என்ன பேசிட்டேன்?"

"பின்னே? எங்கப்பா வேணும்னா விழுந்து எலும் உடைச்சாங்க? மழை பெய்து ரோடு மோ....சம இருந்துச்சு."

"ஆமாம்டி, ராஸாத்தி - அந்த ரோட்டைப் போயி நாலு [illegible] மிதிச்சு வருவோம் - அதுக்குத் தெம்பு வேணாமா இன்னும் ஒரு தோசை போடட்டா?"

"தோசையும் கறுப்பா இருக்குதே!"

"கல்லை விட்டே வராம கிடந்ததை எப்படியே சுரண்டி எடுத்தேன்... நொள்ளை சொல்லாதே, கண்ணு."

"எனக்குத் தூக்கம் வருது, ஆயா..."

இனியும் பிள்ளைகளுடன் மல்லுக்கட்ட ஆவியற் தேனம்மாள் பாலையும், பிஸ்கட்டுகளையும் தந் அவர்களைப் படுக்கைக்கு அனுப்பினாள்.

அப்போதும் சின்னவன் வினு பிஞ்சு விரலை பிரட்டலாய் ஆட்டினான்.

"ஆயா, காலைல தோச போட்டா நான் வீட்டை விட்டே ஓடிப் போய்டுவேன்."

கல் கல்லாய் வந்தாலும் பரவாயில்லை, அரைத்த மாவை இட்லியாகவே போட்டு எடுத்து விடுவது என்று முடிவெடுத்த ஆயா, பலக்கத் தலையாட்டினாள்.

''ஆட்டும்ய்யா - இந்த தோசைச் சனியனே வேணா... கல்லை விட்டும் வர மாட்டேங்குது - உவ்வாயிலே... இறங்க மாட்டேங்குது!'' - என்று.

''ஐயா, கொஞ்சம் தள்ளிக்கோங்க.''

''பெட்டியைத் தாங்க - நான் எடுத்துக்கறேன்.''

''அடடே, சரளா - சௌக்கியமா?''

கதம்பமாய்க் காதில் விழுந்து மணத்த தமிழ்... ப்ரீத்தியின் கண்கள் கலங்கின. மகிழ்வில் பொங்கி... கண்ணீர்!

இப்படிச் சுற்றிலும் அமுதத் தமிழைக் கேட்டு அ... வருடம் ஆயிற்றே... யுகம் போலத் தோன்றிய ஆ... மாதங்கள்.

மதுரை விமான நிலையத்தை ஆவலுடன் மேய்ந்தன... அவள் கண்கள்.

மலேஷியாவிலிருந்து சென்னையைத் தொட்டு, வேற... விமானத்தின் மூலம் மதுரைக்கும் சில மணி நேரங்களில் வந்தாகி விட்டாள்.

வெள்ளையான சப்பை முகங்கள், சற்றே மூக்கால் பேசப்படும் வேற்று மொழியை விட்டுச் சொந்த மண்ணை மிதித்த ஆறுதல்.

சந்தானம் மாமாவின் உதவி இல்லாவிட்டால், இப்படி நினைத்ததை, அதே வேகத்தில் செய்து முடித்திருக்க முடியாது. இப்படிச் சுதந்திரமாய் முடிவெடுத்து வேற்று விடு ஒன்றில் வேலைக்குச் சேர்ந்திருக்கவே முடியாது.

இன்னுமே ப்ரீத்திக்கு ஆச்சரியம்தான் - அண்ணன் எப்படி இதற்குச் சம்மதித்தான் என்று. அதைவிட, பாவம், அண்ணா! எப்படி அண்ணியிடம் தன் தங்கை நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை ஒதுக்கி விட்டுத் தேனி பக்கமுள்ள எஸ்டேட்டில் சம்பளத்திற்குச் சேவகம்



... போகிறாள் என்பதைச் சொல்வான் என்ற ...!

...சொன்னதும் அண்ணனின் நிலை என்னவாகும்?

...வாழ்க்கை என்பது நம் கையில் கொடுக்கப்பட்ட ஓர் ...யைத் தேநீர் போல. அதை ஒரே மடக்கில் குடிப் ...தும், ரசித்து ருசித்துப் பருகுவதும் நம் கையில்தான் ...ண்டு!'' என்று ஒரு ஞானவான் சொல்லவில்லையா?

தான் முன்பு குடித்து முடித்த கசந்த தேநீரையே ...நினைப்பதால் என்ன பயன்? மனதைத் தேற்றியவள் ...மறுபடியும் சுற்றிலும் இருந்த பழுப்பு நிற அழகு ...முகங்களை, அவை பேசிய தேன் தமிழை ரசிக்க ...லானாள்.

வரிசையாய் நகர்ந்த பெட்டிகளில் தன்னுடையவைகளைத் ...தேடி இறக்கி ட்ராலியில் வைத்தவள், அதை உருட்டியபடியே வாசல்புறம் வந்தாள்.

அது உள்நாட்டு விமான நிலையம் என்பதால் பகட்டே இல்லை. மதுரை மீனாட்சியின் கலை நயமுள்ள கோயிலைக் காண வந்திறங்கியிருந்த சில வெள்ளைக்காரரைத் தவிர, பெரிய கூட்டமில்லை.

மலேஷியாவின் கண்ணாடி போன்ற பளபளப்பும், நாம் அதிகம் நடக்கத் தேவையில்லாத நகரும் பாதைகளும் இல்லை... நம்மூரின் நிலை சற்றுப் பரிதாபமாய் இருந்தாலும்... தாய் மடிக்கு வந்துவிட்ட நிம்மதியை உணர்ந்தாள்.

இவளை அழைத்துப் போக வந்திருப்பவர் யார்?

பெரியம்மா தொலைபேசியில் குறிப்பிட்ட பெயர் என்ன? யோசித்தாள் - 'மதுரை விமான நிலையத்தில் திலீபன் வந்து உன்னை அழைச்சுப்பான் - அடையாளத் திற்கு அவனது கையில் பெயர் அட்டையைப் பிடிச்சுக்கச் சொல்றேன்,'' - என்றிருந்தார்.

கையில் அட்டையோடு நிற்பவர் யார் என்று கண்களைத் தேட விட்டாள். இங்கிருந்து எழுத்துக்கள் தெளிவாக இல்லை. எனினும் நிறமும் உயரமுமாக நின்ற ஒரு இளைஞன் இடது கையில் பிடித்த அட்டையோடு தன்னையே பார்ப்பதைக் கண்டு நடையை வேகமாக்கினாள்.

அவனது முகத்தில் மலரத் தயாராய்ப் புன்னகை... அவன் கையின் அட்டை 'வசந்தம் எஸ்டேட்ஸ்' என்று அறிவிக்க, இவள் லகுவாய்ப் புன்னகைத்தாள்.

''நீங்க திலீபன்? வணக்கம்.''

''வணக்கம் ப்ரீத்தி - உங்களை வரவேற்று அழைத்துப் போக மரகதம்மாள் அனுப்பினாங்க.''

வடக்கத்திய நடிகன் போல இருந்தவனின் தமிழ் சுத்தமாய் ஒலித்ததைச் சற்று வியப்புடன் கவனித்தாள்.

இவளது பெட்டிகளை வாகனத்தில் ஏற்றியவன், இவளுக்காகக் காரின் கதவைத் திறந்து வைத்தான்.

''நன்றி... நீங்க?''

''எஸ்டேட்டின் டிரைவர் இல்லை...'' - என்றான் சிரிப்புடன்.

''அப்படிக் கேட்கலை... அதாவது...''

''வசந்தத்தின் பக்கத்து எஸ்டேட் என்னுது. முதலில் வசந்தனின் அப்பாவும் பிறகு அவனது அத்தானும்தான் என்னை இந்தத் தொழில் ஓரளவு வெற்றிகரமாய் நடத்தக் கற்றுத் தந்தவங்க.''

''ஓஹோ! உங்க அப்பா?''

''மேஜர் துரை... இப்ப உயிரோடு இல்லை. அவருடைய வளர்ப்பு மகன் நான்.''

''ஓஹோ!''



''ராணுவத்தில் பணியாற்றப் பல வருடங்களாய் வடக்கே இருந்த அப்பா, விருப்ப ஓய்வு பெற்றதோடு, இந்த எஸ்டேட்டையும் வாங்கினாராம். செய்ய ஒரு தொழில் கிடைத்த கையோடு தன் துணையாக அப்ப ஒரு வயசான என்னையும் தத்து எடுத்துக்கிட்டார்.''

''நல்லது... அப்ப மேஜரின் மனைவி... அதாவது மரகதம்மா...''

''அப்பா கல்யாணமே செய்துக்கலை. பாரதம் தான் என் தாயும், என் தாரமும்னு கொண்டாடிய மனுஷர் அவர்... ஆனாலும் அவருக்கும் பிள்ளை ஆசை இருந்ததால் நான் பிழைச்சேன்... நல்ல வாழ்வு அமைஞ்சது.''

ப்ரீத்திக்கு இப் புதியவனை உடனேயே பிடித்துப் போனது. எத்தனை இலகுவாய் இதமாய்ப் பேசுகிறான் என்று மனம் இளகியிருந்தாள்.

''இங்கிருந்து எஸ்டேட் எவ்வளவு தூரம்?''

''தேனியில் சாப்பிட்டுட்டுப் போனால்... மதியமாகும்.''

''அங்கே எஸ்டேட்டில்... யார் யார் இருக்காங்க?''

''மரகதம்மாவுடன் ஏற்கெனவே பேசியிருக்கீங்க - அவங்க பேத்தி வசந்தியும் கணவர் சேகரும்தான் பண்ணையை நிர்வாகம் செய்தாங்க - ரெண்டு வாரங்களுக்கு முன்பு நேர்ந்த விபத்தில் சேகரின் முதுகுத் தண்டில் அடி - விலா எலும்பு ரெண்டு நொறுங்கிப் போச்சு. சென்னையில் அவங்களுக்குத் தெரிந்த வைத்திய நிபுணர் இருப்பதால் அங்கே போயிருக்காங்க...''

''ஆபத்தான நிலைமை இல்லையே?''

''இப்ப இல்லை. ஆனால் அவங்களின் குழந்தைகளான விதுவையும் வினுவையும் பெரியம்மாவின் பொறுப்பில் விட்டிருக்காங்க. சமையலைக் கவனிச்சுட்டு இருந்த புனிதாவை, வசந்தி தன் துணைக்குக் கூட்டிப் போயிட்ட தால் இங்கு கொஞ்சம் தடுமாற்றம், பிரச்சனைகள்...''

''ரெண்டு வாரமாய்ச் சிரமப்பட்டிருப்பாங்கதான்.''

''எஸ்டேட்டின் விஷயங்களில் ஓரளவிற்கு நான் உதவினாலும், ஒரு வீடு நடப்பது பெண் பிள்ளைகளால் தானே - வினு, விதுவிற்கு ஆரம்பக் கல்வி வேறு தரணும்... அவங்க பத்து நாளாய்ப் புத்தகத்தையே தொடலையாம்!''

புன்னகையுடன் கேட்டாள் - ''உங்க மனைவி?''

திலீபனின் முகம் சற்று வாடியதோ?

இவளும்தான் இத்தனை துடுக்காய்க் கேட்டிருக்க வேண்டாம். ''இது போல ஆளண்டா இடங்களில் இருப்பவங்களுக்கு யார் துணிஞ்சு பெண்ணைத் தருவா?''

''ஏன் தரமாட்டாங்க...? இங்கே எத்தனை அமைதியான வாழ்வு! நகரத்துப் புகையும் பரபரப்பும் இல்லாமல்...''

''இதுவே பல பெண்களுக்குச் சகிக்க முடியாத கொடுமையாய்ப் படுதே! மருத்துவ வசதி இல்லை... தவிர குழந்தைகள் பிறந்தால் அவங்களைப் பள்ளிக்கூடம் அனுப்புவதும் கூடப் பிரச்சனை!''

உண்மைதான் என்பதாய்த் தலையசைத்தாள்.

''உங்களுக்கு எஸ்டேட் வாழ்வு பற்றித் தெரியலை... அதான் இப்படி அவசரமாய் வந்து மாட்டிக்கிட்டீங்க.''

''அப்படி யாராவது ஒரு பெண் உங்களிடமும் வந்து மாட்டுவா.''

தன்னையும் மீறிச் சொன்ன பின், நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

''ஏழைக்கேற்றது எள்ளுருண்டைதான். என்னையே தயார்ப்படுத்தி வச்சிருக்கேன். உங்களைப் போன்றவர்கள் அபூர்வம் - மரகதம்மாளிடம் வேலை கேட்டு வந்த ஒரே விண்ணப்பம் உங்களுடையதுதான் - தெரியுமா... வாழ்நாள் முழுக்க இங்கே வசிக்க... யார் சம்மதிப்பா... ரொம்ப சாதாரணமான பெண்களும் கூட மறுக்கறாங்களே...''



போலிப் பெருமூச்சுடன் பேசியவனைப் பார்த்தவளுக்கு இந்த ரீதியில் பேசிய மற்றும் ஒருவன் நினைவிற்கு வந்தான்... காட்டமாய் அவனை உள்ளிருந்து துரத்த முயன்றாள் இவள்.

## 10



மனதுக்குள் நினைவுகள் பாலாடை போல விழுவிழு என்று ஒட்டிக் கிடந்தன. முழுக்க வழித்து நீக்க முடியாத அவஸ்தை... அதைவிட அவஸ்தை, மனம் அப்பாலாடை நினைவுகளை அடிக்கடி விரும்பி ருசித்தது...!

உணவின் போதும், மீதிப் பயணத்தின் போதும் திலீபன் சொன்னவை முழுமையாய் இவளில் பதியவில்லை. பேருக்குத் தலையசைத்தாள். அவ்வப்போது புன்னகைத்தாள்.

நெஞ்சம் நினைவுகளில் நனைந்து கொண்டிருந்தது.

ஆக, பண்ணையின் தனிமையில் வாழும் ஆண்கள் எல்லாரும் தனக்குச் சாதாரணப் பெண்தான் கிடைப்பாள் என்று பொருமுவார்கள் போலும்... ஆனால் பிரவாகன் அன்று சொன்னது அது மட்டும் அல்லவே - ரெண்டு நாட்களுக்குச் சாதாரணத் தோற்றம் கொண்டவள் போதும்... ஆனால் வாழ்க்கைக்கும் பார்வைக்கும் பளபளப்பானவள் அல்லவா தேவையாம்!

புளியங்காயை நினைத்ததுமே நாவு சுரந்து பல் கூசுவது போல, பிரவாகனை நினைத்ததுமே நெஞ்சம் எரிந்தது.

ஆனால் ஆரம்பத்தில் பிரவாகனின் கயமை புரியாமல் தன்னையே முட்டாளாக்கி அல்லவா விட்டாள்?

'வெல்லும் ஜோடி' என்ற பாராட்டில் மயங்கி, அவனோடு ஒட்டி, பேசி, சிரித்து... அன்று மலர் சூழ்ந்த குளக்கரையில் அந்த டாலி அம்மணி மட்டும் குறுக்கிடா

விட்டால் தான் பிரவாகனைக் காதலிப்பதாகவும் கூட அவனிடமே உளறியிருக்கக் கூடும்!

எரிச்சலும் கசப்புமாய் உள்ளே கலந்து குமட்ட வைத்தது. பிறகு பிரவாகனைக் காண்பதைத் தவிர்த்து விட்டாள். இனி அவனைக் காணவே நேராது என்பது மட்டும்தான் ஒரே நிம்மதி.

இப்போது கிடைத்துள்ள மாற்றத்தில் அத்தனையையும் மறக்க வேணும். மரகதம்மாளிற்கும் அவர்களின் வீட்டுக் குழந்தைகளுக்கும் உழைப்பதில் மகிழ வேணும். தேவையில் இருக்கும் சிலருக்குத் தான் பயன்படப் போகிறோம் என்பதே தன் மனப்புண்ணிற்கு அருமருந்து.

ஆனால்... இதுவரை கூண்டுக் கிளியாயிருந்தபோது மகிழ்வு இல்லாவிட்டாலும் பாதுகாப்பு இருந்தது... இனி?

ஆனால் உள்ளே உதைத்த கேள்விகள் எல்லாம் மரகதம்மாளைக் கண்டதும் அடங்கி விட்டன.

புன்னகை தடவிய அன்பு முகம், பரிவான பார்வை... இறகால் வருடுவது போன்ற மென்குரல், பேச்சு...

முதியவளின் முகத்திலும் நிம்மதி தெரிந்தது. தன்னைப் போலவே அவருக்கும் 'வருபவள் எப்படியோ?' என்ற கலக்கம் இருந்திருக்கும் போலும்.

பரஸ்பர அறிமுகங்கள் சுருக்கமாய் முடிய, ப்ரீத்தி தன் வேலைகளை என்னவென்று கேட்டு அறிந்தாள்.

பெரிய வீடு - ஆனால் எங்கும் உடைகள், பொருட்கள், செய்தித் தாள்கள் என்று இறைந்து கிடந்தன. பெரியவர் சொன்னதைக் கேட்டபடி செய்தித் தாள்களை மடித்து அடுக்கினாள்.

''முதலில் பிள்ளைகளின் சாப்பாட்டிற்கு வழி பண்ணம்மா.''

''சரிங்கம்மா... பிள்ளைங்க எங்கே?''



''அதுகளை ஒரு வழியாய்த் தேனு சமாளிச்சுகிட்டிருக்கா... ஆனால் வேளா வேளைக்குச் சரியாய்ச் சாப்பிடறதில்லை. இங்கே குழறுபடி என்றாலும் அங்கே பிள்ளையின் உடம்பு தேறி வாரதே போதும்.''

''சாப்பாட்டைத் தயார்ப் பண்ணிட்டு வர்றேம்மா.''

சமையலறைக்குப் போனவளை அங்கிருந்த தேனம்மா கண்டு வியந்தாள் - ''அடடே... இதாரு சின்னப் பொண்ணு?''

''நான்... ப்ரீத்தி.. வேலைக்கு வந்திருக்கேன்.''

''அது தெரியுதுப்பூ... இம்புட்டு சிறு பிள்ளையாய் இருப்பீகன்னு நினைக்கலை... சமையல் ஏதும் தெரியுமாப்பூ?''

கிழவி கவலையாய் விசாரித்தாள்.

''செஞ்சுடலாம்!''

''புஸா... இல்ல, பீஸாங்கறது?''

''பீட்ஸாவா?''

''ஆங்... அதேதா.. ரொட்டியாட்டம் மெத்துன்னு மசாலையோட மணக்குமாமே?''

''செய்வோம் - ஈஸ்ட் இருக்குதா?''

''இந்த அலமாரியில பாட்டிலுக பேர் எழுதி வெச்சிருக்கும்... பாரேம்ப்பூ.''

இருந்தது - இரண்டு தேக்கரண்டி ஈஸ்ட்டை அரைக் கோப்பை வெதுவெதுப்பான நீரில் ஊற விட்டவள் வெங்காயம் தக்காளியை அரியலானாள்.

''கோழிக் கறி இருக்குமா பாட்டி?''

''அதெல்லாம் டின்னு டின்னாக் கிடக்குது எனக்குத்தான் அந்த டப்பியைத் திறக்கவும் தெரியலை.''

''இதோ இப்படி நெம்பினால் திறந்துக்கும் - அவ்வளவு தான்.'' கிழவிக்கு ஆனந்தத்தில் கண்ணீரே துளிர்த்து விட்டது.

''ஆண்டவனாத்தான் உன்னை அனுப்பியிருக்காரு தங்கம். அஞ்சே நிமிஷத்துல அத்தனையையும் பூவாட்டம் நறுக்கி... திறந்து இப்ப ரொட்டியை எப்படிச் சுட?''

''ரெண்டு கப் மைதாவை எடுங்க. அதில் உப்பு, முட்டை, ஊறின ஈஸ்ட் நீர் எல்லாம் பிசைஞ்சு, இப்படி உலர்ந்த துணியில் சுற்றி அடுப்புப் பக்கமாய் வச்சிடணும். நாம வெங்காயம், காய், கோழிக்கறி அத்தனையையும் மசாலா சேர்த்து வதக்கி வைக்கறதுக்குள்ள மாவும் பலூனாட்டம் உப்பிக் கிடக்கும். அதை வட்டமாய், கொஞ்சம் கனமாய்த் தேச்சு, மேலே மசாலாவைப், பாலாடையைப் பரப்பி, 'பேக்' பண்ணால் ஆச்சு.''

''கேக் செய்ற அடுப்பிலேயா?''

''அதான் - தோசை போல முந்தின நாளே ஊற வைத்து ஆட்டி, வழிச்செடுத்துக் காத்திருக்கும் சிரமம் எல்லாமில்லை.''

''இத்தினி சுளுவாய் இருக்குதேப்பூ... இத வச்சுத்தான குட்டிக என்னைய மிரட்டுச்சுக! எந்தோசை அதுகளுக்கு வாயில வெக்க விளங்கலை... மெலிஞ்சு போச்சுங்க.''

''பெத்தவங்க கூட இல்லாத கவலைம்மா அது. அவங்க வந்ததும் பாருங்க, உங்க தோசையைக் கேட்டு வாங்கிச் சாப்பிடுவாங்க.''

தேனம்மாளின் வாயில் மீதமிருந்த பற்கள் அத்தனையும் தெரிந்தன. அவளுக்கு இப்புதுப் பெண்ணை மிகவுமே பிடித்திருந்தது.

கையில் சாமர்த்தியம் இருப்பது கூடப் பெரிதல்ல. எத்தனை சாதுர்யமாய்ப் பேசிச் சமாளிக்கிறாள் இச்சிறு பெண் என்ற பெருமிதம்.

''சமையலறையை ஓரளவு சுத்தப்படுத்திட்டால் பீட்ஸா தயாரானதும் குழந்தைகளைச் சாப்பிட வரச் சொல்லலாம் - சரியா?''



இளையவள் வேலையில் சுழலக் கண்ட முதி[illegible] ளிடமும் சுறுசுறுப்பு தொற்றிக் கொள்ள, ஒரு ம[illegible] நேரத்தில் சமையலறையோடு, சாப்பாட்டு மேஜை[illegible] 'ளிச்'சென்று மாறியது.

''பெரியம்மா என்ன சாப்பிடுவாங்க?''

''அவங்களுக்கான ரசமும் சாதமும் செய்துட்டேம்மா[illegible]

''அதுக்குத் தோதாய் அப்பளப்பூ பொரிச்சுடலாமா[illegible] என்றபடியே, அதையும் செய்தவள், வதக்கிய காய்க[illegible] கலவையிலும் சிறிது பரிமாறி ஆயாவிடம் தந்தாள் -

''இதைப் பெரியம்மாட்ட கொடுத்திடுங்க. பிரயாண[illegible] செய்ததால் கசகசன்னு இருக்குது - அஞ்சே நிமிஷத்தி[illegible] குளிச்சுட்டறேன்.''

''ஐயோ... செய்யுங்கம்மா... இங்கிருந்த ஆத்[illegible] அவசரத்துல உங்களைக் குளிக்கவும் கூட விடலை.''

''நீ, வான்னே பேசுங்க - அது எனக்கும் சௌகர்யம்[illegible]

''ஆகட்டும்மா...'' சந்தோஷமாய்ச் சம்மதித்தாள் தேனம்[illegible]

அவசரக் குளியல்தான் என்றாலும், வெந்நீ[illegible] மல்லிகை மணமூட்டிய சோப்புமாய்ச் சேர்ந்து, அவளை[illegible] புதிது போலாக்கி இருந்தன. இளம் மஞ்சள் பருத்[illegible] சேலையை உடுத்தியவள், கூந்தலை உலர்த்தலானாள்[illegible]

'பாவம்... இந்த வீட்டில் எல்லாம் தலைகீழாகத்தா[illegible] கிடக்கிறது. அத்தனையையும் நிமிர்த்தி வைக்க நா[illegible] நாட்களாகும்!' என்ற யோசனையுடன்.

தவிர இன்னும் இரு மாதங்களில் பிரபல பள்ளிய[illegible] மூன்றாம் வகுப்பில் சேருவதற்கான நுழைவுத் தேர்[illegible] எழுத வேண்டிய சிறுமி வித்யா புத்தகத்தை[illegible] தொடவேயில்லை என்ற புகார் வேறு!

நாளை அதிகாலையே பிள்ளைகளைப் படிப்பி[illegible] உட்கார்த்தி விட வேணும் - பீட்ஸா உண்ட குஷியி[illegible] அவர்கள் படிப்பை முறுமுறுக்காமல் செய்யக் கூடும்.

முகத்திற்குத் துளி பவுடரை ஒற்றியவள், உதட்டிற்கும் மெல்லிய சாயத்தைச் சேர்த்தாள் - கண்ணியமான தோற்றம் குழந்தைகளைக் கவரக் கூடும்... பரிதாபமாய்ப் போய் நின்றால் காரியம் ஆகாது!

தனக்காக ஒதுக்கப்பட்ட பின்புறச் சிறு அறையிலிருந்து ப்ரீத்தி வீட்டின் மையத்திற்கு வந்தபோது... ஏதோ சரியில்லை என்பது புரிந்தது.

வேலையாட்கள் கலவரத்துடன் இங்கும் அங்குமாய் அலைந்தனர். சமையலறையில் ஆயாவைக் காணாததால் மரகதம்மாளைத் தேடி முன்புறம் ஓடினாள்.

கேட்பதற்கு இவள் வாய் திறக்கும் முன்பே முதியவள் தழுதழுத்தாள்.

''வினுவைக் காணலைம்மா... வீடு முழுக்கத் தேடியாச்சு!'' - என்று.

''தோட்டத்தையும் சலிச்சாச்சேப்பூ... குழந்தை எங்கே போனான்னே தெரியலியே...'' - ஒப்பாரியை நீட்டினாள் தேனம்மா.

''ஷ்... அழாதிங்கம்மா... பெரியம்மா மனசு சங்கடப் படுமே... கடைசியா எப்ப வினுவைப் பார்த்தீங்க?''

மூக்கைச் சிந்தித் துடைத்தபடி - ''காலைல என் இட்லியச் சாப்பிட்டப்பத்தான்!'' அலுத்தாள் தேனம்மாள்.

''மதியம் சாப்பிடலையா?''

''பருப்பும் சாதமும் வெச்சிருந்தேன் - அதுக, வெறும் அப்பளமும் காக்கா ஜூஸும் போதும்னுட்டு...''

''கோக்?''

''அதுதான்... விளையாட, பிறகு தூங்கன்னு அதுக அறைக்கே போயிடுச்சுங்க... சத்தமே கேக்கல.. அதுக் குள்ள நீயும் வந்து மசாலா ரொட்டியச் சுட, அது தயா ரானதும் குழந்தைகளைக் கூப்பிடலாம்னு விட்டுட்டேன்.''



''நான் குளிக்கப் போனதும்தான் பிள்ளைங் அறைக்குப் போனீங்க?''

''ஆமா - அங்கன விது மட்டுந்தான் இருந்தாப்பூ தம்பிய எங்கேப்பூன்னா, அவன் அப்பவே காணாம போயிட்டானேங்கறா...''

''ஷ்... அழாதீங்க!'' - அழ ஆரம்பித்த முதியவளை அடக் வள், மிரண்டு விழித்த சிறுமி வித்யாவிடம் போனாள்

''தம்பி ஏன் காணாமல் போனதாய்ச் சொல்றே, விது? கேட்டபடி.

''ம்... வந்து அவந்தான் சொன்னான்.''

தேனம்மாள் குறுக்கிட்டாள்.

''ஆமப்பூ... சொல்லுச்சு - ஆயா மறுபடி தோ வார்த்தே நான் ஓடிப்பிடுவேன்னு.''

மற்றொரு சந்தர்ப்பமாய் இருந்திருந்தால் சிரித்திரு பாள்... ஆனால் தற்போது தீவிரமாய்ச் சிந்திக் வேண்டியிருந்தது -

''காணாமல் போகணும்னா எப்படி எங்க போவீங் விது?'' வித்யா சில நொடிகள் யோசித்துச் சொன்னாள்

''ஓடையைத் தாண்டி அப்டியே காட்டுக்குள் போயிடணும்...''

மறுபடி தேனம்மாளின் ஓலம் -

''ஐயோ, அங்கன காட்டுப் பன்னி, முள்ள பன்னியெல்லாந் திரியுமே... அது முள்ளு மேல பட்ட உடனே விஷமேறி... ஐயோ!''

சிறுமியின் முகம் பீதியில் வெளுத்தது - அவளைத் தனி அழைத்துப் போய் விசாரணையைத் தொடர்ந்தாள் ப்ரீத்தி

''எப்ப வெளியே போனான்?''

''தெர்லியே...''

''ஒருவேளை போகலையா?''

''நான் தூங்கிட்டேனே...''

''அப்பளம், கோக்கைத் தம்பி சாப்பிட்டானா?''

''ம்ம்... பிறகுதான் அவனைக் காணலை.''

ஆக, மதியம் வரை வீட்டினுள் இருந்த பிள்ளை... மனதுக்குள் கடவுளைத் தொழுதபடி மறுபடி தேடலானா... ப்ரீத்தி. பின்னோடு வந்த விது சேலையை இழுத்தாள் -

''என்னம்மா.''

''எனக்குப் பசிக்குது... பீட்ஸா செய்திங்களாமே?''

''லேசாய்ச் சுட வச்சிட்றேன் - உக்காரு.''

இரண்டாம் நிமிடம் சமையலறையை உணவின் மணம் நிரப்பியது.

''ஹைய்யோ... ரொம்ப ருசி!'' சாப்பிட ஆரம்பித்த விதுவின் முகம் வாடியது -

''வினுக்கு இது ரொம்பப் பிடிக்கும்.''

அந்நேரம் தொலைபேசி அலற, இவளுக்குத் தூக்கியடித்தது - 'பேசி'யை எடுத்த தேனம்மா, அதில் தன் புலம்பலைத் தொடர்ந்தாள்!

''ஆமாங்கய்யா... விசேஷமா? வினு தம்பியைக் காங்கலையா - தோசை சுட்டா காணாமப் போயிடு வேன்னு மிரட்டி... அப்படியே போயிடுச்சுங்களே...''

ஓலமிட்டவளை மரகதம்மாள் அதட்டினாள்.

''தேனு! யாரிடம் உளறுறே?''

''சின்னவருட்டம்மா... வந்துட்டே இருக்காராம்.''

''வசந்த் வரானாமா... நல்லது. வரச் சொல்லிட்டு போனை வை!'' என்றபின், ''அதுக்குள்ள இந்தக் குட்டிப் பயலை...''



...சொல்லி முடிக்கும் முன்

''...த்திம்மா..'' - என்று வந்தது அழைப்பு. அனைவரும் ...பும் சிரிப்புமாய்த் திரும்ப, தூக்கத்தால் உப்பிய ...ணைக் கசக்கியபடி அங்கே நின்றிருந்தான் வினு.

11



''கழுதை... குட்டிக் கழுதை.. எல்லாரையும் பதற வச்சிட்டு பீட்ஸாவை ருசிச்சுத் தின்றதைப் பாரேன்..'' கனிவும் கோபமுமாய்க் கொள்ளுப் பேரனை வைதார் மரகதம்மாள்.

''எங்கய்யா இருந்தேன்னா, மாடி பரணு லங்காரு - எப்படிப்பா அதுல ஏறுன, ராசா? ...பம்மாயில்லையா?''

''அங்க பந்து, கோலி எல்லா இந்துச்சு... அதாம் போனே.''

''சரி - போனவரு கால நேரத்துல இறங்கியிருக்கப் பிடாதா?''

''தூக்கம் வந்திச்சே.''

''அந்தத் தூசியிலியா?''

''போன மாசம் சாமானை எல்லாம் இறக்கிக் கழுவச் சொன்னேன். ஆக, அத்தனை மோசமாய் இருந்திருக்காது. சரி, இப்ப எப்படி துரை கீழே இறங்குனீங்க?''

''பசிச்சுது - பீட்ஸா வாசனை வந்துச்சுல்ல?''

''என்னா மூக்கு - இந்த செல்ல மூக்கு!''

''மோப்பம் பிடிச்சுட்டே வந்துட்டல்ல, வினு?''

''ம்ம்..'' வாய் நிறையக் கடித்து மென்றவன் ஓரக் கண்ணால் அங்கே நின்றிருந்த புதியவளைக் கூச்சத்துடன் நோட்டமிட்டான்.

''இந்த அக்காதான் பீட்ஸா செய்தாங்க.''

''தெரியும்.''

''ஆமான்டாப்பா - எனக்கு வெறும் தீஞ்ச தோசைதான் வருது...''

''எப்ப வந்தாங்க?''

''நானும் இப்பத்தான் பாத்தேன்... நீ காணாமப் போன பிறகுதான்.''

விது விளக்கினாள்.

''சரி, வினு... இனி சொல்லாமல் வெளியேவோ, பரணுக்கோ போகும் வேலையே வேண்டாம் - சரியா...?''

சிறுவனின் முடியைக் கோதியபடி சொன்னாள், ப்ரீத்தி.

''ம்ம்... தினம் பீஸா செஞ்சு தவ்வீங்க?''

''அது சலிச்சிடுமே - நாளைக்கு மசால் தோசை - அதற்கப்புறம் புலவ்.''

''ஹை!''

''தினம் பாடமும் படிக்கணும்.''

இது பிள்ளைகளை அத்தனை உற்சாகப்படுத்தவில்லை!

''எழுத்து, பாட்டு, விஞ்ஞானம் எல்லாம் படிச்சால் தானே பெரிய்ய பள்ளிக்கூடம் போய், பிறகு கல்லூரிக்குப் போகலாம் நீங்க?''

''போய்...''

''வேலை பார்க்கலாம்.''

''எங்க?''

''இங்க உங்க எஸ்டேட்டில்தான்.''

''அதுதான் இப்பவே பார்க்கலாமே!''

சற்று அசடு வழிய ப்ரீத்தியும் சிரித்து விட்டாள்.

''நாம் படிச்சிருந்தால்தான் வேலையாட்கள் நம்ப பேச்சைக் கேட்பாங்க - இல்லைன்னா,



கிடக்காரு முட்டாள் முதலாளி!'ன்னு போயிட மாட்டாங்க?''

''ஓ.. அதான் வசந்த் மாமா நிய்ய படிச்சுட்டே இக்காரா?''

''அப்படித்தாம் போல.''

பேச்சு எங்கே போனாலும் வசந்த் என்பவரிடம் வந்து முடிவதைக் கவனித்தாள்.

மரகதம்மாளுக்குத் தன் பேரனிடம் அதீதப் பாசம். தேனம்மாவிற்கோ 'சின்னவரை'ப் பற்றிக் குறிப்பிடும் போது முகத்தில் பயபக்தி!

''மாமா படிக்கலைன்னா கூட நாங்க அவங்க சொன்ன பேச்சைத்தான் கேட்போம்!'' - என்றாள் விது, விசுவாசத்துடன்.

''ஆனா மாமாக்கு நீ புத்தகத்தைத் தொடலைங்கறது படிக்கவே பிடிக்காது...'' நினைவூட்டினார் மரகதம்மாள்.

''நாங்கூட உம் பேச்சு கேக்க மாத்தேன்!'' என்று வினு அக்காவிடம் அறிவிக்க, விதுவைத் தவிர மற்றவர்களுக்குச் சிரிப்புதான்.

குட்டி முதலாளியைத் தேடிப் போனவர்களுக்கு, அவர் கிடைத்த தகவல் போக, நிம்மதியாக வீட்டிற்கு வந்து ஒரு பார்வை பார்த்தவர்களுக்கு, சூடான தேனீர் பரிமாறினாள் ப்ரீத்தி - புதிய முகத்தைச் சற்று வியப்புடன் பார்த்தவர்களுக்குத் தேனம்மாள் அறிமுகப்படுத்தினாள் -

''இங்க ஓத்தாசைக்கு வந்திருக்கற பொண்ணுப்பா - பேரு பீத்தி.''

குழந்தைகளோடு சேர்ந்து புதியவளும் ஏன் சிரிக்கிறாள் என்பது புரியாமல் நின்றாள் தேனம்மாள்.

''இதெல்லாம் எதுக்கம்மா?'' - சங்கோஜப்பட்டார் மரகதம்மாள்.

ஆலிவ் எண்ணெயைப் பாதத்தில் ஊற்றித் தேய்த்து உப்பு கலந்த இதமான வெந்நீரில் முதிய பாதங்களை ஊற வைத்திருந்தாள் ப்ரீத்தி.

''பாதத்திற்கு இதமாயிருக்கும்மா - கால் விரல் நகங்களெல்லாம் கூட வளர்ந்து வளைஞ்சிருக்குது - சதையில் குத்தி வலியெடுக்குமே?''

''ம்ம்... அதான் அதிகமாய் நடக்கறதில்லை. ஊனு போகுது உயிர் போய் வருது.''

''ஆனால் நடந்தால்தானே ரத்த ஓட்டம் சுறுசுறுப்பாகி உடம்பு கலகலன்னு இருக்கும்மா?''

''உண்மைதான்... ஆனா வயசாக, உட்கார்ந்து புத்தகம் வாசிக்கக் கண்ணும் கூட ஒத்துழைப்பதில்லை... இளைய வர்களுக்கு இந்தப் பிரச்சனை எல்லாம் புரியாது...''

''அயல்நாட்டில் 'மூப்பு' என்று ஒரு செட் கருவிகளை அறிமுகப்படுத்தியிருக்காங்கம்மா.''

''நீயும் என்னைப் பாட்டின்னே கூப்பிடேன். இத்தனை அருமையாய்ப் பாதம் பிடிச்சு விடறவளுக்கு அந்த உரிமை உண்டு.''

''ஆகட்டும், பாட்டிம்மா!'' - சந்தோஷமாய்ச் சம்மதித்தாள்.

''சொல்லு... அதென்ன 'மூப்பு'க் கருவிகள்?''

''பார்வையை மந்தப்படுத்தும் மூக்குக் கண்ணாடி, காதில் அடைப்பான், அடர்த்தியான கையுறை, எடைக் கற்களுடனான மார்புக் கவசம், கால்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் காலணிகள் - இதை எல்லாம் போட்டுக்க, காட்ராக்ட் பிரச்சனையுள்ள எழுபது வயதுக்கு மேற் பட்டவரின் பிரச்சனை தானாய்ப் புரியும் என்ற நோக்கில் தயாரான கருவிகள் - இதைப் போட்டுப் பார்த்த இளவய தினர் தங்களின் தாத்தா, பாட்டிமாரை ரொம்பப் பரிவாய்க் கவனிச்சுகிட்டாங்களாம்!''

''போட்டுப் பாராமலேயே உனக்கந்த மனசு இருக் கும்மா. ஸ்ஆ...''

''ஆச்சு. வளைஞ்சிருந்த கால் நகத்தை வெட்டியாச்சு. இனி வேதனை குறைஞ்சிடும்.''



''... நன்றிம்மா... அப்ப நடக்கலாமோ?''

''அதற்குத்தானே இந்தச் சிகிச்சை. நீங்க இனிமேல் சாப்பாட்டு அறைக்கு வந்துதாம்மா சாப்பிடணும். ...தான் விதுவும் வினுவும் ஒழுங்காய்ச் சாப்பிடுவாங்க.''

''என் அறையும் கூட ஒரே நாளில் சீராயிடுச்சு.''

''பெருவாரியான நேரம் படுக்கையில் இருக்கீங்க - நான் அதை முதலில் சுத்தப்படுத்தினேன்.''

மெத்தை, தலையணைகளை வெயிலில் இட்டு, அறையைப் பெருக்கித் துடைத்தவள், புது விரிப்புகளோடு படுக்கையைத் தயாரித்திருந்தாள் - அறை முழுக்க வியா பித்திருந்த புத்தகங்கள் துடைத்து அலமாரியுள் அடுக்கப் பட்டிருந்தன.

''எழுந்து, தேட முடியாதுங்கறதால், எடுக்கத் தோதாய்ப் புத்தகங்களை என்னைச் சுற்றியே வச்சிருப்பேன். மங்கின கண்ணும் நோகிற முதுகோடும் வாசிப்பு சுலப மில்லை என்றாலும், வாசிக்கப் பழகினவங்களுக்குப் புத்தகத் துணை இல்லாது முடியலை... மூச்சடைக்குது..'' - குறைப்பட்டார்.

''எனக்கும் வாசிப்பது சுவாசம் போலத்தான் பாட்டிம்மா. ஆக நான் வாசிப்பதை உரக்கச் செய்றேன் - உங்களுக்கும் கேட்குமளவு!'' மரகதம்மாளின் முகம் மேலும் மலர்ந்தது.

''வசந்தி எம் பேத்திதான் - ஆனால் இங்கே உட்கார்ந்து அரை மணி நேரம் வாசியேன்னு சொல்லச் சங்கடமா யிருக்கும் - கல்யாணமான பெண்ணிற்குப் புருஷன், ரெண்டு குழந்தைகள்ன்ற கடமை. எஸ்டேட் வேலைகளிலும் உதவுவாள்.''

''இனி பிள்ளைகளின் பாடம் கூட இங்கேயே நடக் கட்டும், பாட்டிம்மா... நீங்களும் அவங்களுக்குக் கற்றுத் தரலாம். பொழுது சுவாரஸ்யமாய் நகரும்.''

''கடவுளாய்த்தானம்மா உன்னை இங்க அனுப்பியிருக்கார்.''

இளையவளின் கண்களில் குறும்புச் சிரிப்பு அரும்பியது.

''ஆமா... ஏன்னா வந்த ஒரே விண்ணப்பம் என்னுடையது தான்னு...'' - நாக்கைக் கடித்துப் பேச்சை நிறுத்தினாள்.

''அடடா... திலீபனுக்கு ஓட்டை வாய்... விவரத்தை உன்னிடம் சொல்லிட்டானா? ஆனா அந்தத் தம்பி இல்லாமல் நாங்க சமாளிச்சிருக்க முடியாதம்மா. மாப்பிள்ளைக்கு அடிபட்டதும் கவனமாய் மதுரைக்கு அழைத்துப் போனது அவன்தான். இது போன்ற அவசர ஆத்திரங்களுக்கு இந்த எஸ்டேட் வாழ்க்கை சிரமம்தான்.''

''ஆனா மற்றப்படி எத்தனை அமைதியும் இனிமையுமான நாட்கள்! இல்லையா பாட்டிம்மா? பரபரப்பு, புகை, பதட்டம் இல்லாமல் நீரோடை போலச் சுகமாய்...''

பேசியவளைச் சற்று வியப்புடன் பார்த்தார் முதியவர்.

''உன் வயசு உண்மையிலேயே 21 தானா, ப்ரீத்தி?''

''ஏன்ம்மா?''

''இந்த வயசில் இத்தனை பண்பும் பக்குவமும் எப்படி வாய்ச்சுது?''

''உங்களைப் போன்ற பெரியவங்க ஆசீர்வாதம்தான்.''

முகம் மறந்த தன் தாயையும் சந்தானம் மாமியையும் எண்ணிப் பேசினாள்.

''உங்கம்மா உன்னை அருமையாய் வளர்த்திருக்காங்க.''

இளையவளின் முகம் சுண்டிச் சிறுத்தது.

''ஏன்டா - ஏதும் தப்பாய்ச் சொல்லிட்டேனா?''

''எனக்கு அம்மா - அப்பா இல்லை, பாட்டிம்மா. இது வரை இருந்தது அண்ணன் அண்ணியோடு!''

என்றவள் மேலும் விவரங்களைத் தர விரும்பவில்லை. மேலும் அண்ணனின் குழந்தைகள் ரவி,



...ணுவின் ஞாபகம் வேறு வந்து தொண்டையை இறுக்கியது. ஆக, அவசரமாய்ப் பேச்சை மாற்றினாள்.

''எனக்கொரு உதவி வேணுமேம்மா.''

''சொல்லு.''

''தோட்டத்தில் இருக்கும் ரெண்டு ஆண்களை அரை மணி நேரம் எனக்கு ஒத்தாசை செய்ய அனுமதித்தால் வரவேற்பறையையும் சற்று ஒழுங்கு படுத்திடலாம்.''

''வந்த இரண்டாம் நாளே எல்லாத்தையும் இழுத்துப் போட்டுச் செய்தால் உடம்பு அசந்திடும்.''

''அதான் உதவிக்கு ஆள் கேட்டேன். மரச் சாமான்களைச் சற்று மாற்றி வைக்க, அறை மேலும் விசாலமாய்த் தெரியும் - தரை விரிப்புகளைத் தட்டி வெளியே போட்டு சுத்தப் படுத்தி..''

''சரி சரி... அதிகம் அலட்டிக்காமல் செய்யம்மா.''

துணைக்கு அவர்களைச் சேர்த்துக் கொண்ட ப்ரீத்தி உற்சாகமாய் வேலையில் இறங்கினாள். சிறு பெண் குழந்தை செப்புச் சாமான்களை வைத்துச் சமைக்கும்போது ஏற்படும் குதூகலம் அவளது முகத்தில் தெரிந்தது.

இரவு உணவிற்கான நேரம் நெருங்க, தயாராக்கி வைத்திருந்த பூரி மாவைத் தேய்த்து இடலானாள். இப்படிச் சங்கிலியாய் வேலைகள் தொடர்வது அவளுக்கு பிடித்திருந்தது. வேண்டாத நினைவுகளில் இருந்து அவை இவளைக் காப்பாற்றினவே!

முதல் ஈட்டுப் பூரிகளை மேசையில் வைத்ததும் குழந்தைகள் கூச்சலிட்டார்கள் -

''ஹை... குண்டு பூரி!''

வினு அதன் உப்பலில் தன் சுட்டு விரலை அழுத்த பூரி பிளந்து ஆவியை விட்டது.

''பட்டாணி சப்ஜி ஜோராய் இருக்குதுக்கா.''

''அப்ப நல்லாச் சாப்பிடணும். அடுத்த ஸெட்டை எடுத்துட்டு வரேன்.''

கொதிக்கும் எண்ணெயில் மறு ஈட்டுப் பூரிகள் உப்பி மிதந்தபோது, சாப்பாட்டு அறை பேச்சும் சிரிப்பிலுமாய்க் குலுங்கியது!

தட்டில் பூரிகளுடன் ஆவலாய்ப் போனாள்.

புதிய உருவம் ஒன்று நின்றிருக்க, பிள்ளைகள் அவனைக் கொண்டாடினர்.


''வசந்த் மாமா... இனிமே எங்கயும் போவே வேணாம்.''

''இப்ப எம் பக்கத்தில் உட்காருங்க...''

''ஹை பூரி வந்தாச்சு... மாமா, பூரிக்குள்ள என்ன இருக்கு தெரியுமா? புகை!''

எல்லோரும் சிரிக்க, ப்ரீத்தியும் புதியவனும் மட்டும் சிரிப்பையே மறந்தவர்களாய்க் கல்லாகி நின்றனர்!

## 12



அது சிறு அறைதான்.

என்றாலும் சுவருக்கு ஒன்றாய் அலமாரிகளும் கண்ணாடி வைத்த மேசையில் இழுப்பறைகளும் இருந்தன. ஆக, தன் உடைகள் அனைத்தையும் எஸ்டேட்டிற்கு வந்த மறுநாளே பிரித்து அவற்றில் அடுக்கியிருந்தாள். இப்போதோ... அதாவது வந்த மூன்றாம் நாளே அடுக்கிய அனைத்தையும் மறுபடி உருவிப் பெட்டிக்குள் அடைக்க வேணும்!

எரிச்சலுடன் மரக்கதவுகளைத் திறந்து, பின் அறைந்து மூடினாள்.

அவளால் நம்பவும்தான் முடியவில்லை.



நிஜ வாழ்வில் நிகழ்ச்சிகள் இப்படியுமா நாடகம் போல நடக்கும்? ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் பிரபலமே அற்ற ஒரு சிற்றூரின் பண்ணை வீட்டில் தஞ்சம் புகுந்தால் இங்கும் இவளைத் துரத்தி வந்து பிடித்தது போல அவன்... அதாவது பிரவாகன்.

எப்படி?

வசந்த் மாமா என்று பிள்ளைகளும் மற்றவர்களும் கொண்டாடிய சின்ன முதலாளி இவன்தானா? இதென்ன பெயர்க் குளறுபடி?

ஒரே ஜாடையில் இருக்கும் இரு நபர்கள் என்று நினைக்க வழியில்லை. அவனது முகமும், கண்களும் தான் உண்மையைத் தெளிவாய் உணர்த்துகின்றனவே!

'அடடே, இங்கே, என் வீட்டிலேயே வந்து சிக்கிக் கொண்டாயா?' என்ற ஏளனம்.

'இனி என்னிடமிருந்து தப்ப முடியாதடி!' என்ற தெனாவெட்டு,

'இங்கேயும் வந்து உன்னைத்தானா பார்க்க நேரணும்?' என்ற வெறுப்பு அத்தனையும் அவன் முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தனவே.

''மாமா, இதான் பீத்திக்கா.''

வினு அறிமுகப்படுத்த, மற்றவர்களுக்குச் சிரிப்பு.

''ப்ரீத்தின்னு இங்கே நம் உதவிக்கு வந்திருக்கிற பெண்ணப்பா!'' என்று விளக்கிய மரகதம்மாவின் கண், காது, கால்களின் செயல்பாடுகள் மங்கினாலும் மூளை மழுங்கவில்லை என்பதை அடுத்த கேள்வியே காட்டி விட்டது.

''உங்களுக்கு ஒருவரை ஒருவர் முன்பே தெரியும் போலவே?''

அவன் வாயே திறக்கவில்லை.

''அம்மா... பாட்டிம்மா... அது...''

'நீயே சொல்லிச் சமாளி!' என்பது போல அலட்சிய மாய் நின்றான்.

''வந்து ஒரு கருத்தரங்கில்... சும்மா பார்த்திருக்கோம்.''

''ஓஹோ?'' பெரியவர் சகஜமாய்க் கேட்டுக் கொண் டாலும், அவர் ஏமாந்ததாய்த் தெரியவில்லை!

''வசந்த்! கைகழுவிட்டு சாப்பிட உட்கார்.''

அவன் சாப்பிட்டபடி சிறுசுகளிடம் பேச்சு கொடுக்க, கலகலப்பாய்க் கழிந்தது அந்த உணவு நேரம்.

பரிமாறி, தட்டுகளையும் எடுத்த பின், தேனம்மா ஆயாவின் வற்புறுத்தலால் இரண்டு பூரிகளை மென்றவள், தன் அறைக்குள் புகுந்து ஆற அமர யோசித்தாள்.

இப்போது என்ன செய்வது?

எத்தனை கடுமையும் குதர்க்கமுமாய் இவளைப் பார்த்தான்!

தொடர்ந்து இங்கேயே இருந்தால் பார்வை மட்டு மல்லாது வார்த்தைகளாலும் இவளைக் குத்தி விரட்டுவான்... அதற்கு இடம் தர வேண்டுமா?

ஆனால் பெரியவர் மரகதம்மாளிடம் பெட்டியோடு போய் நின்று வேலையிலிருந்து விலகிக் கொள்வதற்காய் என்ன காரணத்தைச் சொல்ல? வந்த இரு நாட்களில் வரிந்து கட்டிக் கொண்டு வீட்டை நிமிர்த்தியவள், திடீரெனக் கிளம்பினால் என்ன நினைப்பார்கள்?

இவளையுமே குற்ற உணர்வு கொத்தி எடுத்தது.

ஆனால் பிறரைப் பற்றிக் கவலைப்பட ஆரம்பித்தால் தன் நிலை ஆபத்தில் முடியும் என்று பட, சிறு பொருட்களையும் பெட்டிக்குள் இட்டாள்.



கை வேலையைச் செய்ய, மனசு ஆராய்ந்தபடிதா
இருந்தது. ஆக, மலேஷியாவில் வேலைக்கான விள
ரத்தை அச்சிறு தீவில் வைத்திருந்தது பிரவாகன்தா
தமிழகச் சிற்றூரில் வேலை எனில், அங்கு கூடியிரு
சொற்பத் தமிழர்களில் ஒருவர்தான் அந்த விளம்பரத்
அங்கு வைத்திருக்க வேண்டும் என்பதைக் கூட யோசி
க்காமல் உலக்கைக்குள் தலையை விட்ட புத்திசாலிதா

இப்போது இடிக்கு அஞ்சக் கூடாதுதான்... ஆனாலு
தன் தோற்றத்தைப் பற்றி அத்தனை அலட்சியமு
கேவலமுமாய்ப் பேசியவனிடம் கைநீட்டிச் சம்பள
வாங்கும் நிலைமையா... உடம்பு கூசியது.

அதற்கு அண்ணி போடும் இடி சோறே மேல்...!

கதவு தட்டப்பட்டது -

அழுத்தமாய் - அதிகாரமாய் -

தட்டுவது யாராய் இருக்கக் கூடும் என்பதை யூகி
முடிந்தது - இந்தப் பண்ணையின் பண்பற்ற முதலாளிதா

வேறு யார் இத்தனை ஆர்ப்பாட்டம் செய்யக் கூடு

ஆழ மூச்செடுத்துத் தன்னை நிலைப்படுத்திக் கொண்
வளின் பார்வை தன்னிச்சையாய்க் கண்ணாடியைத் தேடி

கலைந்திருந்த கூந்தலை மேலாகக் கோதிக் கொண்டா

ஆனால் கால்கள் கதவை நோக்கி நகருவதாயில்லை

மறுபடி கதவு தட்டப்பட்டது. முன்னிலும் பலமாய்

கதவின் தாழ் நீக்கியவளின் விரல்கள் நடுங்கின.

தப்பு செய்தவன் அவன்... அப்படி யிருக்க த
கென்ன பயம் என்று தன்னையே தேற்றியபடி கத
விரியத் திறந்தாள்.

எதிர்பார்த்தபடியே வெளியே நின்றது பிரவாகன்தா
இப்போது அவனது முகத்தில் வெளிப்படையாக

கோபம் தெரிந்தது. இவளைத் தாண்டி அவனது கண்கள் ஒரு கணமே அறையை ஆராய்ந்தன... பின் உதடுகளின் இகழ்ச்சியான ஒரு மடிப்பு!

''நினைச்சேன்.. இப்படிப் பெட்டியை அடுக்கிட்டுதான் இருப்பேன்னு.''

உள்ளே உணர்வுகள் குமுறினாலும் உதடுகளை அழுத்தியபடி நின்றாள்.

''எங்கேயும் சொல்லாமல் கொள்ளாமல் கிளம்புவது தான் பழக்கம் போல!'' என்றான் மகா குத்தலாய்.

''இதென்ன பழக்கம் - சொல்லாமல் கொள்ளாமல் வயசுப் பெண் வீட்டை விட்டுக் கிளம்பறது? இதை என்னிடம் வந்து சொல்ல உங்களுக்கு வெட்கமாயில்லை?''

மனைவியின் சீறலில் சர்வமும் ஒடுங்கிக் கிடந்தான், விவேக்.

''சொல்லிட்டுதான் விமலி... ப்ரீத்தி என்னிடம் பேசிட்டுத்தான்...''

''ஓஹோ? அப்ப அண்ணின்னு ஒருத்தி இங்க கல்லுக் குண்டாய் எதுக்கு இருக்கேன்? நாத்தனாருக்கு மாப்பிள்ளை தேடி நிச்சயமும் பண்ணிய என்னைக் கிறுக்கி ஆக்கிட்டாளே!''

''ஷ்... விமி...''

பெண்டாட்டியின் கால்களையும் பிடிக்கத் தயாரா யிருந்த விவேக், அதே பவ்யத்துடன் அவளது கைகளைப் பற்றினான்.

அவளோ கரப்பான்பூச்சி ஊர்ந்தது போலக் கைகளை உதறினாள்.

''இப்ப நான் அவங்களுக்கு என்ன பதில் சொல்றது?''

''எவங்களுக்கு விமி?''



பண்ணையை நுணுக்கமாய்த் திட்டமிட்டு அட் காசமாய் நடத்துபவன், கட்டியவள் முன் தடுமாறினா

''முதல்வர் அம்மாவிடமும் இந்தியப் பிரதமரிட தான்!'' என்ற விமலியின் நக்கலில் நசுங்கினான்.

''மாப்பிள்ளை வீட்டாரிடம்தானே? நானே செ விட்றேம்மா.''

''அதாவது விமலி இங்கே செல்லாக் காசு - தேர்ந்தெடுத்த மாப்பிள்ளையை எல்லாம் எந் தங் கட்டிக்க முடியாதுன்னு - சொல்லப் போறீங்க?''

''எல்லாம் ரொம்ப அவசரமாய் முடிவாச்சா... அ வேகத்தில் எங்களால் கல்யாண ஏற்பாடுகளைச் செ முடியாதுன்னு.''

''அவங்கென்ன நட்சத்திர ஹோட்டலிலா வச்சு தா முடியச் சொன்னாங்க? எளிமையாய் நம்ப பக்க லிருந்து நாப்பது, ஐம்பது பேர் - அவங்க ஆட்கள் இருநூறுன்னு எல்லாருக்கும் ரெண்டு வேளைச் சாப்பா புதுத் துணிமணி, தாலி, வீட்டுச் சாமான்களில் பாதி ஏற்கெனவே இங்கே வாங்கிட்டேன்.''

''ஆனா பொண்ணு - நம்ப ப்ரீத்தி தயாரில்லையே

''அதான் ஏன்னு கேட்கறேன். பையன் வீட் போட்ட கல்லு மோதிரத்தைக் கமுக்கமாய் மாட்டிக்கி வளுக்கு இப்ப என்ன கேடு.''

''மோதிரம் உன்னிடம்தானே இருக்குதாம்...?''

விமலி ஆங்காரமாய் முறைத்தாள்.

''ஓஹோ... அதான் காரியமாய் அப்பவே மோதிரத் எங்கிட்ட தந்தாளா? கள்ளக் கழுதை.''

''பொறு விமலி...'' பொறுமை இழந்து கொண்டிரு விவேக் தன் மனைவியைத் தடுத்தான். ''நா

ராஜேஷைப் பற்றி விசாரித்து முழுக்கத் தெரிஞ்சுக்காமல் அவசரப் படக் கூடாதில்லையா? அதான் ஒரே வாரத்தில் மலேஷியாவில் அத்தனை வேலையையும் முடிச்சிட்டு சென்னைக்கு ஓடி வந்தேன்.''

''ஏனிப்படி விழுந்தடிச்சு வரணும்? விசாரிக்காமலா அவங்க வீட்டுப் பெண்ணை என் தம்பிக்கு எடுக்கறோம்?''

''அது வேற - அந்தப் பெண்ணும் உன் தம்பியும் காதலிச்சாங்க.''

''அடடே... அப்ப உங்க தங்கையும் முதலில் காதலிக்கணும்ங்கறீங்களா?''

முடியைப் பிய்த்துக் கொள்ளலாம் போலிருந்தாலும், பொறுமையாகவே பதில் சொன்னான்.

''மற்றவங்களை விடுவோம். இந்த வரன் ராஜேஷைப் பற்றி தீர விசாரித்துப் பின் கல்யாணத் தேதியைக் குறிக்கலாம்.''

''ஆக, கல்யாணம் இன்னும் ஒன்னரை மாசத்தில் இல்லை?''

''பொறுப்போங்கறேன்.''

''ஓடுகாலித் தங்கையை வச்சிட்டு பழியை ராஜேஷ் மேல போடறீங்க?''

விவேக்கின் கோபம் கிளர்ந்தது.

''ராஜேஷ் என்ன படிச்சிருக்கான்? எதில் பட்டதாரி?''

''அது... வந்து... படிச்சால்தானா?''

''ஆஹா... படிக்காத மேதையா?''

''ஆணுக்கு அழகு உத்யோகம்தான்.''

''சரி - மாசம் எவ்வளவு சம்பாதிக்கறான்?''

கணவனின் காரியமான கேள்வி இவளை உசுப்பியது. சுதாரித்து விட்டானே என்று பயந்தாள்.



''ஆக, நீங்க என்னை நம்பலை?''

''மாப்பிள்ளையின் சம்பாத்தியம் எவ்வளவுன்னு கேட்பது எங்கேயும் உள்ளதுதானே, சொல்லு.''

தான் குதித்து ஆடினால் கட்டியவன் குனிந்து போவான் என்ற விமலியின் கணக்கு சற்றுப் பிசகி விட, அவளது ஆத்திரம் அதிகரித்தது.

''அப்ப நீங்களே மும்பை போய் விசாரிச்சுக்கோங்க.''

''அதைத்தான் செய்யப் போறேன்.''

அவளது வயிறு பயத்தில் கலங்கியது. ராஜேஷின் வண்டவாளங்கள் அத்தனையும் அம்பலமாகி விட்டால்..? இந்தக் கல்யாணம் சற்றுப் பொறுத்தென்ன எப்போதுமே நடக்காதே என்ற கலக்கம்.

அதில் சற்று நயந்து இழைந்தாள்.

''இதோ பாருங்கத்தான், உங்களுக்குக் கல்யாண செலவு பற்றி ஏதும் தெரியாது. டாக்டர், என்ஜினிய பையன்கள் பத்து லட்சம் வரை கேட்கறாங்களாம்! அ போக நகை, கார், மொத்த ஊரையும் வரவழைத் ரெண்டு நாளைக்குக் கல்யாண விருந்துன்னு... கா தண்ணியாய் இறைபடணும்...''

''பணம் பொருட்டில்லை, விமலி.''

சிலிர்த்து நிமிர்ந்தாள்.

''புரியாமப் பேசாதீங்க... உங்கப்பா விட்டுட்டுப் போ சில லட்சங்களில் இதை எல்லாம் சமாளிக்க முடியாது.

''கல்யாணச் செலவு எம் பொறுப்பு.''

முதலில் அதிர்ந்தவளின் முகம் பின் சூடேறிச் சிவந்தது

''அவ்வளவிற்குச் சம்பாதிச்சு மூட்டை கட்டி வச்சிரு கீங்களா என்ன?''

''முடிஞ்சவரை செய்வது நம்ப பொறுப்பு - இதுவரை அவளுக்காய் என்ன செய்திருக்கோம்? தவிர அப்பா விட்டுட்டுப் போன பணம் இப்ப பல மடங்காய்ப் பெருகி...''

''பல மடங்குன்னா... பத்து மடங்காயா?'' எகத்தாளமாய்க் கேட்டாள்.

''கூடவே..! ஆக, பணத்திற்குக் குறைவில்லை. நாம குறையில்லாத மாப்பிள்ளையைத் தேடி எடுக்கணும்... புரியுதா?''

விமலியின் மனம் ஆசையும் அவசரமுமாய்ப் பல கணக்குகளைப் போட ஆரம்பித்தது...

## 13



அதிகாலை வேளைக்கே உரிய விசித்திரக் கனவுகளில் சிக்கி, முனகலுடன் புரண்டவளை அந்தச் சத்தம் எழுப்பியது.

கண்களை முழுக்கப் பிரிக்க முடியவில்லை...

மறுபடியும் கதவு தட்டப்படும் சத்தம்...

இது கனவா அல்லது நனவா என்ற மயக்கத்துடனேயே எழுந்தாள். நேற்றிரவு வந்தவன் மீண்டுமா மிரட்ட வந்துவிட்டான் என்ற மருட்சியும் கூட.

ஆனால் மரக் கதவு அதிகாரமா யில்லாமல், மிருதுவாகவே தட்டப்பட்டது.

''யாரு?''

பதிலில்லை.

வீட்டில் யாருக்கேனும் சுகமில்லையா அல்லது ஏதேனும் திருடன்தான் புகுந்து விட்டானா?

இரவு வெகு நேரம் உறக்கம் பிடிக்காமல் புரண்டு விட்டுத் தாமதமாய் உறங்கியவளுக்குள் குழப்பமான பயங்கள்...



''யார்னு கேட்டேன்?''

''நானு.''

கேட்ட சின்னக் குரலில் உடனே தாழ் விலக்கினாள். வெளியே போர்வையை வழிசலாய்ப் போர்த்தியபடி நின்ற சிறு உருவத்தை அள்ளித் தூக்கினாள்.

''வினுக்குட்டி... என்னாச்சு?''

''தூக்கம் வரலை...''

''அதனால இங்கே வந்துட்டியா?'' கேட்டபடி முத்தமிட்டாள்.

''ம்ம்.''

''ஆனால் எனக்குத் தூக்கம் வருதே... ஒரு கதை சொன்னால் நீயும் தூங்கிடணும். சரியா?''

''சரி. அங்க கரடி வந்துச்சு.''

குழந்தை கனவு கண்டு மிரண்டிருக்கிறான் என்பது புரிந்தது.

''இங்கே எதுவும் வராது. நிம்மதியாத் தூங்கலாம்!'' என்றவள், ஏதேதோ கதைகளைத் திரித்து விட, பொடியன் கேட்டபடி, இவளைக் கட்டியபடி தூங்கி விட்டான்.

அந்தப் பிஞ்சு உடலின் அண்மையில் இவளது மனதும் கொள்ளை ஆறுதலைக் கண்டது.

ஆனால் விடிந்ததும் வினுவிற்குத் தான் அஞ்சி இவளது அறையில் அடைக்கலமானது வெட்கத்தைத் தந்தது போலும்.

சற்றுப் பெரிய மனிதத் தோரணையில் பேசினான்!

''முதல்ல பல்லை விளக்கிடு, வினு!'' என்றிவள் சொன்னதும், தன் அறைக்குப் போய் வந்தவன்,

''பால் கலந்துடவா?'' என்று ப்ரீத்தி கேட்க.

''வேணாம். எனக்கு டீதான் வேணும்!'' கேட்டான் மிடுக்காய். ஆனால் மூன்றாம் நிமிடம் உணவு மேசையில் தன் முன் வைக்கப்பட்ட தேநீரைப் பார்த்தவனின் புருவங்கள் சுருங்கின.

''டீ... வேற கலராய் இருக்கு?''

''டீதான்டா, செல்லம்.''

''உங்க டீ வேற கலராய் இருக்குதே?'' சுட்டிக் காட்டினான்.

''உன்னிதில் கொஞ்சம் பால் அதிகமாய்ச் சேர்த்தேன்.''

''ஏன்?''

''ஏன்னா நீ வளர்ற பிள்ளை. என்னைப் போல... இல்லை, உங்க மாமா அளவிற்கு வளர வேணாமா?''

சின்னத் தலை பலக்க ஆமோதித்தாலும், காரியமாய் வந்தது அடுத்த கேள்வி.

''எப்ப எனக்கு உங்க மாதிரி டீ?''

''அதெல்லாம் உனக்குக் கல்யாணமானதும், உன் வீட்டுக்காரி வந்து கடும் டீ போட்டுத் தருவா!'' சிரிப்பைக் காட்டி விடாமல் சொன்னாள்.

''ஓ?''

''இப்ப எனக்கு ஒரு டீ கிடைக்குமா?'' இரவு உடையில் வந்து அமர்ந்தவனைப் பார்க்க இவளுள் எரிச்சல் மண்டியது.

நேற்றிரவு எத்தனை திண்ணக்கமாய்ப் பேசினான். தன்னை அண்டி வேலை செய்பவள்தானே என்ற திமிர்! இல்லையெனில் தனிமையிலிருக்கும் ஒரு பெண்ணிடம் நள்ளிரவில் அவளது அறைக்கே போய் அப்படிப் பேசக்கூடுமா ஒரு ஆண்?



இவள் மூட்டை கட்டிக் கொண்டிருப்பதை ஒரே பார்வையில் கணித்தவன் -

''ஓ... எங்கேயும் இப்படிச் சொல்லாமல் கிளம்புவது தான் பழக்கம் போல...?'' - என்று குத்தினான்.

இவளுக்கும் பதில் சொல்ல முடியாத திணறல்.

இவனுடன் ஒரே வீட்டில் தங்குவதா - அதிலும் இவனிடமா கை நீட்டிச் சம்பளம் பெறுவது!' என்ற காட்டத்துடன் இருந்தவளை, ஏதோ தப்பு செய்து அஞ்சி ஓடுபவளைப் போலல்லவா குற்றம் சாட்டினான்?

''நான்... நான்... போறது பற்றி உங்களிடம் சொல்ல வேண்டிய அவசியமில்லை.''

''ஆக, பாட்டிம்மாவிடம் சொல்லியாச்சா?''

கேள்வி உறுத்தியது.

வேலை கேட்டது மரகதம்மாளிடம் - ஆக, விலகுவது என்றாலும் முதலில் அவர்களிடம் ஒரு வார்த்தை சொல்லத்தான் வேணும்.

இப்படி விழுந்தடித்து மூட்டை கட்டுவது அசட்டுத் தனம். ஆனால் இப்படியொரு திருப்பத்தை எதிர்பார்க்க வில்லையே... யாரால் மனம் கசந்து புது இடம் தேடி ஓடி வந்தாளோ இங்கேயும் அவனே வந்து நிற்பதென்றால்...

''பெரியம்மாவிடம் நாளைக்குச் சொல்லலாம்னு...''

''அதாவது எக்கேடோ கெட்டுக்கோங்கன்னு?''

''அதான் நீங்க வந்தாச்சே. எல்லாம் பொறுப்பாய்க் கவனிச்சுப்பீங்களே.''

இவள் நயமாய்க் குத்திய அதே பாணியில் பதிலடித் தான். ''வந்த இரண்டே நாட்களில் நீ வீட்டைக் கச்சிதமாக் கிட்டியே ப்ரீத்தி. எனக்கு அந்தளவு திறமை வருமா?'' என்று.

''அதனால்?''

''கிளம்பணும்னு முடிவு பண்ணிட்டே சரி. ஆனா எனக்குக் கொஞ்சம் அவகாசம் கொடு. உதவிக்கு வேற யாரேனும் வந்த பிறகு நீ கிளம்பலாம்.''

அவனது விழிகள் இவளுடையது ஊடுருவி நிர்ப நித்தன. இவள் சம்மதிக்கத்தான் வேண்டியிருந்தது.

ஏனெனில் சுயநலத்துடன் இங்கிருக்கும் முதியவரை இரு குழந்தைகளை நிர்கதியாய் விட்டு விட்டு ஓடுவதில் நியாயமே இல்லை.

''சரி - ஆனால் நீங்க இனி என் அறைக்கு வர வேணாம், அதுவும் ராத்திரி வேளையில்...''

''மனதில் வெளிச்சம் இருந்தால் போதும். இந்த இருளால் எந்தப் பாதிப்பும் வராது!'' - அலட்சியமாய் வந்தது பதில்.

இவனுக்கா மனதில் வெளிச்சம்? இரண்டு நாட்கள் பிரியமாய்ப் பழகி விட்ட பின் பழகியவளைப் பற்றி பிற ஆண்களிடம் தரமற்று விமர்சித்துச் சிரித்த கள்ளத்தனம் தனக்குத் தெரியாது என்ற நினைப்பில் இப்படி உத்தம வேஷம் போடுகிறானே...

ப்ரீத்தி யோசனையுடன் பல்லைக் கடிக்க, வந்த வேலையைச் செவ்வனே முடித்த உல்லாசத்துடன் கிளம்பினான் பிரவாகன்.

ஆனால் அவனது தொடர்பு ஒரேயடியாய் விலகி விடாதுதான். ஒவ்வொரு நேர உணவின் போதும் அவனைப் பார்க்க, பரிமாறவும் கூட நேரும் என்ற சலிப்புடன் தேநீர்க் கோப்பையைப் பிரவாகனின் முன்பு வைத்தாள்.

கனகாரியமாய் மாமாவின் முன் வைக்கப்பட்ட பானத்தை உற்றுப் பார்த்த சிறுவனின் விழிகள் கோலி யாய் உருண்டன.



''என்னடா, வாலு! என்ன ஆராய்ச்சி?'' கேட்ட பிரவாகனை அலட்சியப்படுத்திய சிறுவன் ப்ரீத்தியைக் கேட்டான்.

''மாமாக்குதான் இன்னும் கலியாணம் ஆவலியே?''

திடுக்கிட்டாலும் அதைக் காட்டிக் கொள்ளாமலே -

''ம்ம்... அதுக்கென்ன?'' என்றாள்.

''அவங்களுக்கு நிய்ய பால் போடலை?''

''அது... அவர் வளர்ந்து முடிச்சாச்சே... அதான்.''

கடுப்பைக் காட்டாது சமாளித்தாள்.

''புதுக் கதை விட்டிருக்கே போலியே. கல்யாண ஆனால்தான் சாதா டீன்னு?''

ஏற்கெனவே கழுவிய குவளை ஒன்றைத் தேய்த்த அலசியபடி,

''அது சும்மா... வீட்டுக்காரி வந்து போடுவான்னு சொன்னேன்!'' - முனகினாள்.

''ஓஹோ... அது வேறா? அப்ப அதுவரை பிரம்ம சாரிகள் எல்லோரும் ஒரு வாய்த் தேநீருக்கும் கூட காய்ந்து கிடக்கணுமா? அதுவும் இங்கே ஒ புண்ணியவதி மனமிரங்கி வரும்வரை...?''

தன்னையே அவன் பார்ப்பதை உணர்ந்தும் கருத்தாய் பாத்திரம் விளக்கியபடி இருந்தாள்.

இவனுக்கு எதற்குப் புண்ணியவதி? பேரழகி. அதென்ன சொன்னான்... பளபளப்பாய் ஒருத்தி வரு வரை காத்துக் கிடக்கட்டும். வருபவள் கழனி நீரைே ஊற்றினாலும் குடிக்கட்டும்! மனம் பொருமியது.

இவர்களது பனி யுத்தத்தை நிறுத்தவே போல வந் தேனம்மா, ''இந்தாம்மா லிஸ்ட்டு. இதுதான் பெரியம்மாக்கு தேவையான மருந்துங்க - மற்ற மருந்துகளோடு இதையு சேர்த்துக்கலாம்!'' என, இவனது புருவங்கள் உயர்ந்தன

''இதென்ன மருந்துப் பட்டியல்?''

''ஜலதோஷம், காய்ச்சல், வலி நிவாரணக் களிம்பு எல்லாம் இங்கே இருக்கணும். அவசரத்திற்கு எங்கே யிருக்கு மருந்துக் கடை? பல மருந்துகள் முடிஞ்சு போச்சு''

''ம்ம்... நல்ல முன் யோசனை - ஆனால் இதே பொறுப்பு உணர்வு தொடரணும்!'' என்றான் ஒரு தினுசாய்.

இவள் பட்டியலையே சரி பார்ப்பவள் போலிருக்க,

''மருந்து வாங்கி வைப்பது இருக்க, அலட்சியமாய்ப் பிள்ளையையே தொலைச்சுட்டா... அதை எப்படிச் சரி பண்றது...?''

இவளுக்கு இந்தக் குத்தல் புரியவில்லை.

''எல்லாம் சரியாய் இருக்குது, ஆயா. திலீபன் வந்ததும் அவர் கையில் பட்டியலைத் தந்தால் பொறுப்பாய் வாங்கி வந்திடுவார்.''

பிரவாகனது முகம் சற்றுக் கடுத்தது.

''ஓஹோ - வந்த இரண்டே நாட்களில் திலீப் உனக்கு இத்தனை பரிச்சயமாயாச்சா?''

''ஆமா. மதுரையிலேருந்து என்னை இங்கு கூட்டிட்டு வந்தது அவர்தானே. தேனியில் சாப்பிட்டோம்... வழியெல்லாம் பேசினோம்...''

''இப்ப வருவதாய்ச் சொல்லியிருந்தானா?''

''ம்ம் - அவர் இல்லைன்னா இங்கே எதையும் சமாளித்திருக்க முடியாது. இப்படிப் பெரியம்மாவே சொன்னாங்க. உங்க அத்தானின் விபத்தின்போது திலீபன் தானே அத்தனை உதவிகளையும் செய்தது?''

கேட்ட முகம் கனிந்தது.

''நிஜம்தான் - அவனில்லைன்னா நிலைமை ஆபத்தா யிருக்கும். ஆனால் நான் வந்த பிறகும் அவனைச்



சிரமப்படுத்துவானேன்? என்னிடம் தந்தால்...'' கையை நீட்டினான்.

எழுதிய காகிதத்தை மேஜை மீது வைத்தவள் -

''அவர் டவுனிற்குப் போவதாய்ச் சொன்னார் - பிறகு உங்க பிரியம்!'' என்றபடி வெளியே நடந்தாள்.

பவானி ஜமுக்காளத்தில் படுத்தபடி கிளைபரப்பிய மாமரக் கிளையையே பார்த்திருந்தாள். அங்கு மாம் பிஞ்சுகள் கூட இல்லை எனினும் மாம்பழ வாசனை தோப்பெங்கும் பரவியிருந்தது போன்ற பிரமை. பிக்னிக்கில் அனைவரும் உண்ட பின், பாத்திரங்களைக் கழுவிக் கவிழ்த்த பின் கிடைத்த தனிமை, ஓய்வு.

மாந்தோப்பிற்கு வந்த மாற்றம் சுகம்தான் எனினும், இங்கும் ப்ரீத்தி இழுத்துதான் வரப்பட்டிருந்தாள்.

வண்ணானிடமிருந்து வந்த துணிகளை அடுக்கிக் கொண்டிருந்தவளின் அருகே சத்தமின்றி வந்து நின்றவன்,

'பிக்னிக் போறோம் - சாப்பிட ஏதேனும் தயார் செய்!' - உத்தரவிட்டான்.

''சரி - கலந்த சாதமா அல்லது ரொட்டியில் முட்டை, வெண்ணெய் கலந்து சான்ட்விச் செய்யவா?''

''எது சீக்கிரமாய்த் தயாராகுமோ அது!'' என்றவன், இவளை மேலும் கீழுமாய்ப் பார்த்தான் -

மிருக வைத்தியர் சினைமாட்டைப் பார்ப்பது போல இதென்ன நோட்டம் என்று பொருமியவள் அலட்சிய மாய் நின்றாள்.

''நீ தயாராய் இருப்பதால் இப்படியே ஏறிடலாம்.''

''நானா... நான் எங்கும் வரலை.''

''ஓஹோ? ஆக, குழந்தைகளை நானே அழைத்துப் போய், தோப்பைக் கவனிக்காமல் இவர்களை மட்டுமே கவனித்து, சாப்பாடு தந்து கூட்டி வரணுமா?''

மறுபடி அசட்டுத்தனமாய் உணர்ந்தாள். இங்கே இவளது விருப்பு, வெறுப்புகள் அநாவசியம். இங்கே இவள் வேலைக்காரிதானே - இட்ட உத்தரவிற்கு கீழ்ப்படியக் கடமைப்பட்டவள்.

''எப்பப் புறப்படணும்?''

முகத்தில் சிறு திருப்தியுடன் - 'அரை மணி நேரத்தில் என்றான். புட்டு அவித்து, முட்டை, சான்ட்விச்கள் இவள் தயாரிக்க, தேனம்மா பழம், தண்ணீர், ஜமுக்காளம் என்று பலவற்றை ஜீப்பில் ஏற்றினாள்.

ஆனால் மாந்தோப்பில் பிரவாகன் ஏதும் வேலை செய்ததாய்த் தெரியவில்லை. சதா இவர்களோடு இருந்து பேசியவன் கொண்டு வந்த பந்தை வீசித் தட்டி ஆடினான். தட்டில் இட்டவற்றை மிச்சம் வைக்காமல் சாப்பிட்டான்.

அத்தனையையும் பார்த்து நிற்பதைத் தவிர இவளுக்கும் வேறு வேலையில்லை.

ஆகத் தன்னை இங்கே விரட்டிக் கொண்டு வந்தது... திமிர்தான்! வேறென்ன? சொல்லாமல் ஓடினாயே...? வேடனுக்குத் தப்பிய மான் வலையில் விழுந்தது போல என் வீட்டிலேயே சிக்கினாயே என்ற எக்களிப்பு.

சவால்கள் வாழ்வை சுவாரஸ்யப் படுத்துபவை...

ஆனால் இப்படியுமா சவால்கள் வரும்?

புலி வந்து விடுமோ என்று அஞ்சி அஞ்சிக் காட்டில் நடந்தவன் நேரே புலிக் குகைக்குள் புகுந்தது போல ஒரு நிலை.

இலைகளூடே காலடிச் சத்தம் கேட்க, எழுந்து உட்கார்ந்தாள்.

நீண்ட எட்டுக்களை வைத்து வந்தவன் ஒரு புலி போலவேதான் தோன்றினான்...



ஆனால் அஞ்சக் கூடாது...

வஞ்சகனிடம் எதற்காய் அஞ்சி நடுங்க வேணும்?

''எல்லாம் கழுவிக் கட்டித் தயாராய் இருக்குது சா எப்ப கிளம்பணும்னு சொல்றீங்களோ உடனே ஜீப்பி ஏற்றிடறேன்,'' என்றாள் போலி பவ்யத்துடன்.

அவளது முகத்திலிருந்து பார்வையைத் தழைத்து கை விரலுக்குக் கொண்டு போனான். உதடுகள் இறுகி

''இன்னும் உன் விரலில் அந்த மோதிரத்தை காணலையே? ஆக, போட்டவன் போயிட்டான் போல அதிர்ஷ்டக்காரன். உன்னிடமிருந்து தப்பிச்சுட்டான் மெள்ளச் சொன்னான் - கடும் குரூரத்துடன்.

## 14



''அடடா...'' தலையாட்டிச் சிலாகி தார் மரகதம்மாள்.

''என்ன பாட்டிம்மா... எதை இப் ரசித்து வாசிக்கிறீங்க?'' வாசி புத்தகத்திலிருந்து நிமிர்ந்த முதியவள்,

''கவிதைம்மா - காதல் கவிதை!'' என்ற ரசனையோடு!

சற்றுத் திகைத்த ப்ரீத்தி தான் தைத்த பித்தான்கள் தன்னை அமிழ்த்தினாள்.

''என்ன கிழவி காதல் கவிதையில் நீந்துதேன் திகைப்பா?''

''அதெல்லாம்... இல்லை, பாட்டிம்மா.''

''நான் காதலை முழுதாய் அனுபவித்தவள்மா நாற்பது வருஷத் தாம்பத்யம்... வாழ்வில் எனக்கா பெரிய பரிசு அவர்தான்... என்னையும் பொக்கிஷம வைத்திருந்தார்... ஆனா...''

பழுத்த விழிகளின் சோகத்தைத் துடைக்க எண்ணி அவசரமாய்ச் சொன்னாள் -

''இப்ப பேரன் பேத்தி... ஏன், அவங்க பிள்ளைகளும் கூட, உங்களோடு இருக்காங்களேம்மா.''

''ஆனாலும் அவர் இருப்பது போல... ம்ப்ச்... அவரில்லாமல் நான் இத்தனை வருஷங்கள் இருப்பேன்னே நினைக்கலை... மகள், மருமகனின் சாவைப் பார்த்த பின்பும் உயிரோடு...''

மறுபடி பேச்சின் திசை திருப்பினாள், ப்ரீத்தி.

''நீங்க வாசித்த கவிதை என்னன்னு சொல்லலையே, பாட்டிம்மா?''

''ம்ம்.. வெளிநாட்டுக் கவிஞர் ரெனெய்வோவின் கற்பனை - வசந்த்தான் இப்ப எனக்காய் வாங்கி வந்தான் - எனக்குக் காதல் கவிதைகள் பிடிக்கும்ன்றது பயலுக்குத் தெரியும்.''

''அவர்... அவர் முழுப் பெயருமே இதுதானாம்மா?''

''ஏன் கேட்கறே?''

''இல்லை வசந்தி, வசந்த்துன்னு பெயர்கள் ஒன்று போலிருக்க... குழப்பம் வராதான்னு?''

''பேத்தியை வசின்னுவேன். இவன் வசந்த்... ம்ம். அவனது முழுப் பெயரைக் கேட்டேயில்லை? - வசந்த் பிரவாகன்.''

''ஓஹோ?''

''இப்ப கவிதையை நீயே வாசி. நீ வாய்விட்டுப் படித்தால் நானும் மறுபடி ரசிப்பேன்.''

ஆர்வமுடனேயே கவிதை வரிகளை வாசிக்கலானாள்.

'காதலியே,



நீ என்னை நிழலைப் போலக் காதலிக்காதே

மாலை வந்தால் நிழல் மறைந்துவிடும்

கோழி கூவும் வரையிலும்

நான் உன்னோடிருக்க வேணும்.'

''எப்படி உருகுகிறான் பார், காதலன்!''

''எனக்கு அப்படித் தோன்றலை, பாட்டிம்மா'' என்றாள், சிறு சலிப்புடன்.

''கோழி கூவும் வரையிலும்னுதானே கேட்கிறான் வாழ்நாள் முழுக்க என்னோடு இரு என்றில்லையே. இதிலென்ன உருகல்? என் ஆசையைத் தீர்த்துப் போன்னு வஞ்சகமாய்க் கேட்பது போலத்தான் எனக்குப் படுது!''

வாசலில் இருந்து பிரவாகனின் குரல் குறுக்கிட்டது.

''தண்ணீரின் உயரம்தான் மலர் இருக்கும்ன்றது - ஒ தமிழ்ப் பாட்டு. அது போல உன் மனசு எப்படியோ, அ போல நீயும் இந்தக் கவிதையைப் புரிஞ்சுக்குறே.''

இவளது முகம் சிவந்தது.

இரு பெண்கள் அந்தரங்கமாய்ப் பேசும் இடத்தி இவனெங்கே முளைத்தான் என்ற வெட்கமும் விதிர்ப் மாய் எழுந்தாள்.

''என்ன, பதில் தெரியலைன்னா உடனே கிள பிடறதா?''

விடாமல் சீண்டினான்.

''டேய், பெண்கள் பேசுமிடத்தில் நீ ஏன் மூக்கை நீட்டறே?'' பாட்டி அதட்டினார்.

''காதல் பற்றிய பேச்சு - அதான் நானும் புகுந்தே காதலில் பெண்ணும் ஆணும் சமம்தானே!''

நூல்கண்டு, ஊசிகளைச் சேர்ப்படுத்தியவள் கிளம்பினா

''என்னம்மா இப்படி ஓடறே?''

''உங்களுக்குப் பால் எடுத்திட்டு வர்றேன்.''

''அதற்கு முன் அடுத்த கவிதையையும் படித்தால் உன் சந்தேகம் தீரும். வாசிக்கறியா ப்ரீத்தி?''

இவளிடம் புத்தகத்தை அவன் நீட்ட, பல்லைக் கடித்தாள். இதென்ன வீரம்?

எதிரியின் கையைக் கட்டிவிட்டுத் தான் மட்டும் வாளைச் சுழற்றுவது போல...! பெரியவரின் முன்னே தான் வாய் திறக்க முடியாது என்று தெரிந்தே சீண்டுவது...

''சரி - நானே வாசிக்கறேன்!'' செருமியபடி தொடர்ந்தான்.

'நமது கண்கள் தொட்டுக்
கொள்கிறபோது
நமது ஆன்மா
ஒரு சித்திரக் கூடத்தின்
சுவரில்
மாட்டி வைக்கப்பட்ட
ஓவியமாகி விடுகிறது!''

மூவருமே சில கணங்கள் மௌனமாயிருக்க, அவனே விளக்கினான்.

''அவர்களது காதல் நிரந்தரமாகி விடுகிறதாம். அழியாத கலையாய்ப் பதிவாகி நிற்கிறது என்கிறார்... இதில் உனக்கு உடன்பாடு உண்டுதானே?''

''கவிதைகளே எனக்குப் பிடிக்காது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தோன்றுவதை இஷ்டத்துக்குப் பிதற்றி வைத்திருப்பார்கள். அதற்கு அர்த்தம், அனர்த்தம் எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பது வேண்டாத வேலை... எனக்கு வேறு வேலையிருக்குது.''



சொல்லி முடித்ததும்தான் தான் சற்றுப் பதட்டமாய் அதிகம் பேசிவிட்டோம் போலவே என்று உறுத்தியது.

ஆக, அவசரமாய் வெளியேறினாள். நடுங்கிய உடலைச் சற்று ஆசுவாசப்படுத்திய பின், பாலை அடுப்பி லேற்றிய வேளை அவனும் சமையலறைக்குள் வந்தான்.

''என்ன ப்ரீத்தி, ரொம்ப கசப்பில் இருக்கே! மோதிரம் போட்டவனின் நினைப்பா? நான் என்ன தெரியுமா யூகித்தேன். முதலில் நீ அவனை மயக்கியிருப்பே. பயல் மயங்கி நிச்சயதார்த்த மோதிரத்தையும் போட்ட பிறகு உனக்கவன் சலிச்சுட்டான்... ஆக மோதிரத்தைக் கழற்றிட்டு நீ வேறு ஒருவனுடன் சல்லாபமாய்ப் பழக ஆரம்பிச்சே.''

''போதும்... நீங்க என்னைப் புரிஞ்சுக்கலை.. புரிஞ்சுக்கணும்னு நானும் எதிர்பார்க்கலை.''

''பெண்களை நம்பவே கூடாதுங்கறதைப் புரிஞ்சுக் கிட்டேன்.''

'ஆண்கள் மகா வஞ்சகர்கள் என்பதை நானும் புரிந்து கொண்டேன்!' என்று கத்த நினைத்தவள், வாயை இறுக மூடினாள். அவன்தான் உளறுகிறான் எனில், தானும் ஏன் பிதற்ற வேணும்?

''நீங்க விரும்பலைன்னா... நான் போயிடறேன்.''

''ஆங்... இதே இடத்துக்கு வந்திடுவியே.. இங்கு அத்தனையும் உன்னை நம்பித்தான்னு தெரிஞ்சதா தினம் இப்படி ஒரு மிரட்டல்... ம்ம்? சொல்லாமலே ஓடிடறதுதானே உன் பாணி? இப்ப சொல்லி மிரட்டும் பாணிக்கு மாறிட்ட போல...''

பான்ட் பாக்கெட்டுகளுள் கைகளை விட்டபடி வெ உல்லாசமாய் அவன் பேச இவளுக்கு எரிந்தது. மிக கிழ்த்தரமாய்த் தன்னைச் சித்தரிக்கிறானே என்ற ஆத்திரம்

ஆனால் அவன் சொல்வதிலும் சற்று உண்மை இருக்க பொறுமை காத்தாள். தவிர பிரவாகன் இப்போது அவளது முதலாளி!

ஆனாலும் நாக்கு முழுக்க அடங்க மறுத்தது.

''அழகாய்... அதாவது பொறுப்பாய் யாரேனும் கிடைக்கும்வரை நான் இங்கே இருக்கேன்... ஆனால், பாவம்! நீங்க அதுவரையில் சாதாரண என்னோடு சிரமப்பட வேண்டாமேன்ற கரிசனையில் சொன்னேன்.''

புரியவில்லை என்ற பாவனையில் அவனது புருவங்கள் உயர்ந்தன.

''ஆக, நான் இன்னும் ஒரு விளம்பரம் தரணும்?''

''ஆமா... அதைக் கண்டு யாரேனும் வேலை கேட்டு வரும்வரை நான் இங்கே இருக்கேன்... ஆனால்...''

''காதல் கவிதைகளை மட்டும் படிக்கச் சொல்லி இம்சிக்கக் கூடாது. அதானே?''

அந்த இறுகிய சூழலிலும் இவளுக்குள் சிரிப்புக் கிளர்ந்தது.

''இப்படி... அதாவது வேலைக்குத் தொடர்பில்லாத பேச்சுக்களை என்னிடம் பேச வேண்டாம்.''

''சரி, எனக்கும் ஒரு கோப்பைப் பால் வேணும்ங் கறதைக் கேட்கலாமில்லை?''

மரகதம்மாளுக்காகக் கலந்த பானத்துடன் அவனைப் பார்த்தாள்.

''வந்து கலந்து தர்றேன்.''

''நல்லது - சொற்போர் நடத்துவது கூட நம்மைச் சோர்வடைய வச்சிடுது... ஒரு கப் ஹார்லிக்ஸ் குடித் தால்...''



''தெம்பாய் அடுத்த சொற்போருக்குத் தயாராகலா மாக்கும்?'' என்றபடி தன்னைக் கடந்து போனவளை ஒரு புதிரான புன்னகையுடன் பார்த்திருந்தான்.

கோடு போட்ட தாள்களைக் குழந்தைகளிடம் ஆளுக்கு ஒன்றாய்த் தந்தாள் ப்ரீத்தி.

''வினு, விது, அம்மா அப்பாவிடம் என்னவெல்லாம் சொல்லணுமோ சொல்லுங்க. நான் அதை முதலில் எழுதித் தரேன் - பிறகு அதையே நீங்க கடிதமாய் எழுதிடலாம் - சரியா? நாளை திலீப் மாமா வந்து இதைத் தபாலில் சேர்த்திடுவார்.''

''முன்ன நாம எழுதினதுக்கே இன்னும் பதில் வரலையே?''

ஏக்கமாய்க் கேட்டாள் விது.

''அம்மா ரெண்டு தரம் போனில் பேசினாங்களே, பிறகென்ன?''

''வினுதான், பாவம்! எழுத வராது.''

''அவன் போன தரம் போலவே அழகாய்ப் பூ, மலை, பூனை எல்லாம் வரைந்து கையெழுத்துப் போடுவான்.''

''அப்பா எப்பக்கா வருவாங்க?''

''உடம்பு முழுக்க நல்லாயிட்டா. பிறகு அங்கென்ன வேலை? ஓடியே வந்திடுவாங்க.''

''ல்ல... ஏ.ஸி. கார்லதான வருவாங்க?''

''சரிடா, சமத்து - இப்ப என்ன எழுதலாம் - சொல்லுங்க.''

குழந்தைகள் சொன்னவற்றையே சுருங்க எழுதி - மறுபடி அதை அவர்கள் கைப்பட எழுதச் செய்து கடிதங்களை உறையிலிட்டாள். ஊத்தப்பமும் கேசரியும் பரிமாறிய பின் - தபால்களையும் தந்து விட்டாள்.

''வரும்போது பண்ணைக்குத் தபால் இருக்கா?'' என்று கேட்டு, பத்திரமாய் வந்து சேர்ந்தது குறித்து இரண்டாம் நாளே இவள் சந்தானம் மாமாவின் விலாசத்திற்கு அண்ணனுக்குமாய்ச் சேர்த்து எழுதியிருந்தாள். தன் விலாசத்தையும் தெளிவாய் எழுதியிருந்ததால் பதில் கடிதம் வந்திருக்கலாம்தான்.

அண்ணன் இந்தியா திரும்பி விட்டது தெரியும். ஆனால் அண்ணிக்குத் தன் தற்போதைய விலாசம், தொலைபேசி எண் ஏதும் தெரிந்து விடக் கூடாது என்பதில் ஜாக்ரதையாகவே இருந்தாள். அண்ணிக்குத் தெரிந்தால் இங்கு வந்து விடுவாளோ என்ற கலக்கம்... ஏற்கெனவே இங்கிருக்கும் இக்கட்டு போதாமல், நிலைமை மேலும் ரசாபாசமாகிப் போனால்...?

அண்ணனது வீட்டில் இருந்தவரை, நாட்கள் சுவையாய் இல்லாவிட்டாலும், ஓரளவு அமைதியாய் நகர்ந்தன. இங்கோ ஒவ்வொரு மணி நேரமும் வெவ்வேறு வளைவோடும் வருத்தத்தோடும் அல்லவா விரைகின்றன?

சொன்னது போலவே டவுனிலிருந்து திரும்பிய திலீபனின் கையில் ஒரு கடிதம் இருந்தது.

''இந்தத் தபால்காரனுக்கு விசேஷமாய் ஏதேனும் வேணுமே?''

''இருக்கே - உருண்டைக் கறிக் குழம்பு, கீரை மசியல்.''

''பிரமாதம். எனக்குச் சுடச்சுடப் படைச்சிட்டு உங்க கடிதத்தை வாசிக்கலாம்.''

பரிமாறிய பின் சகஜமாகவே அவனிடமிருந்து கடிதத்தை வாங்கினாள் என்றாலும் மனசு உதறியது. கவர் மேல் வெள்ளை நிறக் காகிதம் ஒன்றை ஒட்டி அதில் இவளது விலாசம் மீண்டுமாய் எழுதப்பட்டிருந்தது. அண்ணனின் கையெழுத்தில் -



பதட்டமாய்த் திறந்து அவசரமாய் வாசித்தாள்.

உள்ளே யிருந்தது அண்ணனின் எழுத்தல்ல. சற்றுக் கிறுக்கலாய் அடித்தல், திருத்தலோடு - கடிதத்தின் இறுதியை நோட்டமிட்டவளின் நெஞ்சு ஒரு கணம் நின்று பின் எகிறியது

நிறையக் காதலுடன் ராஜேஷ்!

அண்ணனின் கைக்குப் போய், கடிதம் இங்கு அனுப்பப் பட்டிருக்கிறது. ஆக, இந்த ராஜேஷிற்கு இவளது விலாசம் தெரியாது. எனினும் 'உன்னை நேசிக்கிறேன். பார்க்காமலே பரவசமாகிக் காதலிக்கிறேன். பார்த்துவிடத் துடிக்கிறேன். என் மோதிரம் உன் விரலில் கிடக்கும் நினைப்பில் மகிழ்கிறேன்... உன் அண்ணி நம் கல்யாணத்தில் ஏதோ தாமதம் என்று சொல்வதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை. சோதிக்காதே, செல்லம்... உன் நினைப்பில் தவித்துத் தூளாகிக் கொண்டிருக் கிறேன்... சந்தித்து நேரில் முத்தமிட...''

அந்தப் பிதற்றலைத் தாள முடியாமல் கடிதத்தைக் கசக்கிச் சுருட்டினாள்.

''காதல் கடிதம்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். இது ஊடல் கடிதம் போல!'' குதர்க்கமாய்க் குத்தியது பிரவாகனின் குரல்.

## 15



''ப்ரீத்தி! உனக்குப் போன்!''

உருகிய வெண்ணெயில் இடக் கறிவேப்பிலையை உருவிய நேரம் அழைப்பு வந்தது. காஸ் அடுப்பின் காதைத் திருகி விட்டு ஓடினாள்.

யாராய் இருக்கும்?

அண்ணனா அல்லது அந்த முகம் தெரியாத ராஜேஷா

கலக்கத்துடனேயே கருவியைக் காதுக்குக் கொடுத்தாள்.

''ஹலோ?''

''ப்ரீத்தி, அண்ணன் பேசறேம்மா.''

நிம்மதியாய் ஒரு பெருமூச்சு விட்ட பிறகே, ''அண்ணா'' என்றாள்.

''எப்படிம்மா இருக்கே?''

''நல்லா யிருக்கேண்ணா!'' - பதிலளித்த குரல் உடைந்தது. சமாளித்து நலம் விசாரித்தாள்.

''இருக்கேம்மா... நீ நிம்மதியாய் இருந்தாச் சரி.''

''ஏன்... ஏண்ணா?''

''அண்ணிக்கு இன்னும் கோபம். ஆனா சமாளிச்சிட்டிருக்கேன் - ராஜேஷின் கடிதத்தை உனக்கு அனுப்பியிருந்தேனே...?''

''ம்ம் - கிடைச்சது.''

''என்ன எழுதியிருந்தான் பயல்... உன் அண்ணிக்கு இன்னும் அவன் மேலதான் நோக்கம்.''

''அந்தப் பேச்சே வேண்டாம்ண்ணா... ப்ளீஸ்.''

''நல்லதும்மா - எப்ப வீட்டுக்கு வர்றே?''

போனால் வரவேற்பு எப்படியிருக்கும் என்ற யூகத்திலேயே இவளுக்குச் சிலிர்த்தது.

''மூணு மாசமாகுமே...''

''அதற்குள் உனக்கு நல்ல மாப்பிள்ளை அமையணும்ங்கறார் சந்தானம் மாமா.''

''ரவி, ரேணு எப்பவாவது என்னைப் பற்றிக் கேட்பாங்களா?''



''தினம் பத்துத் தரமேனும் பேசுவாங்கம்மா. அண்ணன் மேல் கோபமில்லையே?''

''இல்லைண்ணா. அண்ணி மேலும் வருத்தமில்லை.'' இனி யார் மீது கோபப்பட்டு என்ன ஆகப் போகிறது?

''அந்த மோதிரத்தை ராஜேஷ் வீட்டாரிடம் திருப்பி அனுப்பியாச்சா?''

''உங்க அண்ணி தயங்கறா... அவளைப் பிலுபிலுன்னு பிச்சி எடுக்கறாங்க... உன்னைப் பார்த்ததால் ரொம்ப ஆசை.''

''உனக்கு ஏமாற்றமாண்ணா?''

''இல்லைம்மா - ரொம்ப சுளுவாய் எல்லாம் அமைஞ்சிருச்சேன்னு ஆரம்பத்தில் திருப்திப்பட்டேன். ஆனால் விவரத்தை நான் சொன்னதுமே சந்தானம் மாமா மும்பையிலுள்ள அவங்க நண்பர்களுக்கு ராஜேஷைப் பற்றிய விவரம் சொல்லி விசாரிக்கச் சொல்லியிருக்காங்க. வந்த தகவல் திருப்தியில்லை. பயல் படிக்கலை. தொழிலும் சுமார்தானாம்... குணத்தைப் பற்றி கேட்கா தீங்கன்றாங்களாம்...''

ப்ரீத்திக்கு ஞாபகம் வந்தது. மலேஷியாவில் தொலைபேசியில் பேசி ஏமாற்ற முக பாவனையுடன் மாமா இருந்தது...

தன்னைக் கண்டதும் பேச்சை நிறுத்தியது என்று... ஆக, இனி ராஜேஷுடன் தன்னை இணைக்க வற்புறுத்துவது அத்தனை லேசில்லை என்ற தைரியம் பிறந்தது.

''அங்கே எல்லாரும் உன்னிடம் நல்லபடி இருக்காங்களா?''

காட்டமான பிரவாகனின் முகம்தான் முதலில் நினைவிலாடியது. முன் தினம் வசந்தி போனில் பேசிய போதும் கூடத் தன்னிடம் எரிந்து விழுந்தானே.

'அக்கா கூட உன்னைப் பற்றிப் பிரமாதமாய்ப் புகழுறா எல்லாரையும் எப்படியோ மடக்கிடறே!'' கசப்பான சிரிப்புடன் தொடர்ந்தான். 'நானும் பத்து நாட்களுக்கு முன்னே உன்னிடம் இப்படி மடங்கியவன்தானே!' என்று.

ஆனால் அதை யெல்லாம் யாரிடமும் சொல்ல முடியாதே. ஆக, ''ஒரு குறைவுமில்லைண்ணா. வீட்டில் எல்லாரையும் அன்போடு விசாரிச்சேன்னு சொல்லு.''

உடன் பிறந்தவனோடு பேசியது பெரிய ஆறுதலாய் இருந்தது. மனதை அடைத்த பாரம் பாதியாய்க் குறைந்ததான நிம்மதி.

மரகதம்மாள் வாசிக்கக் கேட்ட ஒரு காதல் கதையை உற்சாகமாகவே வாசித்தாள். முதியவளின் அத்தனை புலன்களிலும் புத்தியே அதி கூர்மையாய் இருந்தது. ஆகக் கேட்டு விட்டாள்.

''என்னம்மா ப்ரீத்தி - முகத்துல தனி உற்சாகம் தெரியுது?''

''அண்ணனோடு பேசினேன்லம்மா.''

''மனசு லேசாயிருக்கும்.''

வியப்புடன் தலையாட்டினாள்.

''என்னிடமும் மனசு திறந்து பேசலாம்மா நீ. அனுபவம் பெரிய ஆசானில்லையா? எண்பது வயசுக்கு நிறையக் கற்றுத் தந்திடும்.''

''ம்ம்..'' தன் சேலை முந்தானை நுனியை முறுக்கினாள். ஆனால் மனசு முறுக்கவிழ்ந்து கொண்டிருந்தது.

''பெத்தவங்க இறந்துட்டதால் நான் அண்ணன் குடும்பத்தோடு தங்கியிருந்தேன்..'' என்று ஆரம்பித்தவள் ராஜேஷின் உறவினர்கள் வந்து, திடும்மென நிச்சய மோதிரத்தைப் போட்டதையும் லேசாகச் சொன்னாள்.



''ஆக, மோதிரம் திரும்பப் போயிடுச்சா?''

''அண்ணி தயங்கறாங்க போல... ஒரு தரம் இப்படித் தட்டிப் போனால் மறுபடி கல்யாணம் நிச்சயமாவது சிரமம்னு.''

''என்ன சிரமம்? அறுபது வருஷத்துக்கு முன்னமே கூட இது போல நடந்ததுண்டு. எங்க வீட்டுக்காரரின் தங்கை பேர் கமலினி - தாமரைப் பூ போலவே மிருதுவான பெண். எங்க கல்யாணம் முடிந்த மறு வருஷம் அவ கல்யாணமும் நிச்சயமாச்சு.''

''ம்ம்.''

சற்று நைந்த புத்தகங்களுக்குப் புது அட்டை போட்ட படி கவனித்திருந்தாள் இளையவள்.

''மேளம், மாலை, வைர மோதிரம்னு ஆரவாரமான நிச்சய விழா - முடிந்ததும் என் மூத்த நாத்தனார் கேலியாய்க் கேட்டார் பெண்ணிடம்,

'என்ன கமலி - பையன் எப்படி?'ன்னு.

''பையனோட பார்வை பிடிக்கலை!''ன்னுட்டா கமலி. பையனுக்குக் கொஞ்சமே கொஞ்சம் மாறுகண். பதினாறு வயசுப் பெண் அதுக்குத்தான் குறைப்பட்றான்னு பெரியவங்க சமாதானப்படுத்தினாங்க -

'அசடே, லேசாய் மாறுகண் இருக்கது அதிர்ஷ்டம்'னு. ஆனால் ஒத்த வயசுங்கறதால் கமலி பிறகு என்னிடம் மனசு திறந்து பேசினா - 'அந்த ஆளைப் பிடிக்கலை!'ன்னு அழுதா. பிறகு விசாரிக்க, பையனின் சபல புத்தி தெரிய வந்தது. ஜமீன் பரம்பரைன்னு நாங்க ஆசைப்பட, பயல் ஜமீன் வாரிசை வேலைக்காரி வயிற்றில் வளர விடுமளவு போயாச்சுன்னு.''

''ஐயையோ!''

''நிச்சயத்தை ரத்துப் பண்ண, மூணாம் மாசம் அவளுக்கு வக்கீல் மாப்பிள்ளை அமைஞ்சது... மேல் கோர்ட் நீதிபதியாய் ஓய்வு பெற்றார், அவர். பின்னாளில் நாலு பிள்ளைகளையும் பெற்று சௌபாக்கியமாய் வாழ்ந்தா கமலினி - ஆக, தப்புன்னு பட்டதுன்னா அதிலிருந்து தப்பிடணும்.''

''அப்ப நான் செய்தது தப்பில்லையே?''

''கல்யாண விஷயத்தில் போனால் போகுதுன்னு பிறர் திருப்திக்காகச் சம்மதிக்கக் கூடாதும்மா...''

அதுவரை அடைத்திருந்த கசடைப் பிடுங்கி எறிந்தாற் போல, இவளுக்குள் நிம்மதியாக, எண்ணங்கள் தெளிவாய் ஓடின.

''நன்றிம்மா... மனசு தெளிவாயிருக்குது.''

''வேற?''

''வேற என்னம்மா?''

''எவ்வளவுதானா?''

''ஆமா..'' புரியாமல் விழித்தாள்.

''பிரவாகனைப் பற்றி ஒண்ணும் சொல்லலையே?''

''யார்... உங்க பேரனையா?''

''ம்ம்... அதே வசந்த பிரவாகனைத்தான் சொல்றேன். எல்லாரிடமும் வாய் கொள்ளாமல் சிரிப்பவன் முகம் உன்னைக் கண்டதும் முறைத்துச் சுளுக்கிக்கிறதே...''

இவளுக்கு உதறியது. இதென்ன அம்மா பெரியம்மா இத்தனை வெளிப்படையாய்ப் பேசுகிறாரே என்ற கூச்சம்... அச்சம்.

''அதான் சொன்னேனேம்மா... ஒரு கருத்தரங்கில் சந்திச்சோம்.''



''பழகியும் இருக்கணும்... அதில் ஏதோ உரசல்... அதான் இப்படிப் பூனையும் நாயுமாய்ப் பார்த்ததும் சிலிர்த்துக்கறீங்க.''

''ஐயோ... நான் இங்கே வேலை செய்றவ... அப்படியெல்லாம்...''

''போலி பவ்யம் காட்டாதே, ப்ரீத்தி குட்டி. அவனும் இப்படியே நழுவறான். என்னிடமும் எல்லாரிடமும் பாசமாய்ப் பழகும் நீ அவனிடம் முள்ளம் பன்றியாட்டம் சிலிர்த்துக்கற... அவனும்தான்... என்னன்னு புரியலை. புரியறது போலவும் இருக்குது... ஆனால்...''

''ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டதும்மா... இது அவரது வீடுன்றது தெரியாமல், சரியா விசாரிக்காமல்... அதான் சொன்னேனே... எங்க அண்ணி பார்த்த மாப்பிள்ளையிடமிருந்து தப்பும் அவசரத்தில் இங்கே தஞ்சமாயிட்டேன். இவளென்ன நம் வீட்டிலேங்கற காட்டம் அவருக்கு. எனக்கும் தர்ம சங்கடம்... இப்படி ஒரு தப்பான...''

''கடவுளின் திட்டம், தீர்மானம் எல்லாம் சரியானவை தான், ப்ரீத்தி... அவை தப்பாய்ப் போவதேயில்லை!'' - மிருதுவாய் முடித்தார் மரகதம்மாள்.

''முதலில் கை கழுவிடணும், விது... ஆச்சா? இப்ப ரெண்டு கோப்பை மைதாவை அளந்து எடு.''

ஏழு வயது வித்யா கவனமாய்ச் சொன்னதைச் செய்தாள்.

''நல்லது - இப்ப வினு அரை ஸ்பூன் உப்பை மாவில் சேர்ப்பியாம்.''

ஒன்னரைக் கோப்பை பால், ரெண்டு கரண்டி சர்க்கரை, 2 தேக்கரண்டி பேக்கிங் பொடி, இரு முட்டைகள், சிறிது

வெண்ணெய் எல்லாவற்றையும் மாறி மாறிக் கலக்க செய்தான்.

''கலந்த மாவு இப்படியே அரை மணி நேரம் இருக்கட்டும்.''

''பிறகு அப்படியே சாப்பிடலாமா?''

''இல்லை, குட்டி - தோசைக் கல்லில் மெத்துன்னு வார்க்கணும். எண்ணெய் வேணாம். திருப்பிப் போட்டால் பஞ்சாட்டம் வரும். வீரா தாத்தா கொண்டு வரும் தங்க நிறத் தேனில் தோய்ச்சுச் சாப்பிடணும்.''

''ஹை... இப்பவே.''

''லேசாய் மாவு பொங்கணுமே - அதுக்குள்ள குளித்துத் தயாராவீங்களாம்.''

தேனம்மாள் ஆச்சரியப்பட்டு அங்கலாய்த்தாள்.

''நானுந்தான் அரைச்சு வழிச்சு மெனக்கெட்டு தோசை வார்த்தேன். நீ நிமிஷமா இனிப்புத் தோசை தயாரு பண்ணிட்டியேப்பூ!''

''இதை பேன் - கேக் என்பாங்க, ஆயா. வெள்ளைக் காரங்க பலகாரம். விருந்தாள் வந்தா சட்டுனு செய்து பரிமாறிடலாம். கூட வாழைப்பழம் கூடப் பிசைந்து சேர்க்கலாம்.''

''நம்மூர் பணியாரங் கணக்கா... ஆனா இங்க திடீர்னு விருந்தாடி யாரு தாயி வர்றா?''

''அடடே தேனு... நீ பெரிய ஆள்தான் - எப்படி விருந்தாள் வரப் போறது உனக்குத் தெரிஞ்சது?''

ஆரவாரமாய் அங்கு வந்த பிரவாகன் கேட்க, மற்றவர்களுக்கு ஆவல்.

''யாரு தம்பி வராவ?''



''ரொம்ப முக்கியமான ஒரு ஆள்!''

''யாரு நம்ப பாப்பாவும் மாப்பிள்ளையுமா?'' கேட்ட நேரிலேயே அச்சமாய்ப் பிள்ளைகளைப் பார்த்த தேனம்மா,

''சரி - முதல்ல குளிக்கச் சொல்லுச்சே, பீத்தி - வாங்க, அப்புறம் பார்ப்போம்,'' என்றபடி குழந்தைகளோடு வெளியேறினாள். பெற்றவர்களின் நினைவில் பிள்ளைகள் அழ ஆரம்பித்து விடுவார்களோ என்ற பயம் அவளுக்கு.

தனியே விடப்பட்ட ப்ரீத்தி வழக்கம் போலச் சுத்தமான பாத்திரத்தையே எடுத்து அழுந்தத் தேய்க்கலானாள்.

''வர்ற விருந்தாளி யார்னு அறிய உனக்குமா ஆவலில்லை?''

''வருபவங்களுக்குச் சமைத்துப் போடுவதுதான் என் வேலை!'' என்றாள் முகம் நிமிர்த்தாமல்.

''முக்கிய நபர் என்றேனே...''

''நல்லது.''

''ரொம்ப அழகானவளும் கூட.''

இவளுக்குத் திடும்மென வியர்த்தது!

ஆக வருவது ஒரு பெண். மிக அழகானவள். இதயம் கோபமாய்த் துடித்தது.

''மாலினிக்கா வருவதாய்ச் சின்ன வாலுகளிடம் சொல்லியிருந்தால் ரெண்டும் குளிக்கக் கூடப் போயிருக்காதுங்க. அவ மேல் வெகு பிரியம்... ம்ஹூம் பிரமிப்பு எனலாம். அற்புதமான தோற்றம் மாலினிக்கு.. ஒவ்வொரு கோணத்திலும் அவளில் வெவ்வேறு நடிகைகளின் ஜாடை தெரியும்...''

''இந்தக் குறிப்புகள் எல்லாம் எனக்கு அவசியமில்லை அவங்க எதை விரும்பிச் சாப்பிடுவாங்கன்னு சொன்னால் செய்ய முயற்சிக்கறேன்,'' என்றாள் கடுகடுப்பாய்.

''எனக்குத் தெரிஞ்சு மாலினிக்கு உணவு மேல் தனி அக்கறை கிடையாது. தன் அழகு உப்பிவிடக் கூடாதுன்னு எதையும் அளவாய்த்தான் சாப்பிடுவா. அப்படிக் கவனமாய்ப் பராமரிக்க வேண்டிய தோற்றம். பாட்டிம்மா மாலுவை எப்படித் தெரியுமா கூப்பிடுவாங்க? அழகின்னு.''

அவனது உற்சாகம் கூடக் கூட இவளுக்கு எரிந்தது. ஆஹா... பளபளவென்று அசாதாரண அழகில் ஒரு பாவை வந்து விட்டாள் போலவோ? அதற்காகத்தானே ஐயா இத்தனை காலம் தவம் கிடந்தது!

வெறுப்பும் கோபமுமாய் அவள் கழுவி 'ணங்' என்று அவள் பலக்கவே வைத்த பாத்திரம் சற்று நசுங்கிப் போனது.

## 16



வானத்தையும் பூமியையும் கண்ணாடி இழைகள் போலக் குளுகுளுவென்று இணைத்தது மழை. நல்ல மழை என்று விட முடியாத இளம் தூறல். பூவின் மென்மையுடன் அது மண்ணை நனைக்கப் புழுதியடங்கிப் புது வாசம் கிளர்ந்தது. ஜன்னல் கம்பிகளைப் பற்றியிருந்த ப்ரீத்தி மூச்சை ஆழ இழுத்தாள். மண்வாசனை உள்ளேறி மயக்கியது.

'கொடுத்துப் பெறுவதில்
இத்தனை சுகமா...
மழைத் துளி தந்து
மண் வாசம் பெற்றது,
குளிர்காற்று!' என்று சமீபத்தில் வாசித்த கவிதை வரிகளை உதடுகள் உச்சரித்தன... இரு நாட்களுக்கு முன்புதான் சற்று ஏக்கமாய் நினைத்தாள் - மழை நனைத்தால் தோட்டம் பசுமை கண்டு தழைக்குமே



என்று. தோட்டத்தை ஆளளவிற்கு ஆட்கள் பராமரித்தார்கள் என்றாலும் ஒரு மணி நேர மழை செய்யும் மாயத்தை நூறு மனிதக் கரங்களும் சேர்ந்து சாதிக்க முடியாதுதான்.

''அக்கா! எனக்கு ஜூஸ் வேணும்.''

''மழைக்கு இதமாய் சூப் போடவா?''

''உடனே வேணுமே!''

''முதல்ல வேண்டிய தண்ணீர் குடி - நீயும் தம்பியும் முகம் கழுவிட்டு சுத்தமாய் வர்றதுக்குள்ளே சூப் தயாராகிடும்.''

சமையலறை ஜன்னலின் வழியே தெறித்த சாரலை, வந்த வாசனையை அனுபவித்தபடி சமைக்கலானாள். சற்றைக்கெல்லாம் சூப்பின் வாசனை மற்றதை மீறியது.

எல்லோருக்கும் பரிமாறித் தானும் பருகியவள் குளித்த குழந்தையாய் நின்ற தோட்டத்தைச் சீராக்க முனைந்தாள்.

''என்னக்கா செய்தீங்க?''

''களை பிடுங்கறேன்.''

''நானும்...''

''இப்பதானே சுத்தமாய், பவுடரெல்லாம் போட்டு வந்தீங்க. நாளை காலைல இதைச் செய்யலாம். பிறகு குளிச்சுடலாம். நேற்றுப் படிச்ச பாட்டை நாலு தரம் பாடிப் பாருங்க. மனப்பாடம் ஆயிடும்.''

பிள்ளைகள் அரை மனசாய் விலக, இவள் ஊறிக் கிடந்த களைகளை லாவகமாய்ப் பிடுங்கலானாள். குழைந்த சேற்றிலிருந்து அவை எளிதாய் வெளியேறின.

வேலை மும்முரத்தில் நெற்றியிலும் கன்னங்களிலும் புரண்ட கூந்தலைச் சேறு படிந்த புறங்கையினாலேயே ஒதுக்கினாள்.

அவ்வப்போது நெட்டி முறித்தபடி வேலை தொடர்ந்தது. இனி மீதியைத் தோட்டக்காரனை அழைத்து முடிக்கச் சொல்ல வேண்டியதுதான் என்ற அயர்வுடன் நிமிர்ந்தவளை ஒரு கரம் அழுந்தப் பற்றித் திருப்பியது.

ஒரு கணம் வெலவெலத்துப் போனாள்.

இவள் எதிரே ஆங்காரமாய் நின்றது பிரவாகன்தான்.

ஆனால் அவனது கோபத்திற்கான காரணம்தான் புரியவில்லை.

''ஏன்... என்னாச்சு?'' தடுமாறினாள்.

''அதையேதான் நானும் கேட்கிறேன்... ஏன் இப்படி இத்தனை அலங்கோலமாய் நிற்கறே?''

தன் தோற்றம் பற்றி மட்டம் தட்டியது இவளுக்கு மிக அதிகமாய் வலித்தது... ஏற்கெனவே தன் அழகில் குறைப்பட்டுக் குன்றிக் கிடப்பவளை இப்படி ஏன் கிளறுகிறான்?

''நான் அழகில்லை... அலங்கோலம்னு தெரிந்ததுதானே...'' என்றாள் கடுப்பாய்.

பிரவாகனின் புருவங்கள் ஏறி இறங்கின.

''விருந்தாளி வரும்போது இப்படியா மண்ணைப் பூசிட்டு நிக்கறது?''

அப்போதுதான் இவளுக்கு உறைத்தது. இன்றோ மறுநாளோ அந்த மேனா மினுக்கி வரக்கூடும் என்று வீட்டார் எதிர்பார்த்திருக்க, அதாவது அப்படி ஒரு எதிர்பார்ப்பைப் பிரவாகன் உருவாக்கியிருக்க, தனக்கு மட்டும் எப்படி மறந்தது...?

மழையின் சுவாரஸ்யத்தில், அதன் மூலம் செய்ய நேர்ந்த வேலையில் மூழ்க, வேண்டாதவை மறந்து போயின போலும்... தவிர குறிப்பிட்ட நேரம் எதையும் அவன் சொல்லவும் இல்லையே.



இன்னும் தன் புஜங்களை அழுத்தியிருந்த அவன் பிடியிலிருந்து திமிறினாள்... அவனும் தன் பிடியை உணர்ந்து அவளை விடுவித்தான். ஆனாலும் முகத்தின் கடுமை மாறவில்லை.

''போய்க் குளித்து உடை மாற்றிட்டு வா. மாலினி வந்தாச்சு.''

''முகம் கழுவிட்டுச் சமையலை ஆரம்பிக்கறேன்.''

''சொன்னதைச் செய்வதற்குத்தான் இங்கே சம்பளம்.''

பேச்சு சுருக்கெனக் குத்தியது.

''ஆக, சமைக்க வேண்டாமா?'' குத்தலாகவே கேட்டாள்.

''ம்ம்? மாவு இருக்குமே - ஆயா இட்லி ஊற்றட்டும் - கோழிக் குழம்பும் உண்டே - பிறகென்ன?''

''சட்னியும் காரட் அல்வாவும் செய்திடறேன்.''

''நான் சொன்னதை முதலில் செய், ப்ரீத்தி!'' அதட்டினான்.

''அதாவது குளித்து, உடை மாற்றி... அலங்காரமாய்...''

''சுத்தமாய் வா, போதும்... அழகு, அலங்காரமெல்லாம் மாலினி பண்ணிக்கறதுதான் - அவ முன்னால் நீ பரிதாபமாய்த் தெரிய வேண்டாமேன்ற அக்கறையில் சொல்றேன்.''

இவளுக்குப் பொருமியது.

வந்திருப்பவள் அதிரூப தேவதை... அவள் முன்பு போய் நிற்கவும் கூட அருகதை அற்ற குரூபியா தான்?

சமையலறைக்குள் புகுந்தவளைத் தொடர்ந்தான். தனியே நின்று கோபம் தீரப் பல்லையும் கூடக் கடிக்க விடாமல் ஏனிப்படித் தொடருகிறான்?

எரிச்சலாய் முறைத்தாள்.

''இங்கே ஏன் பொழுதைக் கழிக்கறே?'' முறைப்பாய்க் கேட்டான்.

''விருந்தாளிக்குத் தேநீர் தரணுமே. அதற்குத் தண்ணீரை வைக்கணும்.''

''ம்ம்..''

''நீங்க போய் அந்த அல... அம்மணியைக் கவனிங்க.''

சிறு தீயில் நீரை வைத்தவள், தன்னறைக்குப் போய்த் தன்னைச் சீராக்கலானாள்.

இதமான சீதோஷ்ணத்தில் உழைத்தது அவளது சருமத்தை மேலும் பொலிவாகத்தான் ஆக்கியிருந்தது.

ஆக, முகத்தைக் கழுவி, லேசாய் பவுடரை ஒற்றியவள், உதடுகளை மினுமினுப்பாய்க் காட்டும் இயல்புச் சாயமே தடவிக் கூந்தலைச் சீவிப் பின்னினாள் - உடுத்த கருநீலச் சைனா பட்டுப் புடவை மாலை நேரத்திற்குத் தோதாய் இவளது தோற்றத்தை எடுத்துக் காட்டியது.

நிறம் சற்று இருட்டடிப்பதாய்ப் பட, ஒரு முத்து மாலையையும் கழுத்தில் சேர்த்தவள், தேநீரைத் தயாரித்துக் கோப்பைகளுடன் முன்னறைக்குப் போனாள்.

பெரியம்மாவின் அறையிலிருந்து கசிந்த பேச்சும் சிரிப்பும் இவளது நடையைக் கட்டின.

பார்க்கவே விரும்பாத ஒன்றைக் காணப் போகும் வெறுப்பு உள்ளே அலையடித்தது.

வந்தவளுக்கு இப்படித் தொண்டூழியம் வேறு செய்ய வேண்டியதாயிற்றே என்ற கசப்பு.

விருந்தாளி தன்னை ஒரு வேலைக்காரி போல நடத்தி விட்டால் என்ன செய்வது என்ற பதட்டம்...

அந்த மாலினி எத்தனைதான் ரதியாய் இருந்தாலும், அதைத் தன் முகத்தில் காட்டிவிடக் கூடாது என்ற திண்ணக்கம்!



கதவு சொல்லி வைத்தது போலத் திறந்தது.

வேறு யார் - பிரவாகன்தான்.

''வா, ப்ரீத்தி... மாலினி உன்னைச் சந்திக்க ஆவலாய்க் காத்திருக்கிறாள்!'' என்று அறிமுகம் போலச் சொல்ல, அரைப் புன்னகையுடன் புதியவளிடம் திரும்பிய இவளது பார்வை அங்கேயே நின்று நிலைத்தது.

சிறுவர்களுக்குரிய அபார ஞாபக சக்தியோடு மறுநாள் விடிந்ததுமே வினு தோட்டத்தில் இருந்தான்.

''விருந்தாளி வந்திருக்காங்களே, வினு.''

''ஆமா.''

''அவங்களுக்கு நான் சமைக்கணுமே.''

''சமைங்க - இப்ப தோட்ட வேலை.''

''சரி.. நான் டீ, பால் எல்லாம் தயாராக்கறேன். அதற்குள் புல்வெளியில் கிடக்கற சருகுகளை வெளியே எடு. பிறகு புல்லை லேசாய் வெட்டிவிட்டால் வெல்வெட் போலாயிடும்.''

சிறுவன் வேலையில் இறங்க, திரும்பிய ப்ரீத்தி தன் பின்னே நின்றவரிடம் மோதி விட்டாள்.

''மன்னிக்கணும்.''

''நீங்கதான் என்னை மன்னிக்கணும். யாருக்கும் முதுகுக்குப் பின்னால் கண்கள் கிடையாதே!''

இதமாய்ப் பேசிப் புன்னகைத்தவளை மீண்டும் வெறித்தா[ள்]

ப்ரீத்தி. யப்பா... என்னவொரு அழகு இந்தப் பெண்[...]

வெறுமே கழுவியிருந்த முகத்திலும் அசர வைக்கு[ம்]

பேரழகு.

காலையின் இளமஞ்சள் ஒளியில் பட்டுச் சருமம் மின்[ன]

நீரோட்டமான உதடும் கண்களும் அசாத்யமாய்த் தகதகத்த[...]

''நீங்க ரொம்ப அழகாய் இருக்கீங்க...''

பாராட்டு தானாய் வந்தது.

''நன்றி, ப்ரீத்தி - நீங்களும்தான் - உங்க உழைப்பின் தோட்டம் அதிரம்யம் - அதை ரசித்ததில்தான் இங்கே நந்தி போல நின்றேன்.''

''நேற்று மழை பெய்ததில்லையா? அதான் களை யெடுத்தேன். பசுமையோடு சுத்தமாயும் தெரிய வந்தால்...''

''அதான் உங்களைப் பாராட்டறேன். ஆனால் எனக்கு இது போன்ற திறமைகள் இல்லை, ப்ரீத்தி. தோட்டத்தில் ஈடுபாடு, கைவேலை, சமைப்பதில் திறமை - எல்லாம் இருந்தால் இதைப் போன்ற பண்ணையில் திருப்தியாய் இருக்கலாம். ஆனால் எனக்கிங்கே மூன்று நாட்களுக்கு மேலிருந்தால் மூச்சு முட்டுது... பொழுது நகராத சலிப்பு...''

மெய்யான பரிதவிப்பில் அந்த அழகு முகம் வாடியதும் கூட ரசிக்கத் தக்கதாகவே இருந்தது.

''என்ன நீங்க? என்னைப் போலக் களை பிடுங்கி, இட்லி அவித்து, துவைக்க, துடைக்கப் பல பெண் களுண்டு... நாங்க இங்கே பொழுதை ஓட்டலாம்... ஆனால் உங்களைப் போல இத்தனை அம்சமான ஒரு பெண் இங்கு ஏன் அடைபடணும்?''

மாலினியின் முகம் சிவந்தது.

இவளுக்குப் புரியவில்லை - தனக்குள்ளே 'ஏனிந்த சங்கோஜம்?' என்ற கேள்வியோடு பேச்சைத் தொடர்ந்தாள்.

''நீங்க விளம்பரங்களுக்கு மாடலாய் இருப்பதாய்...''

''அப்பப்ப அதுவும் உண்டு... மற்றப்படி அலங்காரப் பொருட்களை விற்கும் ஒரு சின்னக் கடை வைத் திருக்கேன்.''



''உங்களைப் பார்ப்பவங்க நிச்சயம் அதை எல்லாம் வாங்கிடுவாங்க.''

மிருதுவாய் சிரித்த மாலினி - ''தவிர கடைக்கு வரும் பலரைச் சந்திக்க, பழகவும் வாய்ப்புண்டே. அது நான் ரசிக்கும் அனுபவம்.''

''ஓஹோ... அதான் உங்களுக்கு இந்தத் தனிமை சலிப்பாயிடுது.''

சந்திக்கும் முன்பே வெறுக்க வேண்டும் என்று தான் முடிவு செய்த ஒரு பெண்ணிடம் தான் இத்தனை சகஜமும் சிநேகமுமாய்ப் பேசியது, ப்ரீத்திக்கே ஆச்சரியம்தான்.

ஆனால் தான் பேரழகி என்ற கர்வமென்ன, எண்ணமும் கூட இல்லாது பழகிய மாலினி, இவளை ரொம்பவே கவர்ந்து விட்டாள்.

''வாங்க... டீ கலந்து தரேன்.''

''அருமையாய்ச் சமைக்கறீங்க. எனக்கும் சற்று சொல்லித் தரணும்.''

''அடடே - அந்தச் சிரமமெல்லாம் உங்களுக்கு எதுக்கு?''

''சமையலைச் சிரமம்னு நினைத்தால் இந்த எஸ் டேட்டில் நான் எப்படிக் காலம் தள்றது?''

தேனம்மாள் கலக்கித் தந்த தேநீரைப் பருகியபடி சமையலறையில் நின்ற பிரவாகனின் பார்வை நுழைந்த பெண்களில் பதிந்தது. முக்கியமாய் மாலினியின் மீது.

யோசனையான ஒரு பார்வை...

அந்தக் கணம் ப்ரீத்திக்குள் ஒரு வெளிச்சமடித்து விவரங்களைத் தெளிவாக்கியது.

பிரவாகனுக்கு மாலினியின் மீது காதல்!

ஆனால் இந்த வனவாசம் தனக்கு ஒத்து வராது என்று அஞ்சுகிறாள் மாலினி... ஆகப் பிரவாகனை மணக்க ஒத்துக் கொள்ள யோசிக்கிறாள்...

விஷயம் புரிந்ததும் -

'அடடே... இதுதான் விவரமா?' என்று மனம் நிம்மதி ஆகாமல் நெருப்பில் விழுந்து விட்டதைப் போல துடித்து வதங்கியது...

17



எலிஃபென்டா குகையின் சிற்பங்களை வாய் திறந்து பார்த்திருந்தது அச்சுற்றுலா கூட்டம். அவர்கள் பிரம்மாண்டமான ஆனால் நளினம் குறையாத கல் செதுக்கல்களை ரசிக்க, மற்றொரு சிறு கும்பல் பாறைக்கு முன் இடுப்பைச் சரித்து நின்ற அழகி சாதனாவை மட்டுமே குறி வைத்திருந்தது.

''இன்னும் இடுப்பைக் கொஞ்சம் ஒடிச்சு நில்லேன், சாதனா...''

காமராவின் பின்னாலிருந்தவன் ஹிந்தியில் கெஞ்சினான்.

''இன்னும்னா எப்படி?'' வழுக்கும் பாறையில் எரிக்கும் வெயிலில் நின்றவள் சிடுசிடுத்தாள்.

''இதோ... இப்படி...'' அவன் கோணியதில் அவளுக்குச் சிரிப்பு வந்தது. 'இப்படி எலும்பொடிந்த கோழி போல நின்றால் என் பிழைப்பு போச்சு!' என்று எண்ணியபடி மேலும் ஒயிலாய்ச் சரிந்தாள்.

''ப்பிரமாதம்.''

இன்றுதான் சற்று முக்கிய படங்களைச் சுயமாய் எடுப்பதற்கான சந்தர்ப்பம் ராஜேஷிற்கு வாய்த்திருந்தது. இதுவரை காமராவின் கோணம் பார்த்து, படத்திற்கான பின்னணியைப் பிறர் கேட்கும்படி அமைப்பதிலேயே திருப்திப்பட வேண்டிய நிலை.

இஷ்டத்திற்கு ஆள்காட்டி விரலால் தட்டித் தள்ளியவன், இந்திய தங்கத் தாமரை விருதையே வாங்கிய



இயக்குநரின் பெருமையோடு மாரை நிமிர்த்தி நடந்தான்.

மும்பையிலிருந்து சற்றுத் தள்ளி அமைந்த இந்தச் சிற்பத் தீவில் அழகிகளை நிறுத்தித் தன் அடுத்த விளம்பரத்திற்கான படங்களைக் கேட்டிருந்தது ஒரு நவுளிக் கடை.

இந்த வேலையைச் செய்ய வேண்டிய சர்மாவின் தாயாரின் உடல்நிலை மோசமாகி விட, தனக்கு அதிர்ஷ்டம் அடித்த குஷியில் துள்ளிக் கொண்டிருந்தான் ராஜேஷ்.

படப் பிடிப்பு முடிந்து, உபகரணங்களுடன், குழுவினரும் படகில் ஏறினர்.

கடலின் அலைகளுக்கு ஏற்ப ஆடியது அந்த இயந்திரப் படகு. சாதனாவிற்கு முன்பே ஏறிவிட்ட ராஜேஷ், கை நீட்டி அவளுக்கு உதவும் சாக்கில் கைப்பற்றி இழுத்த பின்னும், அவளது கையை விடவேயில்லை.

அருகே கோந்து தடவிய தினுசில் ஒட்டிக் கிடந்தவனை அவளும் பொருட்படுத்தவில்லை.

மும்பையின் முன்னணி மாடலாகத் துடித்துக் கொண்டிருந்த அவளுக்கு இந்த ஒட்டல் உரசலெல்லாம் ஒன்றுமே யில்லை. ஆனால் ராஜேஷின் விரல் தன் இடுப்பில் ஊர்ந்த போது, ஒரு புழுவைப் போல அவனைப் பார்த்தாள்.

அவளது கொடி உடலின் அழகை, ஒயிலை, அது வரைக்கும் காமெராக் கண்ணின் வழியே வித விதமாய்க் கண்டு வெறியேறின அவனுக்கு அதொன்றும் உறைக்க வில்லை!

''என்ன சொல்லு... உன் அம்சமே தனி, சாதனா... சீக்கிரம் நீதான் மும்பையில் முதன்மை மாடல்... பார்!'' - ஆருடம் சொன்னான்.

அதில் அவளது எரிச்சல் சற்றே தணிந்தது.

''புகழ் ஒரு போதைதான்... உச்சிக்குப் போகும்வரை உலுக்கியெடுக்கும் வெறி அது...'' என்றாள் மெள்ள.

''எல்லாருமா அவ்வளவு சாதிக்க ஆசைப்படக் கூடும்? அதற்கும் தகுதி வேணுமில்லையா? எனக்கும் முன்னணிக்கு வரும் ஆசையுண்டு, சாது...''

''வாழ்த்துக்கள்!'' - என்றவள் படகின் இயந்திரம் கிழித்துத் தள்ளிய நுரை நீரையே பார்த்திருந்தாள்.

''எனக்குக் கூடிய சீக்கிரம் பெரும் பணம் வரும், சாது... அதில் ஒரு விளம்பர நிறுவனம் ஆரம்பிக்க நினைக்கறேன்.''

அவளது மை விழிகள் மெள்ள இவன் புறமாய்த் திரும்பின.

''அப்போது என் நிரந்தர நாயகி நீதான்!'' வழிந்தான்.

அவளது உதடுகளில் புன்னகை.

''கடனில்லாமல் சொந்தப் பணத்தில் நிறுவனத்தை ஆரம்பிப்பதால், சலுகையான கட்டணத்தில் வேலை செய்து தருவேன் - ஆக, நிறைய வாய்ப்புகள்... அத்தனையிலும் உன் முகம். இந்த வளைவான உடம்பு.''

இப்போது அவன் புறமாய்ச் சரிந்தாள்.

அவனது விரல்களுக்கு இடமளித்தது அவள் இடை....

**தா**ய் முனகியபடி பரிமாறிய உணவை வளைத்துக் கட்டிச் சாப்பிட்டான் ராஜேஷ்.

''ஏம்மா, கறியை இத்துனூண்டு வைக்கறே?''

''எடுத்ததே கால் கிலோதான்... அதுக்கே எண்ணெயும் வெங்காயமும் சேர்த்து அறுபது ரூபாயாயிடுச்சு.''

''தரித்திரம் புடிச்ச வீடு.''



''அது தீர ஒரு தேவதை வரப் போறாள்னு நினைச்சால்... அதுவும் இல்லைன்னு போச்சு.''

''அதெப்படிப் போகும்? அந்த ப்ரீத்தி எனக்குத்தான்.''

ஏப்பத்துடன் கை கழுவ எழுந்தான்.

''இன்னைக்கு விமலி... அதான் அந்த ப்ரீத்தியின் அண்ணிக்காரி போன் செய்தா. அங்கே யாரும் சரியறது போலில்லையாம். உனக்குப் படிப்பு, சம்பாத்ய மெல்லாம் போதாதுங்கறானாம் அண்ணங்காரன்... ஆக பொண்ணையும் சீராய் வர வேண்டிய லட்சங்களையும் மறந்துட வேண்டியதுதான்... நினைச்சதை விடவும் அவளுக்குக் கூடவே சொத்து இருக்கும் போலடா...''

இருவரின் கண்களிலும் பேராசையின் பளபளப்பு...

''கவலைப் படாதம்மா. பொம்பளையை எப்படி மடக்கணும்றது எனக்குத் தெரியும்!'' சாகசம் பேசினான்.

''போட்ட மோதிரத்தையும் நமக்கே திருப்பிடச் சொல்றானாமே அவ அண்ணன்?''

''நம்ப அக்கா பிச்சைக் காசுல எதையோ வாங்கிப் போய்ப் போட்டிருக்குது. வைரமாய்ப் போட்டிருந்தால் மீனு சிக்கியிருக்கும்.''

''வைரத்தைத் தாராவிச் சந்தையில் கூறு கட்டி விக்கறாப் போல பேசறே?''

''போலியைப் போட்டாலும் பேச்சில மினுக்க வேணும் - அதெல்லாம் எந்திறமை - அந்த ப்ரீத்தியின் விலாசத்தை விசாரிச்சுச் சொல்லு.''

''சொன்னா?''

''அவளை இங்கேயே இழுத்து வந்துடறேன். பிறகு அவ காசுலே ஒரு கிலோ கறியாகவே வாங்கலாம்.

அவளையே அதை வறுத்தும் தரச் சொல்லி நாம குஷாலாய்ச் சாப்பிட்டுத் தீர்க்கலாம்!''

அட்டகாசமாய்ச் சிரித்தான் ராஜேஷ்.

''நீ இங்கே அடுப்படியில் வறுபட்டு ஆக்கிப் போட, அதை நாங்க குஷாலாய்ச் சாப்பிடுவதாய் நாடகம் காட்ட வேணுமா, ப்ரீத்தி?''

சுள்ளென்று வந்தது கேள்வி.

சாம்பாரை உப்புப் பார்த்து இறக்கியவள், காய்கறியை வதக்க, வாணலியை அடுப்பில் ஏற்றினாள்.

பளிச்செனத் தோளைப் பற்றித் திருப்பினான்.

சலனமற்ற அவளது முகத்தைப் பார்த்ததும் சுருதி சற்று இறங்கியது.

''தேனம்மா மீதியைப் பார்க்கட்டும். நீ உடை மாற்றிட்டு முன்னறைக்கு வா!'' உத்தரவிட்டான்.

''வந்திருக்கும் விருந்தாளி உங்களைப் பார்க்க, பழக வந்திருக்க, நான் எதற்கு இடையே?''

''இருபத்து நாலு மணி நேரமும் அவளோடு நான் மட்டுமே பேசிப் பழகணும்ற பேராசை எனக்கு இல்லையே...''

''ஐந்து நிமிஷத்தில் வர்றேன்.''

''உடையை மாற்றிட்டே வா!'' - என்றான் கறாராய். முதலாளி என்றாலும் இதில் எல்லாமா மூக்கை நீட்டுவது என்று காரமாய்ப் பொருமினாள். நட்சத்திர ஹோட்டல்களிலும் உயர்தர அலுவலகங்களிலும் வரவேற்பாளராய் நிற்கும் பெண்ணை வேணுமானால் அதன் அந்தஸ்திற்கு ஏற்ப அலங்காரமாய் நிற்கச் சொல்லலாம். இப்படிக் காடு போலிருக்கும் இடத்தில் சமைப்பவளுக்கு எதற்குத் தளுக்கும் மினுக்கும்!



முறுமுறுத்தபடியே உடுத்தியிருந்ததைக் களைந்தவள் ...க்கு ஊற்றினாள். அரக்கில் வெண்மலர்களைத் ...து போன்ற ஜார்ஜெட் சேலையைச் சுற்றி, ...லைச் சிக்கெடுத்துத் தளரப் பின்னியபோது, ...ளம் மாமியின் ஆலோசனை ஞாபகம் வந்தது.

அதன்படி சற்று அகன்ற, கெம்பும் முத்துமாய்க் கலந்த ...லைப் போட்டவள், அதற்கேற்ப முக அலங் ...த்தையும் கூட்ட, தன் தோற்றம் வசீகரமாய் ...ப்பதாகவே பட்டது.

ஆனால் மரகதம்மாளின் அறையை நெருங்கியவளின் ...கள் பின்னின - சம்பளத்திற்கு வந்த தான் இப்படி ...க்கி வர வேணுமா என்ற நெருடல். அறைக்குள் நுழைந்தவளுக்கு அது அதிகமும் ஆனது... காரணம் ...வாகனின் பார்வை - தன்னையே ஏனிப்படி மொய்க் ...றது அது? அதை அங்கிருந்த பிறரும் கவனித்து விடுவார் ...ளோ என்ற கூச்சம்... அறையை நேர்படுத்தும் சாக்கில் இங்குமங்குமாய் நடந்து சமாளித்தாள்... எனினும் நிழல் போல அவனது பார்வை இவளைத் தொடர்ந்தது.

தன் தோற்றத்தை மாலினியின் பேரழகோடு ஒப்பிடுகிறானா... அல்லது மாலினியின் தோற்றத்தோடு ப்ரீத்தியைப் போல மாடாய் உழைக்கக் கூடிய ஒரு பெண் தனக்குக் கிடைக்காதா என்ற ஏக்கமா?

புத்தகங்களை அலமாரியுள் அடுக்கியவளின் பின்னே வந்து நின்றவன் மெதுவாய்ச் சொன்னான்.

''உழைப்பும் கூடப் பெண்ணைப் பொலிவாக்கவே செய்யுது... ம்ம்?''

''பொலிவா? நான் சாதாரணமானவளாச்சே!'' இவளது பதிலடி புரியவில்லை போலும்... புருவங்கள் சுருங்கப் பார்த்திருந்தான்.

''பெண்ணின் பெரிய பலவீனம் இது.''

''எதுவாய் இருந்தாலும்... அது படைத்தவர் மேல் போட வேண்டிய பழி.''

''அதெப்படி?''

''ஒவ்வொருவரையும் விதவிதமாய்ப் படைத்தவர் அவர்தானே?''

''இல்லையே... பெண்கள் எல்லாரும் இந்த விஷயத்தில் ஒன்று போலல்லவா இருக்காங்க.''

''என்ன... எதைச் சொல்றீங்க?''

''எது பற்றி என்று புரியாமலேயா பதிலும் தந்தாய்?''

கடுப்பாகத்தான் இருந்தது. ஒவ்வொரு முறையும் தன்னை மட்டம் தட்டி விடுகிறானே...

மனமிரங்கியது போல விளக்கினான்.

''பலவீனம்னு நான் குறிப்பிட்டது - தன் அழகைக் காண்பவர் எல்லோரும், முக்கியமாய் ஆண்கள் பாராட்டித் துதிபாட வேண்டும் என்று பெண் குலம் விரும்புவதை!''

இவன் என்னதான் சொல்கிறான்?

நீ அழகிதான் என்றா அல்லது அழகி என்று நான் உன்னை அழைக்க ஆசைப்படுகிறாய் என்றா?

''பொறுப்பற்ற பெண் ஒருத்தி பண்ணையில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறாளே என்ற பதட்டத்தில்தான் ஓடி வந்தேன்... வந்து பார்த்தால் நீ...! ஆனால் நேரில் வேலை மோசமில்லைதான்.''

போனால் போகிறது என்ற ரீதியில் வந்தது அவனது பாராட்டு.

''பார்க்கும் முன்னமே என்னைப் பொறுப்பற்றவளாய்க் கருதக் காரணம்?''



''வந்ததுமே சுறுசுறுப்பாய் வினுவைத் தொலைத்து விட்டாயே. பிள்ளைகளைப் பாதுகாப்பாய்ப் பராமரிப்பது தானே உன் முக்கிய வேலை.''

'ஆராயாமல் அபத்தம் கூற வேண்டாம், அரசே!' என்ற பாணியில் முழங்கத்தான் ஆசை... ஆனாலும் இவள் முழங்குவதை நம்பி விழுங்கும் ரகமில்லையே அவன்!

ஆகப் பேசாமல் மரகதம்மாளின் அருகே போய் நின்றாள். அங்கே மாலினி வசந்தியின் கணவனின் நலம் பற்றி விசாரித்துக் கொண்டிருந்தாள்.

''திலீபன் மட்டும் உதவலைன்னா சேகரின் உயிருக்கே ஆபத்துதான்.''

''அவர் ஆரோக்கியமானவர் என்பதால் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போனது. எஸ்டேட்டில் வசித்து நோய்வாய்ப்படும் முதியவர்கள், குழந்தைகள் பாடு கஷ்டம்தான்... இங்கேருந்து கீழே போகும்வரை அவங்க தாக்குப் பிடிக்கணுமே...''

தேனம்மா, மாலினியின் பேச்சைப் பலக்க ஆமோதித்தாள்.

''ஆமாம்ப்பூ - முன்னேயிருந்த மானேசரு குழந்தை இப்படித்தான் போற வழியிலேயே செத்துப் போச்சு... மூளைக் காய்ச்சலாம்.''

''உலகையே காணாமல் போகிற சிசுக்களும் உண்டு.''

''என்ன சொல்றீங்க, மாலினி?''

''கர்ப்பத்திலிருந்து வெளியே வராமல் இறந்து போகும் சிசுவும். இதெல்லாம் இந்த எஸ்டேட் வாழ்வின் கொடுமைங்க... எலும்பே முறிந்தாலும் அந்தக் கடும் வலியோடு சில மணி நேரம் பயணித்த பிறகுதான் சிகிச்சை கிடைக்கும்.''

ஆத்திரத்துடனேயே மாலினி பேசுவதாய்ப் பட, நழுவினாள், ப்ரீத்தி.

''நான் எல்லாருக்கும் ஸூப் எடுத்து வரேன்!'' - என்றபடி.

''ஹை... என்ன ஸூப்க்கா?'' - வினு கேட்க,

''நீயே கண்டுபிடிடா... அன்னைக்கு பீட்ஸாவை மோப்பம் பிடிச்சுதானே பரணிலிருந்து கீழே இறங்கினே!'' - சீண்டினாள் விது.

''இதென்ன கதை?''

வினு காணாமல் போனதையும், பின் பீட்ஸாவை மோப்பம் பிடித்து வந்து சேர்ந்ததையும் ஆளாளுக்குச் சிரித்தபடி சொல்ல, மறுபடி பிரவாகனின் பார்வை இவளில் ஊர்ந்தது.

அது சொன்னது என்ன?

''நீ இங்கு வேலையில் சேர்வதற்கு முன்பே பயல் காணாமல் போய் விட்டான் போலவே!'' என்பதா?

மற்றொரு செய்தியும் அவன் முகத்திலிருந்ததோ...

'உன்னைப் பொறுப்பற்றவள் என்று எண்ணி மட்டம் தட்டியதற்கு மன்னித்துக் கொள்!' என்றா..?

அவனாவது... மன்னிப்புக் கேட்குமளவு இறங்குவதாவது... இப்படி நப்பாசை எல்லாம் கூடாது என்று தன்னையே கண்டித்தபடி அடுத்த வேலைக்குள் இறங்கினாள் ப்ரீத்தி.

## 18



ஓவியம் போல இருந்தார்கள், அந்த இரு பெண்களும். மரகதப் புல்வெளியின் நடுவே கீறிய வகிடு போல ஓடியது நீரோடை - அதனருகே ஒருக்களித்துப் படுத்தும், சரிந்தும் கிடந்த ப்ரீத்தியும் மாலினியும் அந்திச் சூரியனின் ஒளியில் கந்தர்வ கன்னிகைகளைப் போலிருந்தனர்.



மனம் விட்டுப் பேசியதால் வளர்ந்த தோழமை அவர்களை நெருக்கியிருந்தது. ஓடையின் மறு பக்கம் குழந்தைகள் விதுவும் வினுவும் கூழாங்கற்களை வெவ்வேறு வடிவங்களில் அமைத்து விளையாடியபடி இருந்தார்கள். சதுரம், வட்டம், முக்கோணம் என்று மாறி மாறி அமைத்து அதில் லயித்திருந்த அவர்களின் அருகே அமர்ந்திருந்தது ஒரு நாய்.

''நிறைய அமைதி கலந்த அற்புதச் சூழல் இது, இல்லையா மாலினி?''

''குரைக்கிற நாய் கடிக்காது.''

பிடுங்கிய புல்லின் நுனியைச் சுவைத்தபடி மாலினி சொன்னது ப்ரீத்திக்குப் புரியவில்லை. இருவரும் ஒருமையிலேயே விளித்துப் பேசவும் ஆரம்பித்திருந்ததால் உரிமையாய்க் கேட்டாள்.

''என்ன சொல்றே?''

''இந்த அமைதியை நம்பாதேங்கறேன். குரைக்கும் நாயால் ஆபத்தில்லை. அமைதியாய் முறைக்கும் நாயிடம்தான் அதிஜாக்ரதையாய் இருக்கணும். அதே போலத்தான் இந்த அமைதியான இடமும்.''

''ஏன் எஸ்டேட்டை இவ்வளவு வெறுக்கறே, மாலினி?''

''என்னைப் பெற்றவங்க இப்ப உயிரோடு இல்லைங்கறது.''

''ம்ம். சொன்னே, நானும் அநாதைன்னு தெரிஞ்சதும் அது பற்றிப் பேசினாய்... என்னதான் அண்ணன், அண்ணி இருந்தாலும். பெற்றவங்க இல்லாதது பெருங்குறைதான். வேறு யாருடைய அன்பும் ஈடு செய்ய முடியாத குறை.''

''பருவ வயசில் சரியான துணை அமைந்தால்... அதாவது அமைந்ததும் உனக்கு இந்த வருத்தமெல்லாம் போயிடும், மாலினி.''

''ஆனால்... இந்த இடம்.. இப்படியொரு எஸ்டேட்டில் வாழும் தனிமை வாழ்வு எனக்கு வேண்டாமென்பதில் நான் உறுதியாய் இருக்கிறேன்.''

''முன்னை விட, இப்போது தகவல், மற்ற வசதிகள் கூடியிருக்கே, மாலினி.''

கேட்டவள் முகத்தில் ஒரு கசந்த புன்னகை படர்ந்தது.

''செல்வா - இங்க வா!'' குரலெடுத்து அழைக்க, குழந்தைகளைக் காவல் காப்பது போல இருந்த நாய் விசுக்கென எழுந்து ஓடி வந்தது.

''இங்கே தொலைபேசி வசதி உண்டு என்றாலும் அடிக்கடி தொடர்பு அறுந்து போகும். 'செல்' மூலம் தொடர்பு கொள்ளவும் வாய்ப்பில்லை. ஆக இங்குள்ளவர்கள் தகவல் அனுப்புவது இந்த செல்வா மூலமாய்த்தான்.''

''அதெப்படி?''

''அப்படித் திகைக்காதே - செல்வாவால் பேச முடியாதுதான். ஆனால் தகவலை எடுத்துட்டுப் போவான். இவன் கழுத்துப் பட்டை, வளையத்தில் நாம் தகவலை எழுதிச் சுருட்டி வைக்கணும். செய்தி போய்ச் சேர வேண்டிய ஆளின் ஒரு பொருளை மோப்பம் காட்டிட்டால் போதும்... கொண்டு போய்ச் சேர்த்திடுவான்!''

இவர்களின் பேச்சு புரிந்தாற் போல அருகே சன்னமான வாலாட்டலுடன் நின்ற நாயின் தலையை வருடியபடி வியந்தாள்.

''சரித்திர காலத்திற்குள் போயிட்டது போல் இருக்குது. அன்னம், புறாவிற்குப் பதிலாய்ச் செல்வா!''

''ம்ம்... இதுவேனும் பரவாயில்லை. பக்கத்தில் சில மலைச் சரிவுகள் கன்னிக் கருக்கோடு உண்டு. அதில் விவசாயம் செய்ய வசந்திற்கு ஆர்வம்.''



''ஓ... அதான் மலேஷியாவில் அதற்கான பயிற்சிக்கு வந்தாரா?''

''ம்ம்... உன்னிடமும் எல்லா விவரமும் சொல்லிட்டாரா?''

''இல்லல்ல... நீங்க உங்க விஷயத்தைச் சொல்லுங்க.'' மழுப்பினாள் ப்ரீத்தி.

''இத்தனை தனிமையான இடத்தில் வாழ எனக்குப் பிரியமில்லை என்பதை விடப் பயம், ப்ரீத்தி. எங்கப்பா அம்மா இறந்த விதம் அப்படி...''

உதட்டைக் கடித்தபடி சிலுசிலுவென்று ஓடிய நீரோடையையே வெறித்திருந்தாள், மாலினி.

''அப்பாவும் ஒரு பெரிய எஸ்டேட்டை நிர்வகித்தவர்தான் - வட இந்தியாவில். மொழி புரியாத ஊரில் தனிமையும் சேர, அம்மா தவித்திருப்பார்கள் என்றாலும் அப்பாவுக்காக எதையும் பொறுத்துக் கொள்ளும் பண்பு அவர்களுக்கு... அப் பெரிய பண்ணை பங்காளிச் சண்டையில் சிக்கியிருந்த சமயம் அது. இரண்டு கோஷ்டிகளுக்கும் இடையே கடும் பகை. அப்பா தேயிலை எஸ்டேட்டைக் கருத்தாய்க் கவனித்ததில் பெரும் லாபம். ஆனால் அதுவே எரிந்த பகையில் எண்ணெயை ஊற்றி விட, கண் மண் புரியாத ஆத்திரத்தில் எஸ்டேட் மானேஜரின்... அதாவது அப்பா இருந்த வீட்டிற்குத் தீ வச்சுட்டாங்க...''

''ஐயையோ...!''

''வீட்டின் கதவுகளை மூடித் தீ வைக்க, உன்னைப் போல, அம்மாவும் அப்பாவும் 'ஐயோ'ன்னு அலறினது கூட யாருக்கும் கேட்கலை! அப்போது சென்னை கல்லூரியில் மாணவி நான். தகவல் கிடைத்து அஸாம் போய்ச் சேர்ந்த எனக்குக் காணக் கிடைத்தது - அவர்களைப் புதைத்த இடத்தைத்தான்...''

''கடவுளே!'' அரற்றலுடன் மாலினியின் கைகளை பரிவாய்ப் பற்றினாள் மற்றவள்.

இருவருக்குமே உடம்பு மெல்ல நடுங்கியது.

''ஆக, இந்தத் தனிமையும் பசுமையும் எனக்கு அழகாய்ப் படலை. அகோரப் பசியோடு தனித்து நிற்கும் அரக்கன் போலவே தோன்றுது.''

இப்போது ப்ரீத்திக்கு மாலினியின் வெறுப்பு புரிந்தது. ஆனால் புரியாத விஷயமும் இருந்தது. பிறகேன் பிரவாகனும், அவனது பாட்டியும் கூட மாலினியைச் சற்று அதிருப்தியுடன் நடத்துகிறார்கள்?

''ஏன் மாலினி... வசந்திற்கு இதெல்லாம் தெரியுமில்லையா?''

''முழுக்கத் தெரியும். நாங்க குடும்ப நண்பர்கள் என்பதால் வசந்தனின் குடும்பமும் மேஜர் துரையும் தான்...''

''அதாவது திலீபனின் அப்பா?''

''ஆமா - எல்லாருமாய்த்தான் அக் கொடூர இழப்பில் எனக்குத் துணையாய் நின்றார்கள்.''

''தெரிந்துமா...'' என்று ஆரம்பித்துத் தொடராமல் விட்டாள், ப்ரீத்தி.

''தெரியும்... ஆனால் புரியலை. கடந்ததை எண்ணிப் புலம்பறேன் என்று நினைக்கறாங்க. அதிலும் வசந்திற்கு ஒரு சிறந்த முன்னுதாரணப் பெண்மணி வேறு வீட்டில் உண்டே...'

கேலியும் கசப்பிலுமாய் மாலினியின் உதடுகள் மடிந்தன.

''யார்... மரகதம்மாவைச் சொல்றியா?''



''வேற யாரு? பதினெட்டு வயதில் திருமணமா அறுபத்துச் சொச்ச வருஷங்களை இந்தக் காட்டில் வெற் கரமாய் நடத்தி விட்ட பெண்களின் திலகம் அவர்!''

''அவங்களுக்குப் பாசமான கணவர் அமைந்தத நிறைவாய் வாழ்ந்துட்டாங்க - அதே போல உனக்கு அன்பான துணை அமைந்தால்...''

அவசரமாய் எழுந்தாள், மாலினி.

''இருட்ட ஆரம்பிச்சிடுச்சு... வீடு திரும்பலாமா''

அங்கு வாழ்வது பற்றி மாலினி பேசவும் வி பாததைப் புரிந்த மற்றவளும் அமைதியாய் எழுந்தா

குழந்தைகளோடு வீடு திரும்பியவர்களைச் செல் பின் தொடர்ந்தது.

வீட்டில் காத்திருந்த திலீபனின் முகம் இவர்க கண்டதும் பிரகாசமானது.

''ஹாய்... இந்தத் தேவதைகளின் தரிசனத்திற்கா தான் இவ்வளவு நேரம் தவமிருந்தேன்!'' என்ற அகன்ற சிரிப்புடன்.

''எப்ப வந்தீங்க? ரெண்டு நிமிஷமிருக்கும சீண்டினாள் ப்ரீத்தி.

''நூத்திருபத்திரண்டு நிமிஷமாய் முதிய தேவ யோடு உரையாடிக் கொண்டிருந்தேன்.''

''பெரியம்மாவை இப்படியா குறிப்பிடறது?''

''ஏன் - அவங்களைத் தேவதைன்னு நீ ஒத் மாட்டாயா?''

''பேச்சைப் புரட்டாதீங்க. என் பட்டியலில் எல்லாப் பொருட்களும் வாங்கி வந்தாச்சா?''

''அடியேனுக்கு வேறென்ன வேலை?'' என்ற சிலவற்றை மாலினியிடம் தந்தான்.

''இதென்ன, நான் ஏதும் கேட்கலையே?''

''ஆனா உனக்கு இனிப்புன்னா பிடிக்குமே... அதான்.''

தயக்கத்துடனேயே வாங்கிக் கொண்டாள்.

''ப்ரீத்தி! பசிக்குதே... வயிற்றுக்கு ஏதேனும்...?''

''உங்களுக்கு இல்லாமலா? வத்தல் குழம்போடு அவியல்.''

''போதுமே.''

''அயிரை மீன் கிடைச்சுது - வறுத்துடறேன்.''

''பிரமாதம்... கைமணம்னால் அது ப்ரீத்தியின் சமையலில்தான்!'' என்று பாராட்டியவன், சற்றுத் தயங்கி, ''மாலினி! நீயும் வாயேன்!'' அழைத்தான்.

மறுக்காமல் அவர்களோடு நடந்தவள் ஒரு ஆப்பிளைக் கழுவி நறுக்கலானாள்.

ஒருபுறம் ப்ரீத்தி பரிமாற, மறுபுறம் மாலினி பழத்தைத் துண்டமிட்டபடி அமர்ந்த காட்சியை அங்கு வந்த பிரவாகன் பார்த்தான்.

''ஏதேது திலீப மகாராஜாவிற்கு ஏக உபச்சாரம்!''

''உழைத்துக் களைத்து வந்த சேவகனுக்குத் தேவதைகள் கிருபை காட்டுகிறார்கள்!'' - பதிலும் கிண்டலாகவே வந்தது. புன்னகையுடன் நிமிர்ந்த ப்ரீத்தியின் கண்கள் பிரவாகனைத் தொட, அவன் பார்வையோ மாலினி மீது... தலையையும் உயர்த்தாமல் கவனமாய்ப் பழம் நறுக்கிக் கொண்டிருந்தவளையே மொய்த்தது.

அதைக் கண்டவளின் உள்ளே முன்பின் அறியாத ஒரு புது உறுத்தல்.

அது அவளை அலைக்கழித்தது.

நெஞ்சுக்குள் தணலைக் கொட்டி மூடியது போன்ற கொதிப்புத் திணறல்...



மாலினியையே நோக்கிய பிரவாகனது கண்களைப் பிடுங்கி எறிந்து விடலாம் போன்ற ஒரு வெறி...!

ஓ... இதுதான் பொறாமையா?

ஆனால் மாலினி இவளுக்குமே பிடித்த தோழி... இவளுமே வியந்து பாராட்டிய அழகுடையவள். பிறகேன் பிறர்... அதிலும் பிரவாகன் - அவளில் லயிக்க, தனக்குக் கொதிக்கிறது?

இதெல்லாம் உணராத திலீபன் ஒவ்வொரு வாய் உணவையும் ரசித்து உள்ளே இறக்கிக் கொண்டிருந்தான்.

''ப்ரீத்தி! உன் அடுத்த பட்டியலில் மறக்காமல் ஒரு ஜோடி வைர வளையலைச் சேர்த்திடு.''

விரல்களை வழித்தபடி சொன்னவனைப் புரியாமல் பார்த்தாள். ''புரியலையா? இப்படிச் சமைக்கும் கைக்கு அதைப் போடத்தான்!''

''தங்கமெல்லாம் போதாதா?''

''வர்றவங்க பசியறிந்து ருசியறிந்து பரிமாறும் மகராசிக்கு வைரம்தான் சரி.''

திலீபனின் பாராட்டு அதிகப்படி என்ற கூச்சத்துடன் முகம் திருப்பியவளுக்கு மாலினியின் முக பாவம் குழப்பமூட்டியது.

அந்த அழகிய முகம் ஏன் வேறுபட்டது... அதில் பொறாமையின் சாயல் தெரிந்ததோ?

தொலைபேசி குறுக்கிட்டுக் கிணுகிணுத்தது.

அனைவரும் அதனிடமாய் ஓடிப் போக, பேசியது வசந்திதான். சேகருக்கு உடம்பு நன்கு முன்னேறுவதால் தாங்கள் ஒரு மாதத்திற்கு உள்ளாகவே வீடு வந்து விடுவதாய் வந்த தகவலில் ப்ரீத்திக்கும் மகிழ்ச்சிதான் - ஆனால் கூடவே பயமும் தலை நீட்டியது.

வசந்தியும் அவளோடு சென்றிருக்கும் வேலைக்காரப் பெண்ணும் திரும்பி விட்டால் தனக்கு இங்கே வேலையோ தேவையோ இராது.

ஆகக் 'கழுதை கெட்டால் குட்டிச் சுவர்' என்பது போல ஒரே போக்கிடமான அண்ணியிடம்தான் போக நேரும். வந்து இரு வாரங்கள் ஆகப் போகிறது. எனில் இன்னும் சில வாரங்கள் இங்கிருக்கலாம்... பிறகு...?

வாசனைச் சோம்பை வாயிலிட்டபடி இவளை நெருங்கிய திலீபன் இரு கடிதங்களை நீட்டினான். ''மன்னிக்கணும், ப்ரீத்தி. உணவைக் கண்ட உற்சாகத்தில் இவற்றைத் தர மறந்துட்டேன்,'' என்றபடி.

இரண்டிலுமே அண்ணனின் கையெழுத்துதான் என்றாலும், அதில் ஒன்று ராஜேஷினுடையது. அண்ணன் விலாசத்திற்குப் போய் அங்கிருந்து இங்கு மாறி வந்திருப்பதை யூகிக்க முடிந்தது.

''இங்கிருக்கும் குழப்பம் போதாது போல, இவன் வேறு!'' என்ற கடுப்புடன் வாங்கிக் கொண்டாள்.

''ஆயா - மேஜையை ஒதுங்க வச்சிடுறீங்களா?''

''ஆகட்டும்மா - பிள்ளைகளுக்கு நாளை பரீட்சை வைப்பேன்னியாம். அப்படி படிக்குதுங்க.''

''நல்லது,'' என்றவள், தன் அறைக்குப் போகும் வழியிலேயே, அண்ணனின் கடிதத்தைப் பிரித்து வாசித்தாள். நலம் விசாரித்து விட்டு, அண்ணியின் கோபம் முழுக்கத் தணியவில்லை என்று புலம்பியிருந்தான்.

அறைக்குள் போய் மறுகடிதத்தைப் பிரித்தவள் நுனி விரல்களால் அதைப் பற்றி, மேலோட்டமாய் அக் கிறுக்கல் வரிகளை மேய்ந்தாள். போனமுறை 'நிலவே நிழலே' என்று உருகியிருந்தவன், இப்போது உரிமையாய் உத்தரவிட்டிருந்தான்.



'எங்கே யிருந்தாலும் உடனே உன் அண்ணியிடம் வந்து சேர். கால நேரத்தில் நம் கல்யாணம் நடப்பதுதான் இரு குடும்பங்களுக்குமே நல்லது. இப்படிச் சிறு பிள்ளைத்தனமாய் எங்கோ நீ ஒளிந்திருப்பது எனக்குப் பிடிக்கவில்லை... நான் தேடி வருமுன் நீயாக ஓடி வந்து விடு!' என்ற ரீதியிலிருந்த கடிதத்தைக் காட்டத்துடன் இரண்டாகக் கிழித்து, அதைச் சுருட்டி வீசினாள்.

## 19



அகன்ற மூங்கில் தட்டுகளும், அவை நிரம்பத் தேங்காய், பழக்குலைகள், புஷ்பம், வெற்றிலை என்ற அம்சமான பொருட்களுமாய் அணி வகுத்திருந்தன.

அத்தனையையும் வரவேற்பறையின் கம்பளத்தில் பரப்பி விட்டுக் கைகட்டிப் பணிவாய் நின்றனர் ஆண்கள்.

வித்யாவிற்கு இரட்டைச் சடை பின்னிக் கொண்டிருந்த ப்ரீத்தி ஆவலாய்க் கேட்டாள்.

''இதெல்லாம் எதற்கு? யாருக்குக் கல்யாணம்?''

சிறுமி வாயைப் பொத்தியபடி சிரித்தாள்.

''ஒத்தருக்குக் கல்யாணம்னா சின்னத் தட்டுத்தாம்ப்பூ வரும். அதுல ரெண்டே பழம், நாலு வெத்தலை, ஒரு கையி மிட்டாயிருக்கும். அம்புட்டுதான்...'' விளக்கினாள் தேனம்மா.

''அப்ப இதென்ன தடபுடலாய்?''

''திருவிழாப்பூ. இங்குள்ள மலை ஜாதி ஆட்கள் எல்லாருஞ் சேர்ந்து ரெண்டு நாளு பாட, சாட, கிடா அடிச்சு விருந்துண்ணன்னு கொண்டாடுவாங்க!'' என்று விட்டு முன்னே போய் வைக்கப்பட்டவற்றை ஒரு நோட்டம் விட்டாள்.

''ம்ம்... எல்லாஞ் சப்ஜாடாத்தான் இருக்குது... இப்படி முறையா செய்தாத்தான மேகங் கருத்து மழை பொழியும்''

''பெரியம்மாவ வரச் சொல்லும்மா!'' என்று தேனம் மாவின் முழக்கத்தை அடக்கினான் முன் நின்ற ஒருவன்.

சற்று நேரத்தில் மரகதம்மாளும், பிரவாகனும் வர, பரஸ்பரம் வணங்கிக் கொண்டனர்.

''ஐயா அவுக கண்டிப்பா திருவிழாவுக்கு வந்திரணும்.''

''நிச்சயம். ம்ம்.. சனிக்கிழமைக்கு இன்னும் மூணு நாளிருக்கா? அதற்குள் மற்ற வேலைகளை முடிச்சிடு வேன். வழக்கம் போலச் செலவில் பாதி எம்பங்கு - தவிர ரெண்டு கடாவும் தரச் சொல்லியிருக்கேன்.''

கைகளைத் தலைக்கு மேல் உயர்த்திக் கும்பிட்டார்கள்.

''அய்யாக்குத் தங்கமான மனசுங்க - அம்மாவும் வந்தா...''

இழுத்தார்கள்.

''நான் திருவிழாக்கெல்லாம் வந்து ரொம்ப வருஷ மாச்சேப்பா?''

''ல்ல... சின்னம்மாவைச் சொல்றோம்... அவுகளும் வந்தா...'' தன்னை அவர்கள் அப்படிக் குறிப்பிட்டதில் வெட்கிச் சிவந்தாள், ப்ரீத்தி - பதில் சொல்ல அறியாது ஓரக்கண்ணால் பிரவாகனைத் துழாவ, அவனோ, 'நீயே பதில் சொல்லிக் கொள்,' என்பது போல அலட்சியமாய் நின்றான்.

இவளுக்குள் சுறுசுறுவென்று கோபம் ஏறியது. ''மாலினியைச் சொல்றாங்க போல, தையல் வேலை இருக்குன்னாங்க. கூட்டிட்டு வரவா?'' - அறியாதவளாய் நாடகமாடினாள்.



''அவள் நாளை மறுநாள் ஊருக்குத் திரும்பறா...'' என்றான் மொட்டையாக. இவள் அந்தத் தகவலில் திகைத்து நிற்க, மரகதம்மாள்தான் உதவிக்கு வந்தார்.

''பார்ப்போம் - எல்லாருமே ஒரு நேரம் வரக்கூடுமான்னு பார்ப்போம். எங்களை அழைத்ததில் சந்தோஷம்ப்பா... திருவிழா நல்லபடி நடக்கும்.''

கைகுவித்த மரகதம்மாள் வாழ்த்தோடு தன் பங்கிற்குப் பணம் தர, மேலும் மலர்ந்த முகங்களோடு கிளம்பியது கூட்டம்.

இரவு உணவுக்குப் பின் மாலினியிடம் கேட்டாள்.

''என்னிடம் சொல்லவே யில்லையே?''

''எதை?''

''நாளை மறுநாள் கிளம்பறியாமே!''

''ஓ... குழப்பத்திலிருக்கேன், ப்ரீத்தி... மரகதம்மாள்... ஏன், தேனம்மாவும் கூட நான் இங்கேயே இருக்கணும்ற ரீதியில் பேசுவது எனக்குப் பிடிக்கலை... என் காரணங்கள் உனக்குப் புரியுதில்லையா?''

கெஞ்சலான கேள்வியுடன் ப்ரீத்தியின் கைகளைப் பற்றிக் கொண்டாள், மாலினி.

''எல்லாருக்கும் அது புரியணும்னு அவசியமில்லை, மாலினி. அதை நீ எதிர்பார்க்காதே... ஆனால் உன் மனசுக்கேற்ற மணாளன் முக்கியம். நம் மனசுக்கு ஏற்றவரோடு எங்கு இருந்தாலும்... அது சொர்க்கம்தான்.''

''புரியுது... ஆனால் மனதுள் இத்தனை பயமுட கலக்கமும் இருக்க, என் வாழ்நாள் முழுமையும் இங்கே வாழ்ந்து... பிள்ளைகளைப் பெற்று... படிக்கும் வயதில் அவர்களைப் பிரிந்து... வேலைக்குப் போன கணவர் நேரத்திற்கு வீடு திரும்பலைன்னா அவர் உயிருக்கு ஆபத்தோன்னு நடுங்கி...''

இதெல்லாம் அநாவசிய அச்சங்கள் என்றே தோன்றினாலும், வியர்த்து விட்டிருந்த மாலினியின் அழகிய முகத்தைக் கண்டதும் மனம் இளகியது.

''சரி, இப்ப உடனே கிளம்பணுமா என்ன... ஏதோ திருவிழாவாமே?''

மாலினி முகம் சுழித்தாள்.

''ம்ப்ச்... கூச்சலும், கொட்டடிக்கு ஆட்டமும் கறிச் சாப்பாடும்தான் அதில் பிரதானம்... சில முறைமைகள் காட்டுமிராண்டித்தனமாய்க்கூட இருக்கும்... அதான் சொன்னேனே - எனக்கு இங்குள்ள பழக்க வழக்கங்கள் எதுவுமே பிடிப்பதில்லை. அதிலிருந்து தப்பவும் கூட உடனே கிளம்பறேன்னு வையேன்.''

''அப்ப, நாம மறுபடி எப்ப பார்ப்போமோ, தெரியாது.''

ஆச்சரியமாய்ப் புருவங்களை உயர்த்தினாள் மாலினி. ''ஏன்?''

''நானும் மறுமாசம் போயிடுவேன்...''

''எங்கே? அண்ணன் வீட்டிற்கா?''

''தெ... தெரியலை.''

''அந்த விலாசத்தை என்னிடம் கொடுத்து வை. நம் சிநேகம் கண்டிப்பாய்த் தொடரும்னே எனக்குப் படுது.'' சிநேகமாய்ப் புன்னகைத்தாள்.

கூண்டுப் புலியாய் அங்குமிங்குமாய் நடந்த பிரவாகன் சலித்தான் - ''திடீர்னு வீடு வெறிச்சோடிப் போச்சில்லை, பாட்டி?'' சாப்பாட்டு மேஜையில் தக்காளிச் சாதத்தைக் கோழி வறுவலோடு கலந்து கட்டிக் கொண்டிருந்தனர் அனைவரும்.

''ம்ம்... இந்த அத்துவானத்தில் விருந்தாள்னு ஒருத்தர் வந்தாலும் கூட வீடு நிறைஞ்சு தெரியுது. ஆனால் வந்த சூட்டிலேயே கிளம்பிடறாங்க. என்ன பண்றது?''



''ஒண்ணும் பண்ண முடியாதுதான்... மாலினி இல்லாமல் வீடு களையில்லாமல் தோணுது. அவ்வளவுதான்.''

அசாத்தியக் கரிசனை, கவலைதான் என்று சற்று எரிச்சலுடனே நினைத்தாள்.

''என்ன ப்ரீத்தி - வெடுக்குனு கோழிக்கறியை நகர்த்தி வச்சிட்டே. என்ன கோபம்?''

அவனது சீண்டல் புரியாதது போல நகர்ந்தாள்.

''நானும் நாளை திருவிழாவிற்குப் போயிட்டு அப்படியே கன்னிக் காட்டிற்குப் போகணும்.'' தனக்கும் சேர்த்தே பிரவாகன் தகவல் சொல்வதாய்த் தோன்றியது.

''போகட்டுமே!'' என்று பொருமியது மனம்.

''போனால் திரும்ப நாலு நாளாகலாம். கன்னிக் காட்டின் நிலம், காற்றின் ஈரப்பதம், மண்ணின் தன்மை எல்லாம் கணித்தால்தான் நாம் அதில் என்னென்ன பயிரிடலாம்ங்றதை நிர்ணயம் செய்யக் கூடும். அந்த அடிப்படையில்தான் வங்கியிலிருந்தும் கடன் பெறணும்.''

''ஏன்ப்பா வசந்த் - இங்கே இத்தனை நிலத்தைச் சொந்தமாய் வச்சிட்டு, மேலும் இருநூறு ஏக்கர்களை ஏன் வாங்கணும். அதுவும் கடனெடுத்து?''

''வசந்தம் எஸ்டேட்ஸ்ஸை இப்ப நிர்வகிப்பது அத்தான். ஆக, அக்காவும் அத்தானும் தொடர்ந்து இங்கே இருக்கட்டும், பாட்டிம்மா. நான் புதுசாய் நிலம் வாங்கி அங்கே காலை ஊன்றிட்டால் பிரச்சனை இல்லை அவரவர் தலைக்கு மேல் தனித்தனிக் கூரை.''

குடும்ப சமாச்சாரங்களைப் பேசும்போது வெ நபரான தான் அங்கு நிற்பது சரியில்லை என் நகர முற்பட்டவளை மரகதம்மாள் அழைத்து உட்கா வைத்தார்.

''சூடாய் இருக்கும் போதே நீயும் சாப்பிடம்மா'' என்று. வினு இவளுக்குத் தட்டு வைக்க, வித்து பதார்த்தங்களை ப்ரீத்தியின் பக்கமாய் நகர்த்த, அந்த அன்பிற்குக் கட்டுப்பட்டு உண்ணலானாள்.

''ஏம்ப்பா கூடி இருந்தால்தானே இந்த தனிமையான இடத்தில் உதவி, ஒத்தாசை எல்லாம். மாலினியின் பேச்சைக் கேட்டுக் கேட்டுச் சமயங்களில் எனக்கே திகிலாயிடுது. வசந்தியிடமிருந்து போன் வரலைன்னாலும்... 'பேசி' தொடர்பு அறுந்திடுமோன்னு வித விதமாய்ப் பயங்கள்...''

''பரவாயில்லையே! மாலினி அம்மையார் உங்களை முழுக்க மூளைச் சலவை செய்துட்டா போல... இந்தத் தனிமையில் ஆபத்து அதிகம் என்பதைப் பற்றி நீ என்ன நினைக்கறே, ப்ரீத்தி?''

திடீரெனத் தன்னிடம் வீசப்பட்ட கேள்வியில் திகைத்தாள்.

உணவு தொண்டையில் சிக்கியது.

''ஒன்னுமில்லை... அதாவது பாதகம்னு நினைக்கலை.''

''கன்னி நிலத்தின் செழிப்பு அபாரமாய் இருக்கும். நான் படித்தது அதைப் பற்றித்தான் - ஆக, நிச்சயம் அதில் பயிரிடும் முயற்சியில் வெற்றியுண்டுன்னு நம்பறேன்... ஆக, வேலையைத் தொடரலாமா?''

தண்ணீரைக் குடித்து விட்டுத் தலையாட்டினாள். இவன் மாலினியிடம் கேட்க வேண்டிய உத்தரவைத் தன்னிடம் கேட்பானேன்? ஆசைப்பட்ட பெண் இங்கே ஒரு வாரம் கூடத் தங்க முடியாதெனப் போய்விட, இவன் மேலும் ஆளண்டாப் பிரதேசத்திற்குப் போய் வெற்றியைத் தேடுகிறானே... அது தாம்பத்தியத்திற்கு உதவுமா?



மறுநாள் வினுவிற்குக் காய்ச்சல் கண்டு விட, எல்லாருமாய்த் திருவிழாவிற்குப் போவதாய் நினைத்திருந்தது முடியாமற் போனது.

''பிள்ளைங்க அந்த மேளம், வேட்டுக் கூச்சலில் மிரண்டுதான் போகும்ங்க!'' என்று சமாதானம் சொன்ன தேனம்மா ஆயா, தான் மட்டும் தலையைக் காட்டி விட்டு வருவதாய்ச் சொல்லி மறைந்தாள்.

திடீரென அப்பெரிய வீடு வெறுமைப்பட்டுப் போனது, ப்ரீத்திக்கு. ஒவ்வொரு நாளும் இவள் பார்த்துப் பார்த்துச் செய்த அறைகளின் அலங்காரமெல்லாம் அர்த்தமற்றுக் கிடந்தன.

இதையேதானே மாலினி போனதும் பிரவாகனும் சொல்லிப் புலம்பினான்?

''வீடே களையற்றுப் போனது!'' என்று.

பிரவாகன் அதன் பொலிவை எல்லாம் தன்னுடன் சுருட்டி எடுத்துப் போய் விட்டான் எனும்படி கிடந்தது வீடு. போதாததற்குத் தேனம்மாவின் ஓயாத பேச்சும், அது கிளப்பும் சிரிப்பலைகளும் இல்லை. வினு காய்ச்சலில் கிடந்தான். வித்யா உடன் விளையாட ஆளில்லாததால் பாடங்களில் கருத்தை அமிழ்த்தியிருந்தாள்... வீட்டை ஒரு கனத்த அமைதி போர்த்தி விட... அதில் இவளுக்கு மூச்சடைத்தது.

மரகதம்மாள் இவளை அழைத்து வாசிக்கச் சொன்ன காதல் கவிதையோ மேலும் இம்சித்தது.

'நீ தரையில் நடப்பது
ஊருக்குத் தெரியும்!
என் மனசில் நடப்பது
யாருக்குத் தெரியும்?'

மாணவன் ஒருவன் எழுதிய இக்கவிதையை முன்பு என்றால் சிறு பிள்ளைத்தனக் கிறுக்கல் என்று ஒதுக்கித் தள்ளியிருப்பாள் - இப்போதோ அவ்வரிகள் அவளைத் திடுக்கிட வைத்தன.

'மனசில் நடப்பது...' வாலிபன் உணர்ந்துதான் எழுதியிருக்கிறான். பிரவாகனின் நினைவுகள் சதா தன் நெஞ்சுள் தடதடவென்று நடந்தபடி இருப்பதை அது அவளுக்கு உணர்த்தியது. அவனைப் பார்ப்பது ஒரு வித எரிச்சல் என்றால் பாராமல் கிடப்பது மனதைப் பாரமாக்குகிறதே... உலகே சூன்யமாய்ப் போய் விடு கிறதே...

நினைவுகளை மட்டுமே பற்றியபடி தத்தளித்தது உள்ளம்.

அப்படியானால்... இது... இந்த உணர்வுதான் காதலா?

மணியடித்தது தொலைபேசி!

தன்னையே புரிந்த அதிர்ச்சியிலிருந்தவளை அச்சத்தம் உலுக்கியது.

ஏதோ வேண்டாத செய்தி வருவதாய்ப் பட, படபடப்புடன் அதைக் கையில் எடுத்தாள்.

''ஹலோ - வசந்தம் எஸ்டேட்ஸ்.''

''ப்ரீத்திதானேம்மா... நான் அண்ணன் பேசறேன்.''

நலம் விசாரித்தலுக்குப் பின்பு, அந்த வேண்டாத செய்தியும் இவள் காதில் ஏறியது.

''ராஜேஷ் பயல் பிறகும் உனக்குக் கடிதம் எழுதி யிருந்தானம்மா... அந்தப் பயலின் சங்காத்தமே வேண்டா மேன்னு நான் அதைக் கிழித்துப் போட்டுட்டேன்.''

''நல்லதுண்ணா.''



''ஆனா உன் அண்ணிக்குத் தாளலை. ஆக எப்படியோ உன் விலாசத்தை என் டைரியிலிருந்ததைத் தேடிப் பிடிச்சு அந்தப் பயலிடம் தெரிவிச்சுட்டா...''

''ஐயையோ... அப்படீன்னா...''

''மதுரை விமானத்தில் அந்த ராஜேஷ் படவா ஏறப் போவதாய்த் தகவல் கிடைச்சிருக்குது.''

துடித்த நெஞ்சை அழுத்தியபடி நின்றாள்.

''எப்படியும் பண்ணைக்கு அந்தப் பயல் வந்து சேர ஒரு முழு நாளாகும். அதற்குள் நீ தயாராய்... சுதாரிச்சிக் கணும்னுதான் தகவலைத் தர்றேன்.''

''இங்கே வேலை செய்யும் இடத்தில் அவன் வந்து பிரச்சனை பண்ணினால் நல்லாயிருக்காதே, அண்ணா.''

''சந்தானம் மாமாவிடமும் விவரம் சொல்ல முயன்றேன். தம்பதியாய் வெளியூர் போயிருக்காங்க போல...''

''ம்ம்.''

''உன் முதலாளி அம்மாவிடமும் விவரத்தைச் சொல்லிடு. நல்ல மாதிரியானவங்கன்னு சொல்லுவியே... பாதுகாப்பாய் இருந்துக்கோடா. நானும் கிளம்ப முயற்சி பண்ணறேன்... எதற்கும் முதலில் உன்னை எச்சரித் துடலாம்னு...''

அண்ணன் மேலும் சொன்னது ஒன்றும் ப்ரீத்தி யின் காதில் ஏறவில்லை. வீட்டில் யாருமற்ற இப்படி யான நேரத்தில் ராஜேஷ் வந்து அடாவடித்தனம் செய்தால் என்ன செய்வது, எப்படிச் சமாளிப்பது என்ற குழப்பத்தில், அச்சத்தில் கரைந்து கொண்டிருந்தாள் அவள்.

20



ப்ரீத்தி புரண்டு புரண்டு தவித்தாள்.

தூக்கமில்லாத இரண்டாவது இரவு இது.

நேற்றிரவு புரிந்த உணர்வும், தெரிந்த சேதியுமாய்ச் சேர்ந்து அவளைக் கடைந்ததில் தூக்கம் திரளாமல் போனது.

புரிந்த உணர்வு - காதல்! நான் பிரவாகனை விரும்புகிறேன். அவனை வெறுப்பதாய் நினைப்பது வெறும் நடிப்பு. தன்னையே ஏமாற்றிக் கொள்ளப் போடும் நாடகம். அவனிடம் முதல் நாளிலேயே ஈர்க்கப்பட்ட தன் இதயம் இன்னும் பத்திரமாய் அவனிடமேதான் சிறைப்பட்டிருக்கிறது. தன்னுள்ளும் அவனைப் பொத்திப் பாதுகாக்கிறது. அவன் மாலினியை விரும்புவது தெரிந்த பின்பும் மறக்க முடியாமல் வெட்கம் கெட்டுத் தவிக்கிறது.

அடுத்ததாய்த் தெரிந்த சேதி ராஜேஷ் இவளைத் தேடி வருகிறான் என்பது. இவளுக்குப் பார்க்காமலேயே பிடிக்காமல் போன அந்தப் போக்கிரி தன்னைத் தேடி இவ்வளவு தூரம் வருவானேன்? பார்க்காமலேயே அப்படியென்ன அவனுக்குமே காதல் முளைத்திருக்கக் கூடும்?

அண்ணனிடம் விவரம் கேட்காமல் விட்டதற்காய் வருந்தினாள். ஆனால் கேட்டாலும்தான் என்ன, ராஜேஷ் மதுரையை அடைந்திருப்பான். நாளைக் காலை - ராவணன் போலத் - தன்னைத் தூக்கிப் போக வந்தே விடுவான்... பின்னாலேயே அண்ணனும் வரலாம் என்றாலும் வேலைக்கு வந்த இடத்தில் அசிங்கப்பட்டல்லவா விலக நேரும்?

மனம் தவளை போலத் தாவித் தாவிப் பலதையும் நினைத்தது. பிரவாகனுக்கும் தன் மீது காதல்தானோ



என்பது அதில் ஒன்று. அதற்கு இடமளித்த சம்பவம் ஒன்றை மறுபடியும் மறுபடியுமாய் மனதில் ஓடவிட்டு ரசித்தாள்.

அன்று மின்சாரம் இல்லாததால் அம்மியில் மசாலை அரைத்துப் பிரியாணி சமைத்த அலுப்போ என்னவோ, சீக்கிரமே கண்கள் சொக்கின. பிள்ளைகளை ஒரு வழியாய்ப் படுக்க வைத்தவள் மிஞ்சிய உணவைக் குளிர்பதனப் பெட்டியில் வைக்க முனைய, குருமா இன்னும் இளஞ்சூட்டில் இருப்பதைக் கை உணர்த்தியது. முழுக்க ஆறியதும் உள்ளே வைப்பதற்காய்ப் பாத்திரத்தைத் திறந்து வைத்த பின் - மேஜையிலேயே சற்றுத் தலை சாய்த்துப் பின் உறங்கியும் போனாள்.

இடையே யாரோ தன்னைப் பெயர் சொல்லி அழைப்பது போலிருந்தது... பரிச்சயமான, பிடித்த ஆண் குரல்...

''அப்பா...'' - உறக்கம் கலையாமலேயே குழறினாள். ஒரு கை இவளது தலையை இதமாய் நீவ, மறுபடி அழைத்தாள்.

''அப்பா...''

கையின் இதத்தில் உறக்கம் அழுத்தியது. பிறகு மிதப்பது போலவும், வசதியாய்ப் படுத்து விட்டது போலுமிருக்க... அவள் விழித்தது - காலையில்தான்!

படைத்தவரை நினைத்தபடி எழுந்தவளுக்குத் தான் தானாய்ப் படுக்கைக்கு வரவில்லை என்பது உறுத்தியது...!

கனவாய் ஞாபகத்துள் ஆடிய காட்சியும், கேட்ட குரலும் சங்கடமூட்டின.

தன்னை எழுப்ப முயன்றது யார்...? அப்படியென்ன கிறக்கமான தூக்கம்? இங்கு நடந்துதான் வந்தேனா.. அல்லது?

அவசரமாய்ச் சமையலறைக்குள் புகுந்து, காலை நேர வேலைகளின் பரபரப்பில் எழுந்த நினைவுகளை அழிக்க முயன்றாள்.

பிரவாகனின் பாதத்தைப் பார்த்தபடிதான் அவனுக்கான தேநீரை நீட்டினாள்!

ஆனால் அவனா விடுபவன்!

''ஒரு பெரிய கப் ஹார்லிக்ஸ்ும் கலந்திடு, ப்ரீத்தி!'' - என்றான் அயர்வாய்.

''இப்பவேவா...?''

''ஏன்னு கேளு. முதுகைப் பிடிச்சிடுச்சு... ரொம்ப கனமான வேலையை நேற்றிரவு செய்ய வேண்டியதாய்ப் போச்சு... அதன் விளைவு.''

அவன் சீண்டலாய்ச் சிரிக்க, முகம் சிவந்தாள்.

''புரியுதா?''

''மன்னிக்கணும்... ம்ம்... நன்றி... எப்படி மேஜையில் கவிழ்ந்து தூங்கினேன்னு...''

''சாதாரணத் தூக்கமுமில்லை... அயர்ந்த உறக்கம்... இரவு முழுக்க அப்படியே கிடந்தால் உனக்கு உடம்பு வலிக்குமேன்ற கரிசனையில் எழுப்பினேன். சிறு குழந்தை போல 'அப்பா'ன்னு கையை உயர்த்தினியா... தூக்க வேண்டியதாயிற்று.''

''பொய்... அப்படி எல்லாமில்லை.''

நல்ல வேளையாய்க் குழந்தைகள் இதை எல்லாம் கேட்கவில்லை என்ற நிம்மதியுடன் மறுத்தாள்.

''சரி, எப்படியோ... பார்க்க மெல்லிசாய் இருந்தாலும் நல்ல கனம்தான் நீ...''

''ப்ளீஸ்... இதை யாரிடமும்...''



''சொல்லலையம்மா... பிறகு எல்லாரும் இந்த வசந்தப் பயில்வானை நம்பி, நினைச்ச இடத்தில் படுத்துத் தூங்க ஆரம்பிச்சால்... என் முதுகின் பாடு கஷ்டம்.''

ஆனால் அவனது மோகனமான சிரிப்பு கஷ்டப்பட்டவனதாய் இல்லை... இஷ்டமும் இன்பமுமாகவே தோன்றியது...

இனித்த நினைவுகளை விட்டு நிகழ் காலத்திற்கு வந்தாள். மனதுள் வெகு நாட்களாய் மாலினியை வைத்திருந்ததால் பிற பெண்ணிடம் அப்படி வேடிக்கையாய் விகல்பமின்றிப் பழக முடிந்ததோ?

சாதாரணமான பழக்கமென்றால் தன் தலையை ஏன் அப்படி மிருதுவாய்க் கோத வேணும்... ஒரு பெண்ணை நெஞ்சோடு அள்ளித் தூக்கிப் போவதென்றால்...

இவளது யோசனைகளுக்கு விடை கிடைக்கா விட்டாலும் பொழுது விடிந்து விட்டது. தனக்காக மட்டுமாய்த் தேநீர் கலந்து கொண்டு முன்னறைக்கு வந்த போது வாசற் கதவு சுரண்டப்பட்டது.

இவள் ரத்தம் ஒரு கணம் உறைந்தது.

யாரது... ராஜேஷ் இத்தனை விரைவாய் வந்து விட்டானா?

ஜன்னல் வழியே பார்த்தவளுக்கு யாரும் நிற்பதாய்த் தோன்றவில்லை. ஆனால் யாரோ மரக் கதவைப் பிராண்டுவதான சத்தம் தொடர்ந்தது. மெள்ளத் தாழ் விலக்கி இரு அங்குலங்கள் மட்டுமே கதவை விரித்தவள் இடுக்கின் வழியே பயந்த பார்வையை ஓட்டினாள்.

வெளியே முனகலும் வாலாட்டலுமாய்ச் செல்வா!

''அடடே... செல்வா!'' வியப்புடன் கதவை விரியத் திறந்தவள், நாயைத் தட்டித் தரக் குனிந்ததும், அதன் பட்டையில் செருகப்பட்டிருந்த சுருள் கண்ணில் பட்டது

இந்தக் காட்டிற்கான 'செல்' தொடர்பு செல்வாதான் என்று மாலினி இந்த நாலு கால் ஜீவனைத் தனக்கு அறிமுகப் படுத்திய ஞாபகம் வர, மெள்ள அக் காகிதத்தை உருவினாள்.

பிரிப்பதற்குள் விரல்கள் நடுங்கின...

யார் இதை அனுப்பியது?

தன்னிடம் சேர்க்கும்படியா அனுப்பினார்கள்?

சுருளைப் பிரித்து நீவி வாசித்தவளின் இதயம் வாய்க்கே அதிர்ச்சியில் எம்பியது...!

'ஐயோ கடவுளே...' என்று வாய்விட்டு அரற்ற வேண்டும் போலவும், 'அழுது பிறரைப் பதற வைக்காதே. சிந்தித்துச் செயல்பட வேண்டிய நேரமிது,' என்றும் மாறி மாறிப் பட்டது.

மறுபடி மறுபடியுமாய்க் கசங்கிய அச் சிறு துண்டில் தாறுமாறாய் ஓடிய எழுத்துக்களை வாசித்தாள்.

செய்தி மாறவில்லை...

'ஆபத்து - காலில் அடி - காப்பாற்று - பிரவாகன்!' அவ்வளவுதான். ஆனால் அந்த நான்கு வார்த்தைகளும் மாறி மாறிச் சம்மட்டியாய் நெஞ்சைக் கொத்தி எடுத்தன... தொண்டை உலர்ந்து காந்தியது.

சாப்பாட்டு மேஜையில் சூடு படுத்திய பாலோடு, ரொட்டி, வெண்ணெயை வைத்தாள். எழுந்ததும் பெரியம்மாவும் பிள்ளைகளும் இதைக் கொண்டு சமாளிக்க வேண்டியதுதான். மதியத்திற்குள் தானோ தேனம்மாவோ திரும்பி விடலாம் என்ற நம்பிக்கைதான்.

இனிக் கன்னிக்காட்டை எப்படிச் சென்று சேர்வது என்று அல்லாடியது புத்தி... அது எந்தத் திசையில் இருக்கிறது என்பதும் தெரியாதே... அங்கு போகச் சாலைகள் கூடக்



கிடையாதென்று கேள்வி. ஆக, ஓரளவு மரகதம்மாளின் உதவி தேவைதான்...

அவசரமாய்க் காபி கலக்கிய நேரம் மரகதம்மாளே கூந்தலைக் கோதிக் கொண்டையாய் முடிந்தபடி வந்தார்.

இவளது பதட்டமே ஏதோ சரியில்லை என்பதைக் காட்டிக் கொடுத்து விட்டது போலும்...

''என்னம்மா, ப்ரீத்தி?''

''இல்லை... சின்னவர் ஏதோ முக்கிய விவரங்களை இங்கே விட்டுட்டுப் போயிட்டாராம். அதை எல்லாம் எடுத்து... வரும்படி சேதி அனுப்பியிருக்கார்...''

''எப்படி அனுப்பினான்?''

''அதான்... செல்வா... இப்பத்தான் வந்தது... ஆள் போல நம்ப வீட்டுக் கதவைச் சுரண்டியது...'' புன்னகைக்க முயன்றாள் ப்ரீத்தி. ஆனால் முடியவில்லை.

''எங்கே அந்த காகிதச் சுருளைக் காட்டு?''

''இதோ... இங்கேதான் வச்சேன்...'' தேடுவதாய் நடித்தாள். அதை நடு நெஞ்சில் அல்லவா பத்திரப் படுத்தியிருந்தாள்.

''அவன் கேட்ட விவரங்கள் எங்கே யிருக்குன்னு தெரியுமா?''

''தெரியலை... ஆனால் கண்டு பிடிக்கணும்.''

முதியவரின் முகம் வெளிறியது... ஆனாலும்.

''சரி - நீ தேடி எடுத்துத் தயாராகும்மா. ராபின் இங்க இருக்கான். அவுட் - ஹவுஸில். வித்யாவை எழுப்பி அவனை அழைத்து வரச் சொல்றேன். இது மாதிரியான அவசர ஆத்திரத்திற்குத்தான் அவனை இங்கேயே இருக்க வைத்தது... அதுவும் சேகரின் விபத்திற்குப் பிறகுதான்.

அவனுக்கு ஜீப் ஓட்டத் தெரியும். சுற்றியுள்ள எல்லாப் பகுதிகளும் பரிச்சயம்... ஆகக் கவலையில்லை.''

தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் பிரவாகனின் உயிருக்கு ஆபத்து என்று தோன்றப் புயலாய்ச் சுழன்றாள்.

குடிநீர், ப்ளாஸ்க்கில் வெந்நீரும் காபியுமாய், சில பழங்கள், மருந்துகள் அடங்கிய தோல் பை, சொன்ன பொய்க்கேற்ப ஒரு காகிதக் கட்டு... என்று எல்லாவற்றையும் வாசலில் வந்த ஜீப்பில் ஏற்றினாள்.

அந்தப் பழைய வாகனத்தின் கனத்த உறுமல் தெம்பு தந்தது. மரகதம்மாளின் முகம் வாடியிருந்தது என்றாலும், அதிகக் கேள்விகள் கேட்டுத் துளைக்கவில்லை அவர் - காரியமாய் உதவியவரின் சுறுசுறுப்பும் சமயோசிதமும் பிடித்திருந்தது.

வந்த இடத்திற்கேற்ப வாழும் திறமை...

அதைக் கண்டதில் தனக்குள்ளும் தைரியம் ஊறக், கிளம்பினாள்.

கூட நான்கு பேரேனும் இருந்திருந்தால் நல்லது. ஆனால் எல்லோரும் திருவிழாக் கொண்டாட்டத்தில் அல்லவா இருக்கிறார்கள். தவிர பிரவாகன் கேட்ட விவரங்களை மட்டுமே எடுத்துப் போவதாய்ச் சொல்லி விட்டு, ஆள் படையைத் திரட்டுவது பொருத்தமாய் இராது. திரட்டுமளவு இங்கு யாருமில்லாத சமயம் வேறு. ஓட்டுனர் ராபின் 'செல்வா' என்று குரல் தர, நாயும் குதித்து ஜீப்பில் ஏறிக்கொள்ள, குலுங்கி ஓட ஆரம்பித்தது வாகனம்.

''போதுமான டீசல் இருக்குதா?''

''இருக்கம்மா.''

கரடு முரடான பாதையில் பயணப்பட்டுக் கன்னிக் காட்டின் எல்லையை அடையவே ஒரு மணி நேரமானது.



பின் ராபின், செல்வாவை இறக்கி விட, அதுவும் வழிகாட்டுவது போல ஜீப்பின் முன்னே ஓடலானது.

''என்ன தகவலம்மா வந்தது?''

ராபின் கரிசனையாய்க் கேட்டார்.

''காலில் அடிபட்டிருப்பதாய்.. ஆபத்துன்னு.''

''உடனே உதவி வரணும்ங்கறதற்காய் அப்படிச் சொல்லியிருப்பாரம்மா. பயப்படும்படி ஏதுமிராது...''

''பெரியம்மாவும் கண்டு பிடிச்சுட்டாங்கன்னு நினைக்கறேன்... அவங்க முகம் சரியில்லை...''

''உங்க பதட்டமே காட்டிக் கொடுத்திருச்சேம்மா... இன்னும் உங்க உடம்பு உதறுது... யாருமில்லாத நேரத்தில் இப்படியானது சிரமம்தான்.''

''பக்கத்தில் மருத்துவர் யாரேனும் உண்டா?''

''தகவல் தந்து அவர் வந்து சேர மூணு மணி நேரமேனும் ஆகும். அதற்குள் நாம சின்னவரை வீட்டுக்கு அழைத்துப் போயிடலாம்.''

ஆறுதலாய்ப் பேசிய ராபின் ஐம்பதுகளில் இருந்தார். கால்வாசி நரைத்த தலைமுடி, மீசை. இவரும் தானுமாய்ப் பிரவாகனை மீட்க முடியுமா? கால் முறிந்தவனைத் தூக்கி வரக் கூடுமா?

சில இரவுகளுக்கு முன்பே தூங்கிய தன்னைப் பிரவாகன் குழந்தை போலச் சுமந்து கட்டிலில் சேர்த்த நினைவில் கண்ணீர் முட்டியது.

''நேற்றுத் தூங்க முடிந்ததாம்மா?''

ராபின் கேட்க, திடுக்கிட்டாள். ''ஏன்?''

''ரா முழுக்க முரசுச் சத்தம் கேட்டதே.''

''ம்ம்... இவர் திருவிழாவிலேயே இருந்திருக்கலாம்.''

''முதலாளிமார் கூடவே நின்னா எளியதுங்க கூச்சப் படுங்கம்மா. ஆக, அவங்க போடறதைச் சாப்பிட்டுட்டு நாலு வார்த்தையோட விலகிடணும். அதுவே கூலிக் காரங்களுக்குத் திருப்தியாயிடும்... பிறவு சின்னவர் தன் வேலையைக் கவனிக்கப் போயிருப்பார்.''

''கூட ரெண்டு பேரையேனும் கூட்டிப் போனாரில்லை.''

''திருவிழாவுல கள்ளு, களியாட்டம்னு இருக்கதுகளை ஏன் கூப்பிடன்னு செல்வாவைக் கூட்டிட்டுப் போயிருக்கார்...''

இப்போது செல்வா ஓடாமல் நின்று... ஒரு தினுசாய் முனகியது. இவர்களும் அவசரமாய் இறங்கினார்கள். இடது புறச் சரிவின் புறமாய் மூக்கைத் தழைத்து முனகிய நாய், பின் சரசரவெனச் சரிவில் இறங்கியது... எதையும் யோசிக்காமல் ப்ரீத்தியும் இறங்கினாள்.

''நான் முதல்ல போறேம்மா...''

''இல்ல... நீங்க, வெந்நீர், மருந்துப் பையை எடுத்து வாங்க.''

மரங்கள் அடர்ந்த கடும் சரிவு அது.

மரங்களைப் பற்றியபடி நடந்து சமாளித்தாள்.

ஆனாலும் சறுக்கியது. பத்து நிமிடங்களில் சறுக்கி, தவழ்ந்து இறங்கியவளின் எதிரே மேலும் ஒரு சரிந்த பள்ளம். அங்கு மிக இனிய நாதத்துடன் ஓடியது ஒரு சிறு ஓடை.

அதன் அருகே விசித்திரமான கோணத்தில் கால் பரப்பிக் கிடந்தது ஒரு உருவம்.

பதட்டத்துடன் இங்கும் அங்குமாய்ச் சுழன்ற அவள் பார்வை வளைந்து இறங்கிய பாதையைக் காண, அதில் விழுந்தடித்து ஓடினாள்... இவள் வரும் சத்தம் கேட்டும் படுத்திருந்தவனில் சலனமே இல்லை...



கிடந்தது பிரவாகன்தான்...

நெருங்கியவள், மண்டியிட்டுக் குனிந்து அவனது நெஞ்சில் காதைப் பதித்தாள்... தன் நெஞ்சு எகிறித் துடிப்பது மட்டுமே கேட்டது... அவனதில் துடிப்பில்லை!

## 21



உடலை விட்டு உயிர் பிரியும் அந்த நிமிடத்தில் அதுவரையிலுமாய் வாழ்ந்த காலம் முழுமையும் ஒரு திரைப்படம் போல மனிதனின் மனக் கண்ணில் ஓடுமாமே... அப்படி விழுந்து கிடந்த பிரவாகனைப் பார்த்தவளுக்கு, அவன் நெஞ்சில் தஞ்சமான அந்தக் கணம் முதல் அத்தனையும் படமாய் ஓடின.

சொற்ப நாட்கள்தான்...

ஆனால் இவளது உணர்வுகளைத் தொட்டசைத்த ஒரே ஆண் இவன். இந்தப் பிரவாகன் இனி இல்லை என்பது புரிந்த நொடியில் அவன் மீதான தன் காதலின் முழு வீரியமும் ப்ரீத்திக்கு உறைத்தது. அவனில்லாத வாழ்வு நரகம்... அப்படி வாழ்வதில் அர்த்தமில்லை. இப்படியே தன்னுயிரும் போய்விடக் கூடாதா என்று மருகினாள்.

குளிர்ந்திருந்த அவன் நெற்றியில் தன் உதடுகளைப் பதித்தாள்... அவன் அடர்ந்த கேசத்தை ஆற்றாமையுடன் அளைந்த விரல்கள் பின் அவனது கன்னங்களை ஆசையின் அழுத்தத்தோடு தடவின. விரல்களின் அழுத்தம் வலிக்குமோ என்ற பரிதவிப்பில் உதடுகள் அங்கங்கே ஒற்றி எடுத்தன.

அதுவரை முரசாய் ஒலித்த தன் நெஞ்சு ஒரு கணம் நின்றுவிட, உடம்பெல்லாம் காதாகக் கவனித்தாள்...

அந்த முனகல்... பிரவாகனிடமிருந்தா?

எழுந்து ஓடியவள் ஓடை நீரை அள்ளி வந்து தெளித்தாள்.

சாமான்களுடன் வந்து கொண்டிருந்த ராபினுக்குக் ரல் கொடுத்தாள்.

''உயிரோடதான் இருக்கார்...''

பதில் சாவகாசமாகவே வந்தது.

''சின்னவருக்குத் தீர்க்காயுசம்மா... எளியதுங்க வாழ்த்தும் ரார்த்தனையும் அவருக்கு உண்டுல்ல...''

குடிநீரில் சிறிது குளுகோஸ் கலந்து இவளிடம் தந்து கட்டச் சொன்னார் ராபின்.

''ஓடைப் பக்கத்தில் கிடந்ததால் உடம்பு சில்லிட்டிருக் ம்மா.''

''நெஞ்சத் துடிப்பு இல்லாதது போல...''

''அது நம்ப பதட்டமம்மா...'' என்றாலும் நாடி பற்றிப் ார்த்த ராபினின் கண்கள் கவலை காட்டின.

''காலு எலும்பு முறிஞ்சிருக்கும் போல..., கடும் லியும் அதிர்ச்சியிலுமாய் மூர்ச்சித்துட்டார்... ஆனாலும் ்படி இந்தப் பள்ளத்திலிருந்து இவரை மேல ந்தறதுன்னுதான் தெரியலை.''

''சீக்கிரம் இவரை வீடு கொண்டு சேர்க்கணும்.''

சொன்னாலும் இரண்டே நபர்களால் பிரவாகனை க்கடும் சரிவில் ஏற்றிச் செல்வது..?

முடிய வேண்டும்... முயன்றால் முடியாதது என்ன? ்பின் பின்புறம் கிடந்த பவானி ஜமுக்காளம் னைப்பிற்கு வந்தது. அவசரமாய் மேலேறினாள். மேலேறுவதும் லேசாயில்லை.

மரங்கொடிகளைப் பற்றி ஒரு குரங்கு போலத்தான் றினாள். இதில் பிரவாகனைக் கொண்டு ஏறுவது



கூடுமா? ஜமுக்காளத்தை இரண்டாய் மடித்து அதில் அவனைப் படுக்க வைத்துத் தூக்கலாமென்று நினைத் திருந்தாள். ஆனால் அதன் முனைகளைப் பிடித்திருப் பவள் எப்படி அவனுடைய எழுபத்தைந்து கிலோ கனத்துடன் எந்தப் பிடிமானமும் இல்லாமல் ஏறுவது?

அதுவும்... எதுவும் முடியத்தான் வேண்டும்... இத்தனை நேரம் பிரவாகனை உயிரோடு வைத்த கடவுளுக்கு நன்றி சொல்லிய அவளது இதயம் அவனைப் பத்திரமாய் வீடு சேர்ப்பதற்குமாய்ச் சேர்த்தே வேண்டியது.

வாகனத்தின் பின்புறம் கிடந்த பொருட்களில் தேடி இரண்டு முறுக்குக் கயிறுகளை எடுத்துக் கொண்டாள். இப்போது சற்று வெயில் ஏறியிருக்க, பதட்டத்திலுமாய் உடம்பு முழுக்க வியர்த்துக் கிடந்தது. ஆனாலும் முடிந்த அளவு வேகமாய்ப் பிரவாகனிடம் வந்து சேர்ந்தாள். கெட்டியாய் மடிக்கப்பட்ட ஜமுக்காளத்தின் முன் இரு முனைகளையும் சிறிது இடைவெளி விட்டு இறுகக் கட்ட, ராபினும் இவளது திட்டம் புரிந்து மறுமுனைகளை அதே போலக் கட்டினார்... ஆகத் தொட்டில் போன்ற அமைப்பு உருவானது. மிகுந்த கவனத்துடன் பிரவாகனை அதில் படுக்க வைப்பதற்குள்ளேயே இருவருக்கும் மூச் சிரைத்தது... அச்சிறு அசைவிலும் கூடப் பிரவாகனின் முகச் சுழிப்பைக் கண்டவளுக்கு ஆறுதலும் அழுகையும் கலந்து பொங்கின.

வலியையேனும் உணருகிறானே என்றதில் ஆறுதல். மயக்க நிலையிலும் வலிக்கிறதே என்பதில் துக்கம்.

''அம்மா... நான் வேணுமானால் போய் அருகே யாரேனும் உதவிக்கு உண்டான்னு பார்த்து வரட்டா?''

''யாரும் பயிரிடாததால்தானே இது கன்னிக் காடு? இந்த ஜீப் சத்தம் கேட்டும் யாரும் வரலையே... ஆக, நாமே தூக்கிடலாம்.''

மண்டியிட்டவள் கயிறுகளைத் தன் தோள்களில் சுற்றியதும், பல்லைக் கடித்தபடி சுமையோடு எழுந்தாள்.

முதுகுத் தண்டு வளைந்து விடுவது போல வலித்தது. முன்னேற ஆரம்பித்தவளின் மெல்லிய தோள்களில் முரட்டுக் கயிறுகள் அழுந்திக் கடித்தன...

ஆழ மூச்செடுத்தவள் எதையும் பொருட்படுத்தாமல் ஏறலானாள்... பிரவாகனை வீட்டிற்குப் போய்ச் சேர்த்ததும் என்ன செய்வது என்ற கவலையிலும் மனம் அல்லாடியது...

ஆனால் ஜீப் வீட்டை அடைந்ததும், உள்ளேயிருந்து ஓடி வந்தவர்களைக் கண்டு ஆசுவாசப்பட்ட மனம், பின் மயங்கிச் சரிந்தது.

விழிப்பு வந்ததும் அவளது விழிகள் சோர்வுடன் தன்னைச் சுற்றி நின்றவர்களில் சுற்றியது -

''அண்ணா...''

''இனி ஆபத்தில்லைம்மா... ஆனாலும் எங்களைக் கலங்கடிச்சுட்ட... வந்ததும் அப்படியே சரிஞ்சு விழுந்தியா...''

''ஷ்ஷ்... இனி அதைப் பற்றியென்ன பேச்சு? வீரக்காரியம் பண்ணிய பெண்ணைப் பாராட்டாமல் பயங் காட்டறியேப்பா!'' - நகைத்தது சந்தானம் மாமாவின் குரல்.

கண்களை அயர்வுடன் மூடித் திறந்தாள்.

''மாமா... நீங்க எப்படி இங்கே?''

''நான் மட்டுமா, உன் மாமியும் வந்திருக்காளே.''

''ப்ரீத்திக்கென்ன கண்ணுமா தெரியலை. அசதி, அவ்வளவுதான். முழுக்க ஓய்வெடு குழந்தை. சமையலை நான் பாத்துக்கறேன். இப்ப சூப்பும் பன்னும் சாப்பிடறியா?''



''ல்ல... அவர் எப்படி?''

''இடது காலில் எலும்பு முறிவு.. வேறெந்த சேதமுமில்லை.''

''டாக்டர்?''

''பின்னே - நீ அப்படிக் கிளம்பினதுமே பெரியவங்க நிலைமை சரியில்லை என்பது புரிஞ்சு மருத்துவரை வரவழைச்சுட்டாங்க.''

''நீங்க எல்லாம்...?''

அண்ணன் விவேக் குறுக்கிட்டான்.

''அந்த மடப்பயல் ராஜேஷ் இங்க வந்திடுவானேன்னு பயத்துல நான் கிளம்பினேன். விவரம் தெரிஞ்சு மாமா மாமியும் சேர்ந்துகிட்டாங்க.''

''எப்ப... எப்படி?''

''இதோ பார் ப்ரீத்தி குட்டி - நிறைய சுவாரஸ்யமான செய்திகள் எல்லாம் உண்டு. ஆனால் அத்தனையையு இப்பவே பேசித் தீர்க்கணும்ங்கறது இல்லையே - முதல் இதைக் குடி.''

மாமியின் அதட்டலுக்குக் கட்டுப்பட்டு, மற்ற களும் விலக, சற்றுச் சாய்ந்து அமர்ந்து இளம் சூடா சூப்பையும், அதில் தோய்த்து ஊட்டப்பட்ட பன்னை உண்ணலானாள்.

''அவர்... என்ன சாப்பிட்டார் மாமி?''

''இதேதான்... அவரு கேள்வியும் இதேதான்.''

''என்ன?''

''ப்ரீத்தி எப்படியிருக்கா... என்ன சாப்பிட்டான்னு

பார்வையை உயர்த்தவே யில்லை இவள்.

''பிள்ளைங்களையும் காணுமே... சாப்பிட்டாங்களா?''
ன் கரிசனை எல்லாரது மீதும்தான் எனக் காட்டிக் காள்ளும் முயற்சி.

''எல்லாம் நல்லபடிதான் போகுது... நீ மனசை லட்டிக்காமல் தூங்கு...''

''இவ்வளவு நேரமாய்த் தூங்கிட்டுதானே இருந்திருக் கன் - ஏனோ உடம்பெல்லாம் காந்துது.''

''பின்னே முள்ளிலும் கல்லிலுமாய் ஊர்ந்து ந்திருக்க, அத்தனை சிராய்ப்பு. ஓரளவு மருந்து டவியிருக்கேன். அலுப்பு நீங்கத் தூங்கி எழுந்திரு. தற்கும் டாக்டர் மாத்திரை தந்திருக்கார்!'' என்றபடி ாமி வெள்ளை, பழுப்பு, சிவப்பென்று சில ாத்திரைகளைப் பிரித்து இவள் வாயிலிட்டு, ிழுங்கவும் வைத்தார்.

''இத்தனையா?''

''காயங்களில் சீழ் கோர்த்துடக் கூடாதே - அதற்காய் டி. ஊசியும் போட்டார்...''

''ம்ம்... தூக்கம் வருது மாமி.''

''தூங்குடிப்பா... நான் பக்கத்தில இருக்கேன்.''

அது மயக்கமோ அன்றி உறக்கம்தானோ - விழி ழுத்துச் செருகியது... ''பிரவாகன்'' என்ற பெயரை க்கு குழறலாய் உச்சரித்தது.

''அதான் மீட்டெடுத்து வந்துட்டியே. சாவித்திரி ாயினியாட்டமாய். அவன் சௌக்கியந்தான். நீ ங்கு.''

மாமியின் செல்ல அதட்டலில் தூங்கியே போனாள்.

மறுநாள்தான் உடலின் வேதனை முழுக்க உறைத்தது. ் இடங்களில் தோல் உரிந்திருக்க, தோளையோ



அசைக்கவே முடியவில்லை. குழந்தைகளும், மரகதம் மாளோடு மற்றவர்களும் சதா கட்டிலையே சுற்றியிருக்க, இவளால் தன் வேதனையைக் காட்டிக் கொள்ளவும் முடியவில்லை... கூடவே பிரவாகனை யாரும் போது மானபடி கவனிக்கவில்லையோ என்ற சந்தேகம் வேறு.

தேனம்மாதான் அதற்கான பதிலைத் தந்தாள்.

''சின்னவரை உடனே ஆம்பிளைன்னில ஏத்தி...''

''ஐயோ... அது ஆம்புலன்ஸ் ஆயா!'' - விது திருத்தினாள்.

''சரி ஆத்தா... அப்படித்தான சொன்னேன்? அது நிமிஷமாய் பெரிய ஆஸ்பத்திரிக்கு அவரை இட்டுட்டுப் போயிருச்சு... அங்க ஆப்ரிஷனு செஞ்சு...''

''பேசாம அறுவைச் சிகிச்சைன்னு தமிழ்ல சொல்லேன்.''

மரகதம்மாளும் சிரித்தபடி சீண்டினார்.

''ம்ம்... காலுல ஸ்டீலு கம்பி வச்சு ஒடைசலை சரியாக்குவாங்களாம்.''

''ஆமம்மா... ஒரு மாசம் ஓய்வில் இருந்த பின் உதவியில்லாமல் வசந்த் நடக்கலாமாம். முன் காலத்தில் புத்தூர் கட்டுப் போட்ட மூணு மாசத்திற்குக் காலை நிலத்தில் ஊனவே கூடாது.''

''வலி அதிகமாய் இருந்ததாம்மா?'' கவலையுடன் விசாரித்தாள்.

''டாக்டர் வந்ததுமே வலியை மறக்கடிக்க மருந்து தந்துட்டார். ஆக, அவன் முனகவுமில்லை.''

''எப்ப வீடு திரும்புவாராம்?''

''ஒரு வாரமாகும். ஏற்கெனவே மூணு நாளாச்சே. வியாழன் அன்று வீடு வந்திடுவான். அதற்குள் உன் காயங்களும் ஆறிடும்னு...''

''ஆனா அந்தப் பயலோட கிலி அத்தனை சீக்கிரம் மாறாது...'' என்று சிரிப்புடன் வந்த விவேக் முழங்க, தன் அண்ணனை வினாவுடன் நோக்கினாள் தங்கை.

''யாருக்கண்ணா கிலி?''

''எலியைப் பார்த்த பயலுக்குத்தான்!'' - இப்போது அனைவருக்குமே சிரிப்பு பொத்துக் கொண்டது.

''அதாம்மா அந்த ராஜேஷைப் பற்றிப் பேசறோம்.''

''அந்த ஆள்.. இங்கே வந்தாரா என்ன?''

''திருவிழா நடக்கும் இடத்தைத் தாண்டித்தான் நம் வீட்டிற்கு வரணும். அங்கே போன ராஜேஷ் உன் பெயரைச் சொல்லிப் போகும் வழியை விசாரிக்க, அங்கேருந்த வசந்திற்குப் பொறுக்கலை...''

'திக்'கென்ற நெஞ்சைப் பிடித்தபடி கேட்டாள்.

''அவருக்கு எப்படி... ராஜேஷைப் பற்றித் தெரியும்?''

''உன் அண்ணனும், சந்தானமும் எங்களைப் போன் மூலம் எச்சரித்தாங்களே!'' மரகதம்மாளின் பதிலில் தலையும் சற்றுச் சுழன்றது! ஆகத் தன்னைப் பற்றிய விவரங்கள் இந்த வீட்டாருக்குத் தெரியும் போலவே... ஆக மேலும் கேள்விகளோடு குறுக்கிடாமல் கவனிக்கலானாள்.

''திருவிழா சமயத்தில் நம் பண்ணைவாசிகள் பழங்கால ஆதிவாசிகள் போன்ற உடை, அலங்காரத்தில் இருப்பார்கள் - அவர்களின் முன்னோர்களின் நினைவிற்கு மரியாதை செலுத்துவது போல். கொட்டும் அதற்கேற்ற ஆட்டமாய் இருந்தவர்களிடம் வசந்த் தன் திட்டத்தைச் சொல்ல, நம் ஆட்களும் ஒரு நாடகத்தை அரங்கேற்றிட்டாங்க.''

இப்போது மாமி தொடர்ந்தார்.

''ஒரு பெண்ணைத் தேடி வரும் ஆணைத்தான் தனக்குப் பலியிடணும்னு எங்க மலைதேவியின்



கட்டளை... இத்தனை நேரம் உனக்காகத்தானப்பா காத்திருந்தோம்னு சொல்லி அந்தப் பம்பாய் பயலைப் பிடிச்சுக் கட்டிட்டாங்க. மண் பானைக்குள் ரெண்டு குண்டு எலிகளை விட்டுப் பானையின் வாயைச் சல்லிசு கீற்றுப் பாயால் மூடியாச்சு.''

கதை மாமாவின் மூலம் தொடர்ந்தது.

''ஆதிவாசிக் கோலத்துல இருந்த ஆட்கள் மிரட்டினாங்களாம்.

'இந்தப் பானை வாயை உன் வயித்தோட வச்சு கட்டிருவோம். மறு பக்கம் பானையைத் தீவட்டியால சூடாக்க, வெக்கையிலிருந்து தப்பிக்க எலிங்க முதல்ல கீற்றைப் பிரிக்கும்... பிறகு இருப்பது உன் வயிறுதான்... அதையும் கடித்து, பிராண்டித் துளை போட்டுத் தப்பிக்க வழி பார்க்கும்'னு மிரட்ட...''

கண்களை இறுக மூடிக் கொண்டாள், ப்ரீத்தி.

''எல்லாம் செல்ல மிரட்டல்தான்! இந்த எலி - கிலி தாளாமல் பயல் ஓடிட்டானாம்... இனி உனக்காகவோ, உன் சொத்துக்காகவோ கூட அவன் இந்தப் பக்கமாய்த் திரும்பியும் நிற்க மாட்டான்... என்ன - சனியன் தொலைஞ்சது...!''

ராஜேஷை இனிச் சந்திக்க நேராது என்ற நிம்மதியை விட, பிரவாகனை எப்போது காண்பது என்ற ஏக்கத்தில் தத்தளித்தது இவள் உள்ளம்...

## 22



ஓடிக் கொண்டிருந்தாலும் வெளியே வர முடியாத கடிகார முட்களைப் போல, உள்ளே ஓடிய எண்ணங்களை வார்த்தையாக்கவே முடியாத அவஸ்தையில் உழன்றாள் ப்ரீத்தி.

நெருங்கிய உறவென்று கருதிய அண்ணன், சந்தானம் ம்பதி, மரகதம்மாளும் கூடத் தன்னை உள்ளங்கையில் ந்திக் கொண்டாட, அவர்கள் யாரிடமும் தன் ள்ளத்தைத் திறந்து கொட்ட முடியவில்லை.

அதிலும் சந்தானம் மாமா ஒரு சில உண்மைகளைப் பாட்டு உடைத்ததில், அவளுக்குக் கோபமும் கூட!

''சினிமா, நாவல்களில்தான் இப்படியான திருப்பங்கள் ாத்தியம்னு நினைச்சேன், மாமா. மலேஷியாவில் ந்தித்த பிரவாகனின் எஸ்டேட்டிற்கே நான் இப்படி ருவேன்னு...''

''அதெல்லாம் நான் எதிர்பார்த்ததுதானம்மா!'' ன்றார் அவர் சாவகாசமாய், பல்லைக் குத்தியபடி.

''என்ன... தெரிஞ்சுமா... ஏதும் சொல்லாமல் என்னை )ங்கே வழி அனுப்பி வச்சீங்க?''

''இல்லைன்னா அனுப்புவோமா? அறியாத இடத் க்கு, புது மனுஷர்களிடத்துக்கு அனுப்ப மனசுதான் ப்புமா?''

''ஆமான்டா செல்லம்... நீ கேட்டதுமே மாமா ன்னை வேலைக்கு அனுப்பச் சம்மதித்ததில் எனக்குக் காபந்தான் - பிறகுதான் விளக்கினார். பொண்ணு பாறது பிரவாகனின் எஸ்டேட்டிற்குத்தான் என்று.''

''ஆனா... அவருக்கு அதாவது பிரவாகனுக்கு அந்த வரம் தெரியலையே? என்னை இங்கே பார்த்ததில் வருக்குக் கோபமோன்னு..'' ஆரம்பித்தவள் தட்டைக் கடித்து மீதியை விழுங்கினாள்.

பிரவாகனது விளம்பரத்தைச் சற்றுப் பார்வையில் டும்படி வைத்ததுமே தான்தான் என்பதை ஒரு அசட்டுச் ரிப்பில் அள்ளி மறைத்தவர்,



''பிரவாகனிடம் நாங்க எதையும் சொல்லலையம்மா - முதலில் உன் நிச்சயதார்த்தத்தைப் பற்றி யாரிடமும் சொல்லலை. ஆக நீ திடீர்னு மலேஷியாவிலிருந்து, கிளம்பினதில் தவிச்சுட்டான்!'' என்றார் நமட்டாய்.

''இதிலே விளக்கமெல்லாம் எதற்கம்மா? உன் அண்ணி யின் கோபம் ஆறும் வரையில் உனக்கு ஒதுங்கியிருக்க ஒரு இடம் தேவைப்பட்டது... வசந்தம் எஸ்டேட்ஸ் கௌரவமும் பாதுகாப்பானதும்னு தெரியும். ஆக நாங்க தடுக்கலை.''

அங்கு வந்த மரகதம்மாளும் ஒத்துப் பேசினார்.

''நீ வந்தது எங்க நல்ல காலம் ப்ரீத்தி. அதுவரை வீடு வீடாகவே யில்லையே... ஒவ்வொரு நாளும் ஒரு திகிலோடு கண் விழிச்சிட்டிருந்தேன்.''

''நீங்களா... எத்தனை நிதானமாயும், துணிவாகவும் எல்லாவற்றையும் சமாளிச்சீங்க, பாட்டிம்மா.''

''மனசு ஓரளவு தைரியமாய் இருந்தாலும் உடம்பில் தெம்பில்லையே! ஆக நீ வந்தது பெரிய நிம்மதி. இந்த ராஜேஷின் தொல்லை தீர்ந்ததில் உனக்கும் நிம்மதிதான?''

தலையாட்டினாலும் பிரவாகனைப் பார்க்கும் வரை மனசின் அலைபாயல் அடங்காது என்பது புரிந்தது.

வியாழக்கிழமை... விடிந்ததிலிருந்து நிலைகொள்ளாத தவிப்பு... 'கிரட்ச்சஸ்' எனப்படும் ஊன்றுகோலுடனும் கம்பீரமாகவே வந்தவனைக் கண்டதும் உள்ளம் இளகி உப்பு நீராய் வழிந்தது.

அதைச் சற்றுப் புருவம் உயர்த்தியே கவனித்தவன் -

''என்ன ப்ரீத்தி - ஒரு வாரம் நிம்மதியாய் இருந்தோமே - அதைக் கெடுக்க வந்து சேர்ந்தானே என்ற சோகமா? அல்லது நொண்டியாகிப் போனானே என்ற பரிதாபமா?

தன்னைக் காண வந்திருந்த மற்றவர்களுடனும் சற்றுப் பேசி விட்டு, கட்டிலில் அமர முயன்றவனுக்கு உதவும் நோக்கில் ப்ரீத்தி நெருங்கினாள். ஒரு நன்றிப் புன்னகையுடன் வந்தவளின் தோளைப் பற்றியவனை அவளது அலறல் உலுக்கியது.

''என்ன... என்னாச்சு?''

எல்லோரது கவனமும் அவளில் குவிந்தது.

''ல்ல... ஒண்ணுமில்லை. தோளில் சுளுக்கு.''

''முதலில் நோய் வரும். பின்புதான் டாக்டர் வருவார்... இங்கே மருத்துவர் வந்ததும் தோள் சுளுக்கிடுச்சு...'' என்றவனின் கண் மருத்துவரிடம் ஜாடை காட்ட, ப்ரீத்தி ஒரு அவசர மறுப்புடன் விலகினாள்.

''ஒண்ணுமில்லை எல்லோருக்கும் காபியும் பிஸ்கட்டும் கொண்டு வரேன்,'' என்றபடி.

விட்டுப் பிடித்த மருத்துவர், சற்று நேரத்தில் அவளைத் தனியே அழைத்துப் பரிசோதிக்கவே செய்தார். பார்த்த முகம் கறுத்தது.

''ஒரு வாரமாய் இப்படிக் கவனியாமல் விட்டிருக்கியேம்மா... சீழ் கட்டியிருக்குதே.''

''தானாய் ஆறிடும்னு நினைச்சேன்... களிம்பும் தடவினேன்.''

ஆறிய மற்ற சிராய்ப்புகளைப் பார்வையிட்டார்.

''மற்றவை மேலோட்டமான உரசல்கள்... ஆனால் தோளில் அந்த முரட்டுக் கயிறு வசந்தின் பாரத்தோடு அரைமணி நேரமாய் அழுத்தியிருந்தது... சரியாய்க் கவனித்துச் சுத்தம் செய்யாததால் காயம் புரையோடிப் போச்சு... இனிச் சரியான மருந்தும் கவனிப்பும் தேவை. இப்ப சுத்தப்படுத்தறேன். விவரங்களைப் பெரியம்மாவிடமும் சொல்றேன்.''



இவள் கெஞ்சியும் மறுத்தும் பலனில்லை.

''இனி என் அறையிலேயே தங்கிடு ப்ரீத்தி - சுத்தம் செய்து களிம்பும் தடவணும்!'' - உத்தரவிட்டார் மரகதம்மாள்.

''தோளில்தானம்மா... நானே தடவிக்கறேன்.''

''தடவிக் கவனித்ததைத்தான் பார்த்தோமே. டாக்டர் என்னைத்தான் திட்டினார்... இந்தக் குடும்பத்தைக் கருத்தாய்ப் பேணிய உனக்கு உன்னைப் பாதுகாக்கத் தெரியலையேம்மா.''

கிளம்பிய கையோடு சந்தானம் மாமி சமையலுக்கு ஒரு பெண்ணையும் அனுப்பியதால் ப்ரீத்திக்குத் தேவையான ஓய்வு கிடைத்தது. அண்ணனும் போய் விட்டான் என்றாலும், திலீபன் அடிக்கடி வந்து மணிக் கணக்காய்ப் பேசியது ஆறுதல்தான் - தோள்ப்பட்டையை அழுத்தும் உள்ளாடைகளைத் தவிர்த்து தளர்வான ரவிக்கையுடன் சேலையைப் போர்த்திக் கொள்வதால் பிரவாகனின் அறைப் பக்கம் போவதையும் முடிந்தளவில் தவிர்த்தாள்.

அவனைப் பத்து நாட்களுக்கு முன் அள்ளி அணைத்துத் தான் ஆவேசமாய் முத்தமிட்டதை நினைத்து நினைத்துக் கூசினாள்.

அவனைப் பார்த்ததுமே வெட்க நண்டுகள் உடம்பெங்கும் ஊர்ந்தன.

ஆனால் சந்தர்ப்பம் எப்போதும் இவளுக்குச் சாதகமாயில்லை.

''சின்னவருக்கு இந்தச் சப்பாத்திய கொண்டு தந்திடேம்மா. நான் சிறுசுகளைக் குளிப்பாட்டறேன்!'' - என்று தேனம்மா பதிலையும் எதிர்பாராமல் போய் விட பிரவாகனின் முன் போய் நிற்கத்தான் வேண்டியிருந்தது.

அவன் சாப்பிட வாகாய்த் தட்டை வைத்துக் குவளையில் நீர் நிரப்பிய பின், அறையைச் சுத்தம் செய்யும் சாக்கில் ஒதுங்கினாள்.

''ரொம்ப நன்றி!'' - என்றான் சாப்பிடாமல்.

''பரவாயில்லை.''

''சாப்பாடு பரிமாறியதற்காய் இல்லை, ப்ரீத்தி— என்னைக் காப்பாற்றியதற்காய்...''

''யாரும் இதையேதான் செய்திருப்பாங்க.''

''தோள்கள் இப்படிப் புண்ணாகும்படியா?''

''முதல்ல சாப்பிடுங்க.''

''ம்ம்... ஏதேனும் கனத்த துணியைத் தோளில் வைத்துப் பிறகு அதில் கயிறை அழுத்தியிருந்தால்... இத்தனை சேதமாயிருக்காது...''

''அதெல்லாம் யோசிக்கலை. தவிர அது கயிறை வழுக்கவும் செய்திருக்கலாம்.''

''அத்தனை சிரமத்தில் என்னை மீட்காவிட்டால் என்ன? ஜீப்பை அனுப்பித் திருவிழாவிலிருந்து நாலு பேரை அழைத்து வரச் செய்து...''

''மொத்தக் கூட்டமும் திரண்டு வந்திருக்கும். ஆளாளுக்கு ரெண்டு யோசனைகளேனும் சொல்ல, குழப்பத்தோடு மீட்பு நேரமும் அதிகமாயிருக்கும்...'' என்றாள் சிறு அலுப்புடன்.

அவனது புருவங்கள் பாராட்டாய் உயர்ந்தன.

''அதுவும் சரிதான்... ஆனால் ராஜேஷை விரட்டறதில் அத்தனை பேரும் கில்லாடித்தனமாய் நாடகமாடி... நீ மட்டும் அங்கிருந்திருந்தியானால்...''

இவளது உடல் சிலிர்த்தது.



''அந்தக் காட்டுமிராண்டித்தனத்தை நல்ல வேளை நான் பார்க்கலை... அந்த எலிக் கொடூரமெல்லாம்... முன்பு நடந்திருக்கா என்ன...?''

அச்ச அருவருப்பில் அவளுக்கு வாய் குழறியது.

''காட்டுவாசிகளுக்குப் பிரியமான தண்டனை அது... ஆனால் அன்று பானையோடு எலிகளும் இருந்தது தற்செயலாய்தான்! ஆனால் அந்த ராஜேஷ் அலறியதும்... பிடரியில் காலிடிக்க ஓடிய அழகும்...''

குறும்பும் சிரிப்பும் பேச்சுமாய்ச் சாப்பிட்டவன், இவளது உதவியோடு கையையும் கழுவித் துடைத்தான்.

''இப்படி வந்து உட்கார், ப்ரீத்தி!'' என்றபடி அவன் கட்டிலைத் தட்ட, இவள் முகம் ஒரு விதமாய்ப் போனது.

''வேற ஒன்னுமில்லை. உனக்கு மருந்து தடவத்தான்.''

ஏற்கெனவே சரியாயிருந்த துப்பட்டாவை மேலும் இழுத்துப் போர்த்தினாள்.

''மருந்தா... என் மருந்து பாட்டியம்மாவிடம் இருக்குது.''

''இதோ... என்னிடம் வந்திருச்சே!'' மந்திரக்காரன் போல மருந்தைக் காட்டினான்.

''பாட்டிம்மாவிற்குச் சளி... அடுக்கடுக்காய்த் தும்ம லோடு... அதைச் சற்றுப் பலவீனமாயிருக்கும் உனக்குத் தந்துடக் கூடாதேன்னு மறுபடி உன்னை உன் அறைக்கே மாற்றி, மருந்திடும் வேலையையும் என்னிடம் ஒப்படைச்சிருக்காங்க.''

சிவந்த முகத்துடன் கை நீட்டினாள்.

''ல்ல... தேனம்மாவிடம் தந்து தடவிக்கறேன்.''

''உன் பலம் உடம்பில்தான் போல, எறும்பைப் போல!'' என்றான் சம்பந்தமேயின்றி.

''எறும்பு பலம் மிக்கதா?''

''சிங்கம், புலி, ஏன் - யானையை விடவும் எறும்பின் சக்தி அதிகம். ஏன்னா அது மட்டும்தான் தன் எடையை விட ஏழு மடங்கு அதிக எடையைத் தூக்கிப் போகக் கூடுமாம்!''

''ஓஹோ... சரி.''

கொண்டு வந்த தட்டு, பாத்திரங்களை எடுக்கக் குனிந்தவளை அவனது கரம் பற்றியது.

''பலம் சரி... ஆனால் புத்தி உனக்குச் சற்று மந்தம் போலவே, ப்ரீத்தி! பெரியவங்களே என்னிடம் மருந்தைத் தந்த பின் ஏனிப்படி முரண்டு பண்றே?'' என்றவன் அவளை அழுத்தி உட்கார வைத்தான்.

துப்பட்டாவோடு தோளில் துணியையும் விலக்க, மூச்சைப் பிடித்தபடி இருந்தாள். அவன் கால்களை நோகச் செய்து விடுவோமோ என்ற அச்சத்தில் திமிறவும் இல்லை.

அவன் மூச்சு சட்டென இழுபட்டது...

''கடவுளே... இத்தனை புண்ணாகும் வரையா...?''

''இப்ப வலி குறைஞ்சிடுச்சு.''

அவனது விரல்கள் மிக மென்மையாய்க் களிம்பை வழண்ட தோலின் மீது பூசின... கூடவே மிருதுவாய் அவனது மூச்சுக் காற்றும் இவளது தோளிற்குச் சாமரம் வீசியது. அந்த வெப்ப சுகத்தில் வலி முற்றிலும் ஆவியாகி விட்டது போன்ற சுகம்...!

மறுதோளிலும் கவனமாய்ப் பூசியவன் சாவதானமாய்க் கேட்டான்.

''பாட்டிம்மா இன்று பாயசம் செய்து அனுப்பறேன் னாங்களே... எங்கே காணும்?''



''தெரியலை. இனிப்புச் சாப்பிடணும் போலிருந்தால்... கடலை மிட்டாய் இருக்குது - எடுத்து வரட்டா?''

''ல்ல... வீட்டில் விசேஷம்னால் செய்யும் இனிப்பைச் சொல்றேன்...''

''ஓ?'' என்றவள் சற்றுத் தயங்கிப் பின் தாளாமல் வினவினாள்.

''என்ன விசேஷம்?''

''சற்று முன்னேதான் சேதியை அவங்க காதில் போட்டேன். உடனே குஷியாகிப் பாயசம் செய்யணும் டான்னாங்க...''

இவளுக்குள் குறுகுறுவென்றது.

சேதி என்னவென்பதைச் சொல்லாமல் இழுத்தடிக் கிறானே என்ற எரிச்சல்!

சற்றே அதையும் வேடிக்கை பார்த்தவன் திருவாய் திறந்தான். ''மாலினி கல்யாணத்திற்குச் சம்மதிச்சுட்டா. இத்தனை நாளாய் நாம காத்திருந்தது இதற்குத்தானே? சொன்னதும் பாட்டிம்மாக்குத் தலைகால் புரியாத சந்தோஷம்... ஆனா பாயசம்தான் இன்னும் வரலை...''

இவளுக்குத் தன்னுயிர் தன்னிடமிருந்து உருவப்பட்டது போலிருந்தது. கண்கள் இருட்டு.

''பால்... எடுத்து வரேன்...'' முணுமுணுத்தபடி நகர்ந்தாள். கால்கள் ஏனோ இரும்பு போலாகி இருந்தன.

''ம்ம்... நீயும் சம்மதம் சொல்லிட்டா பிரச்சனை இல்லை.''

அவன் சொல்ல... இவளது அயர்ச்சி ஆத்திரமானது.

''என்ன சம்மதம்?''

''நீயும் என்னைக் கல்யாணம் செய்துக்கத்தான்.''

அந்தக் கோணலான சிரிப்பு இவளுக்குப் புரியவே யில்லை. விளையாடுகிறானா?

''காட்டுக்குள் நாட்டின் சட்டதிட்டமெல்லாம் தேவை இல்லைன்னு முடிவு பண்ணியாச்சா..? என்ன பேச்சு... ச்சே.''

''ஏன் இதற்கென்ன சட்டம் திட்டமெல்லாம்?''

''ரெண்டு பெண்கள்... அதுவும் ஒரே சமயத்தில்... உங்க... மனைவியாகச் சம்மதிக்கணும்னு நினைக்கறது அயோக்கியத்தனம்... காட்டுமிராண்டித்தனம்!''

அவளது சீறலை மிக ரசித்தவன் போல வாய்விட்டுச் சிரித்தன் பிரவாகன்.

23



''இதை... இதை மட்டும் திலீபன் கேட்டான்னா போச்சு. என் வலது காலையும் உடைச்சிடுவான்.

'இத்தனை நாள் மாலினிக்காய்த் தவமிருந்தது நான். இப்ப ப்ரீத்தியோடு என்னவளையும் அடிச்சிட்டுப் போகத் திட்டமா?'ன்னு குதறிடுவான்.''

சிரிப்பின் ஊடே விளக்கியவன் மேலும் சிரிக்க. ப்ரீத்தி முகத்தில் நிறைய அசட்டுக் களை.

எச்சில் தட்டுடன் அவசரமாய்ச் சமையலறைக்குள் போனவளின் உள்ளமும் உடலும் தாள முடியாத இன்பத்தில் தள்ளாடின.

ஆக மாலினியைக் காதலித்தது திலீபன். யாருமற்ற அந்த இருவருக்குமாகத்தான் பிரவாகனின் குடும்பம் மருகியிருக்கிறது. யோசித்துப் பார்க்க, மாலினி தனக்கு எஸ்டேட் வாழ்வு பிடிக்காதது பற்றிச் சொன்னாளே தவிர யாரை மனதில் நினைத்திருந்தாள் என்பதைப் பற்றிக் கோடியும் கூடக் காட்டவில்லை. பிறரைப் போல ப்ரீத்



திக்கும் விவரம் தெரிந்திருக்கும் என்று கருதியிருக் கலாம்... தானோ முடிச்சுகளைத் தப்பாய்ப் போட்டு மூளையும் கொதித்துப் போய்...

'நீயும் சம்மதித்து விடு!' என்று தன்னைக் கேட் பானேன்? பிரவாகனைத் தவிர வேறு யார் இங்குண்டு 'என்னைக் கல்யாணம் செய்து கொள்...' என்றுதானே சொன்னான்?

இதயத்திற்குள் பட்டாம்பூச்சியின் சிறகடிப்பு.

பரவசம்தான்... ஆனால் பழசை மறப்பது எப்படி?

'சாதாரணமான இவள் எனக்கு இரண்டு நாட்களுக் மட்டுமே!' என்று முன்பு நண்பர்களுடன் அடாவ பேசியவன், ஏன்... எப்படி மாறினான்?

இப்படித் தனக்காய்த் தோளைப் புண்ணாக்கிக் கொண் டாளே என்ற பரிதாபமா?

சமைத்து, வீட்டை அழகுபடுத்தி... தோட்டத்தையு பராமரிக்கிறாளே என்ற திருப்தியினாலா...?

ஆனால் இனியும் தான் பம்மிப் பதுங்கக் கூடாது.

தினம் மூன்று குவளைகள் பால் அவன் அருந் வேண்டும் என்பதால் கலந்தெடுத்துக் கொண்டு அவ அறைக்குள் மறுபிரவேசம் செய்தாள்.

தலையணையை உயர்த்தி வைத்து அதில் வெ உல்லாசமாய் இவளது வரவுக்கென்றே காத்திரு வனைக் கடுகடுவென்றே பார்த்தாள்.

''பால் சரி - பாவையும் சரி - பார்வைதா சரியில்லை!''

அஞ்சிய தொனியில் கிண்டலடித்தான்.

''உங்க எண்ணமும் சரியில்லை என்பதைச் சொல்லத் வந்தேன். பரிதாபங் கொண்டு என்னிடம்... என்னை.

இவளை மிக உன்னிப்பாய்க் கவனித்தான்.

''உன்னை முதன் முதலாய்ப் பார்த்ததுமே... என் மனதில் சலனம் ஏற்பட்டுடுச்சு, ப்ரீத்தி...'' என்ற குரலில் கேலியோ கபடமோ இல்லை.

நம்பாதவளாய் உதடு சுழித்தாள்.

''இல்லை - முதலில் என்னைக் கண்டதுமே நான் அத்தனை அழகில்லை என்பதைத்தான் குறிப்பிட்டீங்க.''

அவன் புருவம் சுழித்தாலும் தொடர்ந்தான்.

''உங்க அண்ணி மிக வெளுப்புன்னு கேள்விப் பட்டேன்... நீ நிறம் மட்டாயிருந்தால் தங்கைன்னு யூகித்தேன்னு சொல்லலை?''

''ம்ம்... மனைவியின் வெள்ளைத் தோலில் மயங்கிய விவேக் அவளே சரணம்னு கிடக்கறான்ற பேச்சு என் காதில் விழுந்ததால்... நீ அவர் மனைவியில்லை என்பதை யூகித்தேன்... அன்றே இருளில் என்னைக் கட்டிக் கொண்ட நீ என்னை விடாதிருக்க... உன்னைக் காலம் எல்லாம் காக்கணும்ற தாபம் என்னுள்...''

அந்தச் சம்பவத்தின் ஞாபகத்தில் இவளது கண்களும் மயங்கின. ''எளிய பெண் எஸ்டேட்டின் வாழ்வு முறைக்குப் பழகி அதை ரசிப்பவள்... பேசிப் பழக இயல்பும் இன்பமுமானவள்னு நானும் ரசித்தேன்... ஆனால்...''

கேள்வியோடு நிமிர்ந்தாள்.

''உன் நிச்சயிக்கப்பட்ட திருமணம் பற்றி என்னிடம் மூச்சும் விடாததில் எனக்கு அதிர்ச்சிதான்! டாலி வெங்கட் மூலம் தெரிந்த உண்மைகளில் அயர்ந்து அங்கிருந்து போயிட்டேன். சந்தானம் சாரிடம் குடைய சில விவரங்கள் கிடைத்தன. வலுக்கட்டாயமாய் இரு



பெண்கள் வந்து உன் விரலில் மோதிரத்தைத் திணித்த தாய்... அதைத் திருமண நிச்சயதார்த்தம்னு கொள்ள முடியாது. பிறகு...''

பாலைப் பருகும் சாக்கில் அவன் நிறுத்த, இவளால் தாள முடியவில்லை... ''பிறகு?''

''பாட்டியம்மாவிடம் நீ அது குறித்துப் பேசினாயாம். புரிந்தது. ஆனாலும் இரண்டு நாட்களாய் நன்கு பழகி என்னிடம் நீ ஒரு வார்த்தை... ஒரு புன்னகை கூட தராமல் விலகியது எனக்கு ஏமாற்றம்தான். ப்ரீத்தி. உன்னிடமிருந்து நான் அப்படியொரு முரட்டு விலகலை எதிர்பார்க்கலை. அதற்கு நீதான் விளக்கம் சொல்லணும். ஆனால் பாட்டியோ,

'பெண்கள் அப்படி எல்லாவற்றையும் சட்டுனு சொல்லிட மாட்டாங்க... ப்ரீத்தி மனதில் என்ன ஆற்றாமையோன்னு...'''

''சரியாகவே சொல்லியிருக்காங்க. சில நாள் பழக்கத்தில் நான் என் சரித்திரத்தையே உங்க முன் பிரித்து போடணும்ற கட்டாயமில்லையே...?''

''அப்படி விலகி ஓட வேண்டிய காரணமுமில்லையே...'' மடக்கினான்.

''காரணங்களை உங்க முன் உடைக்க வேண்டிய அவசியமில்லை.''

தோல்வியின் கெஞ்சுதலுடன் அவனது கைகள் இவளை நோக்கி நீண்டன.

''ப்ளீஸ் ப்ரீத்தி... கால் ஒடிந்த வலியெல்லாம் ஒரு பொருட்டாகவே யில்லை... ஆனால் நீ வெறுத்து விலகினபோது... மனதே நொறுங்கினது போன்ற வலி. கன்னிக்காட்டில் கால் தவறி நான் விழுந்தபோது கூட என் மனசு முழுக்க உன் நினைப்புதான்... அந்

தடுமாற்றத்தில்தான்... விழும்போது நான் சொன்னதும் கூட உன் பெயர்தான்... நீ அறியாமல் எடுத்து வைத்திருந்த உன் கைக்குட்டையைத்தான்... அது என் சட்டைப் பையில் இருந்தது...''

''ஓ... அதைத் தந்துதான் செல்வாவை அனுப்புனீங்களா?''

இளகிய உணர்வுகளுடன் நெருங்கியவள், அவனது கைகளைப் பற்றினாள்... அவனது விரல்கள் அவசரமாய்ப் பிடியை இறுக்கின.

''ஏன் ப்ரீத்தி... ஏன் விலகிப் போற?''

உள்ளே உருகினாலும் மௌனமாகவே நின்றாள்.

''காரணம் ஒன்று... இருக்கில்லையா?''

சின்னத் தலையசைப்பு.

''அது என்னன்னு சொன்னால்தானே எனக்குத் தெரியும்?''

''நீங்க சொன்ன காரணம் உங்களுக்கே தெரியாதுன்னா எப்படி?''

இவளது மிடுக்கில் மிரண்டவன் மேலும் தணிந்தான்.

''நிஜமாவே தெரியலைம்மா... என்ன கோபத்தில் அப்படி விலகினே?''

'என்னை அழகியில்லை - சாதாரணமானவள் என்று நீ சொன்னதால்!' என்று கத்தித் தீர்க்க முடியாமல், அவளது பெண்மையின் பெருமிதம் அவளைத் தடுத்தது... அவசரத்துக்கு ஒரு பொய்யைத் தேடி அவன் முன்னே வீசினாள் -

''ஏன்னா... எனக்கு உங்களைப் பிடிக்கலை... ஏதோ ரெண்டு மூணு நாட்கள் பழகினோம்... அதற்கு மேல் அதற்கு எந்த முக்கியத்துவமும் தரக் கூடாதுன்ற ஜாக்ரதை..... அவ்வளவுதான்.''



பிரவாகனை வாயடைக்கச் செய்து விட்டாலும் அதனால் இவள் மனதிற்கு எந்த நிம்மதியும் இல்லை மறுநாள் வந்த மருத்துவர் பிரவாகனை விட் இவளையே கவலையுடன் கவனித்தார்.

''உன் அதிர்ச்சிதான் அதிகம் போலவேம்மா, ப்ரீத்தி டானிக்கைக் குடிக்கறியா? தூக்கத்திற்கு மாத்திரை தரவா? கண்ணுக்குக் கீழே இப்படிக் கருவளைய கட்டியிருக்கே!''

என்றவரை வைத்தியப் பெட்டியைத் தூக்கிவந்த ராபி இடைமறித்தார்.

''அதிர்ச்சிதான் டாக்டரய்யா. எங்களிதில் உட கொழுமோரு தந்திருப்போம்... சின்னவர் போயாச்சுன் நினைச்சு இவங்க அழுததைப் பார்க்கணும்... அவ மாருல விழுந்து கதறி...''

''ராபின்... என்னதிது.''

ப்ரீத்தி குறுக்கிட்டு அதட்டினாள்... பிள்ளைகளும் பேச்சின் திசை திரும்பியது.

இரவு பௌர்ணமியின் பால் ஒளியில் அ தோட்டத்தில் யோசனைகளுடன் நிற்க, ஒரு வலிய இவளைப் பூச்செண்டாய்க் கருதி மிக மென்மையா சுற்றியது.

திமிறினாள்.

''ஷ்.. ப்ரீத்தி... அசையாதே... நான் ஒற்றைக் மனிதன். தடுமாறினால் ரெண்டு பேரும் சேர்ந்து உ நேரும். நீ உண்மையைச் சொல்லாத வரையில் உன்னை விடவும் மாட்டேன்.''

ஊன்று கட்டையோடு நின்றவனை நெட்டித் தள்ள முடியவில்லை. ஆக, முடிந்தவரை நெளிந்தாள்...

''குழந்தைங்க... வரலாம்...''

''அவுங்க படுத்தாச்சு.. வேற யார் இந்தப் பனியும் நிலவுமாய்க் கொட்டும் ராத்திரி வெளியே வரப் போறா...?''

இவளது அசைவுகள் அவர்களை மேலும் நெருக்கியது போலப் பட, அசையாமல் நின்றாள்... அதுவரை அசமந்த மாய்க் கிடந்த இதயம் எம்பிப் படபடக்க ஆரம்பித்தது.

''சொல்லு, ப்ரீத்தி.''

''என்ன... எதைச் சொல்ல?''

''என்னை விசேஷமாய் நீ நினைக்கலை... பிடிக்காத தால்தான் அப்படியே மலேஷியாவில் மறைஞ்சிட்டே... அதான?''

நிலவும் பனியுமான அந்த இரவில், அந்த அணைப் பிற்குள் பொய் சொல்ல மனம் வரவில்லை...

சுற்றிலுமிருந்த வெள்ளை டெய்சி பூக்களோ - 'உண்மையைச் சொல்லிவிடு!' என்று ஆடி ஆடி ஊக்கின.

''இல்லை..''

''சரி... பின்னே?'' காதுக்கருகே மிகக் குனிந்து கேட்க, இவளது உடம்பெங்கும் குறுகுறுத்தது.

''கொஞ்சம்... விலகினால் சொல்லிடறேன்.''

அணைத்தது போலவே மென்மையாய் விலகியது அவனது கரம்.

அவன் நெஞ்சோடு சாய்ந்திருந்த கதகதப்பு நீங்க, வெகு வெறுமையாய் இருந்தது... ஆனால் அந்நிலையில் பேசும் திறனுமில்லையே...

செருமியபடி தன் கைகளைப் பார்த்திருந்தாள்.

''மறுபடி சிறைக்குள் அடைச்சிடவா?''



''ல்ல... அது வந்து... எஸ்டேட் வாழ்க்கைக்குப் பயன்படும் மனைவியாய் இருப்பேன்னு... நீங்க இந்த முடிவிற்கு வந்திருக்கலாம். ஆனால் ரெண்டே நாட்களுக்கான சாதாரணப் பெண் நான்னு நீங்க... அதை... மறந்திருக்க மாட்டீங்க...''

''இதுவா என் கேள்விக்கான பதில்?''

''சற்று யோசித்தால் புரியும்... அதுவும் கன்னிக்காடு மிகத் தனிமைப் பிரதேசம். அங்கே உங்களோடு வாழ்நாளைக் கழிக்க என்னைப் போலச் சாதாரணப் பெண்தான் சரின்னு... மனசைக் கல்லாக்கிட்டு முடிவு பண்ணியிருக்கீங்க...''

''எது... என்ன முடிவு?''

''என்னைக் கல்யாணம் பண்ணிக்கறது...''

நீளப் பெருமூச்செறிந்தான்.

''நிலவின் ஒளியில் மூளை குழம்பும்னு பெரியவங்க சொல்வது உண்மைதான் போல... அதென்ன வார்த்தை சாதாரணம்ங்கறே?''

''அது நீங்க உபயோகித்த வார்த்தைதானே.''

''ச்சு.. ப்ரீத்தி - வார்த்தைகளை யாரும் சொந்தம் கொண்டாட முடியாது. ப்ரீத்திங்கறது உன் பெயர்தான் ஆனால் அதை உன்னை விடப் பிறர்தானே அதிகப் உபயோகிக்கறது?''

குழப்பமும் கேலியும் கலந்த அவன் முகம் அந்நிலவ ஒளியில் மிக வசீகரமாய்த் தெரிந்ததைத் திரும்பிப பார்த்தாள். அவனது விழிகள் அசாத்திய ஒளியுடன் எதிரே நின்றவளை விழுங்கின.

அவசரமாய்க் குனிந்து கொண்டாள்.

''ராபினிடம் பேசினேன், ப்ரீத்தி.''

பதட்டத்தில் தலை மேலும் தாழ்ந்தது.

''விசேஷமான பிரியம் இல்லாதவங்களுக்கு... அதென்ன சொன்னே நேற்று? பிடிக்காத எனக்கு... நீ முத்தம் மட்டும் தரலாமா ப்ரீத்தி? அதிலும் ஒன்றிரண்டு அல்ல... மயங்கிக் கிடந்த எனக்கு நீ நிறைய முத்தங்களை வாரி வழங்கியதாய்ச் சொன்னார்!''

தடுமாறிப் பின் மெள்ளப் பேசினாள்.

''உங்க... உங்க இதயம் துடிக்குதான்னு குனிஞ்சு உங்க மார்பில் காது வைத்துக் கேட்டதை...''

''சரி?''

''துடிப்பில்லாதது போலப் பட்டது... ஆக...''

''ஓஹோ.. வாயோடு வாய் பொருத்திச் செயற்கைச் சுவாசம் தந்து உயிர்ப்பிச்சை அளித்தாயா? ஆனால் ராபின் நீ என் நெற்றி, கன்னத்தில்தான் உதடுகளை ஒற்றினதாய்ச் சொன்னார்?''

அதற்கு மேலும் தாள முடியாதவளாய் தன் அறையின் அடைக்கலத்தைத் தேடி ஓடினாள்!

## 24



முடிவில்லாத கண்ணாமூச்சி ஆட்டம் போலிருந்தது அது... பிரவாகனின் மனசு தெரிந்தும் மறைந்தும் ஆடிய ஆட்டம்!

புரியாமல்... அவன் முழு மனதைப் பிடிக்க முடியாமல் தவித்தாள்.

அன்றைய பௌர்ணமி இரவிற்குப் பிறகு அவன் இவளிடம் அந்தரங்கமாய் ஏதும் பேசவில்லை... ஆக இங்கே ஒரு வாரமாய் ஏக்கம் வளர்ந்தது!



மூன்று நாட்களுக்கு முன்பு ஜோடியாய் வந்த திலீபன், மாலினியைக் கண்ட வீடு திமிலோகப்பட்டது. விருந்தும் பேச்சும், சந்தோஷ வாழ்த்துதல்களும், பரிசுகளுமான கொண்டாட்டம்!

அத்தனையையும் ரசித்த மாலினி பிறகு ப்ரீத்தியைத் தேடி வந்தாள்.

''எல்லாம் கேள்விப்பட்டேன், ப்ரீத்தி...''

என மற்றவள் ஆரம்பிக்க, இவளுக்குத் 'திக்'கென்றானது.

''என்... என்ன?''

''நீ வசந்தைக் காப்பாற்றியது.. தோள் அறுபட்டது கூட உணராமல் அவரைச் சுமந்தது எல்லாம்.

''யாருமே அதைத்தான் செய்திருப்பாங்க. முதல்ல உன் கதையைச் சொல். நான்... இதை... உங்க கல்யாணத்தை எதிர்பார்க்கலை... ஆனா ரொம்ப சந்தோஷமாயிருக்கு...'' திக்கித் திணறினாள்.

''என்ன ப்ரீத்தி இப்படிச் சொல்றே? இங்கே காலமெல்லாம் கிடக்க முடியாதுன்னு நானே உன்னிடம் சொன்னேனே?''

''அது வந்து... உனக்கும் திலீபனுக்குமாய் முடிச்சுப் போடலை நான்.''

''பின்னே... ஓ...'' ஆச்சரியம் பொங்கச் சிரித்தாள். ''அப்ப வசந்திற்கு உன் மேல் நோக்கம்ன்றது உனக்கு... எப்பதான் புரிஞ்சுது?''

இவளது கைகள் சில்லிட்டன.

மாலினியின் பேச்சின்படி எல்லோரும் அறிந்த விவரம் போலவே பிரவாகனது காதல்! அது.. தனக்கு மட்டும் புரியாமல்...

''பார்த்த கணத்திலிருந்தே உன் மீது ஈர்ப்பு என்றாரே னுஷர்!''

ஆக ஆரம்பத்திலிருந்தே அவனுக்குத் தன் மீது தனி சம்தானா? அதனால்தான் நிச்சயதார்த்தம் பற்றிக் கேள்விப்பட்டதும் ஆத்திரமா? தன் கைகுட்டையையும் நித்துத் தன்னுடன் வைத்திருந்தானே? உரிமை அன்றி ன்றிரவு அப்படி அள்ளித் தூக்கிப் போயிருப்பானா?

பிறகேன் தன் மீது எரிச்சலைக் காட்டினான்?

முக்கியமாய் ஏன் பிற ஆண்களிடம் தன்னைப் பற்றி த்தனை கீழ்த்தரமாய்ப் பேசிச் சிரித்தான்?

மாலினியிடம் கூட அதைச் சொல்லக் கூசியது. ாளிற்குத் தடவிய களிம்பு போல, மன அதிர்ச்சிக்கு, தன் புரையோடிய புண்ணிற்கு ஏதேனும் மருந்து நந்தால் தேவலை!

ஆனால் இனியும் மறைப்பதில் பயனில்லை.

ஏதோ தான் தப்பே செய்யாதவன் போல -

'உன் அன்பு ஏன் எனக்கில்லை?' என்று பசப்பு பனிடம் உண்மையைப் போட்டு உடைக்க வேண் துதான். தனக்குள்ளேயே பொருமியவளுக்கு மாலினி ன் பேச்சு கேட்கவே இல்லை.

ஆக அவள் ஒரு அழகிய புடவையைத் தன் கையில் வத்தபோது, மலங்க மலங்க முழித்தாள்!

''உனக்கென்றே நெய்தது போலில்லை இது?''

''ஓ...?''

''தோள் புண் முழுக்க ஆறிடுச்சுல்ல ப்ரீத்தி... உன் ாவிற்கு உத்தேசமாய் நான் தைத்து எடுத்து வந்த ிக்கை இது. போடேன்...''



''இது எனக்கா?''

''அடுத்த மணப் பெண்ணிற்கு என் பிரிய பரிசுன்னு நீளமாய் வாழ்த்தினேனே... அதெல்லாம் காதில் விழலையா?''

''முதல்ல உன்னைப் பற்றிச் சொல் மாலினி... உனக்கு எஸ்டேட் வாழ்வு பிடிக்காதே... பயமாச்சே?''

''வசந்த்... அதான் உன் பிரவாகன் அதைப் பற்றியெல்லாம் உன்னிடம் சொல்லலையா?''

ஒரு வாரமாய் அவன் ஏதுமே தன்னிடம் பேசாததை மறைத்து வெறுமே தலையசைத்தாள்.

''திலீபன் தன் எஸ்டேட்டை விற்று விட்டார்!''

''என்ன... இனி என்ன செய்வீங்க?''

''முதல்ல யாருக்கு விற்றார்னு கேள். வசந்த பிரவாகன் சார்தான் தயவாய் நல்ல விலைக்கு எங்க பண்ணையை வாங்கினது!''

''ஓ... அப்ப இனி நீங்க இங்கே...?''

''இருக்க என் பயம் இடம் தரலையே! இனி திலீபனின் வீடு ஒரு மருத்துவமனையாய் இயங்கப் போகுது. ஒரு ஓய்வு பெற்ற மருத்துவத் தம்பதி இங்கே வரச் சம்மதியாச்சு! பண்ணை உங்களுடையதோடு இணைந்து விடும்... பிறகு அதில் ஒரு ஆரம்பப் பள்ளிகூட ஆரம் பிக்கும் உத்தேசம் வசந்திற்கு இருப்பதாய்ப் படுது... காரியம் யாவிலும் கை கொடுக்கத்தான் நீ இருப்பியே...!''

''நீங்க...?''

''விற்ற பணத்தில் ஒரு 'ஷாப்பிங் மால்' உரு வாக்குவதாய் யோசனை. ஏற்கெனவே என் கடைக்கு அருகே விற்பனைக்கிருந்த நிலத்திற்கு முன்பணம்...

முழுக்கக் குளிரூட்டப்பட்ட பல்பொருள் அங்காடி... நுழைந்தால் எல்லாமே ஒருசேர வாங்கிடலாம்னு வாடிக்கையாளர்கள் தேடி வரும் வகையில்!''

''வாழ்த்துக்கள் மாலினி... ஆனால் இவர்தான் பாவம்! கன்னிக்காட்டை வாங்கவே வங்கியில் கடன்... அதோடு இதுவும்னால்.''

''கரிசனம் இருக்காதா பின்னே? கோடீஸ்வரி, உன் கரிசனை இருக்க என்ன குறை? ஆனால் வசந்த் மனைவியின் காசில் கைவைக்கும் ஆளாயும் தோணலை. அதுதான் பிரச்சனை!''

ப்ரீத்திக்குத் தலை சுற்றியது.

''என்ன மாலினி... எனக்கேதும் புரியலையே... அதுவும் என்னைப் பற்றி?''

''சந்தானம் மாமான்னு உனக்கு வேண்டியவங்க வந்திருந்தாங்களாமே?''

''ஆமாம்... வந்து தங்கினாங்க.''

''மரகதம் பாட்டியிடம் உன் சொத்தைப் பற்றிக் குறிப்பிட்டாங்களாம். அந்தப் பணத்திற்காய்த்தான் அந்தக் கெட்ட பயல் ராஜேஷ் உன்னைப் பார்க்காம லேயே துரத்தியிருக்கான். உங்கப்பா உனக்காய் விட்டுப் போன சொத்தை அந்த மாமா பெருக்கியிருந்தார் போலும்...''

ப்ரீத்தியின் மனம் பூரித்துப் போனது - தான் பணக்காரி என்ற கர்வமல்ல அது. பிரவாகனுக்கு உதவக்கூடும். அவன் சுமையை இலகுவாக்கத் தன் காசால் முடியும் என்ற பரவசம்... பரிவு!

தன் உணர்வுகள் தன்னை மீறிப் பாய்வதைப் புரள்வதைத் தடுக்க முடியாமல் திகைத்திருந்தாள்.



எல்லாம் சரிதான்... அன்று மட்டும் ஒட்டுக் கேளாமலேயே இருந்திருந்தால்... எத்தனை நல்லது... இப்போது சுகமாய்க் கூட இருந்திருக்கலாம்!

ஆனால் அந்த ஞாபகம் எந்த மகிழ்வையும் உணர விடாமல் உள்ளத்தை அறுத்து அறுத்து ரணமாக்கியது!

''எனக்காய்த் திலீபன் செய்தது பெரிய தியாகம்தான், ப்ரீத்தி. தனக்குத் தெரிந்த, விரும்பிய வேலையை, சொத்தை விட்டுவிட்டு... புது இடத்தில் புதுத் தொழிலைத் தொடங்கப் போகிறார்... ஆனால் அதில் நிச்சயம் ஜெயம்தான்... எங்க அன்பு எங்களைப் பாதுகாத்து, வெற்றியும் தரும் இல்லையா?''

''நிச்சயமாய்.''

''சரி. அப்ப இந்தப் புடவையைக் கட்டு...''

கெஞ்சிய மறுப்புகளைப் பொருட்படுத்தாமல் ப்ரீத்தி யின் சேலையை உருவியவள், தோழிக்கு உடுத்தி அலங்கரிப்பதில் மும்முரமானாள்.

தேர்ந்த விரல்கள் விரைவில் கச்சிதமாய் வேலையை முடித்தன!

''யப்பா... எத்தனை அழகு நீ... எளிமையிலும் அழகுதான் என்றாலும் இப்படி பட்டு, நகையில் சொக்க வைக்கிறே.''

''கேலி பண்ணாதே, மாலினி!'' என்றாள் வருத்தமாய்.

''கேலியா... கண்ணாடியையேனும் நம்பறியா...? இப்ப பாரு, பெரிய தாமரை மொட்டு போலில்லை நீ?''

நீண்ட நிலைக்கண்ணாடியில் தெரிந்த தன் முழுப் பிம் பத்தைக் கண்டவளுக்குத் தன் கண்களைச் சிமிட்டவும் மறந்தது.

வெளிர் சிவப்புப் பட்டில், அளவான ஒப்பனையில், பஞ்சலோக நகைகளில் தான் ஒரு பொன் தாமரை போலவே நிற்பதாய்ப் பட்டது.

''யாரோ கூப்டறாங்களோ?'' என்றபடி மாலினி அறையிலிருந்து நழுவிய மறுநிமிடம் அங்கு பிரவாகன் நுழையவும்தான் அவர்களின் நாடகம் புரிந்தது.

சிறு ஊன்றுகோலுடன் அதிகச் சிரமமின்றியே வந்திருந்தான்.

இவளுக்குத்தான் நகரவும் முடியவில்லை.

''அழகுதான்... நீ எப்போதும். ஆனா... இப்ப பேரழகு...'' திணறலாய் அவன் சொன்னது ஒரு கவிதையைப் போலிருந்தது.

ஆழ மூச்செடுத்த பின் அழுந்தச் சொன்னாள்.

''பொய்.''

''என்ன பொய்?'' வியப்புடன் வந்த கேள்வியில் துளிக் கோபம்.

''நான் சாதாரணமானவள். என்னைக் காதலிப்பதாயும்... நான் அழகாய் இருப்பதாயும் சொல்றதெல்லாம் சுத்தப் பொய்.''

அவன் பார்வை கூர்மையானது.

''சொல்லு... முழுசாய்ச் சொல்லிடு, ப்ரீத்தி... இதே வார்த்தையை முன்பும் சொன்னே... அடிக்கடியும் சொல்ற... ஆனாலும் புரியலை.''

''ஏன் புரியலை என்பதுதான் எனக்குப் புரியலை! இது... நீங்க அந்த மலேஷியத் தீவில் சொன்னதுதான். உங்க அறையில் நீங்க எல்லாருமாய்ப் பேசியதை நான்... நான் கேட்க நேர்ந்தது.''

ஒட்டுக் கேட்டேன் என்று சொல்ல வேண்டியதை நாகரீகமாக்கினாள்.



''என்ன பேசினோம்?'' - புருவங்கள் சுருங்க யோசித்தான்.

''என் பெயர் குறிப்பிடப்பட்டதால்... ஆர்வமாகி நின்றேன்...''

''அதாவது நாம் குளக்கரையில் பேச... பிறகு டாலி வெங்கட் குறுக்கிட்டு...,

''ம்ம்... உனக்குக் கல்யாணம் நிச்சயமாகி விட்டதாய் என்னைக் குழப்பினாங்க. நான் சந்தானம் சாரிடம் பேசி, சற்று தெளிந்ததும்... ம்ம்... என் அறைக்குத் திரும்பி னேன்... சில நண்பர்களும் வர, கூடிப் பேசினோம்தான்...''

''என்னைப் பற்றிய பேச்சு...'' - அவசரமாய்க் குறுக்கிட்டாள். ''அவள் பார்க்கச் சாதாரணம்தான். ஆனால் எஸ்டேட் வாழ்வுக்கு ஒத்து வருவான்னீங்க. பிறகு... ரெண்டு நாட்களுக்கு இவ கிடைத்தது என் அதிர்ஷ்டம்... இல்லையில்லை... பாக்கியம். ஆனா நீண்ட நாட்களுக்கென்றால் பார்வைக்குப் பளபளப்பான ஒரு குட்டியைத்தான் தேடணும்னு...''

உள்ளே விஷ வண்டாய்க் குடைந்த அத்தனை வார்த்தைகளையும் கொட்டிக் கவிழ்த்தாள்... ஆனால் முடிக்கும் முன்பே கேட்டவன் சிரிக்க ஆரம்பிக்க, இவளுள் ஆத்திரம் கிளர்ந்தது... பிரவாகனின் சிரிப்பு கோடை மழை போல மிக வலுத்தது... அடக்க முடியாத நிம்மதி நகைப்பு!

''போதும்.. பல் சுளுக்கிடாமல்... காலே இன்னும் சரியாகலை.''

குத்தினாள்.

இவள் முகத்தைத் தன் இரு கைகளின் நடுவே ஒரு மலரைப் போல ஏந்தியவன் விடாது சிரித்தான் விழியோரங்களில் நீர் தேங்குமளவில்.. தாளாமல் வெளியேற முயன்றவளை ஒரு கையாலேயே இழுத்து

தோளோடு இறுக்கினான். ''நம் பேரப் பிள்ளைங்க இந்தக் கதையை மிக ரசிப்பாங்க, தெரியுமா?''

அவனது கொள்ளைச் சிரிப்பைக் கண்டவளுக்கு நடித்து முறைக்கவும் இயலவில்லை.

''நமது எஸ்டேட்டின் பெயர் 'பிரிய வசந்தம்'... அதில் நம் பேரப்பிள்ளைகள்... ம்ம்... முதலில் பிள்ளைகளுக்கு எல்லாம் சொல்லுவேன் நாம் காதல் கதையை... ஒட்டுக் கேட்கவே கூடாது என்பதற்கு இந்த ஒரு சம்பவம் போதும்... பிள்ளைகள் என்ன, நம் பரம்பரையே கதவிலே காதை ஒட்ட மாட்டாங்க! ஏனென்றால் -

'கேட்பவர்கள் மிகச் சரியாய்த் தவறானதைப் புரிந்து கொள்வார்களே இதில்! எப்படி ஐயாவின் புதுமொழி?''

''ஒட்டுக் கேட்டதை ஒத்துக்கறேன்... ஆனால் அதனால்தானே தப்பித்தேன்?'' விடாத விம்பில் இருந்தாள்.

''அனாவசிய முறைப்பு, திட்டு, சோகம்னு காலத்தை வீணாக்கிய என் முட்டாள் குட்டி!''

வாஞ்சையாய் அவளது முன் நெற்றியில் முத்தமிட்டான். 'நான்... நாங்கள் பேசியது யாரை... எதைப் பற்றித் தெரியுமா? தீவில் சுற்ற ரெண்டு நாட்களுக்காய் எங்களுக்குத் தரப்பட்ட ஜீப்பைப் பற்றி! அவளுக்கு நாங்க 'பிரியமானவள்'னு பட்டப் பெயரும் சூட்டியிருந்தோம்! உன்னைக் குறிப்பிட்டு முதலில் ஏதேனும் பேசியிருக் கலாம்... நம்ம நெருக்கத்தைக் கேலி பேசத்தான் செய்தாங்க... ஆனால் அறைக்கு வெளியே நின்றவளை... அதாவது ஜீப்பை ஜன்னல் வழியே பார்த்து, பிறகு ஏதோ பேசினோம்தான்... சற்றும் அசராத அந்த முரட்டுப் பெண்ணைப் பற்றிப் பிரியமாய்ப் பேசியதை... தப்பாய்ப் புரிஞ்சுகிட்டு.''



இளஞ் சிரிப்புடன் தலையாட்டினான்.

ப்ரீத்தியின் முகத்தில் அசட்டுக் களை பரவியது... ஆனால் முழுக்க நம்பவும் முடியவில்லை.

ஆனால் உடம்பு குலுங்க, கண்கள் பனிக்க, இவ்வளவு தானா என்ற நிம்மதியுடன் அவன் மனதாரச் சிரித்ததை நடிப்பு எனவும் முடியாது.

''இன்னும் சந்தேகமா, செல்லம்? நான் உன்னை முதன் முறையாய் பார்த்தப்ப நீ கட்டியிருந்த பச்சைப் புடவை... தளரப் பின்னிய கூந்தல், அதிலிருந்த பெரிய பூ, அகன்ற பொட்டு... உன் வடிவான உதடு, என்னை இருளில் கட்டிப் பிடித்த பின் வெளிச்சம் வர அவை துடித்த அழகு... உன் முகத்தில் வடிந்த வெட்கம்... 'ரோமன் ஹாலிடே'யில் வந்த முத்தக் காட்சியின் போது என்னை வெடுக்கென்று தேடித் தொட்ட உன் கண்கள்... எதுவும் மறக்கலை... மறக்காது..''

பிரமிப்புடன் கேட்டபடி நின்றாள்.

''இங்கே வந்து அத்தனை வேலைகளையும் இழுத்துச் செய்த இந்தப் பட்டுக் கை...'' தொடர்ந்தவன் அவற்றையும் முத்தமிட்டான்.

''நான்... நான் மாலினி அளவு அழகில்லையே...!''

''நீ... நீயா அழகில்லை?'' மெய்யான மயக்கத்துடன் வந்தது பாராட்டு! ''எனக்கு அழகின் அர்த்தமே நீதான் ப்ரீத்தி... இன்னொருத்தி பண்ணைக்கு வருகிறாள் என்று உன்னிடம் சின்னப் பொறாமையைத் தூண்ட... உன் அழகையும் மாலினியிடம் காட்டிப் பெருமைப்பட... ஏதேனும் அசட்டுத்தனமாய்ப் பண்ணித் தொலைத்தேன் போல...''

அவன் குரலின் உண்மை இவளை உருக்கியது. ''தினம் உன் முகத்தை ரசித்து, உன் குரலில் வசியமாகி... உன் அசைவுகளில் மதி மயங்கியும் கூட உன் மேலுள்ள

கோபத்தை எனக்கே நினைப்பூட்டிக் கொண்டு முகத்தைக் கடுகடுப்பாய் வைத்திருந்தது அதி கஷ்டம். அதிலும் திலீபனைப் பற்றி நீ பேசினால் பொருமினேன்!''

இவளுக்குச் சிரிப்பு வந்தது.

''உன் குரலைக் கேட்டதுமே என் நெஞ்சு பலக்கத் துடிக்க ஆரம்பிக்கும்... உன்னைக் கண்டதும் ரத்தம் கூடச் சூடாக, உன் அழகில் பித்தான நிலை...''

காலமெல்லாம் இக்காதல் பிதற்றலைக் கேட்டபடி இருந்தால் போதும் போலிருந்தது... அதிலும் முக்கிய மாய்த் தன் அழகைக் கொண்டாடிய அவன் வார்த்தைகள்!

பரவசமாய் அவன் தோளைச் சுற்றின அவளது மெல்லிய கைகள். அவனுடையது அவளைத் தன்னோடு ஒட்டிச் சேர்த்தது. அதில் அதுவரை அவர்களிடையே வளர்ந்து கெட்டித்துப் போன கற்பனைக் கோபங்களும், ஊடலும், வேஷ வெறுப்பும் கண்ணாடியாய் நொறுங்கின.

இருவரும் மாறி மாறி இட்ட முத்தங்கள், நொறுங்கிய துகள்களை ஒற்றி எடுத்து முழுச் சுத்தம் செய்தன. அடுத்தவர் விழிகளில் ஓடிய நுட்பமான செய்திகளையும் ஆவலாய்ப் படிக்கப் படிக்க நேரம் நழுவிப் பறந்தது.

நெய்யில் முந்திரி வறுபடும் வாசனை வர, ''பாட்டிம்மா... நம்ம ஊடல் தீர்ந்த விஷயத்தை யூகிச்சுட்டாங்கன்னு நினைக்கறேன்... பாயசம் தயாராகுது பார்...'' சிரித்தான்.

பதிலும் சொல்லாமல் பரவசமாய் அவனையே பார்த்திருந்தாள், ப்ரீத்தி..!